University of Jaffna
079.5493
EEL
183322(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

1937

ARCHIVES

University of Jaffna
183322
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

ஆண்டுமலர்

ஈசுவர-சித்திரை

1937

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA

ARCHIVES

The Eelakesari Annual Illustrated Supplement

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077.5493
EEL



ஓம்

ஆண்டுமடலின் வருகை

தென்னவற்குத் தென்னவனும் மன்னன் ஆண்ட
திகள்ஈழத் திருநாட்டின் சிங்க மாகி
இன்னிசைக்குத் தலைவியென அகிலம் போற்றும்
இறையியாஞ் செந்தமிழ்த்தாய் இன்ப மெய்தப்
பன்னரிய கட்டுரைகள் பாட லாதி
பலப்பலவாம் பொருடாங்கிப் பாரு லாவி
மன்பதைக்கோர் மணிவிளக்காய் நிலவும் " ஆண்டு
மடலே !" யென் மனக்கமலம் மலர வாராய் !

— ஆசிரியர், மா. பீதாம்பரன்

183322

ARCHIVES

183322

S

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி வாழ்த்துப்பா

(திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள், வெள்ளவத்தை)

ஈழகே சரியெனும் எழில்மிகு குழந்தாய்!
ஆழமாங் கடல்சூழ் ஈழநாட் டுள்ளோர்
வாழவே யுதித்த வள்ளலே புவியில்
"நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்"
போலெனப் பலரும் போற்றிட வளர்ந்து,
எட்டாம் ஆண்டின் றெய்தினை யாகலின்,
வாழ்த்துவம் நின்னை வருகென மகிழ்வுற் (று)
எத்துவம் நின்புகழ் இயம்புதற் கரிதே.
நீயோ,
மடங்கல் மாப்போல் மாதா வயிற்றிற்
கிடந்தினை யாதலிற் கேடினை விளைக்கும்
பாலார் அரிட்டம் பற்ற திருக்கப்
பெற்றனை யாண்டும் பெருவாழ் வெய்துதி!
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்,
மனக்கவ லலில்லோன், மயிலெதென் வாழ்வோன்,
பொன்னை யாவெனப் புகல்பெரு புண்ணியன்!
அன்னை யாயமர் அரியே றுகலின்,
இயலிசை நாடகத் தமிழ்நடை நடந்தும்,
இலக்கண இலக்கிய இன்மொழி பகர்ந்தும்,
செந்தமிழ்க் கடலின் இன்பமிழ் தத்தைத்
தீந்தமிழ்ப் பாவாய்த் திரட்டி ஊட்டியும்,
சரித்திர சமய சாத்திரக் கலைகள்
விருத்தியாம் வண்ணம் வேண்டிய புரிந்தும்,
தரித்திர நாரா யணன்தமி ழகத்தைப்
பரித்தியா கஞ்செயப் பண்ணிடும் கைத்தொழில்
திருத்திய முறையிற் செய்தவற் குரைத்தும்,
சுயநலப் புலிகளின் தூடுக்கை அடக்கியும்,
மதப்போர் புரிமத கரிகளை மடக்கியும்,
பதவி வேட்டையிற் பணமெலாம் இறைக்கும்
பரிகள் கூட்டம் பாழ்படச் செய்தும்,
பகலவன் போன்று பல்லூழி காலம்
பாரினில் வாழி! "ஈழகே சரி" நீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணம்

நமது நாடு, பொருளாதார விருத்தியடைந்து, கல்வி சிறந்து, அரசியல் வளர்ந்து, நாட்டுமக்கள் இக்கால உலகப்போக்கோடு முன்னேற வேண்டுமென்னும் நோக்கத்துடன் ஏழு ஆண்டுகளாக நந் தாய்மொழியில் "**இழகேசரி**" என்னும் வாரவெளியீட்டினை நடாத்திவருகின்றோம்.

ஈழமக்கள் எய்தியிருந்த பண்டைச்சிறப்பினையும், இந்நாட் போக்கினையும் வெளியிடுவதுடன், எதிர்கால வளர்ச்சிக்கு நிலைக்களமாய எண்ணங்களையும் திட்டப்படுத்திக் கல்வி, அரசியல் என்னும் விஷயங்களிலே காய்தல் உவத்தல் இன்றி நடுநிலைநின்று அபிப்பிராயங்களைக் கூறிவந்தோம்.

ஈழம் எங்கள் ஜனனபூமி; அதில் வாழ்வோர் யாவரும் **இழமாதேவி**யின் செல்வ மக்களாவர்; ஈழத்தின் முற்போக்குக்குப் பலரும் ஒன்றுபட்டாகவேண்டும் என்பதே எமது எண்ணம்; இதுவே எமது தியானம்; இதுவே எமது கனவு. இக் கனவினை நனவாக்கற்குப் பண்டும் இன்றும் தொண்டாற்றிவரும் உலகப் பெருமக்கட்கு இவ் "**ஆண்டுமடல்**" அர்ப்பணமாக்கப்படுகின்றது.

இவ் வாண்டுமடல் அச்சிடப்படுங்கால், எமது குடும்பத்திற் பல இன்னல்கள் ஒன்றன்பின் ஒன்றாக நேர்ந்தன. அவற்றுள், எமது பெருமகனும், 27 வயதுடையவனும், எம்முடனிருந்து எமது முயற்சிக்குப் பல்லாற்றானும் துணைபுரிந்தவனும், தமிழாசிரியனுமாகிய **பொன்னுக்குமரன்** பிரிவே எம்மைப் பெரிதும் திகைக்கச் செய்துவிட்டது. எனினும், இறைவனது திருவருளால் இம்மடலை இயன்றவரை சிறப்பாக வெளியிடுகின்றோம்.

இதன்கணுள்ள விஷயங்கள், கிடைக்கப்பெற்ற நாண்முறைபற்றி அமைக்கப்படுவதாயின. பிந்திய விஷயங்கள் சேர்க்கப்பட்டில; அவை வாரவெளியீட்டில் காலத்துக்கேற்ப வெளிவரும். ஆழ்ந்த பொருள்பொதிந்த விஷயங்களைத் தந்து துணைபுரிந்த பெரியார்க்கு எமது அன்பார்ந்த நன்றி உரியதாகுக.

இவ் வாண்டுமடலில் வந்துள்ள சித்திரப்படங்கள் முதலியவற்றை, மிகச் சுருங்கியகாலத்துள் செய்துதவிய கொழும்பு 'ஜகநாதன் கம்பெனி' யாருக்கு நாம் பெரிதுங் கடப்பாடுடையேம்.

"வாழிய நலனே! வாழிய நலனே!! என்று கூறி, எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வழுத்தி யாவர்க்கும் புதுவருட சோபனங் கூறுகின்றோம்.

ஈசுவர – சித்திரை – க
சன்னுகம்

நா. பொன்னையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MESSAGES

திருவிதாங்கூர் சமஸ்தான திவான்
சர் C. P. இராமசுவாமி ஐயர் அவர்கள்

BHAKTIVILAS,
TRIVANDRUM,
30th March, 1937

Dear Sir,

I am in receipt of your letter of the 27th March 1937 and congratulate you on the idea of publishing an Illustrated Supplement of the **'Eelakesari'**. I wish you all success and prosperity.

Yours truly,
C. P. Ramaswamy Iyer.

பக்திவிலாஸ்,
திருவனந்தபுரம், 30 மார்ச் 1937.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 27 - 3 - 37 ல் எழுதிய நிருபங் கிடைத்தது. சித்திரசுகிதமாக ஈழகேசரியின் வருடாந்த அனுபந்தம் வெளியிடவிருக்கின்றீர்கள் என்பது எனக்கு ஆனந்தத்தை விளைக்கின்றது. உங்கள் முயற்சி நன்கு விருத்தியடைவதாக.

உங்கள்உண்மையான
C. P. இராமசுவாமி ஐயர்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தேர்தற்சபைத் தலைவர்
திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்கள்

NEW DELHI, *26th March 1937.*

Dear Sir,

I am very glad that the '**Eelakesari**" is publishing the Annual Illustrated Supplement. There is a great deal in common between Ceylon and India, and I am hoping for a day, when a Free India and a Free Ceylon will march shoulder to shoulder in the service of humanity. In the meantime, I send you my very best wishes for the success of your Journal, and for the increasing prosperity and freedom of your beautiful country.

Yours truly,
S. Satyamurti.

புதிய டெல்ஹி 26 - 3 - 37.

அன்பார்ந்த ஐயா,

சித்திரசுகிதமாக ஈழகேசரியின் ஆண்டுமடல் வெளியிடவிருப்பதுபற்றி நான் மகிழ்வடைகின்றேன். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் அநேக விஷயங்களில் ஒற்றுமையுண்டு. இலங்கையும் இந்தியாவும் பூரண சுதந்தரத்தை யடைந்து பரஸ்பர நட்புடன் மனிதவர்க்கத்தினரின் முன்னேற்றத்தை நாடித் தொண்டாற்றும் நாள் விரைவில் வருமென நம்பியிருக்கின்றேன். நிற்க,

உங்கள் பத்திரிகை மென்மேலும் விருத்தியடையவேண்டுமென்பதும், இயற்கை வனப்பு வாய்ந்த உங்கள் நாடு உண்மைச் சுதந்தரத்தையும் செல்வவிருத்தியையும் அடைய வேண்டுமென்பதும் எனது மனமார்ந்த விருப்பமாகும்.

S. சத்தியமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்திரநாட்டுக் காங்கிரஸ்தலைவரும், பிரபல ஆங்கில வைத்தியருமாகிய

Dr. U. இராமராவ் அவர்கள்

MADRAS, 26th March, 1937

Ceylon has a large Tamilian Population mostly labourers, who have toiled for long and hard in the plantations and have contributed a good deal to the prosperity of the Country. To uphold the rights and privileges of these voiceless Indians and to look to their proper treatment at the hands of their capitalist masters and the Government, is a task beset with the greatest difficulty. The "EELAKESARI", the Leading Nationalist Tamil Weekly has evidently undertaken this task in the spirit of self-sacrifice and patriotism. The object of the journal seems to be to promote the political, social, and economic welfare of the Tamilians in Ceylon. The Editor proposes to issue an Annual Illustrated Supplement on the Tamil New Year's Day, about the middle of April I wish the Journal all success and the Editor, a long life of useful career.

U. Rama Rau.

சென்னபட்டினம், 26-3-37

இலங்கையில் தமிழர்கள் பெருந்தொகையாகவிருக்கின்றனர். தேயிலை, றப்பர்த் தோட்டங்களில் பல்லாண்டுகளாகக் கஷ்டத்துடன் வேலைசெய்து, இலங்கையின் செல்வவிருத்திக்குப் பேருதவிகள் புரிந்துள்ளார்கள். இந்த ஏழைகளாகும் இந்தியரின் உரிமைகளைப் பாதுகாப்பதும், அவர்கள் அரசினராலும், முதலாளிமாராலும் ஏற்றமுறையில் நடாத்தப்படுகின்றனரோ வென்பதைக் கவனிப்பதும் இலகுவான வேலையன்று. சிறந்த தேசீயப் பத்திரிகையாகும் "ஈழகேசரி", தேசாபிமானத்துடன் சுயநலத்தை நாடாது இவர்கள் நலத்தைக் காக்குந் துறையில் ஈடுபட்டுள்ளது. இலங்கைத் தமிழரின் அரசியல்நிலை, ஆசாரசீர்திருத்தம், பொருளாதாரநிலை என்பனவற்றை விருத்தியடையச்செய்வதே இப் பத்திரிகையின் நோக்கமாகும். இப்பத்திரிகையின் ஆசிரியர் தமிழரின் புதுவருடப்பிறப்பன்று சித்திரசுகிதமாக ஆண்டுமடல் வெளியிட எண்ணியுள்ளார். இப்பத்திரிகை நன்கு விருத்தியடையவேண்டுமென்பதும், இதன் ஆசிரியரவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து நன்மையை உண்டாக்கக்கூடிய வழியில் தொண்டாற்றவேண்டுமென்பதுமே எமது விருப்பமாகும்.

இங்ஙனம்

Dr U. இராமராவ்

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் சபைத் தலைவர்

ஸ்ரீமத். சீ. என். முத்துரங்க முதலியார் அவர்கள்

NEW DELHI, 30th March, 1937

Dear Sir,

I am glad the "**Eelakesari**" is publishing the Annual Illustrated Supplement. Indians in Ceylon especially Tamilians have got to keep a very close contact with their Mother Land. If your Journal can bring Indians and Ceylonese into closer contact your labours will be amply rewarded. I wish your Journal every success.

Yours sincerely

C. N. Muthuranga Mudaliyar

President. Tamil Nadu Congress.

புதிய டெல்ஹி, 30-3-37

அன்பார்ந்த ஐயா!

"ஈழகேசரி ஆண்டுமடல்" சித்திரசுகிதமாக விரைவில் வெளியிடப்படுமென அறிந்து சந்தோஷமடைந்தேன். இலங்கையிலுள்ள இந்தியர்—பிரதானமாகத் தமிழர்—தமது தாய்நாடாகும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புடையவராயிருக்கவேண்டும். இலங்கைவாசிகட்கும் இந்தியர்க்கு மிடையில் இறுகிய நட்பினை, உங்கள் பத்திரிகை நிலைநாட்டி வைப்பின், அதுவே உங்கள் தொண்டிற்குச் சன்மானமாகும். பல்வேறு துறைகளிலும் உங்கள் பத்திரிகை விருத்தியடைவதை நான் விரும்புகின்றேன்.

சீ. என். முத்துரங்கமுதலியார்

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்சபைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேசிய மகாசபையின் அபேதவாதத் தலைவருள் ஒருவராகும்

ஸ்ரீமதி கமலாதேவி அவர்கள்

சகோதரி நிலையத்துக்கு 8-4-37 ல் விஜயம் செய்தபோது,

அளித்த நல்லுரை



ஸ்ரீமதி கமலாதேவி

The immediate and most pressing need of the hour is of complete independence, that is severance with the British tie for that alone will be sure liberation from foreign exploitation. Independence means the emancipation of the millions of masses who are ground down under the heel of imperialist oppression; for slavery means poverty, oppression, humiliation. India is today become the great battle ground of a powerful mass movement against foreign domination. It is gathering strength and momentum every moment for masses have come to realise that their emancipation lies in shaking off the shackles that are binding the country. The stage is being set for a bigger and an intenser struggle. Can our brothers and sisters of Ceylon be content to remain in bondage while India is struggling to be free?

Chunnakam,
8th April, 1937.

Kamaladevi

இப்போது நாம் அவசியம் பெறவேண்டியது பூரண சுயராச்சியமே. அதாவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசியல் முறையில் நின்று நீங்குவதே. அதுதான், நம்நாட்டின் செல்வம் அந்நியரால் அபகரிக்கப்படாதிருக்க வழியாகும். ஏகாதிபத்திய வாதிகளினால் (Imperialists) நசிக்கப்படும் கோடிக் கணக்கான ஏழைமக்கள் மீட்சியடைவதே பூரண சுயராச்சியமாகும். அடிமை நிலையென்றால் என்ன? வறுமை, அவமதிப்பு, கொடுங்கோன்மை என்பன வற்றால் தாக்கப்பட்டு வருந்துவதே. அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்செய்யும் யுத்தகளம் இந்தியாவாக இப்போது விளங்குகிறது. தங்களைப் பூட்டிவைத்துள்ள விலங்குகளை முறித்தெறிந்தாலன்றி தமக்கு விடுதலை ஏற்படாதென்பதை, பொதுசனங்களாம் ஏழைமக்கள் நன்குணர்ந்துவிட்டனர். நாளுக்கு நாள் இவர்களின் துணிபும் பலனும் பன்மடங்கு விருத்தியடைந்து கொண்டே வருகின்றன. எப்போதுமில்லாச் சுதந்தரப்போர் செய்தற்குரிய களமொன்று வகுக்கப்படுகின்றது. இந்தியர் விடுதலையை அடையப் போர் நடத்துங்கால், இலங்கையிலுள்ள எமது சகோதர சகோதரிகள் அடிமைத் தளத்தில் வாழ்ந்து திருப்தியடைவதா?

சுன்னாகம்
8, ஏப்பிரல் 1937

கமலாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்ப் பத்திரிகை வாயிலாகத் தமிழ்ப் பாஷையை வளரச்செய்வதே மிகவும் விசேடமாகும். சமயாபிமானம்போன்று, நாம் பாஷையிலும் அபிமானங் கொள்ளுதல் வேண்டும். நாம் பணத்தைக் கொடுத்துப் பத்திரிகை வாங்குகிறோம் என எண்ணாது, அதனை வளர்ப்பதற்கேற்ற அபிமானங் கொள்ளுதல் வேண்டும். நமது தாய்ப்பாஷையாகிய தமிழை — மிகவும் அலங்காரமான தொனியையுடைய தமிழை — இப் பாரிய பொக்கிஷத்தை — எம்மகத்தே வைத்துக் கொண்டு, வயிற்றுப் பிழைப்புக்காக ஆங்கிலத்தைப் படித்தோம். நாம் தமிழ்ப்பாஷையை மறந்தால், தமிழர் என்ற பெயரே அற்றுப்போகும். அதனை வளர்ப்பதற்கென முற்பட்டு நிற்கும் பத்திரிகைகளை நாங்கள் ஆதரியாதுவிட்டால் அவற்றின் கதி யாதாகும்?"

"..... நமது ஐந்துவிரல்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்தாலும், இவ்வைந்தும் ஒற்றுமையாய் இருந்தாற்றான், ஒன்றைப் பற்றிப் பிடிக்கலாம். எத்தனை சாகியத்தாரிருப்பினும் எமக்குள் ஒற்றுமையிருந்தால், நாம் வாதாடி எதையும் பெற்றுக்கொள்ளலாம். ஜெயம் கொள்ளலாம். ....."



அரசாங்கசபைத் தலைவர்
கௌரவ வை. துரைசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பிரவேச உரிமையை அளித்த

திருவாங்கூர் அரசர் கவிமாலை

திரு. மு. செல்லையா அவர்கள், அல்வாய் [பருத்தித்துறை]

வருகைப் பருவம் (பன்னிருசீர் விருத்தம்)

1. அந்நாள் நாவுக் கரசன்சொல் அடைத்த கதவம் திறந்திடினு
மாங்குத் "தீண்டா தார்" புகுந்தே அன்பின் வணக்கஞ் செயலில்லார்.
இந்நாள் யாரும் புகக்கதவம் இயைந்து திறக்குஞ் சொற்றந்த
இறைவா வருக! ஈசனுடை எண்ணுங் *தளியுட் ஹரிசனர்கள்
முன்னுப் புகுந்து வழிபடலான் மூவா உலக மக்களெஞ்சுள்
முனைந்தே புகுந்த முதல்வருக! முரணில் பணிசெய் மணிவருக!
பன்னுட் காந்தி எதிர்பார்த்த படிசெய் திடும்அண் ணல்வருக!
பகரும் திருவாங் கூர்செய்த பாக்யம் வருக! வருகவே!!

2. ஓங்கு மிந்து மதமென்னு மொளிசேர் மணிக்கோர் கறையாக
உற்றுப் படிந்த தீண்டாமை ஓட்டும் படிக்குப் புடமிட்டு
வீங்கும் புகழ்கொள் குருவருக! மேலாந் தெய்வச் சுடர்வருக!
விண்ணோர் மகிழுண் ணல்வருக! மேன்மைக் குன்றம் மேவருக!
தாங்கும் பலரைப் புறக்கணித்துத் தள்ளும் பேதஞ் சகியாது
†தக்கோ னுசாவிற் றளிகளெலாஞ் சாருந் நமர்கள் புகவிடலால்
தீங்கி லிந்து மதஅரணைத் திகழும் பெரியோய் நீவருக!
திருவாங் கூரார் செய்தவமே சிறந்தோம் வருக வருகவே!

(அறுசீர் விருத்தம்)

3. வாட்டுங் கொடிய வெய்யிலினும் வானர் முகிலின் பெய்தலினுங்
கூட்டுந் துயரின் மூழ்தாதே கோவில் நமக்குந் திறந்தமையால்
நாட்டி லுனக்குப் பிற்காலம் நாமே கோவில் நாட்டுதுமே
ஈட்டும் புகழாய் அருண்மேவ இனிதே வருக வருகவே!

அம்புலிப் பருவம் (பன்னிருசீர் விருத்தம்)

4. என்றுமொரு வெள்ளைமதி யோனெனப் படுவைநீ! இவனெனிற் செம்மைமதியோன்
இரவினிடை யேநீ விளங்கிடுவை நம்மரச னேயபக லும்விளங்கும்
துன்றிரவு மைநீக்கி நிற்கிறுய் நீயிவன் தொன்மையுறு தீண்டாமையைத்
தொலைத்துநிற் கின்றனன் நீசிவன் சடையிற் சுருங்குடல முற்றுவாழ்தி
நன்றுபுரி இறையிவன் ஹரிஜனர்க் காலயம் நாடித் திறந்ததாலே
நாளுஞ் சிவன்மா லெனுந்தேவர் நெஞ்சத்துள் நண்ணியுறை கின்றனினும்
அன்றுமுதல் யாருஞ்செ யாப்பணிசெ யன்பனுடன் அம்புலீ ஆடவாவே!
அழகுதவழ் திருவிதாங் கூரரச னெடுவிரைத் தம்புலீ ஆடவாவே!

வாழ்த்து:

5. பன்னுஞ் சைவா சாரியர்கள் பகரு மாழ்வா ராதியர்கள்
மன்னுஞ் சமய வாதமிட்டும் மற்றிப் பணிபோ லிந்துமதம்
பின்னும் வளரும் பெருஞ்செயலே பிறங்கச் செய்தார், பேசிலிலர்
உன்னுந் திருவாங் கூரரசே ஊழிக் காலம் வாழியவே.

* தளி — ஆலயம். † தக்கோன் — சேர். சி. பி. இராமசுவாமி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

His Highness
Sri Padmanabha Dasa Vanchi Pala
Sir Rama Varma
Kulasekhara Kiritapathi
Manney Sultan Maharaja Raja
Rama Raja Bahadur Sham Sher Jung
Knight Grand Commander of the
Most Eminent Order of the Indian Empire
Maharaja of Travancore.

பூராதன காலந்தொட்டு "தர்ம ராச்சியம்" எனப் புகழப்பட்டு வந்த திருவாங்கூர் சமஸ்தானத்தினர், தமது பேருக்கு இழுக்கு ஏற்படாது அரசியலே நடாத்தி வந்துள்ளார். உண்மைச் சமயமே அந்து இப்போது நிலைபெறுவதாதும். போலி நம்பிக்கைகட்தும், நாகரிகத்துக்தும், பழக்கவழக் கங்கட்தும் அந்த இப்பொழுது இடமின்று. ஒருகால் இந்நாடு தலைதடுமாறி, எத்தனையோ சமயக் கொடுமைகட்தும், தீய வழக்கங்கட்தும் இடமா யிருந் ததைக்கண்டு, ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தரவர்கள், "இது ஒரு பைத்திய காரரின் வைத்தியசாலே" என்றும் கூறியதுண்டு.

இப்பொழுது, இந்நாடு, மலைமீதேற்றிய தீபம்போல், சமய விஷ யங்களில் யாவருக்தும் முன்மாதிரியாய் நின்று வழிகாட்டுகின்றது. இச் சமஸ்தானச் சனங்களும், அரசரும், மந்திரியாரும், உயர்ந்த உத்தியோகத் தரும், மாற்றங்களே விரும்பாதோரும், ஆசார சீர்திருத்தங்கட்த உழைப்போ ரும் ஆகிய யாவரும் அன்பும் சமய உணர்ச்சியும் மிதந்தவராய்ச் செய் யுந் தொண்டுகட்துக் கைம்மாறுண்டோ?

இற்றைக்குச் சில மாதங்களுக்கு முன், இச் சமஸ்தான அரசர், ஹரி ஜனங்கள் ஆலயங்களுட் சென்று கடவுள்வணக்கஞ் செய்யலாமென அளித்த உத்தரவு, இந்திய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படக்கூடிய செய்தியேயாதும். சமயவாழ்க்கை, நாகரிகம், பழக்கவழக்கங்கள் என்பனவற்றில் உண்மைவழியில் விருத்தியடைந்து, இந்துசமயமானது பழமைபோல் நிலைபெற்று உயர்நிலையை அடைவதன் பொருட்டு, மகத்தான புனித வழியைத் திறந்துவைத்த சமஸ் தான அரசர்க்கு யாவரும் பெரிதும் கடமைப்பட்டவராவார்.

சுபமஸ்து.


நா. பொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ಮಹಾ ಶ್ರೀಮಹಾಪ್ರಭು ಗಳವರು ಕಾಶೀಯಾತ್ರೆಗೆ ಹೊರಟಾಗ ಮಾರ್ಗದಲ್ಲಿ ಅನೇಕ ಸಂಸ್ಥಾನಗಳಿಗೆ ಭೇಟಿಕೊಟ್ಟರು. ಅವರು ಪುರಿಯಲ್ಲಿ ಗಜಪತಿ ರಾಜನಾದ ಪ್ರತಾಪರುದ್ರನನ್ನು ಭೇಟಿಮಾಡಿದರು. ಅವನು ಅವರಿಗೆ ಬಹಳ ಗೌರವವನ್ನು ಕೊಟ್ಟನು. ಅವರು ಅಲ್ಲಿಂದ ಹೊರಟು ಕಾಶೀಯಾತ್ರೆಯನ್ನು ಮುಗಿಸಿಕೊಂಡು ಬಂದಮೇಲೆ ಪ್ರತಾಪರುದ್ರನು ಅವರನ್ನು ಮತ್ತೆ ಭೇಟಿಮಾಡಿದನು. ಆಗ ಅವನು ಅವರಿಗೆ ಕೆಲವು ಪ್ರಶ್ನೆಗಳನ್ನು ಕೇಳಿದನು. ಅವುಗಳಲ್ಲಿ ಮುಖ್ಯವಾದವು ಇಂತಿವೆ:

೧ನೇ ಪ್ರಶ್ನೆ. ಸ್ವಾಮಿಯೇ, ಕಲಿಯುಗದಲ್ಲಿ ಜನರು ಹೇಗೆ ಬದುಕಬೇಕು? ಅವರಿಗೆ ಮುಕ್ತಿಯು ಹೇಗೆ ಸಿಗುವುದು?

ಉತ್ತರ. ಕಲಿಯುಗದಲ್ಲಿ ಜನರು ಹರಿನಾಮಸಂಕೀರ್ತನೆಯನ್ನು ಮಾಡಿದರೆ ಸಾಕು. ಅದರಿಂದಲೇ ಅವರಿಗೆ ಮುಕ್ತಿಯು ಸಿಗುವುದು. ಹರಿನಾಮಸಂಕೀರ್ತನೆಯಲ್ಲಿ ಹೇಗೆ ಮಾಡಬೇಕೆಂಬುದನ್ನು ಮಹಾಪ್ರಭುಗಳವರೇ ಸ್ವತಃ ಆಚರಿಸಿ ತೋರಿಸಿದರು. ಅವರು ಹರಿನಾಮವನ್ನು ಹಾಡುವಾಗ ಅವರ ಕಣ್ಣುಗಳಿಂದ ಆನಂದಬಾಷ್ಪವು ಧಾರಾಕಾರವಾಗಿ ಸುರಿಯುತ್ತಿತ್ತು. ಅವರ ಮೈಯಲ್ಲಿ ರೋಮಾಂಚನವಾಗುತ್ತಿತ್ತು. ಅವರು ಕೆಲವೊಮ್ಮೆ ಕುಣಿಯುತ್ತಿದ್ದರು. ಕೆಲವೊಮ್ಮೆ ಮೂರ್ಛೆಹೋಗುತ್ತಿದ್ದರು. ಅವರು ಹರಿನಾಮವನ್ನು ಹಾಡುವಾಗ ಅವರ ಮುಖವು ಕಾಂತಿಯಿಂದ ಬೆಳಗುತ್ತಿತ್ತು. ಅವರು ಹರಿನಾಮವನ್ನು ಹಾಡುವಾಗ ಅವರ ಮೈಯಲ್ಲಿ ಅಷ್ಟಸಾತ್ವಿಕಭಾವಗಳು ಉಂಟಾಗುತ್ತಿದ್ದವ



மகா மகிமைவாய்ந்த

ஸ்ரீ பத்மநாப தாஸ வஞ்சி பால ஸேர் ராம வர்மா குலசேகர கிர்தபதி

மான்ய சுல்தான்-உல்-ஆலம் பகதூர் ஷாம் ஷேர் ஜங்

திருவாங்கூர் மகாராஜா அவர்கள்.

Knight Grand Commander of the Most Eminent Order of the Indian Empire.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நோக்கு

வித்துவான்
பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்.

இது, செய்யுட் குறுப்பாகத் தொல்காப்பிய னுர் கூறிய முப்பத்துநான் குறுப்பினுள் ஒன் றாகும். கவி யியற்றுவோர்க்குப் பயன்படும் பொருட்டு இஃது இங்கே விளக்கி எழுதப்பட் டது.

நோக்கென்பது, மாத்திரை முதலிய உறுப் புக்களையெல்லாம் கேட்டோர்க்கு நோக்குப்படச் செய்தல். எனவே, கேட்டோர் மீள வுந் தன்னைநோக்கிப் பயன் கொள் ளுமாறு மாத்திரை முதலாய உறுப் புக்களை யெல்லாம் இன்பம் பயக்கு மாறு செவ்விதாக அமைத்துச் செய்வதே செய்யுள் என்றபடி. இங் ஙனங் கூறியதனால்,

ஒருகவி ஒரு செய்யுளை இயற் றுங்கால் அச் செய்யு ளுறுப்புக்க ளும், அதன் சொற்பொருள்களும் நோக்குப்படச் செய்யவேண்டும் என் பதாம். சொல்லும் பொருளும் நோக் குப்படச் செய்வது தன்னைக் கருதி வைக்கப்பட்ட பொருளுக்கு உபகா ரப்படுதற் பொருட்டென்க. இங்ங னஞ் செய்யப்பட்ட செய்யுளை 'சுருங்கச் சொல்லல்' முதலிய பத் தழகும் அமைந்தனவாகும். இதனை,



சி. கணேசையர்

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக.

இங்கே மாத்திரை யென்றது மாத்திரையின் அளவை. மாத்திரையின் அளவே ஓசைக்குக் காரணமாகும். அது நீண்டுங் குறைந்துஞ் சிதையு மாயின் ஓசை இன்பந்தராது. ஆதலாற் செய் யுள்களினடிக்கண் மாத்திரைக ளளவுபெற்று நிற் றலும் வேண்டப்பட்டது. மாத்திரை என்பது ஈண்டு அதனளவை யுணர்த்திற்றென்பது, 'மாத் திரை யளவும்' என்னுஞ் சூத்திரத்தானறியப் படும். மாத்திரையளவே ஓசைக்குக் காரண மாய் நிற்றலின், அதுவும் நோக்குப்பெறச் செய்ய வேண்டு மென்றார் தொல்காப்பியர் என்பது. எழுத்தியல் வகை யென் றது, எழுத்துக்களைச் செய்யுட் கேற்ப இயற்றிக்கொள்ளும் வகை யை. அங்ஙனம் இயற்றிக் கொள்வ தும் செய்யுளோசையு மின்பமும் பெறற்கேயாம். ஆகையால், எழுத் தியல்வகையும் நோக்குப்பெறச் செய் யப்படவேண்டு மென்பதாயிற்று. இனி, ஓரசை, ஈரசை, மூவசைச்சீர்க ளாய், பாக்களும் அவற்றினடிகளும் இவ்விவ்வசைச்சீர்கள் வருமென்னும் வரையறை பெறலின் அவ் வரைய றைப்படி தாம்வந்த செய்யுளே இசை யும் இன்பமுந் தருதலின் அசையும், வரையறைப்பட்ட சீர்வந்தசெய்யுளே சிறப்புடைய செய்யுளாகலின் சீரும், குறளடி, சிந்தடி முதலியனவாக வகைப்பட்டு நின்று, இன்னபாவிற்கு இன்ன அடியென்னும் வரையறைப்படுதலினாலும், வந்தவடியே வந்து தொடைப்படுஞ் செய்யுளே சிறந்தனவெனப்படு தலினாலும் அடியும், வழுப்படாது அவ்வத் தொடைக்குரிய இலக்கணப்படி வந்த செய்யுளே சிறந்து காட்டலின் தொடைகளும், நோக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டினவாயின வென்க. தூக்கென்பது அடிதோறும் பொருள்முடியச் செய்வதோர் செய்கை. அடிதோறும் பொருள்முடியச் செய்த செய்யுளே சிறந்துகாட்டலின், அதுவும் நோக்குப் படவேண்டியதாயிற்று. மரபு என்பது காலமும் இடமும்பற்றி வழக்குத் திரிந்தகாலத்தும் திரிந்த வற்றிற்கேற்ப வழுப்படாமற் செய்தல். கால இடங்களுக் கேற்றபடி செய்வதும் சிறந்துகாட்டு தலின் மரபும் நோக்குப்பெறச் செய்யவேண்டிய தாயிற்று. பா என்பது பரந்துபட்டுச் செல்லு மோசை. பாவை இன்னபா வென்றறிதற்குக் காரணமாகலின் அதுவும் நோக்குப்பெறச்செய்ய வேண்டும் என்க. அளவியல்என்பது அவ்வப்பாக் களுக்குரிய அடிவரையறை. அவ்வப் பாக்களின் விகற்பத்துக்கு அளவியல் காரணமாதலின், அது வும் நோக்குப்பெற வேண்டியதேயாம். ஏனைய உறுப்புக்களையும் இவ்வாறே உணர்ந்துகொள்க.

இனிச் செய்யுளுள் வரும் சொல்லும் பொரு ளும் நோக்குப்படுமாற்றைப் பேராசிரியர்,

"முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலே தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேர
ஐவக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி முளரி ஞெரு மும்
ஆய்தொடி யரிவைகின் மாலைம் படர்ந்தே."

என்னுஞ் செய்யுளில்வைத்து விளக்கிக் கூறியுள் ளார். அதனை இங்கேகாட்டுதும். எங்ஙனமெனின்? இது, தலைவன் குறித்த பருவத்தில் வந்திலனெனக் கவன்ற தலைவியைத் தோழி பருவங் காட்டி வற்புறுத்தியதாக இயற்றப்பட்டதென் றும், அவ்வற்புறுத்தற் பொருளுக்கு உபகாரப் படற்கே இச்செய்யுட்கணுள்ள சொல்லும்,பொரு ளும் நோக்குப்பட அமைக்கப் பட்டன வென் றும் 'முல்லை..... கானம் என்பதுவரையும் இப் போது', பருவந் தோன்றிய அளவே—அங்ஙன மாக நீகவறல்தக்கதன்றென வற்புறுத்தினளென் றும், 'குரங்குளை ..... உவக்காண்டோன்றுங் குறும்பொறை நாடன்' என்பதுவரையும் தலை வன் நின்பால் காதலுடையன்; விரைந்து வரு வான் எனக் கூறி வற்புறுத்தினளெனவும், 'கறங்கிசை ..... மாணலம்படர்ந்தே' என்பது வரையும் பிரிந்தகாலம் சேய்த்தன்று அணித்தே யெனக் கூறி வற்புறுத்தினளெனவும் கூறி— மேலும்,

"முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலே தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்"

என்பதுவரையும் பருவந் தோன்றிய துணையே யென்பதை எங்ஙனம் விளக்கிற்றெனின்? வைந் நுனை என்பது சிற்றரும்பென்பதை உணர்த்தலி னலும், (கூரிய நுதியெனவே சிற்றரும்பென்பது பெறப்படும்.) இல்லமும், (தேக்கும்) கொன்றையும் மரமாதலின் வேனிலான் முல்லைகரிந்த அள வுக்கு, அவை கரியாது நின்றமையினாலே முல் லைக்கு முன்னே (பருவந் தொடங்கவே) அவை மென்பிணி யவிழ்த்தனவாதலால் — அவை பிணியவிழ்ந்தமையினாலே பருவந் தொடங்கி நீண்டகாலமென்று கருதவேண்டாம் என்றலினா லும்,காய்ந்தவிரும்பு முறுக்கிவிட்டவழியும் வெப்ப மருதவாறு போலக் கலைமான்கள் தம் மருப்பு மழைநீரிற் றேய்ந்தும் வெயிலுழந்த வெப்பம் இன்னுந் தணிந்திலவென்றதனாலும், தெளிந்தநீரா தலால் மான்கள் பலதாம் நீர்குடிக்கவிரும்பி நீர்ப் பள்ளங்களின் பக்கங்களிலே நின்று துள்ளின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றதனனும், ஞாலம் புலம்பு முழுவதும் நீங் கிற்றென்னது சிறிது நீங்கிற்றென்பது தோன்ற, "புலம்பு புறக்கொடுப்ப" என்றதனனும், தொகு தியுடைய மேகம் பெருமழை பெய்யாது காற்றின் விசையான் விரைந்து துளியைச் சிதறிற்றென்ற தனனும் விளக்கி நோக்குப்பட நின்றதென்றும்,

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வகிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேர
னுவக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்"

என்பதுவரையும் தலைவனது காதன் மிகுதியையும், விரைந்துவருதலையும் எங் ஙனம் விளக்கிற்றெனின்? கொய்யாத உளை பெருகிக் கொய்தவுழை பலகாலுங் கொய்ய வேண்டுதலுடைய குதிரை எனவும், அதன் மனச் செருக்குக் கூறி, அதனால் அதன் விரைவு கூறி யதனனும், அக் குதிரையைப் பூட்டிய வாரொ லியை விலக்காது வருகின்றானென்றதனனும், பெடையொடு வகிந்த வண்டின் பிரிவஞ்சி மணி யொலியை விலக்கினானென்றது, அவற்றின் பிரி விற்கஞ்சிய அருளுடையனென்பதைப் புலப்படுத் தலால் அவ்வருள் நின்பாலு முடையனென் பது புலப்பட நின்றமையினனும், விளக்கி நோக்குப்பட நின்றதென்றும்,

"கறங்கிசை விழவி னுறந்தைக் குணுது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரி னுறு
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே."

என்பதுவரையும் பிரிந்தகால மணித்தென்பதை யெங்ஙனம் விளக்குமெனின்? காந்தள்போ தவிழ்ந்தாற்போலத் தலைவர் புணர்ந்தகாலத்துப் புதுமணங் கமழ்ந்த நின் கைத்தொடிகள், இப் போது அக் காந்தட்போது அலராகி விரிந்த காலத்துப்போல மணங்குறைந்த துணையேகாண் என்றதனன், அவர் பிரிந்து சேய்த்தன்றென் பதுபட நின்று, பிரிவணித்தென்பதை விளக்கி நோக்குப்பட நின்றதென்றும் கூறி விளக்கிக் காட்டினர் என்க.

(இது பேராசிரிய ருரையைத் தழுவி எழு தப்பட்டதாகும்.)

இன்னும், ஔவைப்பிராட்டியார் செய்த செய்யுளொன்றைக் காட்டி அதன்கண்ணும் இந் நோக்கு அமைந்திருக்குமாற்றை விளக்கிக் காட் டுதும்.

"நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—யல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்."

என்னும் இச் செய்யுளுள், உபகாரஞ் செய்யின் நன்மக்களுக்கே செய்யவேண்டும் என்பது அமைந்துகிடக்கும் பொருளாகும். அப்பொருளை வலியுறுத்தற்கே முன்னிரண்டடியிலும், பின் னிரண்டடியிலும் உள்ள சொல்லும் பொருளும், நோக்கிப் பயன் கொள்ளுமாறு அமைக்கப்பட் டுள்ளன. எங்ஙனமெனின், கல்லின்மே லெழு திய எழுத்து அழியாததுபோல, நல்லார்க்குச் செய்த உபகாரம் அழியாது எனவும், அல்லார்க் குச் செய்த உபகாரம் நீர்மேலெழுத்துப்போல, செய்யச்செய்ய அழிந்துபோகும் எனவும் பொரு டந்து, அப்பொருள் நன்மக்கட்கே உபகாரஞ் செய்யவேண்டுமென்னும் பொருளை வலியுறுத்தி நோக்குப்பட நின்றமையினனென்க. இவ்வாறே பிறவும் அறிந்துகொள்க.

கு—பு. நோக்கி னிலக்கணங் கூறியதாக மேற்காட் டிய சூத்திரத்திற்குப் பேராசிரியர் செய்த உரையுள், சில பாடங்கள் பொருத்தமுள்ளனவாகக்காணப்படவில்லை. அப் பாடங்கள் இருக்கவேண்டிய பொருத்தத்தைப் படிப் போர்க்கும், படிப்பிப்போர்க்கும் உபகாரமாக இங்கே குறிக்கின்றும்.

'அவை அரியவாகிப் பிரிந்த காலத்துப் போன்று' என்பது 'அவை அலராகி விரிந்தகாலத்துப் போன்று' என்றும்,

'மணங் குறைபட்ட துணையேகாண் அவர் பிரிந்து செய்த தன்மையின்' என்பது 'மணங் குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட துணையேகாண்; அவர் பிரிந்து சேய்த்தன்மையின்' என்றும்இருப்பிற் பொருத்தம்போலக் காணப்படுகின்றது.

இன்னும், 'தெளிந்துநின்ற நீர்க்கு விருந்தினவாதலால்' என்றிருப்பதும் ஒருவாறு பொருந்துமேனும், 'தெளிந்துநின்ற நீர்க்கு வருந்தின வாதலால்' என்றிருப்பது அதினும் பொருத்தம்போலக் காணப்படுகின்றது.

இப் பாடபேதங்களை நோக்கியறிதற்கு ஏட்டுப் பிரதிகளில்லை. பொருத்தம் நோக்கி ஊகித்துக் கொள்ளப் பட்டன.

இவற்றைநோக்கும்போது, ஏட்டுப் பிரதிகளில் திரிந்து, இதுதான் உண்மைப்பாடம் என விளங்கமுடியாது கிடந்த பாடங்களையெல்லாம் நன்குநோக்கி உண்மைகண்டு திருத்தி அச்சிட்டு நூல்களையுதவிய **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ராவ்பஹதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர்** முதலிய பெரியோர்களுடைய அறிவின் வன்மையும், அருஞ்செயலும் எத்தணைப் பெரிதென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் தமிழ்நாட்டுக்குச் செய்த உபகாரம் பெரிதும் போற்றற்பாலதேயாம்.

இவ்வாறு வரும் திரிபுகளையெல்லாம் உண்மைநோக்கித் திருத்தித் தமிழ்நாட்டிற்குஉபகரித்தற்குப் பல ஏட்டுப் பிரதிகளும் பொருளுதவியும் வேண்டும். 'ஈழகேசரி'ப் பத்திராதிபர் போலப் பலர் நூல்களைப் பதிப்பிக்க ஊக்கங் கொள்ளுவாராயின், நம் யாழ்ப்பாணநாடு மேன்மையடையுமென்பதிற் சிறிதுந் தடையேயில்லை.

கடவுள்

—பண்டிதர், தீரு. ழ. நல்லதம்பி அவர்கள்.

1. உள்ள மெலிந்த வெள்ளை மலரில் உவந்திருப் பானடி அம்மா — அவன்
கள்ளங் கபடு நிறைந்தா ருளத்தினைக் கைவிடு வானடி அம்மா (உள்ள)

2. உயிருக் குயிரென்றூர் உள்ளொளி யாமென்றூர் ஒன்று முணர்கிலம் அம்மா — பொல்லா
மயருக்குள் ளேநின்று வாது புரிந்தென்ன வாழ்வுபெற் றோமடி அம்மா (உள்ள)

3. தூய வளத்திலே தூய நினைவுகள் தோன்றி விளங்கினு லம்மா — என்றுந்
தூய செயலுண்டு தாயொத்த தெய்வத்தின் நேயமுண் டாமடி யம்மா (உள்ள)

4. நல்ல நெறிகொண்ட செல்வர்க ளாமென்று நன்று நவின்றனனே அம்மா — கடுங்
கல்லென்ற வுள்ளத்தோ டேழைக ளேத்தினுங் கண்டிட லாகுமோ அம்மா (உள்ள)

5. அன்பு கடவு ளெனச்சொன்ன சொற்கள் அறிந்திருந் தோமடி அம்மா — அந்த
அன்பினை யாவ ரிடத்திலுங் காட்டிடி னன்றே நலமடி அம்மா (உள்ள)

நேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளின், நாட்டமின்றி வாய்பேசல் நன்றே பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம்

அண்ணமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர்
திரு. எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள், M.A., B.L.

நாகரிகம் என்பது நகரசம்பந்தமானது, செப்பமுடையது, கண்ணோட்டம் எனப் பல பொருள்களில் வழங்குகின்றது. தற்கால வழக்கில் கலையறிவு, ஒழுக்கநிலை, ஊண் உடை முறைகள், உயர்வாழ்வுணர்வு முதலிய சமுதாய நிலையுணர்த்தும் பண்புப் பெயராகப் பயிலுகின்றது. இதற்குச் சரியான மேனாட்டு மொழிகள் பலவற்றுள்ளும் வந்து பயிலும் Civilization என்னும் சொல்லும் Civis என்னும் முதனிலையடியாகப் பிறந்து நகர சம்பந்தம் உடையது என்னும் சொற்பொருளையே சுட்டக் காண்போம். ஆண்டும் முதலில் நகரசம்பந்தம் என்னும் பொருளதாகி அதன்பிறகு நாகரிகம் எனும் சொற்போலவே சமுதாயப் பண்புநிலையைக் குறிக்கும் சொல்லாகவே ஆளப்படுகிறது. இனி மேனாட்டு ஆரியமொழிகளிலும் இந்திய ஆரிய மொழியிலும் ஒரேபொரு ளுடையதாய்ச் சமுதாய உயர்வு நிலைகுறிப்பனவாய இச்சொற்களிரண்டும் அவ்வம் மொழிகளில் நகரம் அல்லது பேரூரின் தொடர்புகொண் டெழுந்து உலவக் காணுபவர் பலர் தமிழில் அப்பொரு ளுணர்த்தற்கேற்ற சொல்லின்மை சுட்டி இவ்வுணர்வை இச்சொல்லொடு ஆரியரிடம் தமிழர் இரவல் கொண்டிருத்தல்வேண்டுமெனத் துணிகின்றனர். ஆரியர் தொடர்புபெறுமுன் இச்சமுதாய நன்னிலையுணர்ச்சி தமிழருக்கு முளதாயின் அது குறிக்கும் தனித் தமிழ்ச்சொல்லு மிருந்திருத்தலியல்பாகும். அத்தகைய தமிழ்ச் சொல்லுண்மையை ஆராய்வதும், உளதாயின் அச்சொல்லுக்குப் பிறப்புமுறை, பொருளாக்கம், ஆட்சி முதலியவற்றைத் தேர்ந்து தெளிவதும் நம்மவர் கடமையாகும்.

பழைய தமிழிலக்கியத்தால் ஊராண்மை எனும் தனித் தமிழ்ச்சொல் உண்மை வெளியாகிறது. 273-வது குறளில் வரும் இச்சொல்லுக்குப் பரிமேலழகர் "ஊராண்மை—உபகாரியாந் தன்மை" எனப் பொருள் கூறி முதல்நாட் போரில் தோற்றுத் தனிநின்ற இராவணனை "இன்றுபோய் நாளைவா" என விட்ட இராமனின் பெருந்தகைமையை இதற்கெடுத்துக்காட்டாகத் தம் விசேடவுரையில் விளக்கியுள்ளார். ஊன்றிச் சிந்திப்பார்க்கு ஊராண்மையென்னும் சொல் நாகரிகம் என்பதுபோலவே கண்ணோடல், ஒப்புரவறிதல் போன்றதோர் சால்பினைச் சுட்டி ஊர்த்தொடர்பால் உளதாம் ஒரு பண்பினையே குறிப்பதென்பது எளிதில் விளங்கும். பண்டைத் தமிழில் ஊரெனப்படுவது பெருவிறல் மூதூர்களையே சுட்டும் பேராம். புரம், புரி முதலிய பெயர்கள் சிற்றூர்களைக் குறிக்க, பேரூரையே ஆரியமொழியில் நகரம் என்றழைப்பது போலவே சேரி, பாக்கம், பாடி, குடி, குறிச்சி, பட்டி முதலிய பல பெயர்களும் பலவேறு சிற்றூர்களைச் சுட்டுவனவாக, பெரும்பதிகளைத் தமிழில் ஊரென்றே கூறுவது அடிப்பட்ட தமிழ் வழக்காகுமென்பது நல்லிலக்கிய மறிவாரெல்லவர்க்கு முடன்பாடாம். முடிவேந்தர் மூவர் குடிவாழ்ந்த தலைநகரங்களையும், காஞ்சி, உஞ்சை, பாடலி, அயோத்தி முதலிய பெருநகரங்களையுமட்டுமே தமிழர் ஊரெனக் கூறற்கு ஒருப்படுவர். எனவே ஊர் என்னுந் தமிழ்ச்சொல் நகரமென்னும் வடசொற்போலவும் Civitas என்னும் மேனாட்டு மொழிபோலவும் பெரும்பதி என்னும் பொருளுடையதென்பது இனிது விளங்கும். அவ்வூர்த் தொடர்புக்கு ஒத்த பண்பாட்சியை ஊராண்மை என்பது மிகவும் பொருத்தமாம். நாகரிகம் Civilization என்பனபோலவே ஊராண்மையும் பேரூரின் தொடர்புடையதோர் சால்புக்குப் பெயராய் வழங்கிற்றென்பது வெள்ளிடை மலையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இச்சொற்பிறப்பும், தொடர்பும் சுட்டும் பொருளமைதி மிகவும் சிந்திக்கற்பாலதாம். மேலட்டு மொழிகளுக்கு மூலமான கிரேக்கு மொழியிலும், இந்திய ஆரியரின் வடமொழியிலும் தென்தமிழிலும் இச்சமுதாயப் பண்பை நகரம் அல்லது பேரூரின் தொடர்புடையதாகவே அம் மூவேறு மொழியுடையாரும் முறையே கருதித் தத்தம் மொழிகளில் அத்தொடர்பு சுட்டும் சொற்களால் அப்பண்பிற்குப் பெயரிட்டதும் அப்பெயர்க்காரணத்தால் அப்பண்பியலை அளந்தறிய முயலுவதும் அறிவுறமாகும்.

இடத்தாலும் காலத்தாலும் தம்முள் நெருங்கிய இயைபின்றிப் பிரிந்து வேறுபட்ட இம் மூன்று மக்கட் சமுதாயங்களும் தனித்தனியே தத்தம் தாய்மொழிகளில் ஊரொடுபட்டதோர் சமுதாயச் சால்பை யுளங்கொண்டு அதற்குரிய பெயராய் ஊர்த் தொடர்புடைய சொற்பெய் தமைத்த செவ்வி சிந்திப்பார்க்கு ஆய்தொறும் இன்பம் அளிப்பதாகும். சிறுகுடிகளில் குலத்தாலும் அன்றித் தொழிலாலும் வேறுபாடுகள் பெருகாமல் வாழ்விலும் தாழ்விலும் ஒன்றுபடும் உணர்வும் ஒழுக்கமுமுடைய சிலரே கூடி வாழ்வராதலால் அவர்தம் கூட்டுறவில் வியப்பில்லை. நகரம் அல்லது பேரூர்களிலோ அவ்வாறன்றிப் பல புலத்தவரும் வினை வேறுபட்ட வேவ்வேறு குழுவினரும் உணர்வு, ஒழுக்கம், ஊண், உடை, மொழிகளில் ஒற்றுமையற்ற பலதிறப்பட்ட மக்களாய் முன் உறவுந் தொடர்புமின்றி ஒன்று கூடி வாழ்தல் இன்றியமையாதது. ஆதலால், அங்நிலையில் அவ்வாறு வேறுபட்டார் பலரும் தம்முள் மாறுபாடு ஒழிய நேசமுந் தொடர்புந் தழையக் கூடி வாழ்தற்குரிய பண்பு மேற்கொள்ளுதல் நயனும் இன்பமும் பயப்பதாகும். அதனால் பலவாறு நிலை வேறுபட்டாரின் கூட்டுறவால் மாறுபாடுகளை மறந்து ஒற்றுமை நலம் வளர்தற்கு உதவும் பண்பே நாளடைவில் ஊராண்மையெனப் பெயர் பெறுவதாயிற்று. இயற்கையில் வேறுபாடுடையார் நாளுங் கூடி வாழும் நிலையில் மாறுபாடழிய மனமொத்து உடனுறையும் சமுதாயச் சால்புகளுக்கு ஊராண்மை பொதுப்பெயராகும். இவ்வாறு கூடி வாழ்வோர் நாளடைவில் இகல்விடுத்துச் சமுதாயப் பொதுவாழ்வில் ஒருப்பாட்டைக் கையாண்டு உயர்வாராவர். அப் பொதுவாழ்வுக் கிடையூறின்றித் தனிநிலையில் தத்தம் மொழி, ஒழுக்கம் முதலியவற்றைக் கைவிடாமற் காப்பரெனினும் தங்கள் சமுதாயப் பொதுநிலையில் எவ்வித வேறுபாட்டாலும் அப்பொதுவாழ்வுக் கிடையூறுநேராவண்ணம் ஓம்பி ஒத்துடனுறையும் அவசியத்தால் தன்னல மறப்பும் பொதுநல நோக்கும் வாழ்க்கையில் வளரப்பெற்றுக் கண்ணோட்டமுங் கைவரப்பெறுவர். இதனாற்றான் நாகரிகம் என்பதற்குக் கண்ணோட்டம் என்ற பொருளும் ஏற்படுவதாயிற்று. உண்மையில் நாகரிகம் அல்லது ஊராண்மையென்பது, வேறுபாடுகளால் மாறுபாடு விளையாவாறு காத்து பலர்கூடியினிது வாழும் பொதுப் பண்பிற்கே உரிய பெயராய் நிற்கும். அத்தகைய சமுதாயங்களிற்றான் அப் பொதுப்பண்பு வளர்தற்கு அவசியமும் இடனும் உண்டு. ஆகவே எக்காலும் ஒத்துவாழும் சமுதாயப் பண்பு நகரம் அல்லது பேரூர்களைப் பற்றுக்கோடாகக்கொண்டு ஆண்டுத் தழைவதால் அப்பண்புக்கு நாகரிகம் அல்லது ஊராண்மை என்னும் பெயர் மிகவும் இயைபுடையதாகும் அன்றே?

இனி, இவ்வாறு பலதிறப்பட்டாரும் கூடி வாழும் பேரூர்களில் அவர் வேறுபாடுகளின் காரணமாகவே கருத்துக்களும் கலைகளும் வினைத்திறமும் வாணிபமும் அறிவும் பொருளும் பலதிறப்பட்ட உணர்வுகளின் உறழ்ச்சியால் வளம்பட வளர்ந்து அவர்களின் பொதுச் சமுதாயத்திற்கே செல்வமும் சிறப்பும் செய்துதவும். இதனாற்றான் அவை யினத்திற்கும் அடிப்படையான ஊர்த்தொடர்பு சுட்டும் இப்பெயர்கள் அவ்வூரொடுபட்ட சமுதாயத்தின் உணர்வு ஒழுக்கம் கலைவளர்ச்சிகளையெல்லாம் ஒருசேரச்சுட்டி இக்காலத்தில் சமுதாயநிலையுயர்வுக்குக் காரணக்குறியாய் வழங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இச்சமுதாயப் பண்பு இச்சமுதாய மக்களின் ஊண் உடைகளிலா, கலையுணர்விலா, ஒழுக்கநிலையினிலா சிறப்புரிமைகொள்வது என்னும் பொருளு மாராயத் தகுந்ததாகும். ஊண் உடை முதலியன புலம் பொழுதுகளின் மாறுபாடுகளுக்கு ஏற்ப வேறுபடும் இயல்பினவாகலான் அவைகளைக்கொண்டு நாகரிக நிலையை ஒருதலையாய்த் துணிதற்கில்லை. உறைபனி நிறைந்த குளிர்ந்த நாடுகளில் உடையின் மிகுதி பாராட்டப்படுவதாகும். காய்வெயிற் கானல் பரக்கும் வெப்பமுள்ள நாடுகளில் மிக்கவுடை தக்கதன்றுகலின் அது வெறுக்கப்படும். இவ்வாறு நாடுதொறும் காலந்தொறும் விருப்பு வெறுப்புக்களில் வேறுபாடுகளை விளக்கும் ஓர் உடைப்பொருளை நாகரிக நிலையளக்கும் துலைக் கோலாக்குவது அனைவருக்கு முடன்பாடாகாது. அன்றியும், அறப்பழங்காலத்தில் ஆடையின்றியலைந்தவர் அநாகரிகரென்றும், அறிவு வளர்ந்து அற்றமறைக்க வுடையணிந்தவரே நாகரிக மக்களென்றும் நாம் தற்காலம் நாகரிகத் தலைநின்றோங்கும் பெருமைக்குரிமைசொல்லும் மேல்நாட்டவருள், ஆடை அறிவற்ற அநாகரிகக்குறியென்றும் உடைதுறந்து பிறந்தபடி உடல்முழுதும் மறையாம லுள்ளபடி தோன்றத் திரிவதே அறிவறமென்று உபதேசித்தும் அம்மண அறத்தை அநுஷ்டித்தும் வருங் கூட்டம் அறிஞரிடையும் பெருகிவருகின்றதை யறிவோம். அதுபோலவே உணவுப்பொருள்களை நெருப்பின் துணையால் பக்குவப்படுத்தாமல் பட்டாங்கே உண்பாரை அநாகரிகரென்றும், அட்டுண்பவரே நாகரிக மக்களென்றும் இதுவரை கருதிய நாம், தற்காலம் அட்டுண்பது அறிவற்ற அநாகரிகமென்றும் உடல்நலம்பேணற்குதவுவதும், உண்மையறிவுக்கொத்ததும் உணவுப் பொருள்களை பட்டாங்குண்பதேயாகும் என்றும் அறிவுறுத்தித் தம் மளவிற் கையாண்டும் வரும் பெருந்தகையார் தொகை காலும் பெருகுவதையுங் காண்கின்றோம். ஊன் உண்பதைப்பற்றிய வாதம் இன்னும் ஒழிந்தபாடில்லை. இவ்வாறு அறிவுடையாரனைவரிலும் உடன்பாடு பெறுமல் மாறுபாட்டிற் கிடமாய் நிற்கும் ஊண் உடைகள் முதலிய புறத்துறைகளைக் கொண்டு ஒரு மக்கட்சமுதாயத்தின் நாகரிகநிலையை மதிப்பது முறையாகாது. அதனால் இனைய தோற்றப் பொலிவு புறநிலைக் கையாட்சிகளைப் புறக்கணித்துச் சமுதாயமக்களின் கல்வியறிவொழுக்கங்களைப் பொருளாகக்கொண்டே அவ்வவர் நாகரிக நிலையை அளந்து துணிவதே அறமாகும்.

அன்றியும், குடி, கொள்கை, தொழில், துறை, மொழி, பதி முதலியவற்றால் உறவுந் தொடர்புமற்ற பலர் கூட்டுறவில், ஒருவர் மேல், மற்றொருவர் கீழ், என்னும் உணர்ச்சி பிறவாமல் தம்முள் சமத்துவ சகோதரத்துவ ஒருப்பாட்டுணர்ச்சிகள் தழைத்து ஒற்றுமையுடைய ஒரே சமுதாயமாய் வாழப் பயிலுவதே ஊராண்மை அல்லது நாகரிகத்தின் நல்லியல்பாகுமென்று முன்னே கூறினேம். அவ்வுணர்ச்சிக்கும் அதற்குரிய பயிற்சிக்கும் பல வேறுபட்ட மக்களின் கூட்டுறவே பிறப்பிடமும் நிலைக்களனுமாகுமென்றும் கண்டுவைத்தோம். அவ்வாறு கூடப்பெறுதற்குப் பேரூர்களே இடமாதலால் அச்சமுதாயப் பொதுப்பண்பு ஊராண்மை அல்லது நாகரிகம் எனப் பெயர்பெற்றது என்ற வுண்மையையும் முத்திறப்பட்ட சமுதாய மக்களின் மூவேறுமொழிகளில் அப்பண்பிற்கு வழங்குகின்ற பெயராட்சியின் ஆராய்ச்சியாலும் ஒருவாறு துணிந்து கண்டோம். இனி நகரம் அல்லது பேரூரில் வேறுபட்டார் பலர் கூட நேர்ந்ததின் நிமித்தம் அக்கூட்டுறவுக்குரிய சமுதாயப் பண்பு ஊராண்மை அல்லது நாகரிகம் எனப் பெயர் பெற்றதெனினும் பிறகு நாளடைவில் அப்பெயர் அப்பண்பையே குறிப்பதாய்ப் பேரூரின் தொடர்பை எஞ்ஞான்றும் சுட்டும் அவசியம் அற்றதாய் ஆட்சி கொள்வதியல்பு. அவ்வாறு அப்பெயர்கள் பிறந்த காரணம் மறக்கப்பட்டு அவை குறிக்குஞ் சமுதாயப் பண்புசுட்டும் சொற்குறிகளாக வழங்குங்கால் அப்பண்பின் வளர்ச்சியொடு அப்பெயர்ச் சொற்பொருளும் வளர்வதாகும். வேறுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் கூட்டுறவு நகரவாசகாரணம் இன்றி வாணிபம் முதலிய பிறகாரணங்களானும் ஏற்படுவ தியல்பாகும். தொன்று தொட்டுத் தமிழ் மக்கள் கடல் கடந்து கலமூர்ந்து பிற நாடுகளுடன் கூடிப் பழக நேர்ந்தமையாலும் பிற நாட்டு மக்கள் தமிழகத்தில் வந்து தமிழரொடு உடனுறைந்து வந்தமையாலும் தமிழருக்கு நாகரிகம் அல்லது ஊராண்மை என்னும் சமுதாயப் பொதுப் பண்பு அளப்பருங் காலமாய் அவர் கையாளும் இயலறமாயிற்று. ஆகவே அயலவருடன் ஒருப்பட்டு உடனுறைதலும், ஏதிலரை ஆதரித்தலும் தமிழர் மகிழும் சமுதாய அறமாய்த் தமிழகத்தில்நிலைபெற்றன. வேளாண்மையைத் தமிழர் நிலம் குலம் முதலிய வேறுபாடுகளின்றி யாவருக்கும் யார்மாட்டும் யாண்டும் எஞ்ஞான்றும் நடத்தவேண்டிய கடப்பாடாக வற்புறுத்துவாராயினர்.

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற இறவாத் தமிழ்க் குறள்கள் தமிழகத்தே தலைநின்ற இத்தமிழற மரபை வலியுறுத்தும். ஊராண்மை என்பதுபோலவே வேளாண்மை என்பதும் 'உபகரித்தல்' என்னும் சமுதாயப் பண்பின் நுணுக்கத்தையே விளக்கி நிற்கும். கிரேக்கர் முதலிய மேனாட்டார் போலாது இந்திய ஆரியர் தம்மில் மிகவும் வேறுபட்ட சமுதாய மக்களுடன் சமத்துவ சமாதான கூட்டுறவு கொள்ளாமல் தம்மளவில் நெடுங்காலந் தனித்து வாழ நேர்ந்ததனால் தம்மை நிகரற்ற மேலோராகவும் பிறரெல்லாம் தம்மிற்ருழ்ந்தவராகவும் எண்ணுமியல்பினராயினர். அவ்வாறேற்பட்ட அவரியல்பு நாளடைவில் தடித்து அவர் மொழியிலும் நூல்களிலும் அக்கருத்துப் பலவாறு வலியுறுத்தப்பெறக் காணுகின்ருேம். தமிழரிடைப் பிறப்பளவில் உயர்வு தாழ்வுள்ள வருண வகுப்புக்கள் ஏற்படாததுடன் தமிழரல்லாப் பிறரையும் தமராகக் கொண்டு ஒத்துடனுறையும் ஒருப்பாட்டுணர்ச்சியே தழைவதாயிற்று. அறப்பழங் காலத்தே வடவாரிய நாட்டிலிருந்து வந்த பார்ப்பனரைப் பாராட்டி நிலம் பொருள்களுடன் அன்னவர்தம் நேசமுந் தந்து அன்றுதொட்டின்றுவரை அவரையன்புடன் நடத்திவருவது மறுக்கொணாச் சரிதச் செய்தி. அதுவுமன்றி, கிறிஸ்துவமதம் தோன்றிய காலத்தே கிறிஸ்தவரால் துரத்தப்பட்டுத் தமிழ்நாட்டில் வந்து குடிபுகுந்த ஆதி யூதர்களுக்கு வேண்டிய வசதியுந் தந்து, அவர்கள் தம் தெய்வ வழிபாட்டையுந் தட்டின்றி நடத்தற்கு உரிமையும் பொருளும் உவப்பொடு தந்து உதவியது உலகறிந்த செய்தியாகும். அவர்களைத் தொடர்ந்து சுமார் ஆயிரத்தைஞ்ஞூறு ஆண்டுகட்கு முன்னமே தமிழகத்தில் சிரியா முதலிய பிறநாடுகளிலிருந்து வந்து புகுந்த கிறிஸ்தவருக்கும், அராபியருக்கும், மகமதியர்களுக்கும் அவ்வக்காலத்தே அவரவர்க்கு ஊர்களுடன் உரிமைகளுமுதவித் தம்மிடைச் சோதரராய்த் தங்கும்படி உவந்தேற்று உபகரித்த தமிழரின் வேளாண்மையை இன்றளவும் அவ்வப் பெருமக்களின் சரிதங்களும் சாசனங்களும் கரிபகர்ந்து தெளிவிக்குஞ் செய்தியை யாவரும் நன்கறிவர். தற்கால மண்ணுலகில் நாகரிக மக்களெல்லாம் "பிறரைத் தமராய்ப் பேணும் பெருந்தகைமை இந்தியரின் சொந்த வுரிமை" எனச் சொல்லும் பாராட்டுரைக்கு முழுமுதற் காரணம் தமிழரின் அடிப்பட்ட இவ்வேளாண்மையேயாகும் என்பது சரிதச் செய்திகளை நடுநிலையிற் சிந்திப்பாரனைவருக்கும் உடன்பாடாகும். புறநாடுகளிலிருந்து அறவே மாறுபட்ட அறிவொழுக்கங்களும் மொழி முதலியனவும் உடைய சமுதாய மக்கள் ஆரிய நாட்டில் வந்தேறவும் ஆரியரால் ஏற்றுக்கொள்ளப் பெறவும் நிகழ்ந்ததான செய்தி யாதும் சரித்திரம் அறிந்ததில்லை. தமிழரோ திரைகடல் ஏறித் திரவியந் தேடும் முயற்சி மேற்கொண்டு தொன்று தொட்டுப் பிறநாடு பல புகுந்து பழகி வந்தபடியாலும், ஏதிலர் பல சமுதாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவவழிபாட்டின் தொன்மை

கொழும்பு, பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்
டக்டர் க. கணபதிப்பிள்ளை அவர்கள், B. A. (Hons), Ph. D.

ஆரியர் வந்து குடியேறமுன்னர் இந்தியாவிலிருந்த கடவுள் வழிபாட்டு நிலை எவ்வகைத்தென்று சில ஆண்டுகளுக்கு முன் அறியமுடியாததாகி யிருந்தது. ஆனல் சில காலத்துமுன் சிந்து நதிக்கரையில் தோண்டி யெடுக்கப்பட்ட சிலைகள் கல்முத்திரைகள் கல வோடுகள் முதலியவற்றால் இந்தியாவில் ஆரிய ருக்குமுன் இருந்தவர்கள் சிறந்த கடவுள் வழி பாட்டையும் உயர்ந்த நாகரிகத்தையும் அடைந் திருந்தனர் என்று அறியக்கிடக்கின்றது. இவ் வகை உயர்ந்தநிலை அடைந்தவர் யாவரெனின் தமிழர், கன்னடர், தெலுங்கர் முதலியோரின் மூதாதைகளாகிய திராவிடரென்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர்.

முதலில் தேவிவழிபாட்டை எடுத்துக்கொள் வாம். சிந்துநதிக்கரையில் தேவியின் உருவச் சிலை பல இந்தியாவுக் கருகாமையிலுள்ள பெலுக்கிஸ்தானத்திற் கிடைத்த சிலைகளோடு ஒப்புள்ளவை. அன்றியும், ஈரானுக்கும் (Persia) மத்தியதரைக் கடலைச்சார்ந்த ஈஜியன் கடலுக்கு மிடையிலுள்ள ஏலம், மெசொப்பொத்தோமியா, பலத்தீனம் முதலிய தேசங்களிலும் இச்சிலைகள் போன்ற உருவங்கள் எடுக்கப்பட்டன. இவை களின் காலம் மக்கள் கல்லாலும் வெண்கலத் தாலும் ஆக்கப்பட்ட ஆயுதங்களை உபயோகித்த காலம். இவைகளாற் குறிக்கப்பட்ட வழிபாடே இந்தியாவில் இப்போ இருக்கும் சக்தி வழிபாட் டுக்கு முதல் தோற்றம். சக்திவழிபாடு ஆரியர் இந்தியாவில் வந்த பின்னர் உண்டானதென்று சிலர் கூறுவர். ஆனல் இருக்கு முதலிய வேதங் களையும் சதபதம் முதலிய பிராமணங்களையும் நன்காராய்ந்தால் பெண் தேவதைகளைப்பற்றி சிலவிடங்களிலேயே அங்கு கூறப்பட்டிருக் கின்றதென்பதை யறியலாம். நிலதேவதையா கிய பிருதிவியைப்பற்றி அங்கே சொல்லப்பட் டிருந்தாலும், அதன்வழிபாடு ஆரியரும் திரா விடரும் கலந்த காலத்திற் பின்னரே எழுந்த தென்று விளங்கும். ஆகையின் சக்திவழிபாடு ஆரியருக்குமுன் இந்தியாவில் இருந்ததென்பது நன்கு பெறப்படும். இது ஆரியருக்குப்பின் வகுக்கப்பட்ட வருணச்சிரமத்தில் அடங்காத மக்கள் பல்வேறு காலங்களில் கடல்வழி வந்து தமிழ்க்கரையேறிப் குடிபுகுந்தவருடன் தமிழர் எஞ்ஞான்றும் ஒப்புரவுஞ் செப்பமும் காட்டி உடனுறைய நேர்ந்த நிகழ்ச்சிகளாலும் தமிழ ரிடை ஊராண்மை எனப்படும் இச் சமுதாயப் பொதுப்பண்பு அவர்க்கியலறமாய்த் தழைத்துத் தமிழ்ப் பழநூல்களிலெல்லாம் தலையாய தமிழற மாய்ப் பாராட்டப்படுவதாயிற்று. இத்தமிழரின் ஊராண்மையறம் நாளடைவில் இந்தியப் பொ துச்சமுதாய மரபாகி இந்திய நாட்டுக்கே இந் நாகரிகம் தனியுரிமையென்னும் வீறு தருவதா யிற்று. இந்நல்லறமாகிய நாகரிகம் தமிழர் நெகிழாமற் காத்துக் கையாளற்குரியதென்ப தையும், இதுபோன்ற பல சால்புகளும் தமி ழகத்திற் றலைநின்றோங்கித் தொல்லுலகில் தமி ழருக்குப் பெருமதிப்பு விளைத்த மெய்ச்சரிதத்தை மறவாமலுணர்ந்து மீட்டும் நம் நாட்டவர்க்கு நல்ல பேரீட்டும் கடப்பாடும் பேறும் தமிழரை வர்க்கும் பொதுவுரிமையென்பதனையும் தற்கா லத் தமிழுலகம் மறக்கொணாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ந்த வகுப்பினராக இப்போ கருதப்படும் பறையர் முதலிய பழந்திராவிட மக்களுக்குள் இன்றைக்கும் நிலைபெற்றிருக்கின்றது. கிராம தேவதை வழிபாடென்றும் மாதா வழிபாடென்றும் இதைக் கூறுவர். தொல்காப்பியத்திற் கூறப்பட்ட கொற்கை வழிபாடும் இதுவே. ஆரியக்கலப்பு ஏற்பட்டபின் உயர்ந்த வகுப்பினராய்க் கருதப்பட்டோர் இவ்வழிபாட்டைத் தத்துவசாத்திரத்தின் சார்பாக 'சக்திவழிபாடு' என உயர்த்திக்கூறி நூல்கள் யாத்து வழிபட்டு வருகின்றனர். இது பெரும்பாலும் வங்காள தேசத்தில் உள்ளது. தாயை முதன்மையாகக் கருதுகின்ற மக்கட்கூட்டத்தில் எழுந்ததென்று மக்கள் நூல்வல்லார் வழுத்துவர்.

இதுபோன்றே மத்தியதரைக் கடலோரத்திலுள்ள தேசங்களாகிய சின்னசியா, பினீசியா, எகிப்து, கிரேக்கம் முதலிய தேசங்களிலும் இவ்வழிபாடு இருந்தது. இத்தேசங்களில் ஒரு பெண்தெய்வம் மணமிலியாய் ஆண்கூட்டமின்றிக் கருவடைந்து ஓர் மகனீயீன்று, பின் அவனது சேர்க்கையால் எல்லாவண்டங்களையும் அங்குவாழும் மக்கள் தேவர் முதலியோரையும் ஈன்றளித்ததாக ஓர் கொள்கையைக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் யூதமதம் தலையெடுத்துக் கிறீத்தவம் பிறந்தபோது வந்த கன்னிமேரி வழிபாடும் இக்கொள்கையிலிருந்தே வந்திருக்கலாம். மேரி, கன்னியாய்க் கருவடைந்து கிறீஸ்துவையீன்றனள் என்ற கொள்கையும் பழைய கொள்கையிலிருந்து வந்திருக்கக்கூடும்.

தாயை முதன்மையாய்க்கருதும் மக்கட்கூட்டத்தினரைப் போலவே, தந்தையையும் முதன்மையாய்க்கருதும் மக்கட்கூட்டத்தினரும் முற்காலத்தில்இருந்தனர். இதற்குச்சான்றுசிந்துநதிக்கரையில் எடுக்கப்பட்ட சிவபெருமானுடைய உருவங்களமைந்த முத்திரைகளாகும். இம்முத்திரையொன்றில் மூக்குநுனியை நோக்கியவண்ணமாய் முக்கண்களமைந்த மூன்று முகங்களுடன் கால்களை மடித்துச் சப்பாணிகொட்டி யோகியரைப்போல் ஆசனத்தமர்ந்து கைகளை நீட்டி முழங்காலில் வைத்து இருக்கின்ற ஒரு உருவம் காணப்படுகின்றது. கைகளிலும் மார்பிலும் அணிகலன்களிருக்கின்றன. உயர்ந்த முடியும் அம்முடியின் இருபாலும் உட்புறமாய் வளைந்த இருகொம்புகள் இருக்கின்றன. இவ்வுருவத்தின் இருபக்கங்களிலும் காலுமிருகங்களிருக்கின்றன. வலதுபக்கத்தில் யானையும் புலியும், இடதுபக்கத்தில்எருமையும் காண்டாமிருகமும் ஆகும். இதன் கீழ்ப்புறத்தில் கழுத்தை மடித்துப் பின்னேக்கிய வண்ணமாய் இருமான்கள் நிற்கின்றன. இவ்வடையாளங்கள் இக்காலத்திருக்கும் சிவபெருமானின் உருவங்களுக்குள்ள அடையாளங்களோடு பெரும்பாலும் ஒப்புமையுடைமையால், இவ்வுருவம் சிந்துநதிக்கரையிலுள்ள மக்கள் அக்காலத்தில் சிவபெருமானைக் குறித்து வணங்கிய உருவமாகும். இதுவே இப்போதுள்ள சிவபெருமான் உருவத்துக்கு அடிப்படையாகும். யோகாசனத்தில் இருப்பதால் அவரை "மகாயோகி" யென்றும், மிருகங்களுக்கு நடுவேயிருப்பதால் "பசுபதி" யென்றும் அவருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட பெயர்கள் இதற்குச் சான்றாகும். மேலே இவ்வுருவத்து முடியின் இருபக்கமும் உட்புறமாய் வளைந்த இருகொம்புகள் இருக்கின்றன எனக்கூறப்பட்டது. இவ்விருகொம்புகளும் அவைகளின் நடுவிருக்கும் முடியும் முக்கவர்போல் தோற்றுகின்றபடியால் இவ்வுருவே பிற்காலத்தில் "திரிசூலம்" ஆக மாறியிருக்கவேண்டும். இருகொம்புகளை முடியில் அணிதல் அக்காலத்தில் கடவுட்டன்மையைக் குறிப்பதுபோலும். கடவுளைக் குறிக்கும் வேறு உருவங்களிலும் இதுபோல் இருகொம்புகள் முடியிலிருக்கின்றன. இதேபோல் இவ்வழக்கம் சுமேரியாவிலும் பபிலோனியாவிலும் இருந்திருக்கின்றது. மற்றும் இவ்வுருவத்தின் கீழேயிருக்கின்ற இருமான்களின் உருவத்தைப் போன்றேபிற்காலத்தெழுந்தசிவபெருமான்உருவங்களின் கையில் ஒருமான் இருக்கின்றது. பின்னேக்கியவண்ணமாய் நிற்பதால் இதுவும் குறிக்கப்பட்ட உருவத்திலிருந்தே வந்திருக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காரணங்களினால் சிவபெருமானைப்பற்றிய கொள்கை ஆரியர் வருகைக்கு முன்னரே இந்தியாவில் நிலைபெற்றிருந்தது என்பது புலப்படும். வேதங்களில் விட்டுணு, இந்திரன், வருணன் முதலியோரைப்பற்றிக் கூறப்பட்டதையன்றிச் சிவபெருமானைப்பற்றி யாதுங் கூறப்பட்டில. சில மேலைநாட்டு அறிவாளர் வேதத்திற் சொல்லப்பட்ட உருத்திரனின் கொள்கையிலிருந்தே சிவபெருமானின் கொள்கை வந்ததெனக் கூறிப்போந்தனர். ஆனால் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் அகப்பட்ட சிலைகள் முத்திரைகள் முதலியவற்றால் இவர் கூற்றுப்பிழையென அறியப்பாலது. ஆரியரோடுவந்த உருத்திரன் சிவனாக மாறியதன்று. உருத்திரன் சிவனுக்குரிய அடையாளங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தமையால் உருத்திரனின் கொள்கை சிவனின் கொள்கையோடு சேர்ந்துவிட்டது. வேதங்களுக்குப் பின்னெழுந்த பிராமணங்களிலும் "சிவன்" என்ற சொல் இல்லை. அவைக்குப் பின்னெழுந்த உபநிடதங்களிலும் இல்லை. எனினும், அவைக்கு மிகப்பிற்பட்ட சுவேதாசுவதர உபநிடதத்தில் மட்டுமே காணப்படுகிறது. இதனால் ஆரியர் வந்து பலகாலங்களாக சிவனென்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை யென்பது திண்ணம்.

மூன்றாவதாக இலிங்க வழிபாட்டை ஆராய்வாம். சிந்துநதிக்கரையில் இலிங்க வழிபாடும் அக்காலத்து இருந்ததாகத் தோற்றுகிறது. அங்கு காணப்பட்ட இலிங்கங்களும் ஆவுடையாரும் இதற்கு அறிகுறி. அல்லாமலும் ஆங்கு கிடைத்த சிறிய இலிங்கங்கள் மக்களால் அணிகலனாய் அணியப்பட்டதாகவும் தோற்றுகின்றது. இக்காலத்தில் வீரசைவர் இலிங்கங்களை அணிந்துகொள்ளுதல் இத்துடன் நோக்கத்தக்கது. ஆகையின் இலிங்கவழிபாடு ஆரியரால் கொண்டுவரப்பட்டதன்று; இந்தியாவிற்குச் சொந்தமானது. இருக்குவேதத்தில் பழைய மண்டலங்களில் இந்தியாவிலிருப்போர் சிசினதேவரை வழிபடுவோரெனப் பழித்துரைக்கப்பட்டுள்ளது. பின்னெழுந்த மண்டலங்களில் இலிங்கவழிபாட்டையும் தம்முடைய கொள்கைகளுடன் சேர்த்து ஆரியர் சூக்தங்கள் செய்திருக்கின்றனர். மேலும் இலிங்க வழிபாடு கிரேக்கரால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதென்று சில மேல்நாட்டறிஞர் கூறினர். சிந்துநதிப் பள்ளத்தாக்கிலுள்ள நாகரிகத்துக்கு எவ்வளவோ பிற்பட்ட கிரேக்கர் இந்தியாவுக்கு அதை யாங்ஙனங் கொண்டுவந்தனரோ? இது இந்தியாவின் நாகரிகம் பழையதல்ல எனநிலை நிறுத்த முயன்றோர் வெற்றுரையென விடுக்க.

அக்காலத்திருந்த மக்கள் ஒரேயொரு தெய்வத்தை வழிபடவில்லை. சில கூட்டத்தினர் சக்தியையும், சிலர் இலிங்கத்தையும், மற்றுஞ் சிலர் சிவபெருமானையும் வணங்கிவந்தனர். அன்றியும் சிற்சில கூட்டத்தார் மரங்களையும், மிருகங்களையும் வணங்கினர். இப்பண்டைய வழக்கம் இக்காலத்திலும் இந்நாட்டில் உண்டென்பது யாவருமறிவர்.

இந்நாகரிகம் கிறீஸ்துவுக்கு மூன்று அல்லது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. உலகத்தில் அறியப்பட்ட மிகப்பழைய நாகரிகங்களில் இதுவுமொன்று. யூதரின் முன்னோராகிய செமிற்றியருக்கும் சுமேரியருக்கும் எகிப்தியருக்கும் முந்தியது. உலகத்திற் றோன்றிய மக்கட்கூட்டங்களில் மிக இளையரான ஆரியருக்கு மிக முற்பட்டது.

சிலகாலங்களுக்குப் பின்னர் யாதோ காரணத்தால் இந்நாகரிகம் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் அழிந்தபோதும் எஞ்சிய பாகத்திலுள்ள மக்கள் தங்கள் கொள்கைகளைக் கைவிடாது பொன்னேபோற் போற்றிவந்தனர். ஆரியர் படையெடுத்து வந்து தங்கள் மொழியையும், மதக்கொள்கைகளையும் நாகரிகத்தையும் பரப்ப முயன்றகாலை திராவிட மக்கள் தங்கள் கொள்கைகளை அழியவிடாது கைக்கொண்டொழுகினர். எனினும் வடஇந்தியாவில் இருந்த திராவிடர் ஆரியர் கடவுள்களையும், அவர் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனையும் மொழியையும் பெரும்பாலுங் கைப்பற்றினர். ஆயினும் காசுமீரம் வங்காளம் முதலிய பாகங்களிலுள்ளோர் சிவனுடைய கொள்கையையுஞ் சக்தியுடைய கொள்கையையும் விடவில்லை. வடநாட்டிற்போலத் தென்னாட்டில் திராவிடர் கிலேகுலேயவில்லே. தென்னாடு திராவிடமொழிக்கும் சிவவழிபாட்டிற்கும் உறைவிடமாக விருந்தது. இதனலன்றே மணிவாசகப்பெருமானும் "தென்னுடைய சிவனேபோற்றி" யென்றனர்.

தத்துவசாத்திரங்கள் தழைத்தெழுந்தகாலத்து நிற்பதுல்வல்லாரும் ஞானநூல்வல்லாரும் முற்காலத்து வெவ்வேறுயிருந்த சிவகொள்கையையும் சக்திகொள்கையையும் ஒன்றுசேர்த்து "மாதொரு பாகனை" ச் சிவபெருமானுக்குத் திருவுருவம் அமைத்ததுமன்றி, மக்கட்கூட்டத்தினர் வெவ்வேறுய் வணங்கிவந்த பாம்பு, எருது, கங்கை, அங்கி, பிறை முதலியவற்றையும் அதனேடு சேர்த்து எவ்வெக் கொள்கைகளையுந் தன்னுளடக்கிய திருவுருவமொன்று சமைத்தனர். ஒரு பேராறு தன்னுள் வீழ்கின்ற கிளைநதிகளின் தண்ணீரை அடக்கிக்கொண்டு பாய்வதுபோல, சிவனது திருவுருவமும் இந்தியாவில் பண்டைக் காலத்தில் எழுந்தனவும் ஆரியரால் கொணரப் பட்டனவுமாகிய கொள்கைக ளெல்லாவற்றையுந் தன்னுளடக்கிக் கரந்திருக்கின்றது. சிவனையுஞ் சக்தியையும் ஒன்றுசேர்த்தது போலவே, இலிங்கத்தையும் ஆவுடையாரையும் ஒன்று சேர்த்து சிவன்கோவில்களிலே மூலத்தானங்களிலே வைத்துச்சைவர்கள்வணங்குகின்றனர்.பண்டைக்காலந் தொட்டு வளர்ந்துவந்த சிவவழிபாடு இந்தியமக்களுக்கு, முக்கியமாய்த் திராவிடமக்களுக்கு, உயிரையே போன்றது. பழையனவற்றைக் கைவிடாது இறுகப்பிடித்து வைத்திருப்பதே இந்தியமக்களின் மேன்மைக்குக் காரணம். பிற நாட்டாரும் அவருக்கு உதவியாளராய் வந்த பிறமதத்தினரும் இந்நாட்டில் வந்து இப் பண்டைப் பொருளை அழிக்க முயன்றபோதும், அழியவிடாது காத்துவைத்த இந்துமக்கள் பெருமையே பெருமை.

தொண்டு

வண்ணம்

வித்தையின் மிகுத்தவரை யுத்தம மனத்தினரை நித்திய தவத்தினரை—மிகைகூடும்
மெய்ப்பொருள் வளத்தினரை யற்புறு வரத்தினரை வெட்டெனவை விட்டவரை—விழைவேனே
புத்தமிழ் தெனத்தமிழின் மெத்துபுக ழிப்புவியிற் பத்தொடு பரப்புமவர்—பொலிபாதம்
பொற்புறு விளக்கெனவும் துற்றுநறும் பூவெனவும் புக்குறை யிருப்பெனவும்—புகழ்வேனே
கத்துதிரை சுற்றுபுவி பெத்திசையு மிக்கலே கற்றவை தமிழ்ப்புதல்வர்—களியோடே
கற்றிட மணத்தமிழ் பெயர்த்துதவு விற்பனரைக் கட்குண்மணி யொப்பிரெனத்—தொழுவேனே
மெய்த்தமிழ் கெடுக்கவழி கொட்புற வியற்றியொளி விட்டகொடு முட்டர்தமை—மதியேனே
வெற்புமிசை வைத்தகிரு விற்றரு விளக்கெனவென் நற்றமி ழணிக்குபர்வு—தருவேனே.

—பண்டிதர், மு. நல்லதம்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துச் சிங்களப் பெயர்கள்

(நல்லூர், வண. சுவாமி ஞானப்பிரகாசர் O. M. I. அவர்கள்.)

நம்முடைய குடாநாட்டில் சரித்திரத்துக்கு எட்டாத பண்டைநாள்தொட்டு தமிழ்க்குடிகள் நிலைபெற்றிருக்கின்றார்கள் என்பதில் ஐயப்பாடு இன்று. ஆயின், இடைக்காலத்தில் அன்னோர் பேசியது தமிழ் சிறிது சிறிதாய் மருவி, தெலுங்கு, கன்னடம் ஆதியனபோல வேறுபட்டு நிற்பதாயிற்று. அந்நாளில் அத்தமிழிற்கு பட்டது. மேல் வருவனவற்றில் சிங்களர் என நாம் குறிப்போர் பழங் காலத்து ஈழத்தமிழரே எனக் கொள்க.

யாழ்ப்பாணத்து இடப்பெயர் ஆராய்ச்சி பல அரிய பழஞ்செய்திகளை விளங்கத்தருவது. காலஞ்சென்ற



[வண. சுவாமி ஞானப்பிரகாசர், O. M. I]

S. W குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய "வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு" என்னும் விலைமதித்தற்கரியநூல் இவ் ஆராய்ச்சிக்குச் சிறந்த சாதனம். இப்போது நாம் எடுத்துச் சொல்லப்போகின்றவைகள் பெரும்பாலும் அந்நூலையே ஆதாரமாகக் கொண்டனவாகும்.

ஈழத்தமிழ் (எலு) எனும் பெயர் வந்ததுபோலும். அதுவே இன்று சிங்களம் எனப்படும் மொழிக்கு அடிப்படை ஆயிற்று. ஈழத்துப் பழந்தமிழரும் சிங்களராகி, பின்னரில் ஒரிசாவினின்றும் தென்னிந்தியாவினின்றும் வேறுதமிழர் வந்து நாட்டைக் குடியேற்றும்வரையில், யாழ்ப்பாணமும் சிங்களநாடு எனப்

ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள், நாடும் பொருளான நட்பே பராபரமே.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்வேளாண்மை

சிங்களர்தாம் கங் தீபகற்பத்தில் நெல்வேளாண்மையையும் சிறுதானிய விதைப்பையும் தோட்டச் செய்கையையும் ஆகியில் நிகழ்த்தினர் என்பது வயல்நிலங்களுக்குக் "கும்புற" "தெணிய" "தூ" ஆகிய பெயர்களும், சிறுதானிய வினையுள்களுக்கு "புலவு" "புலோ" ஆகிய பெயர்களும், பழந்தோட்டக் காணிகளுக்கெல்லாம் "வத்தை" முதலிய பெயர்களும் பயிலுவதாற் பெறப்படும். "கமம்" எனுஞ் சொற்கு "நிறைவு" எனும் பொருளன்றி வினைநிலம் எனும் பொருள் தமிழில் உள்ளதன்று. சிங்களத்தில் மட்டும், கம (க்ரும) என்பது கிராமத்தையும், அதற்கு விசேஷ அங்கமாயுள்ள வினைநிலத்தையும், சிறுபான்மை குளத்தையும், அப்பால் கிருஷித்தொழிலையும் உணர்த்துவதாம். சிங்களர் நாட்களின் கமங்களினும் கமமூலைமாரினும் ஞாபகமே இன்றைக்கும் "கமக்காரன்" எனும் நாமகரணத்திற் கரந்து கிடக்கின்றது. கமக்காரர் ஆதியாம் உயர்ந்தோரை இழிந்தோர் "நயிந்தை" என அழைப்பதும் சிங்களர் கால வழக்கமேபோலும். போர்த்துக்கீசர் நாட்களிலும் வன்னிநாட்டு வயல்கள் கமம் என அழைக்கப்பட்டன. (Foral of Jafanapatao 1645) "கம" எனும் சிங்களப் பகுதி கிராமம் என்னுங் கருத்தில் **சுன்னகம், பன்னகம், கரம்பகம்** ஆதிய ஊர்ப்பெயர்களில் வழங்குகின்றது. "கும்புற" என்னப்பட்ட வயற்பெயர் இந்நாளில் **மார்க்கம்புரை, திக்கம்புரை, அளக்கம்புரை, கம்பரவுடை** ஆதிய காணிப்பெயர்களில் காணப்படுகிறது. "தெணிய" எனப்பட்ட வயல்கள் **கோட்டுவதெணி, வட்டத்தெணி** ஆதியவற்றில் விளங்குகின்றன. "தூ" பெயருள்ள வயல்கள் பச்சிலைப்பளியில் அனந்தம். அப்பால் "புலவு" எனும் சொல்வழக்கை நோக்குக. அது பொலவு, பொல எனுஞ் சிங்களத்தினின்றே எழுந்ததென்பது தேற்றம். **மறவன்புலோ** எனும் ஊர்ப் பெயருங் காண்க. **துறட்டிப்பளை, செம்பளை, கிராம்பளை** ஆதிய பல காணிப்பெயர்களில் சிங்கள "பொல" ச் சொல்லு வேறோர்வகையாய் மருவிநிற்கின்றது. காடு வெட்டிச் சுட்டுப் பின் சிறுதானியம் வாழை கிழங்கு ஆதியன பயிரிடும் "ஹேன" எனும் காணிப்பெயர், அல்வாயிலுள்ள **நீர்வளச்சேனையில்** மீந்திருக்கிறது. இனி நம்நாட்டில் ஆதிதொட்டுச் செய்கைபண்ணப்பெற்ற "வத்தை" கள் எண்ணிறந்தன. ஒவ்வோரூரிலும் காணிப் பெயர்களுள் அவற்றைக்காணலாம். இத்தோட்டங்களைப் பண்டைக்காலத்து ஆண்ட சித்தா, சாத்தனு, கீறியா, கிரா, வயிரா, தம்பா, அவலியா, சிங்கா, களுவா ஆகியாம் சிங்களர்களின் நாமங்கள் அவரவர் வத்தையோடு பிணைப்புண்டு, **சித்தாவத்தை, சாத்தனுவத்தை, கீறியாவத்தை,** என்றற்றொடக்கமாக இன்றைக்கும் வழங்குகின்றன. தம்மையாண்டோரின் தனிப்பெயர்களையன்றி அன்னோர் குலம் தொழில் நிலைமை ஆதியவற்றையும் இவ்வத்தைகள் நமக்குக் காப்பாற்றித் தந்திருக்கின்றன இவ்வாறே அந்நாட்களின் வடுவா (தச்சன்), பத்தா (பதுவாவெனு மிழிகுலத்தவன்), ஆம்பட்டயா (மயிர் வினைஞன்), அறுவ (குயவன்), கம்புரு (கன்னன்) கொவ்வா (பசுக்காப்போன்), கொவி (வேளாளன்), வமுணு (பிராமணன்), வல்லியா (உரொடியசாதியான்), வண்டா (அரச குலத்தோன்), கமமூலை (கிராமத் தலைவன்) ஆதியோர் **வடுவாவத்தை, பத்தாவத்தை** என்றற் றொடக்கமாக அவ்வவருடைய வத்தையின் பெயரில் நின்று ஒளிருதல் காண்க.

பயிர்ச்செய்கை

பயிர்ச்செய்கை விஸ்தீரணமாய் நடைபெற்றது. தென்னை, பனை, தோடை, எலுமிச்சை, மாதுளை, விளாத்தி, இலுப்பை, காவல், முங்கில் ஆதியன நாட்டப்பெற்ற தோப்புக்கள் ("வத்தை" "தெணிய") பல. இவற்றை **போல்வத்தை, தல்வத்தை, நாரந்தனை, கம்பரத்தனை, கராத்தனை, கிளுவத்தனை, மீத்தனை, தள்தனை, இரணதனை** ஆதிய இடப்பெயர்கள் இன்றைக்கும் காட்டும். வாழை, கத்தரி, கிழங்கு, கீரை, உளுந்து, எள்ளு இவை பயிரிடப்பட்ட தோட்டங்கள் **கேல்வத்தை, எழுவாடவத்தை, உடலாவத்தை, வள்ளலாவத்தை, தம்பலாவத்தை, உந்துவத்தை, தெல்வத்தை** ஆதியனவற்றால் விளங்கும். அந்நாளின் பூந்தோட்டங்களும் பல. **செந்தாவத்தை, மல்வத்தை, சாத்தனை** காண்க. இவற்றுள் புத்தாலயங்களுக்கு உரியனவாய்ப்போலும் அரச பூந்தோட்டங்கள் ("உயன") இருந்த தானங்களை **வைப்பியனை, உயனவளவு, உய்யான் தோட்டம், உயனைக்குரோச்சியவனை** என்பன குறிக்கும். "சீமா" எனும் சுற்றுள்ள காணிப்பெயர்களெல்லாம் ஒவ்வோர் பயிர்வகை செய்தற்குரிய காணித்துண்டுகளைக் காட்டும். இவற்றுட் பல பிற்காலத்துத் தமிழ்க்குடிகளாற் பெயரிடப்பட்டனவும் உள்ளன. வெறும் புற்றரைகள் சிங்களரால் "தலாவ" "வாட்ட" "பிட்டனிய" எனப்பட்டு, **தலவை, துளாவை, குறுநங்கைவாடி, கிணியம்புத்தினி** ஆதிய நங்காலக் காணிப்பெயர்களாய் மாறிநிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்து மரச்சோலைகள் "கொல்ல" என வழங்கித் தமிழரால் கொல்லை, ஓல்லை, கோலை, ஓலை, குலை எனும் பெயர் படைத்தனவாகி **வாகோல்லை, களவோல்லை, மாங்கோலை, கிரியோலை, பலுகுலை** ஆதிய இடப் பெயர்களில் நிலவுகின்றன. அக்காலில் ஆங்காங்கு இன்னமரத்தடி என அறியப்படுவதற்கு இலக்காய் நிழல்செய்துநின்ற மரப்பெயர்களை **பிப்பிலி, போதி, கயட்டை, கோகோம்பு, குக்குறுமான், பலட்டை, கொக்கோட்டியான், சித்திரமோழி, முலவை** ஆதிய இடப்பெயர்களில் இன்றைக்கும் காணலாம். மரக்கூடல்களைக் குறிக்கும் "கொமுவ" எனும் சொல் **கோடி காமம், இளகாமம், தேகாமம், தம்பகாமங்களிலும்,** "றுப்பா" எனுஞ்சொல் **குடாரப்பு, போக்கறுப்பு** களாலும் "கொள்க" என்னுஞ்சொல் **தம்பக்கோணை**யிலும் மருவிநிற்றல் காண்க.

குளங்கள்

சிங்களர்காலத்துக் குளங்கள் பலவற்றை இன்றைக்கும் கட்டுவை, பொக்கணை, யாமா எனும் ஈறுள்ள பெயர்களாலறியலாம். "கட்டுவ" கட்டுக்குளத்தைக் குறிக்கும். பொக்கணை குளத்தைக் குறிக்கின்ற "புஷ்கரிணி" எனும் சமஸ்கிருத பதத்திலிருந்துவரும் பொக்குண எனும் சிங்களம், மாதகல், அச்சுவேலி, சுன்னாகம், தொல்புரம், மாவட்டபுரமாதிய பலவிடங்களில் இப்பெயர்க்குளங்கள் உள்ளன. யாமா அல்லது பேய்க்கிணறு எனும் பேருற்றுக் கூவல்கள் சண்டிருப்பாய், கவாலி, ஊரெழு, குரும்பசிட்டி ஆதியவூர்களில் உள்ள குளத்தையும் வாய்க்காலையுங் குறிக்கின்ற "கொட" "ஓட" என்பன கொடை, குடை, ஓடை, உடை என விகாரப்பட்டு, **தங்கோடை, அம்பலாக்குடை, போதியோடை, பொக்கணவுடை** ஆதிய பல இடப்பெயர்களிலே நிற்கின்றன. குளத்தையும், மேட்டுப்பாகம் மட்டும் செய்கைக்குரியதும் மற்றையபாகங்கள் செதுப்பு நிலமாயுள்ளதுமான வயல்வெளியையுங் காட்டும் "வில" "வில்" எனும் ஈறுபொதிந்தன **இணுவில், உடுவில், கோக்குவில், கோண்டாவில், நந்தாவில், மட்டுவில், மந்துவில், நுணுவில், வேராவில், இத்தாவில், மீருசுவில், வேவில், கருடாவில், சுருவில், நீவில்** ஆதியன. இன்னும் பலவுள. குளத்தையடுத்த செய்கரை, அணை, என்னும் பொருள்தரும் "நியர" எனும் பதம், நீகள எனச் சில்லிடங்களுக்குப் பெயராயமைந்திருத்தல் காண்க. இப்பொருளினையே படைத்த "வெட்டிய" ஈறு, **அளவெட்டி, கரவெட்டி** ஆதிய விடங்களிற் றோன்றும். "ஆலி" எனும் குளக்கட்டு **தலையாளி**யில் விளங்கும். குளங்களினின்று நீர்கொண்டு செல்லும் "ஆல" என்னும் புராதன வாய்க்கால்கள் பல **பன்னாலை, துன்னாலை, இளவாலை, சில்லாலை, தல்லாலை, அரியாலை, ஏழாலை, சரசாலை, மீசாலை, தம்பாலை, மாப்பிளாலை, சக்கினாலை, களகாலை, செக்காலை, திக்காலை, கோணாலை** என இன்னும் அநேக இடப்பெயர்களில் இலங்கி அக்காளின் நீர்ப்பாய்ச்சுதற் றிறத்தையும் நிலவளத்தையுங் காட்டி நிற்கின்றன. குளத்தின் மேற்பாகத்தைக் காட்டும் "தவல்ல" என்பது **தாவளை** யெனகின்று கீழ்வாய்க்காலாகும் **யற்றுலை**போடு பொருந்தித் **தாவளையற்றுலை** என்றிருத் தலையுங் கவனிக்குக.

நிலத்தன்மை ஆதியன

சிங்களர், விவசாயத்தோடும் நீர்ப்பாய்ச்சுதலோடும் சம்பந்தப்பட்ட பெயர்களை நம்நாட்டுக்கு வழங்கியதோடமையாது, தாம் பல்லாண்டு குடியிருந்து நன்முய்ப் பழகியறிந்த இந்நாட்டின் நிலத்தன்மை, அவ்வந்நிலத்தின் உருவம் ஆதியன விளங்கப் பல வேறு பெயர்களையும் அவ்வவ்விடங்கட்கு நல்கினர். வாய்க்காலை, ஆற்றை அடுத்த பூமியை "உல்ல" என்றார். இது **உல்லை, உச்சலை, கடவளலை** ஆதிய பெயர்களில் மருவி நிற்கும். வயலோரத் துண்டுநிலத்தை "கடவெல" என்றும், மேட்டை "பில்லாவ" என்றும் வகுத்தார். இவை **அங்கணைக்கடவை, தெளிக்கடவை, கரம்பைக்கடவை** ஆதியவிடங்களிலும் **அம்பம்பில்லாவை** யிலுந் தரித்து நிற்கின்றன. வெள்ளந் தங்குமிடத்தின் நடுவிலுள்ள திட்டியைத் "தூவ" என்றார். இது **சவரன்தூ, கப்புதூ, கொன்னைதூ** முதலிய பலவிடங்களிற் பயிலுகின்றது. நீர் நில்லாதோடும் இடங்கள், "பராப" எனப்பட்டவை, இன்றைக்கும் **தெவிண்டப்பிராய், உரும்பிராய், வேலம்பிராய், தலம்பிராய்** ஆதிய ஊர்ப்பெயர்களாற் சுட்டப்படுகின்றன. "ஊருவ" எனப்பட்ட பாழ்நிலங்கள் **ஊர்வை** எனவும் "கல, கல்ல" எனப்பட்ட கலட்டுநிலங்கள் **கல்லை, மாதகல், பத்தகல்,** என்பனவும் ஆயின. பறட்டைக்காடுள்ள பிரதேசங்கள் "வன, ஆன, வின்ன, பலான, விலான" எனும் முடிவுகள் பெற்று **மாதவனை, அங்குளானை, ஈவினை, காட்டுப்பிலானை, கம்பிளிவிளானை, வசாவிளான், சிறுவிளான்** ஆதிய தற்கால ஊர்ப்பெயர்களாயின. காட்டுப்பூமியையோ வளைந்தவிடத்தையோ விளக்கும் "வல" எனும் ஈறு **கல்வளை, எநதாவளை, கோணை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையாதிய இடங்களிலும், "வக்க" எனும் ஈறு வாதரவக்கை, கம்பிராவக்கை ஆதியவற்றிலுந் தோனிக்கின்றன. "வள" எனும் பள்ளப் பொருளுள்ள முடிவு தம்மளையிற் தோன்றுவது போலும். சிங்களர் சமாலங்களுக்கிட்ட "பொத்த" எனுமீற்றுப் பெயர் கறண்டகப்பத்தை, சிமிளாம்பத்தை, அம்பலம்பற்றை, சலியாபத்தை ஆதிய நாமங்களில் நிகழ, பறட்டைக்காடு செறிந்த மேட்டைக் குறிக்கும் பொருட்டு அவர் வழங்கிய "லந்த" "கனத்த" எனும் ஈற்று நாமங்கள் துன்னந்தை, கட்டிலந்தை, அட்டாந்தை எனவும்; கனத்தை, கணகணத்தை எனவும் வருகின்றன. மணற்பூமியைக் குறிக்கும் "வல்ல" என்னும் பதம் சுதுமலை, அனுவலை என்பனவற்றில் சிதைந்துநிற்கும். திடர்களான "பிட்டி"ப்பெயர் உடுப்பிட்டி, யட்டம்பிட்டி ஆதிய பலவிடங்களிற் றுலங்கும். வெளிகள் "யாய" எனும் ஈறுபெற்று முளாய், வளலாய், துணுக்காய் ஆதியவற்றிற் பயிலும். மூலைகள் "முல்ல" என்னும் இறுதியோடு துறையாழலை ஆதியவிடப்பெயர்களிலும்; தலைப்புகள் "ஓலுவ, உலுவ" எனும் இறுதியோடு கணவளுவை, அத்துளு, சோனேளு, தம்பளவை, கும்பனேளுவை ஆதிய பெயர்களிலும் மறைந்து தோன்றும். சிற்றிடங்கள் "நிய" எனவும், காவல்கள் "ரக்க" எனவும்பட்டு வறணி, மயிலணி, கைக்கிணியவாகவும்; இறுக்கை, இறக்காவளை, இறக்காதேருவாகவும் உருமாறின. கடலோடி சம்பந்தப்பட்ட கழியைக் "கலப்புவ" என்றனர். தனங்கிளப்பில் அதனையறிக. துறை எனப் பொருள்படும் "தொட்ட" எனும் சிங்களப்பதம் தோட்டு, தோட்டுவை என்பனவற்றிலும்; "தற" உடுத்துறை, ஊறுத்துறை ஆதியவற்றிலும் திரிந்து தோன்றுகின்றன,

இடத்தைபுணர்த்தும் "ஹிட்டிய" "லய" "மனமான" "பான, பனை, பான" "பாய" "எல்ல" "பத்தன" "பொத்தான" "ஒறுவ" என்னுமீற்றுப் பெயர்கள் தம்பசிட்டி, போயிட்டி, தையிட்டி, சிலும்பிலாட்டி, இராக்கலட்டி யாதியவைகளிலும்; பலாலி, செருக்கலி ஆதியவைகளிலும்; ஆக்கமானை, வதிரமனை யாதியவைகளிலும்; மயிலிபனை, அம்பனை, கருகம்பானை யாதியவைகளிலும்; மானிப்பாய், சண்டிருப்பாய் ஆதியவைகளிலும்; வலிச்சை, கலிசை, காக்காசி ஆதியவைகளிலும்; சங்கடப்பத்தனை, சடையப்பற்றனை ஆதியவைகளிலும்; வேள்ளுறுவை ஆதியவைகளிலும் வருதலை முறையின் வைத்துக் காண்க. வாசஸ்தானம் குடியிருப்பு எனும் பொருளுள்ள "கெ, கெய, பல்ல" எனும் சிங்கள ஈற்றுப் பெயர்கள் தலங்கமக்கை, அலுக்கை, மோக்கை முதலிய பலவிடங்களிலும்; பச்சிலைப்பளி, மீச்சபளி ஆதிய ஊர்ப்பெயர்களிலும் வருகின்றன. "காலையடி எனும் அபிதானத்தினல் அறியப்படும் இடங்களெல்லாம் சிங்களர்காலத்தில் காளை கைம்மாக்கள் கட்டும் இடங்களாய் இருந்தன" போலும். "கொட்டுவ" எனும் சிங்கள மொழியின் சிதைவை உண்டாக்கிய பெயர்கொண்டவிடங்கள் ஓர் வேளை அரசனுக்குரிய அரண்கொண்ட தானங்களாய்த் திகழ்ந்திருக்கலாம். கோட்டுவதேணி, கோட்டைக்காடு என்பன காண்க.

பௌத்த சமயம்

பௌத்த சம்பந்தத்தை உணர்த்தும் இடப்பெயர்களும் பல. போசிட்டி, போதியோடை முதலிய "அரசடி"கள் எல்லாம் அவர்க்குச் சிறந்த வழிபாட்டுத் தலங்களாயிருந்தன. அவ்வாறே "மளுவ"ப் பெயருள்ள திசைமளுவை ஆதிய இடங்களுமாம். பள்ளியவத்தை முதலிய பெயர்களும், நம்பொத்தலில் காட்டிய விகாரைகளுள்ள இடப்பெயர்களும், புத்தகோவிலடி, புத்தகலட்டி என ஆங்காங்கு வழங்கும் பெயர்களும் பௌத்த ஆலயங்கள் நின்றவிடங்களைக் குறிக்கும். வேரம் எனும் சொல்லைபடக்கிய இடப்பெயரெல்லாம் பழைய புத்த விகாரைகளைச் சுட்டும். இவை வேரம், வேரக்கை, வேரக்காடு, வேரவிளான், சிட்டிவேரம் ஆதியன. சுளிபுரம், தொல்புரம் என இன்று நிற்பவை, சுளு வேரம் துளவேரம் எனும் சிங்களப்பெயர்களாம். வல்லிபுரமும் வலிவேரமேயோ? அது "மணற்கையிலுள்ள விகாரை" எனச் சிந்தித்தற்கு அங்கு கண்டெடுக்கப்பட்ட புத்தசிலை ஓர் ஏதுவாகலாம். இனி உன்னன்சைகள் எனும் புத்தசங்கத்தார் ஊர்தோறும் குழுமியிருந்ததற்குச் சங்கத்தாவயல், சங்கிய வத்தை, சங்கரப்பாய், சங்காணை ஆதியவிடங்கள் சாட்சிபகரும். சிங்களர்காலத்தில் பிராமணரும் ஆங்காங்கு வசித்ததற்கு வவுணுவில் ஆதிய இடப்பெயர்கள் சான்று. இந்துமதத்தோடு அதற்குமுற்பட்ட நாகவழிபாட்டையும் பௌத்தர்கள் தம்மதத்திற் தழுவிபேற்றிருப்பர். சிங்களர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் பத்தினி தெய்யோ என்னும் கண்ணகையின் ஆராதனத்தை மேற்கொண்ட பின்னர்ப் பெயரிட்ட இடங்களும் சிலவுள. இவற்றுள் "பாய்" எனமுடியும் சிலவற்றைப்போன்ற பத்தினிப்பாய் ஒன்று "பெ" எனும் பெயரீறுள்ள விடங்களிலும் சில ஒவ்வோர் கோயிலிருந்த இடங்களாகலாம்.

இவ்வாறே இடப்பெயர்களை நுணுகி ஆராயுமிடத்து பல அரும் சரித்திர உண்மைகள் வெளிப்படும். இன்னோரன்ன ஆராய்ச்சிகள் மேலும் செய்யப்படுவனவாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மக்கள்

(ஒரு சிறு வரலாறு)

(இலங்கை மத்தியபிரிவுப் பகுதி வித்தியாதரிசி, பிரமஸ்ரீ. தி. சதாசிவஐயர் அவர்கள்)

இலங்கையில் தமிழர் வாசம்பண்ணும் பகுதிகள் முக்கியமாய் வடமாகாணமும், கிழ்மாகாணமுமாம். வட மாகாணத்தில் தலைமையாயுள்ளது யாழ்ப்பாணமென்பது. ஏனைய மன்னர், முல்லைத்தீவுப் பகுதியிலுள்ளாரும், கிழ்மாகாணத்துத் திரிகோண மலைப் பகுதியிலுள்ளாரும் ஏறக் குறைய யாழ்ப்பாணத்திலிருந்து போய்க் குடியேறிய வராயும், பாழ்ப்பாணத்தோடு நெருங்கிய போக்குவரவுத் தொடர்பு உடை யவராயும் இருப்பவர். அதனால் அவர்க்கும் யாழ்ப்பாணத்தவர்க் கும் பழக்கவழக்கங்களில் அடிப் படையான வேற்றுமை ஒன்றும் இல்லை. காலதேசங்களுக்கேற்ப வுளவாய சில வேறுபாடுகள் மாத்திரமே காணப்படும்.

யாழ்ப்பாணத்துக்கு அடுத்த படியாகவுள்ள பெரிய தமிழ்நாடு மட்டக்களப்பு நாடேயாகும். இந்நாட்டுள் கடலேரியானது வளைந்து வளைந்து எங்கும் நுழைந்து செல்லும். நீருஞ் சேறுமாய சதுப்பு நிலங்கள் பல வுண்டு. இக்காரணத்தால் இதற்கு **மட்டக்களப்புவ** என்னும் பெ பர் வழங்குவதாயிற்று. இது சிங்களவர் இட்ட பெயர்என்ப. இந்நாட்டு இயற்கை அமைப்பின் படி இது ஏனைய தமிழ்நாட்டுப் பகுதிகளுடன் சேரா மல் தனிமையுற்றும், சிங்களநாட்டுக்கு மிக அண்ணி தாயும் இருந்ததனால், இங்குள்ளாரது ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன பெரும்பாலும் வேறுபட்டு ஒரு தனித்தன்மையுறுவதாயிற்று. இதனால் யாழ்ப்பா ணத் தமிழர்க்கும் மட்டக்களப்புத் தமிழர்க்கும் இடையே பாஷை, குணம், தொழில், கொள்கை முதலியவற்றிற் பெரிதும் வேறுபாடுகள் உளவாயின. இவைகளையும் இவற்றின் காரணங்களையும் ஒரு சிறிது நோக்குவாம்.



தி. சதாசிவ ஐயர்

மட்டக்களப்பில் தமிழர், முஸ்லீம்கள், வேடர், பறங்கியர், எனப் பலதிறப்பட்ட வகையி னர் மக்கள் உளர். இலங்கை யின் பூர்வ குடிகளாயுள்ளவர்கள் தமிழரே யென்பது. இப்பழந் தமிழ்க் குடிகள் வழியில் வந்த வர்களே வேடர் எனப்படுபவர். அவர்களுள் கரையோர நாடுகளில் வந்து குடியேறி மற்றவர்களோடு கலந்து வாழ்ந்தவர் கிருத்தமுற்ற தமிழ்ச்சனங்களாக இப்போது கிராமங்களிற் காணப்படுவர். அங் ஙனமின்றித் தனியே யிருந்த வர் இன்னுங் கிருத்தமடையாத வராக அங்கங்கு காட்டுப்பக்க மான குக்கிராமங்களிற் காணப் படுவர். இங்ஙனமாய பழந் தமிழ்க் குடிகளைவிட ஒரு பகு தியார் மலையாளத்திலிருந்துவந்து இங்கு குடியேறியவர்களாகவுங் காணப்படுவர். மலையாளப் பக் கத்திலிருந்து வந்த பெருங் கூட்டத்தாருள் ஒரு பகுதியார் யாழ்ப்பாணத்தில் தங்கிவிட : இன்னொருபகுதியார் புத் தளப் பகுதியில் தங்க, ஏனையோர் மட்டக்களப்பில் வந்து குடியேறினர் என்ப.

மட்டக்களப்புத் தமிழர் பொதுவாய்த் தம் பெண் குழந்தைகளிடத்து மிக்க பிரியம் உடையர். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராயமான காலத்து அவர்களுக்கு வேண்டிய வீடு, பணம், நகை முதலிய சீதனங் கொடுத்து அவர்களை எப்போதும் தம்மோடு வைத்துக்கொள்ள விரும்புவர். சொத்துக்கள் மகளுடைய பிள்ளைகளுக்கே சேர்வதாகிய மருமக்கட்டாயம் என்பதுண்டு. பெண்கள் பெரும்பா லும் வெள்ளைப் புடைவையே யணிவர். அதைத் தட் டுடையாய் ஒரு சுற்றுடுத்துத் தலைப்பை பார்பின்மேலிட் டுத் தொங்கவிடுவர். ஆண்கள் கன்னக்கொண்டையாக மயிரை முடிப்பர். பெண்கள் காதைப் பெரிதாகத் தூளை செய்துகொள்வர். தேங்காயும் தேங்காயெண்ணையும் மிகப் பிரியமான உணவுப் பொருட்களாகும். பாரதக் கதை, கிருஷ்ணன்கதை முதலியன ஒவ்வொரு வீட்டி லும் பெரும்பாலும் படிக்கப்படுவன. குழந்தைகளுக்கு இடும் பெயர்களும் பெரும்பாலும் பாரதம், பாகவதம் என்னும் கிருஷ்ணபரமான கதைகளில் வரும் (கஞ்சன், சிசுபாலன், மாயவன், பலதேவன், சகதேவன் போன்ற) பெயர்களேயாகும். மட்டக்களப்பிலுள்ளார் பலர்க்கு மாந்திரிகத்திலும் வயித்தியத்திலும் பயிற்சியுண்டு. இவ் வித தன்மைகளெல்லாம் இக்காலத்தில் சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வருகின்றன. எனினும், இவை இன்னும் நாட்டுப்புறங்களிற் பழமைபோலிருக்கக் காணலாம். இவ் வித பழக்கவழக்கங்கள் காணப்படுதலினாற் போலும் இவர்களது முன்னோர் மலையாளப்பகுதியிலிருந்து இங்கு வந்து குடியேறினவர்களாகவேண்டும் என எண்ணை இட முண்டென்பது.

மட்டக்களப்பு பலவகை வளமும் வாய்த்த செழிப் பான நாடு. மலையும், காடும், யாறும், வயலும், கழியு மாகிய நானில வளமெல்லாம் ஒருங்கமையப்பெற்ற வாய்ப் புடையது. அதனால் இங்கு வாழ்வார்க்கு வேண்டும் துப்புரவுகள் (உணவு முதலிய) எல்லாம் எளிதிற் கிடைப் பனவாய்,

"பாலுந் தேனும் பிணைக்கதிர் நெல்லும்
சாலும் சாலு மெனத்தரு நாடு"

எனப் புலவர்கள் வியந்து பாடும்படி, சனங்கள் கஷ்ட மின்றிச் சுகசீவனஞ் செய்துவரும் நடாயிருந்தது. வய லில் நெல்லும், ஆற்றில் மீனும், மரத்தில் தேங்காயும் என்றுங் குறைவில்லாமல் எவர்க்குங் கிடைப்பதாய் இருந் தமையால், மிகப்பிரயாசப்பட்டு உழைக்கவேண்டும், உழைத்துச் சம்பாதித்ததைச் செட்டாகக் காப்பாற்றி வைக்கவேண்டும், என்னும் எண்ணங்கள் பொதுவாய் இம்மக்கள் மனத்திடை உதிப்பதில்லை யென்னலாம். ஆகாயத்துப் பறந்துதிரியும் பறவைபோல மனவிசார மில்லாது உற்சாகமாய், ஆடிப்பாடிக் களிப்புடன் காலத் தைக் கழிக்குங் கபடற்ற வாழ்க்கையுடையராய்,

"எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
இல்லாருமில்லை யுடையார்களு மில்லைமாதோ"

என்னும் கவிஞர் பெருமான் வாக்குக்கு இலக்கியமாய் இருந்தனர்.

மட்டக்களப்பு மக்களிடத்துப் **பெரியோர்ப் பேணும்** குணம், **பிறரை உபசரிக்கும் குணம்** என்பன மிகவும் உண்டு. கல்வி, செல்வம், குடிப்பிறப்பு, அதிகாரம் முத லியவற்றால் சிறந்தவர்களை நன்குமதித்துப் போற்றுத லும், அந்நியர்களை வரவேற்று அவர்களுக்கு ஏற்ற உப சரணை செய்து உதவுதலும், இயல்பாக அமையப்பெற் றவர்கள். மேலும், சிங்கள அரசர்களும் அவர்கள் பரி வாரங்களும் இடையிடையே இந்நாட்டில் வந்து தங்கு வதும், இது வழியாகப் பிறவூர்க்குப் போவதும், சிங் கள இராசதானிக்கும் இவ்வூர்க்கும் நாடோறும் போக்கு வரவு உளதாயிருந்ததும், ஆகிய இக்காரணங்களால் மட் டக்களப்புமக்கள் சிங்களமக்களோடு மிக நெருங்கிப் பழ கியும், சிங்கள இராச சமஸ்தானத்தோடு மிக்க தொடர்ப் பாடுடையவர்களாகவும் வாழ்ந்தார்கள் என்பது. அதனால் இராஜகாரிய விஸ்வாசம் அரசாங்க உத்தியோக நன்கு மதிப்பு முதலிய குணங்கள் உடையராயினர்.

ஏனைய தமிழ்நாடுகளிற் காணப்படும் சாதி, சமயப் போர்கள், விவாதங்கள், சண்டைகள் முதலியன இக் நாட்டு மக்களிடை ஒரு சிறிதும் காணப்படா. முஸ் லீம்களும், தமிழரும் ஒருவர்க்கொருவர் துணை ஆயும் ஒரு வரை ஒருவர் கனம்பண்ணியும் ஒற்றுமையாய் வாழும் நாடு இதுபோலப் பிறிதொன்றில்லை என்னலாம். எவ ரும் எத்தொழிலையும் செய்யலாம். ஒருவர் செய்யும் தொழில்காரணமாக அவரைத் தாழ்ந்தவரென இழித்துக் கூறும் வழக்கம் இங்கு இல்லை. எல்லாச் சாதியினரும் தத்தம் உணவுக்குரிய மீனை ஆற்றில் இருந்து பிடித்துக் கொள்வர். இதுபோலவே ஏனைய தொழில்களும் என்க. யாழ்ப்பாணத்தில் இருந்து அகோகர் பிழைப்பின் நிமித் தம் வந்து இங்கு தங்கிவிட்டவர்களும் உண்டு. பறங் கிகள் என்போர், போர்த்துக்கேயர்காலத்தில் இங்கு தங் கிய சில போர்த்துக்கேயரின் சந்ததியாராவர். இவர் தம்முள் ஒருவகைச் சிதைவான பறங்கிப்பாஷையைப் பேசினாலும், தமிழ் நன்றாக எழுதவும் பேசவும் கூடிய வர்கள். இவர்களே பெரும்பாலும் தச்சர், கொல்லர் களாக வேலைசெய்பவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமக்களோடு தொடர்புடையவர்களாக வாழ்ந் தமையால், இங்காட்டுத் தமிழ்மக்களது பேச்சு, சமய வழிபாடு முதலியனவும் சிறிது, சிறிது வேறுபடுவன வாயின. கடவுள் என்று சொல்பவர் மிகச்சிலர். எல் லாரும் **சாமி** என்றே சொல்வார்கள். கண்ணகை, கிருஷ்ணன், பஞ்சபாண்டவர், திரௌபதி, வேலாயுத சாமி என்பவர்களே வழிபடுதெய்வங்கள் ஆவர். சிவனே பரம்பொருள்; சிவனை வணங்கும் சமயம் சைவசமயம்; சைவசமய அருட்பாக்கள் தேவாரம் திருவாசகம் முத லியன; என்னும் கருத்துக்கள் பெரும்பாலும் சனங்க ளிடைக் காண்டல் அரிது. எனினும் எல்லாரும் நிரம் பிய சமயபக்தியுடையவர்களே. பூசைசெய்வதை பூசை முடிக்கிறது என்பர்; பூசகரைக் கட்டாடியார், கப்பகனார், கப்புரளை என்பர்; கோயில் மணியகாரரை (மேற்பார் வையாளரை) வண்ணக்குமாரென்பர்; கோயிற் சாமான் வைக்கும் களஞ்சியத்தைக் கவடாவீடு என்பர்; மடைப் பள்ளியை அறைவீடு என்பர்; யாழ்ப்பாணத்தில் வேள்வி அல்லது பொங்கல், பூசை என்பதை இங்கு சடங்கு என்பர்.

வயலை வட்டை என்றும், கமக்காரனைப் போடியா ரென்றும் வயற்செய்கைக்காரனை முல்லைக்காரனென்றும், களத்திலே **கடகத்தை** பெருவாயன் என்றும், வைக் கோல் தள்ளும் தடியை வேலைக்காரன் என்றும், மரக் காலை கணக்கன் என்றும், மண்வெட்டியை வெட்டுவாயன் என்றும், கயிற்றை நெடுவாலன் என்றும், மாட்டை வாரிக்காலன் என்றும், சூடுபோடும் மாட்டை அரக்கன் என்றும், கடைசிமாட்டை வாட்டி என்றும் சொல்வர்.

பூசனிக்காயைச் சுரைக்காயென்பர். சுரைக்காயை நாடங்காயென்பர். துன்பம் அல்லது இடைஞ்சல் என் பதை கணைகாடு என்பர். வெளி என்பதை வெட்டை என்றும், ஏலாது என்பதை ஒண்ணுது என்றும் திரும்பு என்பதை கிறுகு என்றும் சொல்வது வழக்கம். இங் காட்டு மக்கள் பேசும்போது ஒருவாறு இழுத்து அசைத்தே பேசுவர். இடையிடையே சொற்களோடு "கா" என்பதனையும் சேர்த்துப் பேசுவர்; ஏன்? என்னு மிடத்து 'ஏன்கா' என்பதும், வா என்னுமிடத்து 'வாகா' என்பதும் போல.

வருஷப்பிறப்புக் கொண்டாட்டமே இவர்களால் முக்கியமாகக் கொண்டாடப்படும் பெருநாளாகும். அன்று எல்லாரும் முழுகிக் கோடிவஸ்திரம் தரித்துப் புதுப்பானையில் பாற்சோறு பொங்கி, கொழுக்கட்டை பயற்றம் பணிகாரம் முதலியன செய்து இனத்தவர்கட் கும் அனுப்பித் தாமும் சாப்பிட்டுக் கொண்டாடி மகிழ் வர். ஆடி அமாவாசையில் அமிர்தகளித்தீர்த்தமும், ஆவணிப்பவுவத்தில் மண்டூர்த்தீர்த்தமும் பெருந்தொகை யான சனங்கள் வந்துகூடும் உற்சவதினங்களாம். கொக் கட்டிச்சோலையில் உள்ள தான்தோன்றி ஈசுரன் கோயி லும், திருக்கோவிலிலுள்ள கதிர்வேலாயுதசாமி கோயி லும் மிகப்புராதனமான ஆலயங்கள்.

கல்யாணம், பெண்கள் ருதுவாதல், சடங்கு முதலிய கொண்டாட்ட காலங்களில் பெண்கள் குரவை இடுவர்; அதாவது இருகடைவாயிலும் இருவிரலைவைத்து குஃகுஃ குஃகு என்பது போன்ற ஒருவிதமான ஒலியை எழுப் புதலாம். இனிப்புச் சாப்பிடுவதில் மிகப்பிரியமுடையர். கலியாணகாலத்தில் மாப்பிள்ளை பெண்ணுக்குத் தாலி கட்டும் வழக்கம் பெரும்பாலும் இல்லை. சமயகிரியைக ளும் செய்வதில்லை. யாழ்ப்பாணத்தில் "சோறு கொடுப் பித்தல்" என்பதொரு வழக்கம் உண்டே, அதுபோன்ற வழக்கமே இங்கும் வழங்குவது. அதற்கு, 'கலத்தில் இடுதல்' என்று பெயர். கலியாணம் ஆனபின் கணவன் மனைவி வீட்டிலேயே இருப்பான்.

எத்தனை வளர்ந்தவர்கள் ஆனாலும் விளையாட்டு, வேடிக்கை, வினோதம் என்பவற்றில் அதிகபிரியம் உடைய வர். மிக வளர்ந்தவர்கள்தானும் சீனவெடி (பட்டாசு) சுட்டுக் களிகூர்வர். வேளாண்மை வேலைசெய்யும்போதும் ஏற்றசுவையான நாட்டுக்கவிகள் படிப்பார்கள். வேறுவேலை செய்யும்போதும்வேளாண்மைவேலையழிந்தகாலங்களிலும் பண்டிகைநாட்களிலும் பாடுதல், ஆடுதல், நாடகம் நடித்தல் முதலியனவற்றில்புலன்செலுத்தி, தம் மனத்துள்ள இன்ப உணர்ச்சியையும் வெளிப்படுத்தி ஓய்வுகாலத்தை இன்ப கரமாய்க் கழிக்கும் பழக்கம் இன்றும் உடையவர்களாக விளங்குகின்றனர். மனோபாவங்களை அபிநயித்து நடித் துக்காட்டுதலும், அதுவாயிலாக மன உணர்ச்சிகளை நன் னிலைப்படுத்தி வளர்த்தலும், ஓய்வுநேரத்தை இன்பகர மாய்க்கழித்தலும் ஆகிய இப்பழக்கங்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்து மக்களிடைக்குறைந்து மறைந்துபோகும் இக்காலத்தில், மட்டக்களப்புமக்கள் இன்னும் இக்குணங் களை இழக்காது இயற்கையான கபடற்ற மனக்கிளர்ச்சி யும் நாடகக்கலை உணர்ச்சியும் உடையராய்த் திகழ்வது எத்தனைப் பெருவியப்பு! எத்தனைப் பெரிய வாய்ப்பு!

இன்றும் அநேக கிராமங்களில் ஐக்கியசமுதாய வாழ்க்கைமுறையே நிகழ்வது. கிராமத்து வயல்நிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அக்கிராமத்தவர்க்குப் பொதுவாயிருக்கும். கிராமத்தவர் எல்லாரும் சேர்ந்து ஆலோசித்து ஒருமித்தே வேளாண்மைசெய்தல் முதலிய சகல செய்கைகளையும் செய்வார்கள். அக்கிராமத்துக் கோயிலும் அங்ஙனமே எல்லார்க்கும் பொதுவாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் உள்ள அநேக ஊர்ப்பெயர்கள் சிங்களப்பெயர்களாயிருக்க, மட்டக்களப்பு ஊர்ப்பெயர்களோ தமிழ்ப்பெயர்களாய், சரித்திரசம்பந்தமான குறிப்புடையனவா யிருத்தலைக் காணலாம். உதாரணமாக ஒருபகுதியார் தங்கள் சத்துருக்களைக் கொன்றதனால் அவ்விடம் சத்துருக் கொன்று (ண்டா)ன் என்றுயிற்று. எதிரிகள் வந்து வழுத ஊர் எழுவூராயிற்று. எதிரிகளைத் துரத்திச் சென்றவர்கள் வந்து ஆறிய ஊர் வந்தாறுமூலை ஆயிற்று. பிறவும் அன்ன.

மட்டக்களப்புமக்கள் தங்கட்கு ஓர் நன்மை செய்தவரை நன்றியறிதலோடு போற்றுங் குணம் மிகவும் உடையவர்கள்; கபடற்ற எளிவந்த இனியகுணமுடையவர்கள்; புத்திசாதுரியம் உடையவர்கள்; எனினும் தம் முடைய காரியத்தைத் தாமே தமது முயற்சியினுற் சாதித்து உயர்ச்சி பெறவேண்டும் என்னும் மனத்திண்மைக்குணமும் கைவரப்பெற்றில் இவர்கள் தமிழ்ச்சாதியத்தாருள் எவர்கட்கேனும் பின்நிற்பவர்களாய் இல்லாமல் முதன்மை இடம் பெறுபவர்கள் ஆவார்கள்.

"நாடாகொன்றே காடாகொன்றே
அவலாகொன்றே மிசையாகொன்றே
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை, வாழிய, நிலனே!"

கேத்திர கணிதக் கேள்வியில் லாதோர்
பாத்திரர் அல்லரிப் பள்ளியிற் புகவே.
—யவனபுரப் பேராசிரியர் - பிளேற்றே

சர்வாதிகாரி

[ஒரு தேசத்தின் சர்வாதிகாரி நாளடைவில் அதன் அரசனாகிறன். ஆனதும் அவன் குணம் அடியோடு மாறுகிறது. உபகாரஞ் செய்தவர்களுக்கே அபகாரம் செய்யத் தொடங்குகிறன். அப்பொழுது அதைக் கண்டு மனம் பொறாமல் ஒருவன் பின்வருமாறு கூறுகிறன்.]

1. தேடித் தேடி யிரைகிடை யாதொரு சிங்க வேறு முழங்கும் முழக்கினில்
பாடு மின்னிசை கேட்டிட லாமதன் பார்வை தன்னில் இரக்கமும் பார்க்கலாம்
வாட வாயில் வயிற்றி லடித்தெமை வானின் மீன்களை எண்ணிட வைத்தவன்
நீடு வஞ்சகன் செய்த கொடுமையிற் நெஞ்சி லாறுதல் காண்ப தரிதரோ!

2. உண்ணச் சோறு முடையு மளித்தனம் உதிரம் விட்டவன் போர்களை வென்றனம்
எண்ணி லாப்பெரு நாடுக ளுக்கெலாம் இறைவ னுக்கி முடியையும் சூட்டினம்
பண்ணு தற்கரி தான பலபல பணிகள் செய்தவன் கீர்த்தி வளர்த்தனம்
நண்ணு நன்றி யிலாதவ னின்றெரு நச்சு வாயர வாகிவிட் டானையோ!

3. பஞ்சத் தாண்டியாய் வந்தஅப் பாதகன் பாரி லும்முளம் நையப் படுத்திலை
கெஞ்சிக் கெஞ்சித் திரிந்த அடியவன் கேலி செய்துமை நாய்களென் றெண்ணினை
தஞ்சம் நீரென் றடைந்தவன் மாறிநும் தலையி லேறி மிதிக்கத் தொடங்கினை
அஞ்சி யஞ்சி அடங்கிக் கிடப்பீரோ? ஆண்மை மிக்கவ ராக எழுவீரோ?

—ஆண்டான் கவிராயன்.

வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளன்றி யாங்கதுண்டோ செப்பாய் பராபரமே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



(Photo & Block by Plate)

தென்னிலங்கைப் பகுதியிலுள்ள ஓர் தொழிலாளன்

மேட்டிருக்குந் திருமாது மகிழ்ந்திருக்கும் பூமாது
மூட்டிருக்குஞ் செயமாது முன்னிருப்பார் முதுகிலத்து
விட்டிருக்குங் கலிதொலைத்து வேளாளர் தடக்கையினிற்
கோட்டிருக்க வொருகாலுங் குறையிருக்க மாட்டாதே.

—கம்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(Photo & Block by Plate)

கடல் ஸ்நானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண சுயராச்சியமென்றால் என்ன?

(ஸ்ரீஜுத் பண்டிதர், ஜவஹர்லால் நேரு)

காங்கிரஸ் வாதிகள் மாகாணத் தேசாளுமன்றங்களில் அங்கத்துவம் வகிக்க ஏன் உடன்பட்டனர்? ஏகாதிபத்திய அரசியல் வாதிகளுடன் ஒத்துழைக்கவா? அன்று. இந்தியராகும் எம்மை நித்திய அடிமைகளாகக் கட்டுப்படுத்தும் புதிய அரசியற்றிட்டத்தை அடியோடு அழித்துத் தொலைத்தற்கே, காங்கிரஸ் வாதிகள் அங்கத்துவத்தை நாடினர். எங்கள் கடமை பூரணசுயராச்சியத்தை நாடிப் போர்செய்வதே யென்பதை நாம் ஒருபோதும் மறவாதிருப்போமாக.

பூரண சுயராச்சியம்

பூரண சுயராச்சியமென்றாலென்ன? உலகத்தவர் யாவர்க்கும் இச்சொல்லின் கருத்து சிறிதும் சந்தேகமின்றி இனிதுவிளங்கும். இச்சொல்லுக் கூறப்பட்டதும் அது கிணீரென்று காதில் விழுந்து கருத்தை விளக்கிநிற்கும். தூர அதிஷ்டம் காரணமாகப் போலும் இந்தியராகிய எமக்கு இச்சொல்லின்கருத்துப் பலவாகத் திரித்து விளங்கப்படுத்தப் படுகின்றது. சிறிதும் சந்தேகமின்றி இதைநாம் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம். பூரண சுயராச்சியம் என்னவெனில், ஒரு சாதியினர் விடுதலையடைவேத இந்தியர் பூரண சுதந்தரத்தையடைந்த காலத்து, பிறிட்டிஷார் இந்தியர் விஷயத்தில் ஒருபோதும் எவ்விதத்திலாவது தலையிட இடமின்று. ஏகாதிபத்திய அரசியல்முறை முற்றாக நீங்கிவிடும் ஒருவித கட்டுப்பாடும் ஏகாதிபத்தியமுறையில் ஏற்படாது.

இப்போது புதுப்புதுச் சொற்கள் எழுந்து நம்மை மயக்குகின்றன. குடியேற்ற நாட்டுச் சுதந்தரம், வெஸ்ற் மினிஸ்ற்ர் சட்டம், பிறிட்டிஷ் ஏகாதிபத்திய சமஉரிமை பெற்ற நாடுகள் என்பதான பெயர்கள் பிறிட்டிஷ் அரசியல் வாதிகளா லுபயோகிக்கப்படுகின்றன. சொற்களின் கருத்துக்களை அறிவதும் இலகுவில் கூடியதன்று. சமஉரிமை பெற்ற குடியேற்றநாட்டினை நான் காண்கின்றிலேன். இந்தியரையும் மற்றும் உலகிலுள்ள சிறிய நாடுகளையும் உறிஞ்சி நிற்கும் ஏகாதிபத்தியத்தையன்றி, உண்மையான ஏகாதிபத்திய அரசியலை நான் காண்கின்றிலேன். ஆசிய ஆபிரிக்க கண்டங்களிலுள்ள குடியானவர்க்குப் பெருந் துயரை வருவிக்கும் ஏகாதி பத்தியமாம் இயந்திரத்துடன் எமது நாடு



பண்டிதர்
ஜவஹர்லால் நேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதத்திலும் சேராது இருக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோள். இந்த யந்திரம் தொலைந்துவிடின், நாம் இங்கிலாந்து வாசிகட்கு நற்காலம் வந்துவிட்டதென எண்ணுவாம். அப்பொழுது பிறிட்டிஷ் பொதுசனங்களுடன் நாம் நெருங்கிய நட்புரிமை பூண்டிருக்கவும் இடமுண்டு.

குடியேற்ற நாட்டுச் சுதந்தரம்

குடியேற்ற நாட்டுச் சுதந்தரம் என்ற சொல் ஆட்சியில்வந்து வெகுகாலமாகவில்லை. இதற்கிடையில் இச்சொல்லின் கருத்துப்பலவித மாறுதல்களை அடைந்து விட்டது. இச்சுதந்தரத்தைப்பெற்ற நாடுகளில் வசிக்கும் ஆங்கிலேயர், என்ன கருதுகின்றார்? ஐரோப்பியர் ஆதிக்கத்தையடைந்து தங்கீழிருக்கும் மற்றைய வகுப்பினரைத் தன்புற விடுவதே எனை எண்ணுவர். வெஸ்ற்மினிஸ்றர் சட்டத்தில் எவ்வித மாறுதல்கள் ஏற்படினும் குடியேற்ற நாடுகளில், சிறிய வகுப்பினர்க்குச் சமஉரிமை அளிக்கப்படுகின்றிலது; நாம் எதிர்த்துப் போர்செய்யும் அரசியல்ஸ்தாபனங்கட்கு ஆதரவளித்து நிற்பது ஏகாதிபத்திய அரசியல்முறையே. எனவே அதனை நாம் ஆதரிப்பது எவ்வாறு? காலவடைவில் அடிமைகளாய் இருக்கும் நாம் ஆதிக்கத்தை அடைந்து சம உரிமையைப் பெறுவோமென எண்ணுவதா? இப்படியெண்ணுவது மனப்பால் குடிப்பதேயாகும். அப்படித்தான் நாம் சம உரிமையை அடையினும், நாம் அதைக் கைக்கொண்டு அங்கீகரியேம். அப்படிக்கைக்கொள்ளின் நாமும் ஏகாதிபத்தியவாதிகளாய் மற்றைய சிறிய நாட்டினர்க்கு இம்சை செய்கின்றவராவோம்.

நாம் விரும்புவது

இந்தியராகிய நாங்கள் பூரண சுதந்தரத்தை அடைவதென்பதன் கருத்தென்ன? ஏகாதிபத்திய அரசியல்முறை இந்தியாவில் நின்று முற்றுக நீங்கவேண்டும் என்பதே. அதாவது பிறிட்டிஷ் ஏகாதிபத்திய அதிகாரிகள் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு வெளியேறவேண்டும் என்பதே. விஷயமிவ்வாறிருகினும், நாம் பிறிட்டிஷாருடன் ஐகியமாகஇருக்கலாம். நாம் போராடுவது பிறிட்டிஷ் சனங்களுடனன்று; பிறிட்டிஷ் ஏகாதிபத்திய முறையுடனேயே எமக்கு வாக்குவாதம் உண்டு. இப்படியாக நாம் வாதிக்கும்பொழுது இன்னோர் புதிய தோக்கு உண்டாகின்றது. குடியேற்ற நாட்டுச் சுதந்தரமும், வெஸ்ற்மினிஸ்றர்ச் சட்டமும் பழையனவாய் விட்டன. புதிய உலகத்தில் பிறிட்டிஷாரின் ஆதிக்கத்திலுள்ள சமஉரிமை பெற்ற நாடுகளின் கூட்டத்தைப் (Group) பற்றி எண்ணுவது கிடையாது. உலகில் அரசியல், சமுதாயவாழ்வு என்பனவற்றில் சமஉரிமை பெற்ற நாடுகளின் கூட்டமென்பதே இப்போது பேசப்படும் விஷயமாகும். ஆகையால், பிறிட்டிஷாரின்கீழ்க் குடியேற்றநாட்டுச் சுதந்தரம் பெறுவதென்பதும், அவ்வாறிருக்க விரும்பிய காலத்தில் ஏகாதிபத்தியத்தினின்று பிரியும் உரிமையைப் பெற்றிருப்பதும் சரியன்று. ஏகாதிபத்தியத்தினின்று பிரிந்து வேறாக இருப்பதை பிறிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளும் எதிர்ப்பர். மற்றைய ஏகாதிபத்திய வல்லரசினர்களும் இவ்வாறு பிரிதலை நன்றெனக் கருதார். ஆகையால் இந்தியராகும் நாம் இவ்விதமான குடியேற்றநாட்டுச் சுதந்தரத்தை எவ்வடிவத்திலும் எம்முறையிலும் அங்கீகரியோம். நாங்கள்வேண்டுவது பூரண சுயராச்சியமே. அது ஒரு குறிக்கப்பட்டசுதந்தரமன்று. குடியேற்ற நாட்டுச் சுதந்தரத்தை நாம் அங்கீகரிப்பின் அதனைத் துணையாகவும் வழியாகவுங் கொண்டு ஏகாதிபத்திய அரசியற் கொள்கைகள் நம் நாட்டுக்குள் நுழைந்து எம்மை நிரந்தர அடிமைகளாக்கி நம்நாடு விருத்தியெய்தாதிருக்கச் செய்யும். வெளித்தோற்றத்தில், குடியேற்றநாட்டுச் சுதந்தரம் பார்வைக்கு அழகாகத்தானிருக்கும்

எமதுறுதிவாக்கு

எனவே நம் வாக்குறுதி நிலைபெறுதற்கு நாம் பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தொடர்பினை ஒழிக்கமுயலவேண்டும். இவ்வாறு நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதற்கு இந்தியராகிய நாம் மற்றவர்க ளுடன் நட்புப் பூணது பிரிந்திருக்க விரும்புகி றோம்; வேறுநாடுகளைக் கைப்பற்றி அரசுபுரிய எண்ணுகிறோம் என்பன அர்த்தமல்ல. முன் னேறிச் செல்லும் எல்லா நாடுகளுடனும்— ஏகாதிபத்திய அரசியல்முறை தவிர்க்கப்படின் இங்கிலாந்துடனும் — நாம் நட்புக்கொண்டாடுவ தற் பின்னில்லோம்.

குடிறேற்றநாட்டுச் சுதந்தரமென்பது பொழுதுபோக்கும் பொருட்டுப் பேசப்படும் விஷயம். இதன் எண்ணத்தை இந்தியர் கை விட்டுப் பலவருடங்களாகின்றன. மறுபடியும் அதைக் கட்டியணைக்க விரும்பார். பலவித மாற் றங்கள் நாளுக்குநாள் அடைந்து கொண்டிருக் கும் இவ்வுலகத்தில் சட்டநிபுணர்கள் (Legal experts) நியாயம் பிளப்பதால் ஒருபயனுமில்லை.

புதிய அரசியற்றிட்டத்தைத் தகர்ப்பதைக் குறித்தே இப்போது இந்தியர் யாவரும் எண்ணு கின்றனர். உலகத்தவர் என்னவிஷயங்களை நோக்கி நிற்கின்றனரோ? ஸ்பானிய கலகம் எவ்வாறு முடியும்? யுத்த ஆயத்தங்களைப் பன் மடங்கு அதிகரித்தற்குப் பிரான்ஸியரும் பிரிட்டி ஷாரும் எவ்வளவு பணம் கடனுகப் பெற்றனர்? எந்நாட்டினர் கூடிய யுத்தபலம் உடையர்? என்பவைகளை ஒப்பநோக்குவர். சடுதியில் மகா யுத்தம் ஏற்படின் ஐரோப்பிய நாகரிகம் பாழடையுமா எனை எண்ணி விகாரமடைவார் அநேகர். மேலே குறித்தன யாவும் எல்லோ ராலும் நோக்கப்பட வேண்டியன. இவ்வாறு யுத்தம் ஏற்படுங்காலத்தில் இந்தியர் திடமாக நின்று கையாளும் முறைகளிலேயே அவர்க ளின் வருங்கால நிலைமை தங்கியிருக்கின்றது. இந்தியராகும் நாங்கள் மிகவும் மகத்தானவும் பாரதூரமுமான முடிபுகளைச் செய்யவேண்டும். இவைகள் யாவும் தீர்க்க ஆலோசிக்கப்பட வேண்டியனவே.

ஞானப் பயிர்

—தேசிகவிநாயகன்

[இராமப் பிரஸாதஸென் பாடிய பாடலைத் தழுவி எழுதப்பட்டது.]

1. வாழி என்மனமே — உழவின்
வழியறியாயோ?
பாழ் நிலமெல்லாம் — உழுதால்
பயிர் செழித்திடுமே.

2. விரிசடைத்தேவி — பெயரால்
வேலிகட்டுவையேல்
அரிய காலனுமே — வந்தங்
கணுகமாட்டானே.

3. என்றிவ்வுலகெலாம் — நாசம்
எய்தி வீழ்ந்திடுமோ?
இன்றே நாளையோ? — அதனை
யாவரறிகுவார்?

4. இந்தநாளே நீ — வாழ்வோ
டிருக்கும் நாளாகும்
முந்திப்பயிர் செய்து — நல்ல
முதலெடுப்பாயே.

5. விரும்பி ஞானகுரு — தந்த
விதையை நீவிதைத்து
பெருகுமன்பு நீரைப் — பாய்ச்சிப்
பேணிக் காத்திடுவாய்.

6 தனியே நிற்பாயேல் — மனமே!
தளர்ந்துபோவாய் நீ
எனையும் கூடவே — துணையாய்
ஏற்றுக்கொள்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்காதேவியின் பரிதாபநிலை

K. A.

ஒரு நாடு அரசியற்றுறையில் முன்னேற்றமடையவேண்டின், அந்நாட்டவர் சுதந்தரவேட்கை யுடையவராக இருக்கவேண்டும். சுதந்தரவேட்கை எப்போது உண்டாகின்றது? உண்மையான கல்வி ஏற்றமுறையில் விருத்தியடையின், சனங்கள் தம்நாட்டினை உலகிலுள்ள மற்றைய நாடுகளுடன் ஒப்புநோக்கி, மற்றைய நாடுகள் உயர்ந்த நிலையை அடைந்து செல்லத் தம்நாடு கீழ்நிலையிலிருக்கின்றதற்குக் காரணங்கள் யாவையென ஊன்றிநோக்குவர்.

இலங்கையில், சென்ற சிலகாலமாகத் தோன்றி யாவரையும் வருத்தும் பணக்கஷ்டம் இன்னும் முற்றாக ஒழிந்தபாடில்லை. கல்வித் துறையில் அதிகஞ் செல்லாத அநேகர் நாடுவது, அரசாங்க உத்தியோகமே. எப்படியாவது தமது வயிற்றுக்கு உழைத்தாற் போதும் என்பர். தாம் வாழ்ந்தாலே போதும்; மற்றவர் என்ன கஷ்டங்களைப்படினும் திரும்பியும் நோக்கார். சுயநலவாதமே தலைவிரித்து ஆடுகின்றதென்பது சொல்லாமலே விளங்கும். ஒவ்வொருவரும் தத்தம் சொந்த நலத்தையே நாடும்வரையும், அரசியற் றுறையில் நம் நாடாகும் இலங்கை முன்னேற்றமடையுமென எப்படிக் கூறுவது?

அரசியல் விஷயத்தில் நம் நாடு உயரிய வழியில் செல்லவேண்டுமாயின், அதற்குரிய சாதனங்கள் ஏற்படுவதும் அத்தியாவசியம். இலங்காதேவியின் ஈடேற்றத்தைக் கருத்தாகக் கொண்டுழைக்கும் ஒரு மத்தியஸ்தாபனம் ஏற்படுவது அவசியம். இலங்கைத் தேசீய மகாசபை (Ceylon National Congress) இருக்கின்றதே; அதைச் சாதனமாகக் கொண்டு நம் நாட்டு அரசியல் விஷயங்களைச் சீர்ப்படுத்தக் கூடாதா என்பர் சிலர். இச்சபை ஆரம்பத்தில் அமைக்கப்பட்டபோது, இதனற் பெரு நன்மை வந்தெய்துமென அநேகர் நம்பியிருந்தனர். ஆனால் நமது தலைவர்களாயுள்ளோர் சுயநல வேட்டையாட ஆரம்பித்ததும், இச்சபைக்கு ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட மதிப்பும் கௌரவமும் அற்றுப்போயின. இச்சபை இப்போது சிங்களர் கையிலேயே இருக்கின்றது. சிங்களருள்ளும் ஒரு பகுதியினர் இச்சபையை அங்கீகரித்தாரில்லை. தமிழரோ இச்சபையை எட்டியும் பார்ப்பதில்லை. எனவே இச்சபை மறைபொருளாயே கிடக்கின்றது. இந்தியர் அரசியல் விஷயத்தில் மிக ஆதிக்கமடைந்து, ஒரு பெரிய சக்தியாக விளங்கும் இந்திய சாதீய மகாசபையின் விருத்தியை, இச்சபையுடன் சேர்த்து நோக்கின், இது எவ்வித கேவலநிலையிலிருக்கிறதென்பது விளங்கும்.

இந்திய காங்கிரஸ் சபை போன்ற ஒரு அரசியல் ஸ்தாபனம் இலங்கையில் ஏற்படும் வரையும் நமக்கு மீட்சியேது? மாகாணங்களிலும், கிராமங்களிலும் அரசியற் சபைகள் அமைக்கப்பட்டு, பொதுநன்மையை நாடித் தொண்டாற்றின், இலங்கைத்தேசம் பன்மடங்கு உயர்நிலையை அடைந்திருக்கும். இந்தியாவில் காங்கிரஸ் ஸ்தாபனம் எவ்வளவு திறமையுடையதென்றும், அதற்கு அரசினர் எவ்வளவு மதிப்புக் கொடுக்கின்றரென்றும் யாவரும் அறிவர். பன்மடங்கு பெரிய நாடாகும் இந்தியாவில், இவ்வித அரசியல் ஸ்தாபனங்கள் மிகத் திறமையாக அமைத்து நடத்தப்பட, சிறிய இலங்கையில் இஃது சங்கடமாயிருப்பது வெட்கத்துக்கிடமாகின்றதே. சமீபத்தில் இந்தியாவில் நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் அடைந்த பெருவெற்றியே அந்த ஸ்தாபனத்தினது அமைப்பின் பெருமைக்குச் சாட்சியாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் அரசியல் விஷயங்கள் மிகப் பரிதாப நிலையில் இருப்பதற்குக் காரணங்கள் வேறுமுள. ஒரு சபையின் அல்லது ஒரு ஸ்தாபனத்தின் பெருமைக்கும், வளர்ச்சிக்கும், நிலை பேற்றிக்கும் ஆதாரமாக நிற்பவர்கள் உண்மைத் தலைவர்களே. தேசநன்மைக்கெனத் தம்மையொறுத்து எவ்வித தியாகத்தையும் நாட்டின்பொருட்டுச் செய்ய ஆயத்தமுள்ள தலைவர்கள் எத்தனைபேர் இலங்கையில் உளர்? ஒருவரும் இல்லையென்றே கூறவேண்டும். தலைவனெனத் தாமே வேஷங்கொண்டு நடிப்போரைச் சுரண்டிப்பார்த்தால், அவர்கள் உண்மைநிலை சடுதியில் விளங்கலாகும். தலைவராக முன்வருவோர் எவ்வித குணங்களுடையரா யிருக்க வேண்டுமென நாம் அறியவேண்டும். தலைவராக நடிப்பவர் எவ்வளவு கல்விமான்களாயினும் சரி, அரசியல் ஞானிகளாயினுஞ்சரி, அவர்களங்கமற்ற அந்தரங்க சீவியத்தை உடையவரல்லாராயின், அவர் தலைமையை அனுகூலத்துடன் வகிப்பாரென்பதும் சந்தேகம். இப்போது பொதுவாக **சிங்களர் தமிழர் எவர்களின் தலைவராக நடிப்போரது** உள்நிலையைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பின், அவர்கள் சுயநலவாதிகளாக விருக்கக்காணலாம். தம்மை முற்றாக ஒறுத்த தலைவர்கள் இல்லாதிருக்கும் வரையும் இலங்கை யரசியல்நிலை சீர்கேடாய் நாட்டின் உயர்ச்சிக்குப் பாதகமாகவே முடியும். சுயநலம் தலைவிரித் தாடும்வரையும் அரசினர்க்கு வாய்ப்புத்தான்.

உண்மைத் தலைவர்கள் இலங்கையில் இல்லாமையாலேயே, தமிழர் சிங்களர் ஆகிய இரு சாகியத்தவர்க்குமிடையில் வேற்றுமை ஏற்பட்டு பெருந்தீமையை விளைத்து வருகின்றது. சிங்களத் தலைவர்கள் தம்வகுப்பினரின் நன்மையை மாத்திரம்நாடிவாதாடத், தமிழர் யாது செய்வர்? அவரும் அரசினரைக் கூடியவரையில் திருப்தி செய்து சிற்சில சிலாக்கியங்களைப் பெற்றுவிடலாமென எண்ணுகின்றனர். எனவே, இப்போது ஏற்பட்ட போட்டி யாது? அரசினரை எச்சாகியத்தவர் மிகத்திறமையாகவும் அதிகமாகவும் திருப்தி செய்யலாம் என்பதே. அதாவது இருவகுப்பினரும் அரசினரே தஞ்சமென்று நினைக்கின்றனர், அரசினர் எதைச்சொன்னாலும் செய்ய ஆயத்தமாய் நிற்கின்றனர். இவ்வாறுக நிற்கும் வரையும் உண்மைச் சுதந்தரம் எப்போதாவதுகிடைக்குமா? அன்று.

இப்போது இலங்கையில் அனுட்டானத்திலிருக்கும் அரசியற்றிட்டம் திருத்தப்படவேண்டுமென்பதே யாவர் துணிபுமாகும். அத்திட்டம் தேசமுன்னேற்றத்துக்கு உறுதுணையாகத் திருத்தப்படவேண்டில், இலங்கையின் இருபெரு வகுப்பினராகும் சிங்களர் தமிழர் என்போர் தம்முள் ஒற்றுமையடைந்து, ஓர் திட்டத்தை வகுத்து அரசினர்க்குச் சமர்ப்பிப்பதே முறையாகும். அதைவிட்டு சிங்களர் தமது அபிப்பிராயத்தை ஒருவாருகவும், தமிழர் தமது எண்ணத்தை இன்னொருவாருகவும், பிரிந்துநின்று கூறின், ஏற்படவிருக்கும் நன்மை சூனியமாகவே முடியுமெனத் திடமாகக்கூறுவாம். வகுப்புத் துவேஷம் ஏற்பட்டிருந்தும் ஒற்றுமையைநாடியுழைத்தோர் சிலர், இதுவரையும் ஆற்றிவந்த தொண்டு போற்றப்பட வேண்டியதே. ஆனால் இப்போது வகுப்பு ஒற்றுமையை நாடியுழைத்தோரும் வகுப்புவாதிகளாய் மாறிவருவது கண்டு நாம் துக்கமடைய வேண்டியிருக்கின்றது.

போலித் தலைவர்களின் கொடுமையினாலேயே காலத்துக்குக்காலம் பெருந்தீமைகளும் வகுப்புத் துவேஷங்களும் ஏற்படுகின்றன. அரசாங்கசபையில் அங்கத்துவம் பெற்றுற் போதும் என்ற ஒரு நோக்கே இவர்க்குண்டு. அதைப் பெறுதற்காக மற்றைய வகுப்பினரைத் தாறுமாறுகத் தூஷித்து சனங்களைக் கிளப்பிவிடப் பார்க்கின்றனர். வகுப்புத் துவேஷம் நிலைபெறும் வரையும் ஒரு நன்மையும் இவர்களாற் செய்ய இயலாதென்பதை யாவருமறிவாராக.

அரசாங்கசபை அனுட்டானத்துக்கு வருமுன் நிலைபெற்ற சட்டசபைகளில், தமிழர் சிங்களர் ஆகிய இருவகுப்பின் பிரதிநிதிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு ஒத்துழைத்து வந்தனரென்பதும், அப்போது எவ்வளவு நன்மைகள் நாட்டில் ஏற்பட்டனவென்பதும்யாவரும்அறிவர். இப்போது தோன்றிய அனுபவமற்ற புதிய போலித் தலைவர்கள், நாளுக்குநாள் வகுப்புத் துவேஷத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்கின்றனர். வகுப்புத் துவேஷம் எவ்வளவாக விருத்தியடைகின்றதோ,அவ்வளவுக்கு ஏகாதிபத்திய அரசியல்முறை நம்நாட்டின் செல்வத்தை உறிஞ்சிநிலைபெற்று நிற்குமென்பதை இவர்கள் அறியாதிருப்பது பெருந்துக்கமாகும். அரசாங்கசபையில் அதிக ஸ்தானங்கள் வேண்டும்; மந்திரிப் பதவிகள் கிடைக்கவேண்டும்; உயர்ந்த உத்தியோகங்கள் அளிக்கப்படவேண்டும்; துறைமுகங்கள் திறக்கப்படவேண்டும்; அங்கே புதியவோர் தெரு அமைக்கவேண்டும்; இங்கோர் வைத்தியசாலை அங்கோர் வைத்தியசாலை ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதுதான், இப்போது நம் தலைவரென நடிப்போர் நாடும் திருத்தங்கள். அரசினரும் இக் குறுகிய நோக்குடையாரின் திருவிளையாடல்களைக் கண்டின்புற்றுத் திருப்தியடைகின்றனர்.

பொறுப்பாட்சி அரசியல் இலங்கைக்கு வழங்கப்படாதிருக்கும் வரையும், இலங்கையின் முன்னேற்றம் உரியவழியிற் செல்லுமா? எனச் சுயநலவாதிகள் நோக்குவதில்லை. இலங்கையின் செல்வ விருத்தியைநாடி அரசியல் நடத்தப்படவேண்டில், பணநிர்வாகம் இலங்கைமக்கள் கையில் விடப்படவேண்டாமா? கைத்தொழில், கமத்தொழில் என்பவற்றில் எவ்வளவோ விருத்தி ஏற்படக்கூடியவசதிகள் இருந்தும் பணநிர்வாகம் அரசினரால் கட்டுப்படுத்தப்படவே, எல்லாத் திருத்தங்களும் உபயோகமில்லாதனவாயின. ஆகையால் நாம்இப்போதுஅவசியம் பேறவேண்டியது பொறுப்பாட்சி யரசியலே. இது இனிதுகைகூடுதற்கு இலங்கையில் வசிக்கும் பல்வேறு வகுப்பினர்களும் ஒற்றுமையடைதல் அவசியம். தேச நன்மையை நாடுவோர் ஒரு வகுப்பின் குறிக்கப்பட்ட நன்மைகளை நாடாதிருப்பாராக. இப்போது சிங்களரும் தமிழரும் அரசியலில் கூடிய அதிகாரம் பெறும் விஷயத்தில், அவசியமின்றிப் பிணக்கடைந்தால் நன்மையடைவோர் யாவர்? ஏகாதிபத்தியமுறையில் அரசியல் நடத்துவோரே. வகுப்புவாதம் நிலைபெறும் வரையும் எமது நாட்டின் பொருளாதார நிலை சீர் பெறுமென்பது வீண் பேச்சேயாகும். இவ் விஷயத்தைப் பல்வேறு வகுப்பினரும் உணர்ந்துகொள்ளின் பெருநன்மைக்கிடமாகும்.

வகுப்பொற்றுமையை இலங்கைவாசிகள் அடையாது புதிய அரசியற்றிருத்தங்களை உண்டாக்கலாமெனச் சில வகுப்புவாதிகள் எண்ணுவதும் பகற்கனவேயாகும். இனி, சிலர் எல்லா விஷயத்திலும் அரசினரைப் பிரியப்படுத்திலல் காரியசித்தியடையலாமென எண்ணி மற்றைய வகுப்பினருடன் ஒத்துழைக்காது வாழ்கின்றனர். இதற்குக் காரணம் யாது? நமது நாடு உண்மைச் சுதந்தரத்தைப் பெறவேண்டும், அதன்பொருட்டு எத்தியாகத்தையும் நாம் செய்யப் பின்வாங்கோம் என அஞ்சாநெஞ்சுடன் தொண்டாற்றும் உண்மைத் தியாக சிந்தை இல்லாமையே. பற்களைக் காட்டிக் கெஞ்சி நின்று, எப்போதாவது ஒருநாடு சுதந்தரத்தைப் பெற்றதுண்டா? இல்லையே. விஷயமிவ்வாறாக, அரசினரை அண்டி மனுப்பத்திரங்களைக் கையிற் பிடித்துக்கொண்டு மன்றாடுவோரின் கதி யாதாகுமென நாம் கூறவேண்டுமா? வகுப்புவாதியாயிருந்தால் அரசினர் மெச்சுவாரென எண்ணுகின்றனர் சிலர். முதுகெலும்பற்றவர்கட்குச் சுதந்தரமெதற்கோ?

ஆகையால், அரசியற்சபைகளை, நாட்டின் பலபாகங்களிலும் அமைத்து, பாமரசனங்களின் நன்மையை நாடித் தொண்டாற்றி, அவர்கள்பால் சுதந்தரக் கிளர்ச்சியை உண்டாக்கி, அவர்கள் நம்பிக்கையைப் பெற்றலன்றி, நாம் செய்யவிரும்புவன சித்தியைப்பெறா. இத்துடன் வகுப்புத் துவேஷங்களையும் களைதல் வேண்டும். இதைவிட்டுத் தம்மைத்தாமே தலைவராகிக்கொண்டு தாம் சொல்வதே அமுதமொழியென்றும், அதை யாவரும் கைக்கொள்ளவேண்டுமென்றும் விரும்புவோர் ஈற்றில் இருந்தவிடமும் தெரியாது மறையவேண்டியவரே. சுயநலமே இவர்கள் பீடிகையாக இருக்கும் வரையும் அனுகூலம் எப்படி உண்டாகும். இவைகளை யாவரும் ஊன்றி நோக்கி யுணர்ந்து உய்வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வந்துறைத் திருமால் கோயில்

(வேள்ளவத்தை, திரு. மு. இராமலிங்கம் அவர்கள்)

தெய்வந்துறைக்குத் தேவிநுவரை, 'டொன் டிரு' எனப் பலபெயர்களுண்டு. தேவிநுவரை பென் பது பத்தினிதேவி வணங்கப்பட்ட ஸ்தலம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலே கயவாகுவென்னும் இலங்கை யரசன் கண்ணகி வணக்கத்தை இலங்கையிற் பலதிசை களிலும் நிறுவியகாலத்தில், இங்குமொரு கோயில் எழுப் பியபடியால் இவ்விடம் தேவிநுவரை யெனப்பட்டது. இவ்விடத்திலேயே விஜயராசன் சந்திரசேகரன் கோயி லைக் கட்டினனென வைபவமாலை கூறும். சைவக் கோயில்களுள்ள இடமானபடியால் அவ்விடம் தமிழில் தெய்வந்துறை யெனப்பட்டதுபோலும். தேவிநுவரை யென்னும் பெயர் குறைந்து 'தேநுவரை' யெனவாகிய காலத்தில் போர்த்துக்கேயர் தங்கள் நூல்களில் தேன வரை (Tanavara) என எழுதியிருக்கின்றார்கள். தெய் வந்துறையென்னும் பெயரே தெய்ந்துறையென மருவி டொன்டிரு என மாறிவிட்டது. அங்கிருந்த சிவாலயம், புத்தசமயம் இலங்கையிற் பரவியபின் விஷ்ணுவாலய மாக மாற்றப்பட்டிருக்கலாம். முன்னொருகாலத்தில் சைவ சமயம் தழைத்தோங்கிய இப்பட்டினம், தனது அழகும் புகழும் அருகித் தற்கால நிலையைக் காட்டுவான்போல டொன்டிரு (Dondra) என்னும் கருத்தில்லாப் பெய ரால் அழைக்கப்படுகிறது. இங்கே அக்காலத்தில் பொன் னிரதமூர்ந்து பல்லாயிரம் பக்தகோடிகள் பரவிப் பணிய பார்ப்பவர் கண்களைப் பறிக்கும் அழகுடன் ஸ்ரீவிஷ்ணு பகவான் பவனிவரும் புனிதமான வீதிகள், இப்போது தூர்த்தார் நிறைந்து மோட்டார் இரதங்கள் நிறுத்தும் சாலைகளாக மாறிக்கிடக்கின்றன.

தேவிநுவரை, தெய்வந்துறையென்னும் பெயர்களின் வரலாறுகளைப்பற்றி மாறுபாடான அபிப்பிராயங்கள் பல வுள. அவற்றுள் ஒன்று கார்த்திகேயக் கடவுள் விண் ணினின்றும் பாற்கடலிலிறங்கி, கருங்கல்லாலான தெப்ப மொன்றில் ஊர்ந்து இங்கரின் கரைசேர்ந்து பின் கதிர் காமம் என்னுமிடத்தில் எழுந்தருளினார் என்பதும், இன் னொன்று பெருமைவாய்ந்த விஷ்ணுவாலயம் அவ்விடத்தி லுள்ளமையால் அப்பெயர் பெற்றது என்பதுமாம்.

இந்துசமய அறிகுறிகள் கொண்டு இலங்கும் சிங்கள நாடுகளில் இங்காட்டைப்போல் வேறுநாடுகள் இல்லையென லாம். இந்துஆலயங்களும் கிரி விகாரை யெனப்படும் புத்த வாலயமும் அருகாமையிலமைந்திருக்கும் தன்மையினால் இவ்விரு சமயங்களுக்குமிடையே ஒற்றுமை நிலவிய தென்பதும் பக்தர்களெல்லாம் சமயவேறுபாடின்றி இரு ஆலயங்களுக்குஞ் சென்று பகவானைச் சேவித்து வந் தனரென்பதும் அறியக்கிடக்கின்றன. இந்துக் கதை களும் இந்துக் கொள்கைகளும் நிரம்பிவழியும் இவ்விடத் துள்ள கடற்கரையும் இந்துக் கொள்கைகளின்படியே அமைந்துகிடக்கின்றது.

இங்கரத்துச் சரித்திரத்தில், அதன்கணுள்ள விஷ்ணு வாலயத்தின் சரிதையே பெரும்பான்மையும் காணப் படும் இவ்வாலயம், அநேக வருஷங்களுக்கு முற்பட்ட தென்றும் 2-ம் பராக்கிரமபாகுவின் மருமகனாகிய வீர பாகு என்பவன் சந்தபானு என்னும் மலையாளத்து அரசினங்குமாரனைப் போரிற் புறங்கண்டபின்பு, தேவ புரிக்கு எழுந்தருளி மேகவண்ணக் கடவுளுக்குப் பல காணிக்கைகள் ஈந்து பரவிப்பணிந்தானென்றும், தேவ நகரத்து நீலவண்ணன் ஆலயம் பழுதடைந்து கிடக்கின் றது என்பதைக் கேள்வியுற்ற 2-ம் பராக்கிரமபாகு அங்குசென்று, தேவருலகம்போல் தோன்றும்படி அவ் வாலயத்தைப் புதுப்பித்து, ஆண்டுதோறும் விழா நடத் துமாறு செய்தானென்றும் மகாவம்சம் கூறுகின்றது.

1344 ம் ஆண்டில் மூரூஞ்சியர் (Tangier) என் னுமிடத்திலிருந்து புறப்பட்டு 34 வருஷங்களாக உல கின் பல்வேறு பாகங்களிலும் பிரயாணஞ்செய்த இபின் பட்டூட்டா (Ibn Batuta) என்னும் துலுக்க பிரயாணி இவ்வாலயத்தைப்பற்றிக் கூறுவது ஈண்டுக் குறிக்கத் தக்கது. தான் மகமது சமயத்தானபடியினால் விக் கிரக ஆராதனைக்குரிய ஆலயத்திற்குள் பிரவேசிக்க வில்லையென்றும், ஆயினும் நவரத்தினங்கள் விரவி யமைக்கப்பட்ட ஒரு மனுஷனளவு பருமையும் உயரமு முள்ள ஒரு பொன் விக்கிரகம் அவ்வாலயத்திலிருந்த தென்றும் 1000 பிராமணரும் யோகிகளும் 500 ஆடல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
183322
ARCHIVES

மகளிரும் அவ்வாலயத்திலிருந்தார்கள் என்றும், குறிப் பிட்டிருக்கின்றான். இவன் இப்பட்டினத்தைத் தினவார் (Dinewar) எனக் குறிக்கின்றான். 16-ம் நூற்றாண் டின் நடுப்பகுதியில் இவ்வாலயத்தின் சிறப்பு உச்ச நிலையை அடைந்திருந்ததாகத் தென்படுகின்றது. சுற் றுக் கிராமங்களெல்லாம் ஆலயத்திற்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டன. அதன் உன்னதமான கட்டிடங்கள் ஆகாயமளாவின. நாற்புறமும் நறுமணங் கமழும் நந்த வனங்கள் மலிந்துகிடந்தன.

1588-ம் ஆண்டில் 2-ம் இராசசிங்கன் கொளும்பு நகரத்தை முற்றுகையிட்ட காலத்து, இவ்வாலயத்தின் சிறப்பாலும் செல்வத்தாலும் பெரிதுங் கவரப்பட்ட போர்த்துக்கேயர் தோம்மசவுசாடிஅருன்சேஸ் (Thome de Sousa de Arranches) என்பவனின் தலைமை யின்கீழ் அவ்விடத்தையடைந்து எதிர்ப்பார் ஒருவரு மின்றிக் கிடந்த அவ்வாலயத்தை நிர்த்தூளியாக்கி யழித் துப் பொன்னும் மணியும் முத்தும் பவளமும் வேண்டு மட்டும் சூறையாடி எஞ்சியவற்றிற்குத் தீமூட்டிப் புனி தமான அவ்விடத்திற் பல்லாயிரம் பசுக்களைக் கொன்று திரும்பினர். சித்திரவேலைப்பாடுகள் நிறைந்த சில கருங் கற்றூண்கள் மாத்திரம் போர்த்துக்கேயரின் கொடுங் கோன்மையை விளக்கிக்கொண்டு இன்றும் அவ்விடத் திற் கிடக்கின்றன.

இலங்கைச் சரித்திரமெழுதிய றிபேரோ (Ribeiro) என்னும் பறங்கியர் இக்கோயிலைப் பற்றிப் பின்வரு மாறு கூறுகிறார். "நாம் 1588-ம் ஆண்டு இலங்கைத் தீவில் மிக உன்னதமாக விளங்கியதும் சிவனொளிபாத மலைக்கு அடுத்தபடியாக அநேக யாத்திரிகர்களால் தரிசிக் கப்படுவதுமாகிய மிகவும் பிரசித்திபெற்ற தேனவரம் (தேவிநுவரை) என்னும் ஆலயத்திற்குப் போனோம். அதன் கட்டிடமோ மூன்றுமைல் சுற்றுச் சஞ்சாரத் துடன் அழகான நகர்போல் தோன்றியது. அக்கோ யில் விஸ்தாரமானதாயும் அதன்முடி மிகச் சிறந்த சித் திரவேலைப்பாடுகள் நிறைந்த வில்மாடங்களால் ஆக்கப் பட்டிருந்தது. அக்கோயிலைச்சுற்றி அநேக அழகான சிறுகோயில்களும் அதன் பிரதானவாயிலின்மேல் முற் றும் பொன்முலாம் பூசிய செப்புத் தகடுகளால் வேயப் பட்ட ஓர் உன்னத கோபுரமும் இருந்தன. அதன் உள்ளே மேடைகளுடன் கூடிய ஒருபெரிய சதுரம் உண்டு. அதன் நாலுபக்கங்களிலும் வாயில்களிருந்தன. அச்சதுரத்தைச் சுற்றித் திருவிழாக் காலங்களில் உப யோகிக்கப்படும் நறுமலர்களைக் கொண்ட பூச்செடிகள் உண்டாக்கப்பட்டிருந்தன. அங்கே அநேக அழகான தெருவீதிகளுமிருந்தன. அவ்வீதிகளில் அவ்வாலயத் தின் தொண்டர்கள் முக்கியமாக அக்கோவிலின் சேவை க்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட பெண்மணிகள் வசித் தார்கள். அவ்வாலயத்தை யணுகியதும் நாங்கள் ஒரு பயங்கரமான புயலில் அகப்பட்டோம். எம்முடன் சென்ற சிங்களக் காலாட்கள் (Hasearins) தங்கள் ஆலயத்தைக் காப்பாற்றும்பொருட்டு அப்புயல் கடவு ளால் விடப்பட்டதென்றும் போர்த்துக்கேயர் அவ்வா லயத்தை அணுகமாட்டார்களென்றும் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர். அவர்களுடைய மனதைச் சீராக் கும்பொருட்டு சேனாதிபதி அக்கட்டிடத்தை அழிப்ப தாகச் சத்தியஞ்செய்தான். அவன் மறுநாட்காலை தனது பட்டாளத்தைக் கொண்டுவந்து அக்கோயிலைச் சுற்றி யிருந்த அரணையழித்துவிட்டுக் கோயிலினுள்ளே புகுந் தான். அங்கே அவர்களை எதிர்க்க ஒருவருமில்லாமல் எல்லோரும் கோயிலைவிட்டு முன்னதாகவே வெளியேகி விட்டனர். நாங்கள் ஆலயத்தின் வாயிலை யுடைத்து உள்ளே புகுந்து அங்குள்ள மண்ணெலும் மரத்தி னும், செம்பினாலும் ஆக்கப்பட்டுப் பொன் பூசிய தூபி ரக் கணக்கான விக்கிரகங்களையும் சித்திரமாடங்களையும் ஸ்தம்ப வரிசைகளையும் அழித்தோம். ஆனைத்தந்தம், சிறந்த ஆடைகள், கோப்பி, மிளகு, சந்தனக்கட்டை, நகைகள், இரத்தினக்கற்கள் முதலிய பொருட்குவியல் களையும் இன்னும் அநேக கோயிற் சாமான்களையும் கொள்ளையடித்து மூட்டைகட்டிக்கொண்டு எஞ்சியவைக ளுக்கு நெருப்பு வைத்தோம். அவ்விடத்திற்கு ஒரு பெரிய நிந்தனை செய்யும்பொருட்டுச் சில பசுமாடுகளை வெட்டிக் கொன்றோம். ஏனெனில், அக்குற்றத்தை நீக்க வேண்டுமாயின் அதிக செலவுள்ள கிரியைகள் செய் தாற்றான் நீங்குமென அறிந்தபடியால் – இத்துடன் அக் கோயிலிலுள்ள பிரதான விக்கிரகத்தை ஊர்வலங் கொண்டு செல்வதற்கு உபயோகப்படுவதும் ஏழு மேல் மாடிகளையுடைய கோபுரம்போல மரத்தால் ஆக்கப்பட்டு வர்ண சித்திரவேலைகளும் பொன் பூச்சுமுடையதுமான ஒரு தேரையுமழித்தோம். இதன்பின் சூறைப் பொருள் களுடன் வெலிகாமம் (Weligama) என்னுமிடத்திற் குத் திரும்பிவந்து கொழும்பிலுள்ள சேனாதிபதியின் கட்டளை வரும்வரையில் அவ்விடத்திலே தங்கினோம்.

இதனையிட்டு முத்துத்தம்பிப்பிள்ளை ஆசிரியர் "தேவேந்திரபுரமெனக் காலிக்கப்பாலுள்ள இடத்தில்

(தொடர்ச்சி 95-ம் பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறும் ஜோர்ஜ் அரசரும் எலிசபேத் அரசியும்.
பட்டாபிஷேகம் மே-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆதித் தமிழகம்

CRIGINAL HOME OF THE THAMILS

குரும்பகட்டி, திரு. S. R. முத்துக்குமாரு அவர்கள் ஆங்கிலத்திலெழுதியது

[மொழிபெயர்ப்பாளர்: வண்ணை—திரு. வை இராமநாதன் அவர்கள்]

ஆதியிலே தமிழர்கள் தோற்றி வசித்த இடம் 'இதுவெனல்' இன்னும் நிச்சயிக்க முடியாத தருமாற்றப் பிரச்சினையாகவிருக்கின்றது. இந்த மறைபொருளை யறி வதற்காகப் பிரயத்தனங்கள் மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலு முள்ள மேதாவிகளினுற் செய்யப்பட்டன. ஆனுல், இப்போது காணப்படும் நிலைமையளவில், எவ்விதமான நற்பயனும் உண்டாகவில்லை. இந்தியாவுக்கு அப்பாலுள்ள எந்த இடத்திலேனும், தமிழரின் ஆதியகம் இருந்திருக் கலாமென்பதைத் தேசாபிமானமும் ஊர்ச்சித சிந்தையு முள்ள எந்த இந்துவும் ஒப்புக்கொள்ளமாட்டான். இதேபோல், தேசாபிமானமும், ஊர்ச்சித சிந்தையு முள்ள எந்த ஐரோப்பிய வித்தியார்த்தியும், இவ் வகத்தை, தைக்கிறிஸ் நதிக்கும், யூபிறேற்றீஸ் நதிக்கு மிடையேயுள்ள பள்ளத்தாக்கிலேயே காட்ட முய லுவன்.

பரதகண்டத்திலே காணப்படும் எப்பொருளும் அவ்விடத்திலேயே உற்பத்தியுடையனவென்பதே தமது முன்னேரின் நம்பிக்கையென்று கீழ்நாட்டு வித்தியார்த்தி கூறுகின்றுன். மேனுட்டு மேதாவிகளோ, இந்த நம் பிக்கை இப்படியிருந்தபோதிலும், பாஷைகளைப்பற்றிய ஆராய்ச்சியின் பெறுபேறுக, எல்லாச் சாதியாளரையும் அவரவர்கள் எவ்வெவ்விடத்திலுற்பத்தியானவர்கள் என் பதை நிச்சயமாகக் கூறிவிடலாம் என நிலைநாட்டுகின்ற னர். சரித்திரநூல்கள், எட்டாமல் நின்றுவிட, இது காரணமாகப் பெறக்கூடிய சாட்சிகள் அற்றுப்போக, இங்கு, பாஷையும் அதைப்பற்றிய சரித்திர ஆராய்ச்சி யுமே சரித்திர காலத்திற்கு முற்பட்ட சம்பவங்களைப் பற்றி நாம் அறியக்கூடியதான வழிவகைகளை எமக்கு உதவுகின்றன. இதைக்கொண்டே, ஒரு சாதியாளர் சரித் திரகாலத்தின் முன்னிருந்த வகையையும், அவர்கள் எந்த மத்திய ஸ்தானத்திலிருந்து பிரிந்து வேறு இடங் களுக்குப் பரவினுர்களோ, அந்த மத்திய ஸ்தானமிதுதா னென்பதையும், நாம் தேடிக் காணக்கூடியதாகின்றது. சப்தவிற்பத்தியாகும் சொல்லிலக்கணம் இதுவிஷயத்தில் நிச்சயமான துறையாகக் காணப்படவில்லை யென்பதைச் சொல்லவே வேண்டியதில்லை.

கடந்த நூற்றுண்டிலேயே தமிழரின் ஆதியகத்தைப் பற்றிப் பாஷைத் தொடர்பைக் குறித்த பல வேறு வகையான கொள்கைகள் வெளிப்பட்டன. இக் கொள்கைகளிற்பல, கால வரையறையின்பாற்பட்ட சோத னைகட்கு நின்றுபிடிக்க முடியாதனவாகவே, அவை தீர்க் கமாக ஒதுக்கி வைக்கப்பட்டன. இன்னும் இவற்றுட் சில ஆராயப்பெறுகின்றன. சரித்திர முடிவானவும், வித் தியாசம்பந்தமானவும் சாட்சிகள் மிக அருகிவிட்டமை யால், சப்தவிற்பத்தி சாஸ்திரம், புராதன கலாஞான சாஸ்திரம், மனிததத்துவ ஞானசாஸ்திரம் ஆகிய சாஸ் திரங்களையே யாராயத் தொடங்குவாராயினர்.

இவ்வழியில் அதிகம் வேலையாகிவிட்டது; என்ரு லும், பண்டைத் தமிழ்மக்களின் சாதி சம்பந்தமானவும் பாஷா சம்பந்தமானவும் ஒற்றுமைப்பாடுகளை யாராய்ந்து அறியும் வகையில் இன்னும் பெரும்பகுதியான உழைப்பு நடைபெறவேண்டி யிருக்கின்றதென்பது ஒப்புக்கொள் ளப்படவேண்டியதொன்ருகும். மெல்ல மெல்ல அடி வானம் வெளிப்படைகின்றது. இன்னும் சில பத்தாட் டைக் காலத்துள், பண்டிதர்கள் இதுவிஷயமாக ஒரு தீர்க்கமுள்ள முடிவைக் காணக்கூடும் போதும். இப்படி யாகும் வரையில், பக்குவம் படைத்துள்ளவைகளான ஐதீகங்கள் சிலவற்றை—அவைகள் எமது கரிசனையான கவனத்திற்குப் பாத்தியதையுடையனவாகையால்—கூறி, இவற்றை வாசிப்போர் தங்கள் தங்கள் சொந்தத் தீர் மானங்களைச் செய்துகொள்ள விடுவதே புத்தியின்பாற் பட்டதாகுமென நான் நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸ்கிதியன் ஐதீகம் (The Scythian Theory)

இவ்வைதீகம் முதலாவதாக பேராசிரியர் **றஸ்க்**¶ அவர்களினால் வெளிப்படுத்தப்பெற்றுப் பின்பு கனம் **கால்ட்வேல்** குரு†வினால் அலங்கரிக்கப்பெற்றதாகும். **ஸ்கிதியன்** பாஷையினதும், தமிழ்ப்பாஷையினதும் இலக்கணநூல்களையும் அகராதிகளையும், பாண்டித்தியம்படைத்த அக்குரு ஒப்பிட்டுப்பார்த்து, ரியூறேனியன் வர்க்கத்திலே யுள்ளதென எண்ணப்பட்ட ஸ்கிதியன் கணத்திலே தமிழ் சாதியும் பாஷையும் உள்ளதாமென ஒரு முடிவுக்கு வந்தனர். இவ்வைதீகம் சப்த உற்பத்திச் சாஸ்திர ரீதியாகவும், மனுஷகண சாஸ்திரரீதியாகவும் ஆராய்ந்துழி எவ்வகையான பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றதென விஞ்ஞானவாராய்ச்சியாளர் இதைப் புறக்கணித்து விட்டனர்.

சீ. ஈ. கோவர் என்பார் பின்வருமாறு கூறுகின்றனர்:— "டாக்டர் கால்ட்வெல்ட் உடைய பாண்டித்தியம் படைத்த நூலாகும் 'திராவிட பாடைகளின் ஒப்புநோக்கிலக்கணம்' வெளிவந்ததின் பின்னர் தமிழர் முதலியோர் **ரியூறேனியன்** மக்களேயாவரென ஒப்புக்கொள்ளப்பட்டது. சப்த உற்பத்தி சாஸ்திர ஆராய்ச்சியின் விருத்தியும், பாஷைகட்கிலக்கணமெழுதப் புகுந்த பாண்டித்தியம் படைத்த ஜர்மன் நூலாசிரியர்கள் கையாளும் புதுவழியான வியாகிருதிமுறையும் மேலே கூறப்பட்ட வகுப்பு முறையிலுள்ள பிழையைக் காட்டி விட்டன."‡

பாரிஸ் நகரிலுள்ள **ஜே. வின்சன்** பேராசிரியர் எழுதுகின்றார்:— "ரியூறேனியன் வர்க்கமொன்றுள்ளதென நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லையென்பதை ஈண்டு குறிப்பிடுவதுடன், இது நிகழ்ச்சியுண்மைகளாலும் அல்லது நியாயவாயிலாகவும் நிலைபெறப்பண்ணத்தக்க பிரதிக்ஞையல்லவென்றும் மூடத்தனம் படைத்ததென்றும் சொல்லவேண்டியதாயிருக்கின்றது***"

திராவிடர், ஸ்கிதியன் கணத்தின் புராதன வகுப்புக்குச் சேர்ந்தவர்களாயிருக்கலாமென்றும் டாக்டர் **கால்ட்வேல்**லின் அபிப்பிராயத்திற்கும் எவ்வகையான ஆதாரமும் இன்றும். ||

¶ J. R. A. S. III. 125.

† திராவிட பாடைகளின் ஒப்புநோக்கிலக்கணம் 3-ம் அதி. 62-ம் பக்கம்.

‡ தென்னிந்திய கர்ண பாரம்பரிய பாடல்கள். முன்னுரை பக்கம் **vi.**

|| சித்தாந்ததீபிகை **v** 193.

2. திபெத்து—மங்கோலியன் ஐதீகம் (The Tibeto-Mongolian Theory)

"1800 வருடங்கட்கு முன் உள்ள தமிழர்" என்னும் ஆராய்ச்சி உரையின் சிறந்த ஆக்கியோனுகும், திரு. கனகசபைப்பிள்ளை இந்த ஐதீகத்தின் தாதாவாகும். சேர். **W. W. ஹன்டரும்** மிஸ்டர் **மாஷமான்** என்பாரும் இவ்வைதீகத்தின் மூதாதைகளாவர்.

தமிழருடைய நரம்புகளிலோடும் மங்கோலிய உதிரம் வங்காளத்திற் குடியேறிய மங்கோலியரினாலேயேற்பட்டது என்று சொல்லப்படுகின்றது. ழ, ஞ, ங, என்னும் எழுத்துக்கள் தமிழிலும், திபெத்திய மங்கோலியப் பாஷைகளிலுமிருப்பதும், தமிழ்ப்பாஷைக்கும் **தமலற்றிப்** பாஷைக்கும் பொதுவாகவுள்ள சப்தநாத ஒப்புமையும் தமிழர் திபெத்திய மங்கோலிய வருக்கத்திற்கு இனமுடையவர் என்பதைச் சாதிக்கத்தக்கதான நியாயங்களிற் பிரதானமானவைகளாம்.

திரு. கனகசபைப்பிள்ளை, கலித்தொகையில் 104-ம் பாடலாகிய அதில், "தென்னவன் மெல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத் தாயர்" என்னும் பாகத்தைமட்டும் எடுத்துக்கொண்டு, இதனால் தமிழரின் தொடக்கத்தை திபேத்திய பிரதிக்ஞையிற் சேர்க்கப் பார்க்கிறார். இதைக்கொண்டு **ஆயர்** சாதியார் வடக்கிலிருந்து பாண்டியர்களுடன் வந்ததாக வியவகரிக்கின்றார்; மேலும் தென்னாட்டு **ஆயர்**களை வடநாட்டிலுள்ள நாகரீகமற்ற **அலிவர்**களுடன் சமப்படுத்துகின்றார். ஆனால், குறித்த பாடலின் பாகத்தின் தொடக்கத்திலுள்ள வரிகளை அவர் கவனித்தாரல்லர். அவைகள் இந்தப் பிரதிக்ஞைக்கு முற்றும் முரணுகவுள்ளன. அவை வருமாறு:—

> மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
> புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
> வலியினல் வணங்கிய நாடாச்சீர்த் தென்னவன்.

இதன் கருத்து:— "தனது நாட்டைத் திரையூரும் கடல் கொண்டமையினால், மங்காப் புகழும் பெலமும் படைத்த தென்னாட்டின் பாண்டியன் மேலே நோக்கிச் சென்று புலி (சோழன்) யையும், வில் (சேரன்) லையும் ஒதுக்கித்தள்ளி அந்நியநாட்டின்மேல் தனது புகழ்கொண்ட மச்சக்கொடியை நாட்டினன் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட பாடல், தெற்கிலே பெரிய கண்டமொன்றிருந்ததாகக் கூறப்படும் பாரம்பரியத்தை நேர்முகமாக அதுவதிப்பதுடன், கடல்கோட்பட்ட நிலத்திலிருந்து இந்த ஆயர்கள் பாண்டியனுடன் வந்தனர் என்பதையும் ஆதரிக்கின்றது.

3. சுமேரிய-ஆக்கேடிய-இலாமையிற் ஐதீகம் (The Sumero-Accedian-E'lamite Theory)

இந்த ஐதீகத்தின்படி இந்தியாநாடு, இரு கூட்டமான **இலாமையிற்** படையெடுப்புத் தாக்கங்களினுற் கைக் கொள்ளப்பட்டிருந்தது. ஒரு கூட்டத்தார் பேர்சியக் குடாக்கடல் வழிபாகக் கடற்பக்கத்தினூல் வந்து இந்தியாவின் தென்மேற்குப் பாகத்தில் உறைந்தனர். மற்றக் கூட்டம் தரைமார்க்கமாகப் **போலன்பாஸ்** வழிபாக வந்து வடகிழ்ப் பாகத்திற் குடியேறினர். இந்த ஐதீகம் **ஈழத்திற்கும்** இந்தியாவுக்கும் பொதுவான புராணக் கதையாயுள்ள சலப்பிரளயத்தையும் அவ்வழியிருந்த தெப்பத்தையும் அடிப்படையாகவுடையதேயாம். இன்னும் தமிழ்ப் பதங்கட்கும் ஆக்கேடியப் பதங்களுக்கும் பொதுவாகவுள்ள சப்தவிற்பத்தி, குறியீட்டு நிலைமையாகியவற்றிற்கும் மேருமலையிற் பொறிக்கப்பட்டிருப்பதாக உருவகப்படுத்தப்பட்ட சமஸ்கிருத **இளவிட்டம்** என்பதின் ஒற்றுமைப்பாட்டிற்குமுள்ள நியாயங்களும் இதற் காதாரமாகக்கொள்ளப்பட்டன. விவிலிய நூலிலே சொல்லப்பட்ட **எல்மோண்ட்** என்பதும் பாபிலோனியருடைய ஈழமும் ஒன்றேயாகும்.

தமிழருடைய ஆதியகம், ஒரு காலத்திலே உலகத்தின் சுவர்க்கமென அபிமானிக்கப்பெற்றதான **தைகிறிஸ்** நதிக்கும் **யூபிறேற்றீஸ்** நதிக்குமிடையிலுள்ள வளம் பொருந்திய நிலமாகும் தென்ஆசியாப்பகுதியிலுள்ள பூப் பகுப்பேபெனக் கொள்ளப்பட்டது. இவ்வளநாடு இரு பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. வடமேல்பாகத்தில் **சும்மர்** என்பதும் தென்கிழ்ப்பாகத்தில் **அக்கேட்** என்பதுமாம். தமிழிலே **இல்லம்** என்னும் கருத்தமையும் **ஈழம்** என்பது, **பாபிலோனியரின் ஆக்கேட்** என்பதற்கும் அங்குள்ள மலைக்கும் உள்ள மறுநாமமாகும். இதுவே தமிழரின் ஆதியகம் என்று அதுமானிக்கப்பட்டது. **ஈழம்** அல்லது **ஈழவிட்டம்** என்பதைப் புராணங்கள் இன்றும் பாராட்டுகின்றன. இலங்கை இன்றும் ஈழமண்டலம் என்று அழைக்கப்படுகின்றது.

ஒரு பக்கத்திற் தமிழரும் மறுபக்கத்தில் அக்கேடியரும் ஆக, இவர்களிருவருக்கும் பொதுவாகவுள்ள சமயக் கோட்பாடுகள் பாஷை ஆதியவற்றின் பெரும்பான்மையான ஒற்றுமைப்பாட்டினுல் இந்த ஐதீகத்திற்கு அதிகம் வலு வழங்கப்படுகிறது. சமீபகாலத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் வாயிலாக, மிகப் புராதனமான பாபிலோனிய சிலாசாசனங்கள் எழுதப்பெற்றுள்ள சுமேரிய பாஷையானது, தமிழ் எக்கணத்திற்குச் சேர்ந்ததோ அக்கணத்திற்கே சேர்ந்ததாகக் காணப்படுகின்றது. மேலும் **வின்ஸ்** சாதியார் பூர்வீகத்திலுள்ள 'சூ' வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் கொள்ளப்படுகின்றது. வேறு சில ஆதாரங்களின்படி **கஸ்றிறைற்ஸ்** என்னும் சாதியார் **சுமேரியர்களுடன்** விவாகக் கலப்புச் செய்து ஆக்கேடியர்களின் ஆரம்பத்தையாக்கினர் என்னப்படுகின்றது. ஆகவே, தற்காலத்திலே தென்னிந்தியாவில்வழங்கும்பாஷைகட்கும் சுமேரியப்பாஷைக்கு மிடையேயுள்ள பொருத்தப்பாடும், பழைய ஆக்கேடியர்கட்குள்ளே சாதாரண வழக்கமாயிருந்ததாக நன்கு அறிப்பப்படும் பழக்க வழக்கங்கள் நெடுங்காலமாக இன்றுவரையும் தமிழருக்குள்ளே நடைமுறையிற் காணப்படுவதும், ஆதித் தமிழர் **சுமேரிய - கஸ்றிறைற்ஸ்** என்னும் புராதனச் சாதியாருடன் சாதியொற்றுமைப்பாடுடையவர்களாகும் என்னும் ஐதீகத்தை மிகப் பெலப்பாக நிலைநிறுத்துவனவாகக் காணப்படுகின்றன.

பரதரென்று அழைக்கப்படுபவர்களும், நாட்டிற்குப் பாரதபூமி, பரதகண்டம், பாரத வருஷம் என்னும் பெயர்களுண்டாவதற்குக் காரணராயிருந்தவர்களுமான இந்தியாமீது படையெடுத்து வந்த, சரித்திரத்திற்கு முற்பட்ட சாதியாராகும் ஈழவர், அருகிப்போன **சால்டிய-ஈழவ** சாதியாரின் ஒரு வகுப்பாராகும். இவர்கள் **ஆக்கேடிய-சால்டியாவிலிருந்து** முறைமுறையாக இந்தியாவினுள் வந்து சேர்ந்தனர்.

சம்பாவிதமாக, மலையாளத்திலுள்ள **பர** என்றும், தமிழிலுள்ள **பார்** அல்லது **பரை** என்றும் உள்ள மலைப்பைக் கருதும் சொற்களிலிருந்தே **பாரத** என்னும் பதம் உற்பத்தியெற்றிருக்கலாம். இந்தியாவினுள்ள ஒவ்வொரு பூர்வீக அரசனுடைய நாட்டிலும் ஒருமலையிருக்தமையும் அம்மலை அவ்வரசனின் அரணும் மலையுமாக விருந்தமையும் மேலேகொண்டுள்ள கருத்திற்காதாரமாக விருக்கின்றன. பிற்காலத்திலே **"ஹிந்துஸ்தான"**த்திலே குடியேறிய பரதர்கட்கு **கந்தார்** என்னும் பெயரும் **தெக்ஷணத்தில்** வசித்தவர்கட்குத் **திராவிட**ரென்னும் பெயரும் கொடுபட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சல்டியாவிலிருந்து பாரதர் வெளியேறியது மனுவினதும் இந்திய சலப்பிரளயத்தினதும் காலத்திலிருந்து ஆரம்பமாயதென அநுமானிக்கப்படுகின்றது. மனுவினுல் நடத்தப்பெற்ற ஒரு கூட்டத்தார் பார்சிய குடாக் கடல் வழியாக அராபியகடலைக் கடந்து இந்தியாவின் தென்மேற்குக்கரையை யடைந்தனர். இத்தேசாந்தரவாசிகள், கன்னியாகுமரிக் கதிதூரத்திலில்லாத மேற்கு மலைத்தொடர்களுடைய மலையநாட்டிற் குடியேறிப் பாண்டு எனப்படும் தென்கண்டத்தில் வசிப்பாராயினர். இவர்களிலிருந்தே தென்னுட்டரசர்களாகும் பாண்டியர்களும், சம்பாவிதமாக மஹாபாரதயுத்தத்தின் வீரர்களாகும் பாண்டவர்களும் தோற்றியிருக்கலாம்.

தென்னிந்தியாவிலே முதன்முதற் குடியேறிய இச்சம்பவத்தைப்பற்றி மஹாபாரதத்திலும் புராணங்களிலும் ஒரு மனோகரமான பாரம்பரியக் கதையுண்டு. மிகப்புராதனமான அக்காலத்திலுண்டாய சலப்பிரளயகாலத்தில் மனு ஒரு தெப்பத்தில்மிதந்து இதற்கெனப் பழக்கப்பெற்ற ஒரு மீனின் உதவியைக்கொண்டு, மேற்குப் பக்கமாகத் தள்ளுண்டு சலப்பிரளயம் வற்றியகாலத்தில் அத்தெப்பம் மலையத்திற் (தமிழ் மலை) தங்கியது. திருவாங்கூருக்கும் திருநெல்வேலிக்குமிடையே மேலை மலைத்தொடரின் ஒரு பாகமாகிய மலைத்தொடருக்கு மலையம் எனப் பெயருண்டு. இது பிற்றைக்காலத்திலே அகஸ்தியர் வதிந்த பொதியமலை என்று கூறுப. மனுவுடன் ஏழு இருடிகள் சென்றனர். இவர்களுள் ஒருவர் புலஸ்தியராகும். இவர், தமிழுக்கு முதலிலக்கணம் செய்த அகஸ்தியருக்கும் இலங்கையரசனுய இராவணனுக்கும் தந்தையாவர். தொடக்கத்திற் குடியேறிய இப் பாரம்பரியத்தை நிலைநாட்டுவதற்காகப்போலும் பாண்டியர்களுடைய துவசத்தில் மச்ச உருவம் பொறிக்கப்பட்டது.

இலமையிற் சாதியாரின் மற்றச்சாரார், மேற்கு ஆசியாவிலுள்ள தம்நாட்டைத் துறந்த பின்னர், பலுக்கிஸ்தானத்திற் புகுந்து போலன்பாஸ் மார்க்கமாக வடஇந்தியாவில் நுழைந்து, அதேகாலத்தில் பார்சிய குடாக்கடலினதும் அராபியக் கடலினதும் கரையோரங்களிலும் குடியேறிக் கங்காநதியின் பள்ளத்தாக்கி லுறைந்தனர். இச்சாரார், இவர்களுக்குள்ளே பெலசாலியும் ஆண்மைபுடையவனுமாய பரதன் என்னும் தலைவனுல், வழிநடத்தப்பட்டனர். இவன் சகுந்தலாவினுல் துஷ்யந்தனடைந்த சந்ததியென்று சொல்லப்படுகின்றது. இப்பரதர் பெருந்தொகையினரும் அதி பராக்கிரமசாலிகளாயும் இருந்தமையின் இமயமலைதொடக்கம் தெற்கே சமுத்திரம்வரையிலுள்ள நாடுமுழுவதும் இவர்களின் கிழாயது. இதுகாரணத்தால் இந்தியா அக்காலத்தில் பாரதவருஷம் என்னப்பட்டதென விஷ்ணு புராணம் கூறும்.

பண்டைத் தமிழ்மக்களுக்கும் சல்டியருக்கும் பொதுவாகவுள்ள சாதி, பாஷை ஆதியவற்றின் தொடர்புகள் எவ்வித ஆட்சேபனைக்கு மிடமின்றி நிறுவப்பட்டன. ஆனல், தென்னிந்தியாவிலுள்ள தமிழர், நாகரீகத்தைச் சல்டியாவுக்குக் கொண்டுசென்றனர்; அல்லது அவர்கள் அதை அங்கிருந்து கொண்டுவந்தனரா என்னும் வினு இன்னும் சமாதானபூர்வமாக விடைபெறுதிருக்கின்றது.

4. இந்து - ஆபிரிக்க - ஆஸ்திரேலிய ஐதீகம்
(The Indo - African - Australian Theory)

இவ்வைதிகம், "தமிழர் இந்தியாவைவிட வெளிநாடுகளிலே யிருந்து வந்து குடியேறியவர்களேயானல் அவர்கள் தெற்கில் அல்லது கிழக்கிலிருந்து வந்தமை மிக நியாயப்பொருத்தத்துடன் அநுமானிக்கலாம்" என்ற கோட்பாட்டை அடிப்படியாகக்கொண்டது. இக்கோட்பாட்டை அநுவதிப்போர் திரு. குறூக்ஸ், திரு. கீன், திரு. மோறிஸ் ஆகியோராம். இவர்கள், இந்து - ஆபிரிக்க - ஆஸ்திரேலிய கண்டமென்று தம்மாற் பெயரிடப்பெற்ற தென்சமுத்திரத் தீவுகளிலிருந்து தமிழர் தென்னிந்தியாவில் குடியேறினர் என்றும் அபிப்பிராயமுடையர். சில ஆஸ்திரேலிய சாதியாருக்கும் திராவிடருக்கும் பொதுவான கணிக்கத்தக்க அங்கலட்சண ஒற்றுமையிருக்கின்றதென இவர்கள் கொண்டனர்.

இந்தியாவுக்குத் தென்பாகத்திலிருந்து ஆழிவாய்ப்பட்டதாகிய பூகண்டம் சீனு, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, கன்னியாகுமரியாகிய விடங்களை நாற்புறமும் தொட்டுக்கொண்டே யிருந்ததென்பது பூகர்ப்பசாஸ்திர ஆராய்ச்சியினுல் பெறப்படுகின்றது. இவ்வுண்மை, தமிழ்நாடு எவ்வளவு பெரிய விஸ்தீரணமுடையதா யிருந்ததென்பதையும், இவ்விருசாதி மக்களிடையே பொதுவாகக் காணப்படும் பாஷை ஒற்றுமை, முதலிய சில ஒப்புவமைகளையும் நிலைநிறுத்துமேயன்றி, தமிழர்கள் இவ்வளவு தூரதேசங்களிலிருந்து வந்தனரென்பதைச் செருக்கியுரைக்கவிடந்தாது. உண்மை யெதிர்ப்பக்கமாக விருப்பதாகத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஸ்திரேலிய மக்களின் அங்கவமைப்பு — அவர்களிடம் அவலட்சணம் முரட்டு அமைப்பு இருக்கபோதிலும் — அநேகமாக **கோக்கேசியன்** அங்கவமைப்பை நினைவூட்டுகின்றது" என **சைடன்** பேராசிரியர் கூறுகின்றார். **கோக்கேசியன்** சின்னங்கள் தமிழன் அல்லது திராவிடனின் சின்னங்களாகுமென நிலைநிறுத்தலாமேயானால், தெற்குப் பூகண்டம் கடல்வாய்ப்படுமுன் மிகப் புராதன காலத்திலே தமிழர் ஆஸ்திரேலியாவிற்குச் சென்றிருக்கலாமென அநுமானிக்கலாகும்.

5. மத்தியதரை வகுப்பு ஐதீகம்
(The Meditteranian Race Theory)

தமிழர், மத்தியதரைப்பகுதியின் பெரிய சாதியாரின் ஒருவகுப்பாரெனச் சில புதிய சரித்திரக்காரரும் மனுஷ்ணை சாஸ்திரக்காரரும் அபிப்பிராயப்படுகின்றனர். **சேர். ஜோன் மார்ஷல்** கூறுவதாவது:— "பாஷையைப்பற்றிய இப்பிரக்ஞையில் சாதியிலக்கணம் எடுத்துக்கொள்ளப்படுவதேயானால், திராவிடருடன் இரத்த சம்பந்த உரிமை பெரிதும் பாராட்டத்தக்கவர்கள் மத்தியதரை வாசிகளேயாவர். இவர்களே திராவிடபாஷை பொன்றை வழங்கினவர்களாகப் பெரிதும் எண்ணத்தக்கவர்கள்" * என்பதாம்.

என்றாலும், தமிழர் மத்தியதரைக் கடலின் கரையோரங்களிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்தவர்களென்பதை நிச்சயபூர்வமாக நாம் வற்புறுத்தக்கூடிய நிலைமையில் இன்னும் அறியவில்லை. இனி, அவர்கள் மத்தியதரைக்கடற்கரைகட்குத் தென்னிந்தியாவிலிருந்து, இன்றேல், தென்னிந்தியாவிற்கூடாகச் சென்று குடியேறினர் என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்குச் சான்றுகளுள. **டக்டர் மக்லீன்** கூறுவது:— "இப்போது மத்தியதரை நாடுகளிலும் வடபாகங்களிலும் வசிப்போரின் முன்னோராகிய சாதியார் ஒருகாலத்திலே தாண்டிச்சென்ற நாடு தென்னிந்தியாவாக விருத்தல்கூடா தென்பதை எவ்வாற்றாலும் நிலைநிறுத்துவதற்கு முடியாதெனச் சாதி விஷயமாக நடைபெற்ற ஆராய்ச்சிகள் காட்டுகின்றன" என்பதாம்.

6. தன்னில ஐதீகம்
(The Indigenous Theory)

கடைசியானது, அனுல் பலமற்றதன்று, இந்தத் தன்னில ஐதீகம். இவ்வைதீகத்தை அநுசரணை செய்வோர், பாரதகண்டத்தினுள் இருக்கும் யாவும் அதன் பொருளேயென்பது எமது முன்னோர்களின் நம்பிக்கையாகும் எனக்கூறுவர். அன்றியும், இப்போதுள்ள பாரம்பரியங்கள் இவ்வைதீக நம்பிக்கையைப் பெரிதும் அநுவதிப்பனவாகும். ஆதிகாலம்தொட்டு, கிழக்கேயும் மேற்கேயும் கடலினாலும் வடக்கே வேங்கட மலையினாலும் தெற்கே, கடல்கொண்ட பஹ்ருளியாற்றினாலும் குமரியினாலும் எல்லைப்படுத்தப்பட்ட பெரிய பூமியின் ஆதியான மக்கள், காமேயனைத் தமிழர் நம்புகின்றனர். மேலும், ஆரிய வருக்கத்தினரின் முன்னோர்களுக்கு ஓர் அங்கிய சீதள உற்பத்தி ஸ்தானம் இருந்ததாக இருக்கு வேதத்தில் நாம் தவறற்ற பிரமேயாகங்கள் காணக்கூடியதாயிருப்பினும், தமிழகத்தைவிட வேறு பூர்வீகநாடு தமிழருக்கு இருந்ததாகத் தமிழிலக்கியங்கள் எவற்றினும் காணவில்லையென, இந்த ஐதீக அநுசரணையாளர் கூறுகின்றனர். இனி, இந்தியகண்டத்தின் உஷ்ணவலயத்திலமைந்த தமிழரின் துவீபகற்பத்தை நன்கு புனைந்துரைக்கும் கேர்முகமான வாக்கியங்களே இவற்றிற் காண்கின்றோம். "பனி"க்கும் "மூடுபனி"க்கும் சொற்கள் இருக்கையில், "பனிப்படல"த்திற்கும் "பனிக்கட்டி"க்கும் சொற்களே காணப்படவில்லை. தமிழிலக்கியங்களிலே உச்சியில் நிற்கும் சூரியனைப் பற்றியே பேசப்படுகின்றது.|| சப்தவிற்பத்தி சாஸ்திரக்காரரின் ஆராய்ச்சியின்படி, பூர்வீக ஆரியரின் பனிக்கட்டியாலாய இல்லங்களுக்குச் சூட்டையுதவிய "வர்ணபேதங்களையுண்டாக்கும் கிழ்வானசஞ்சாரச் சூரிய"னைப்பற்றி இவைகள் யாதும் கூறிற்றில. *

ஐம்பெருங் திணைகள் அல்லது, இப்போது ஓர் காவியக் கொள்கையாக வமைந்துள்ள, ஐந்து பெரும் நிலவகுப்புக்கள் ஆகியவற்றை ஊன்றியாராயின், இக்கொள்கையுடன்பாடாவது திருஷ்டாந்தமாகும். இந்தியாவிலே சிவ வர்க்கம், குறிஞ்சியெனப்படும் மலைகளிலே யாரம்பமாயது. இங்கே ஆதித்தமிழன் தனக் கொதுங்கிடமும், கற்பாறை கட்குப் பின்னும், இயற்கைக் குகைகட்குள்ளும் வனவிலங்குகளின் தாக்கத்திற்குத் தப்பியிருக்கக்கூடிய வசதியையும் கண்டனன். இவன் மிருகவேட்டைமேல் ஊக்கங் கொண்டு **பாலை**யென்று சொல்லப்படும் மணற்காட்டிலே சிலபோது வைகவேண்டியவனுகின்றன். மாடு, ஆடு முதலிய மிருக வர்க்கங்களை வளர்க்கும் எண்ணங்கொள்ளவே இவன் புற்றரையாகிய **புல்லை**நிலத்தைத் தேடுகின்றன். பின்பு, அவன் தனது கால்நடைகளை வசப்படுத்திப்

* மொஹஞ்சதாரோவும் சிந்துப்பள்ளத்தாக்கின் நாகரிகமும் 1—42.

|| கலித்தொகை 108—112.

* சித்தாந்ததீபிகை xiv 19.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியை உழுது பண்படுத்தித் தானியவகைகளை விருத்தி செய்வதாயினன். இப் பயிர்ச்செய்கை, **மருதம்** எனப் படும் பள்ளநிலங்களிலே செய்யப்பட்டனவாகும். இப்படியாகச் செய்கைபண்ணப்பட்ட விளைபொருட்கள் தனது தேவைக்கு மேலதிகமாக வந்தவுடன் **நெய்தல்** என்று அழைக்கப்படும் கடலோரத்திலுள்ள நிலங்களுக்கு அவன் செல்வானாயினன். இங்கு அவன் தனது விளைபொருட்களை விற்றுக்கொள்வதற்கு வசதியைக் கண்டனன். இங்கு, அவன் மீன்பிடிப்பவனையும், பின் வியாபாரியாகவும் வதிகின்றான். ஆகவே, இவன் பூர்வீக வேட்டுவப் பருவத்திலிருந்து நாகரிகமுற்ற வியாபாரச் சிவிப் பருவமடைதற்குத் தமிழ்நாடு இவனுக்கு ஆகவேண்டிய வசதிகளை உதவியமை கண்கூடாகின்றது. ஆகவே, தமிழனுடைய ஆதியகத்தைத் தமிழகத்திலன்றி வேறெங்கேனுந் தேட வேண்டிய அவசியமின்மை புலனாகின்றது.

இவ்வைதிகம், அநேக ஐரோப்பிய பண்டிதர்களினாலும் அநுவதிக்கப்பெற்றுள்ளது. மிகப் பேர்போன விஞ்ஞானப் புலவர்களும், பேராசிரியர்களுமான **ஹக்கெல், ரோல்நாட், ஹக்ஸ்லி** ஆகியவர்களினால் இந்துசமுத்திரத்திலே பெரிய ஒரு பூகண்டமிருந்ததாக அநுமானிக்கப்பட்டுள்ளது. இப் பெரிய கண்டமே மக்களின் தோற்றம்பெற்ற இடமென இம் மேதாவிகளினாற் கொள்ளப்பட்டது. சில வருடங்களுக்குமுன் பிறிட்டிஷ் சங்கக் கூட்டத்திலே அக்கிராசனப் பேருரை செய்யும்போது, **சேர். ஜோன் ஈவான்ஸ்** என்பவர் கூறியவை மனோகரத்திற் குறைவுற்றனவல்ல. அதாவது;—"தென்னிந்தியாவே மனுஷ தோற்றத்தின் முதலிடம் என்பதை நம்புவதற்கு வலுதத நியாயங்கள் உண்டு" என்பதே. "சலப்பிரளயத்தின்பின் முதல்முறையாக மக்களையும், தாவாங்களையும் கொண்ட நாடு இந்தியாவேயாகும்" என **சேர். வால்ற்றர் றலீ** என்பாரின் "உலகசரித்திரம்" பலமாக நிலைநாட்டுகின்றது.

ஆஸ்திரேலியாவிற் பிரசாரமாகும் "மனுஷகண சாஸ்திரம்" 1900-ம் ஆண்டு டிசம்பர்மாதப் பத்திரிகையில் விஷயதானம் செய்யும் ஒருவர், சமீபகாலத்தின் ஆராய்ச்சியின்படி, மனுஷன் முதன்முதல் உற்பத்தியாகிய நிலம், இப்போது இந்துசமுத்திரத்துள் அமிழ்ந்திப்போன ஒரு பூகாகமாகத் தோன்றுகின்றது" என எழுதுகின்றார்.

† 'தமிழனின் பூர்வீகம்' என்பதில் அநுவதிக்கப் பெற்ற மனுஷகண சாஸ்திர வர்த்தமானி II ம் புத்தகம் குறிப்புரை இல. 3, பக்கம் 134–137)

இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளத் தக்கது யாதெனில், தமிழனின் ஆதியகம் தென்னிந்தியாவிலேயுள்ளதும், காலங்கண்டதுமாகிய தமிழகமேயன்றிப் பிறிதொன்றல்ல என்பதே.

பேராசிரியர் **லாங்டன்** போன்ற சில பண்டிதர்கள், தென்னிந்தியாவில் **காப்பிரிகளையும், கோலாரியர்களையும்** போன்ற ஆதிமனுஷர் இருந்திருக்கின்றனர் என்னும் அபிப்பிராயமுடையவர்களாயிருக்கின்றனர். அவர்கள் ஆதிதிராவிடர் அல்லது முற்திராவிடர் என்று அறியப்பட்டனர். இம் மக்களில் எஞ்சிய சிலர் இன்றும் இலங்கையில் வேட்டுவராகவும், தென்னிந்திய மலைநாடுகளில் வசிக்கும் அநாகரிகச் சாதியாராகவுங் காணப்படுகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் இச் சாதியாருடன் கலந்து இப்போது திராவிடர் எனப்படும் இந்தச் சாதியாரை உண்டுபண்ணினர்.

இவற்றிலிருந்து, இப் பிரச்சினையைப்பற்றிய பூரண விளக்கத்துடன் **டக்டர் பேர்கசன்** என்பார் பின்வருமாறு கூறியிருக்கின்றனர்:—"இந்தியாவிலே திராவிடர் குடியேறிய காலம் சரித்திரத்திற்கப்பாற்பட்ட காலத்திலும் வியாபகமுடைமையால், இவர்களை வந்தேறுகுடிகளென்றோ, அல்லது பெருவாரியாக வந்து வெற்றி கொண்டு குடியேறினவர்களென்றோ யாகத்தானுந் நினைத்தல் முடியாததாகும். ஆனால், அவர்களை ஆதிமக்கள் என, அப்பதம் எந்தக் கருத்துடன் வழக்கமாகப் பாவிக்கப்படுகின்றதோ அக்கருத்துடன் நினைப்பதே தகுதியாகும். இவர்களுடைய சரித்திரத்தைப்பற்றி நாம் திட்டமாயறிக்கூடியதாகும் பிரதிக்ஞை, அவர்களுடைய ஆதியகத்தை மிகத் தெற்கே—சம்பாவிதமாக மதுரை, தஞ்சாவூர் என்னும் இடங்கட்குச் சமீபமாகக் குறிப்பிட்டு, பின் வடபக்கத்தில் விசிறிபோல விரிவடைந்து செல்வதாக வைத்துக்கொள்ளலாம். இந்தியாவுக்குப் புறம்பே தமது சாதியார் இருந்ததாகக் காட்டக்கூடிய எந்தப் பாரம்பரியமும் அவர்மாட்டுக் கிடையாது. மேலும், தாம் சொந்தம் பாராட்டக்கூடிய சாதியார் வதியும் எந்த நாட்டிலிருந்தும் தாம் வந்ததாகக் கூறிக்கொள்ளவும் இடமில்லை. அவர்கள் தம்மையறிந்தமட்டில் அவர்கள் சுதேசிகளும் ஆதிமக்களும் ஆவர். *

ஆகவே தமிழரின் ஆதியகம் யாது என்னும் பிரச்சினை இன்னும் ஆராயப்படவேண்டியதாகவே இடந்தந்துநிற்கின்றதென்பதை அறியக்கூடியதாயிருக்கின்றது.

* 'இந்திய கீழ்நாட்டுச் சிற்பம்' முகவுரை பக். 11—29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மை

ஸ்ரீமத். சிவங். கருணையபாண்டியப் புலவர் அவர்கள்

உலகத்துயிர்களினுடைய பிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் கடவுளும், கோள்களும், மழையும், முனிவரும், அறமும், தென்புலத்தாரும் வாயில்களாகும் என்பர். ஆனால் அவ்வாயில்கள், உயிர்களைத் தாய்களினிடமிருந்து தோற்றுவித்து வளர்க்கும் மறைமுகமான வாயில்களாவனவன்றித் தாய்கள்போல நேர்முகமான வாயில்களல்லவாம். தாய்மட்டுமே, பிறந்து வளரும் உயிர்களான் முதன்முதல் தெரிந்துகொண்டு வழிபடப்படும் கட்காண் கடவுள் என்பது புனைந்துரையாகாது.

"புதல்வர்க்குத் தந்தையும் தாயும் தெய்வம்" எனத் தந்தையையும் உடன்கூட்டித் தாயோடு ஒப்பக் கடவுள் என்பாரும் உளராயினும் தாய்காட்டக்கண்ட தந்தையன்றிப் புதல்வர் தாமாகவே காணுந் தந்தையில்லையாதலான் தந்தை தாயோடு ஒப்புமையுடைய கடவுளாக முடியாது. விலங்கு முதலிய அஃறிணைகளில் தாயையன்றித் தந்தையைச் சுட்டித் துணிந்து உணர்த்துதல் கூடாமையும் நினைக்கற்பாற்று. இங்ஙனம் தாயும் தந்தையும் என்னும் இரு தெய்வங்களுள் தாய் சிறப்புடைமையினன்றே 'சிறப்புடைப்பொருளை முந்துறக் கிளத்தல்' என்னும் முறையான் "தாய் தந்தைகள்" எனப் பரவை வழக்கினும், "அன்னையும் பிதாவும்" எனவும் (கொன்றை வேய்ந்தான்) "அம்மையப்பமேயுலகுக் கம்மையப்பரென்றறிக" (திருக்களிற்றுப்படியார்) எனவும், "அம்மையே யப்பா வொப்பிலாமணியே" (திருவாசகம்) எனவும், "அம்மையாய் அத்தனைய அப்பனே யருளின் வாழ்வே" (கம்பராமாயணம்) எனவும் செய்யுள் வழக்கினும் தந்தையைக் கூறுதற்குமுன் தாயைக் கூறிவைத்தல் பெரும்பான்மை காணப்படும். "தாயினுஞ் சிறந்த கோயிலுமில்லை" என்னும் பழமொழியும் நினைவுகூர்க. "தாயைக் கடவுளாகக்கொண்டிரு," "தந்தையைக் கடவுளாகக்கொண்டிரு," "பணிக்கனைக் கடவுளாகக் கொண்டிரு" (பணிக்கன் - ஆசாரியன்) என்னும் பொருளுடைய வடமொழித் தைத்திரீய உபநிடத மறைத் தொடர் மொழிகளுள் தாயை முற்படக் கூறியிருத்தலும் தாயினுடைய சிறப்பினைக் குறிப்பிக்கத்தக்க சான்றாகும். இதனானன்றே ஒருவர் துறவுபூண்டால் அவரை அவர் தந்தையும் வணங்கவேண்டும். ஆனால் துறவுபூண்டவரும் நம் தாயை வணங்கவேண்டும் எனப் பெரியோரும் பணிப்பாராயினர்.

முதற்கடவுளாகிய தாயை வழிபடுதல் இன்றி மற்றைக் கடவுளை வழிபடும் வழிபாடு முறையல்லாததும் பயனில்லாததுமான வெறுஞ் செய்கையாகும். அதனான் வைகறை விடியற்பொழுது துயிலெழுந்தவுடன் ஒருவர் தாம் செய்யவேண்டிய அறவினையும் பொருள்வினையும் நினைத்ததன் பின்னர் மறவாமல் தந்தையையும் தாயையும் தொழுது பின்னர்ப் பிறதொழில் செய்யத் தொடங்குக; என அறநூல் செப்பும்

> "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
> நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வதிற்
> றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
> முந்தையோர் கண்ட முறை"

என்பது கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார் கூற்று: இதனுள் தந்தையை முற்கூறியது புதல்வர்க்குச் சிறந்த கடவுள் தாயேயாயினும் தாய்க்குச் சிறந்த கடவுள் தந்தை என்பதுபற்றி எனக்கொள்க. "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" என்பது நீதிநெறி விளக்கம். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்," என்பது முப்பால். தாய் இல்லையாயின் உலகமும் இல்லை என்பதனுல் உலகத்திற்கு இன்றியமையாத சிறப்பினையுடைய தாய்க்கு உயிர்களைப் பெற்று வளர்த்தற்கு வேண்டும் கடமையும் பொறுப்பும் உயர்ந்தனவும் பலவுமாயிருக்கும் என்பது தானே பெறப்படும். படவே அக்கடமை பொறுப்புக்களை மேற்கொண்டு உய்த்தற்குரிய தாயினுடைய அருமை பெருமைகள், நீத்தார் அருமை பெருமைகள்போல இத்துணை என வரையறுத்து உணர்த்தவியலா என்பது சொல்லவும் வேண்டுமோ? அவ் அருமை பெருமைகள் தாய்க்கே சிறந்தனவாயினுற்போல அவ் அருமை பெருமைகளைத் தாயினிடத்துந் தோற்றுவித்துநிற்கும் ஒருவகை அன்பும் தாய்க்கே சிறந்திதான்று எனக் கொள்க. இவ் அன்பு தந்தை முதலிய யாவர்மாட்டுங் காணப்படாது தாயினிடத்துமட்டுமே வெளிப்படக் காண்டலின் இத்தாயன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மை என அத்தாய்பெயராலே பெயர் வழங்கப்படுதலின் இவ் அன்பு தாய்க்கே சிறந்தது என்பது வலியுறும்.

"வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளற்
றூயவன் மைந்த னேனீ பரதன்முன் றோன்றி யேமோ
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தாற் றீங்கன்ரு
தாய்மையு மன்றி நட்புந் தருமமுந் தழுவி நின்ரு?"

என வாலி சிறந்த அன்பினைத் தாய்மை என வழங்கியது கண்டுகொள்க.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடுபூண்ட செந்தமிழ்ப் புலமைச் செல்வர்கள் வரைந்து வெளிப்போந்து உலாவும் அழகிய இனிய ஆராய்ச்சிக் கட்டுரைகளாகிய "தமிழ்நாட்டுப் பெண்பாலார்." "நல்லிசைப் புலமை மெல்லியலார்" என்பனபோல்வனவற்றுல் பெண்பாலாரெல்லாம் கல்விமுதலியனவின்றி அடிமையாய் இழிந்தாரும் ஆண்பாலாரெல்லாம் கல்விமுதலியன வுடைமையால் தலைமையாய் உயர்ந்தாருமாவர்; எனப் பெரும்பாலார் கருதிவந்த ஏற்றத்தாழ்வு வேற்றுமைக்குத்தக்க சான்றில்லைப்போலும் என்பது புலவரல்லாத ஏனையோரானுந் தெற்றெனவுணரப் பெற்றதாயிற்று. அங்ஙனம் காரைக்காலம்மையார், சூடிக்கொடுத்த நாச்சியார், ஔவையார், கவுந்தியடிகள், மணிமேகலை முதலியோர்போல நோன்பிபற்றல், பற்றுத்துறத்தல், அவாவறுத்தல், கல்விப் புலமை முதலிய நிலைகளும், காக்கை பாடினியார், நச்செள்ளையார், சிறுகாக்கை பாடினியார் முதலியோர்போல நால்சிரியராதல், வேந்தரான் நன்குமதிக்கப்படுதல், பிறரையேவிப் பணிகொள்ளல் முதலிய பேறுகளும்; அல்லி, அங்கயற்கண்ணி முதலியோர்போல நாடாளுதல் போர்பொருதல் உழுதல், விற்றல் முதலியசெயல்களும், ஆண்பாலார்க்குப் போலவே பெண்பாலார்க்கும் ஒப்ப உள்ளன என்பது பெறப்படும்.

"உறுப்பொத்தன் மக்களொப் பன்ரூல் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு"

என்னும் முப்பான் மொழிந்தவாறு நன்மக்கட்கும் அன்மக்கட்கும் உறுப்புக்கள் ஒத்திருத்தல்பற்றி அவர் தம்முள் ஒப்புமையுடையர் எனச் சொல்லப்படாது. அவ்வாறே ஆண்மக்கட்கும் பெண்மக்கட்கும் உறுப்புக்கள் வேறுபட்டிருத்தல்பற்றி அவர் தம்முள் வேறுபடுவர் எனச் சொல்லப்படாது. அவ்வேறுபாட்டால் வருவதொரு தாழ்வோ உயர்ச்சியோ இல்லையாதலான்.

இங்ஙனம் பெண்மக்கள் ஆண்மக்களோடு எல்லாவற்ரானும் ஒப்புமையுடையராயிருப்பதன்மேலும் ஆண்மக்கட்கு வாய்க்கமாட்டாத **தாய்மை** எனப்படும் ஒரு சிறந்த பண்பும் வாய்க்கப் பெற்றிருக்கின்றனர். அம் முறையாற் பெண்மக்களே ஆண்மக்களிற் காட்டிலும் உயர்வு சிறப்புடையர் என்பதற்கு ஐயம் உளதோ? அறிவில்லாத ஆண்மக்களுடைய முரட்டுத்தன்மைக்குப் பெண்கள் தந்தாய்மையாற் பணிந்து ஆண்மக்களைத் தம் அகப்படுத்து நல்வழியுய்த்தற்கு மென்மை தோற்றுவித்து நிற்கும் பெண்மையாகிய தாய்மையினைப் பெருந்தகைமை எனக்கொள்ளாது எளிமைஎன இழித்துரைத்தல் பேதைமாக்களது பெரும்பிழை யுணர்ச்சியாவதன்றி அறிவுடைமக்களது ஆராய்ச்சியுணர்ச்சியாகாது. புலவர் அந்தணர் முதலிய தலைமக்களாகிய ஆண்கள் கீழ்மக்களாகிய ஆண்களுக்குத் தாழ்ந்து போதலையும் சிறுதகைமை என எள்ளுகையாடக் கூடுமா? அதனுற் பெண்மக்களே இடையூறுகாத்துப் பேணிவருவதல்லது வலிந்துசென்று வருத்துவார்க்குப் பழியும் பாவமும் வந்துசேரும்.

சுவாமி இராமதீர்த்தரின் போதனைகள்

—தேசிகவிநாயகன்

1. ஓய்ந்து சோம்பி உறங்காதே யடா
ஊக்கம் பெருக உழைத்துமுன் னேறடா
வாய்ந்த தொழிலில் மலியா தேயடா
மனமதி லொன்றி மகிழ்ச்சி கொள்ளடா

2. ஐய மடர்ந்துள மழியா தேயடா
அமைதி யெங்ஙனு மடைந்திருப் பாயடா
நையப் பிரித்து நலியா தேயடா
நாடி யிணக்கி நல்லுருப் படுத்தடா

3. மன்னிய மாமூல் வழுத்தியென் பயனடா
வாகும்ரட் கிசைய வாழ்வு வாழடா
உன்னிப் பகட்டுரை உரைத்தென் பயனடா
உள்ளத் துணர்ச்சி ஊன்றி உணரடா

4. கற்பனைக் குதிரை கடவுத லொழியடா
காரியம் பொருளிற் கண்டு தெளியடா
விற்பனர் விதிகளை விளம்புதல் வீணடா
விஞையில் விளைந்த விவேகம் காணடா

5. உயிரிலா மேற்கோ ளுரைப்ப தேனடா
உற்றவாழ் வின்பய னுணர்ந்திங் கெய்தடா
வியனுல கத்தில் நலந்தரு மனுபவ
வேதாந்தத்தின் மெய்ப்பொரு ளீதடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை அரசாங்கசபைத் தலைவர் திரு. வை. துரைசுவாமி அவர்களுக்கு, (6 - 3 - 37) 'ஈழகேசரி' நிலயத்தில் நடைபெற்ற உபசரணைக் கொண்டாட்ட ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படம்.
பூமாலை அணிந்திருப்பவர்கள்: டாக்டர் ஏஸ். சுப்பிரமணியம், திரு. வை. துரைசுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சித்தாந்தமென்ன?

வயாவிளான், திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள்

என் நண்பனே!

உன் வாழ்வின் முடிபைக்குறித்துச் சிந்திக்கிறாயா? உன் மனதிற் கொண்டுள்ள ஈற்று முடிபென்ன? ஒரு காலத்திற் சுகபோகத்துடன் நீ சீவித்தாய்; நானென்ற அகங்கார மமகாரத்தா லுந்தப்பட்டு, உலகமக்கள் கோட்டியிற் பெரும் நாட்டாண்மை காட்டினாய்; உன்னை யலங்கரித்து, இகபோக சலாக்கியத்தைப் பெற்று மகிழ்ந்தாய்; மதிப்புக்குரிய உத்தியோகத்தைப் பெற்றாய்; பெருநிதியீட்டி, யாரு மீடில்லையென்று, உன் மனதிலெழுந்தவைகளை இதுதீது, இது நன்மை என்றுள்ளாது செய்து மகிழ்ந்தாய்.

'நரைவருமென் றெண்ணி நல்லறிவாளர், குழவியிடத்தே துறந்தார் — புரைதீர, மன்னு விளைமை மகிழ்ந்தாரே கோலான்றி, யின்னுங் கெழுந்திருப் பார்.'

என ஆன்றோர் கூறியதை நினையாதிருந்தாய்; தற்போது உன் வயது எவ்வளவு? உன் பற்களின்வலிமை எப்படியிருக்கிறது? வன்மையான பதார்த்தங்களை யுண்ணமுடியுமா? என்று கேட்கவும், இழைப்பின்றிச் சிறிது யார்தூரம் நடக்கவியலுமா என மற்றோர் வினவவும் வேண்டிய காலமுன்னை யணுகிவிட்டதே! கரை–திரை–மூப்பு–பிணி எனும் கான்கும், உன்னிடத்திற் றோன்றிவிட்டதே! கோலான்றுங் காலம் வந்துவிட்டதே! புரம், சிங்கு, ஆக்கிரமணம், செவி, திருக்கு எனும் ஐம்பொறிகட்கு முள்ள பரிச, இரச, கந்த, சத்த, ரூப வுணர்வு கம்மியுற்று, மற்சைப்பிராந்தி, பொச்சாப்பு, சோர்வு உன்னை யண்ணிவிட்டதே! உன் இளமை, வலிமை, செல்வம், அதிகாரம், உன்னைவிட்டு மிக்க சேய்மையில் விலகிவிட்டதே! ஏமன், சூரியனைப் படியாகக் கொண்டு எம் வாணாளை அளந்துண்கிறான். என் நண்பனே! உன் வாழ்க்கையின் முடிபைக் குறித்து இனி உன் சித்தாந்தமென்ன? கடைநாளி லுன்னைப்பெற்ற அன்னை தந்தையர், அரிய சோதரர், நண்பர், உற்றார் உதவி உனக்குக் கிட்டுமென்று வாளா கருதுகின்றாயா? இல்லை; உன் செல்வம், செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றின் மதிப்பு வந்துதவுமெனக் கருதுகிறாயா? உன் அனுபவமும் மறிஞர் கூற்றும் இவ்வுடம்பை, ஊற்றைச் சரீரம், ஆபாசக்கொட்டில், ஊன் பொதிந்த பித்தற்றுருத்தி, சோறிடுந் தோற்பை, காற்றுப் பொதிந்த நிலையற்ற பாண்டம் என்றும்,



க. வேலுப்பிள்ளை

'காக்கை நரிசெந்நாய் கழுகொடு காள் கூடியுண்டு, தேக்கு விருந்தா முடல்.' என்றும்,

'விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீணலிட்ட, முடக்கே புழுவந் துறையிட மேநல முற்றுமிலாச், சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத், தொடக்கே யுனைச்சுமந் தேனின்னி னேது சுகமெனக்கு.' என்றும்,

'..... வல்லே செயிற்செய்க, சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன், வந்தது வந்தது கூற்று.' என்றும்,

'கால னெனையணு காம லுனதிரு காலில் வழிபட–அருள்வாயே.' என்றும், சால அவமதித்து இழித்தும், விசனித்தும், விளித்தும் அச்சுறக் கூறப்படுமதோ பெற்றியுடையதென்பதை நீ ஒருபொழு தாயினுஞ் சிந்தித்தாயா? பரிகரிப்புக்கு வழிதேடினாயா? இனி,

'காந்தம் வலித்திரும்பைக் காத்திழுத்துக் கொள்வதுபோல் பாய்ந்துபிடித் துன்பதத்தில் வைத்தருள்வ தெக்காலம்.'

என்று பச்சாத்தாபமுற்று உள்ளுருகிப் பாஷ்பஞ் சிந்துவதைவிட நீ செயற்பாலதுதா னென்ன? என் நண்பனே! அகோராத்திரம் கேவலநிலையில் நான் என்னிடத்தில் அகோராத்திரத்தோடு விஞ்ஞிக்கொண்டு துயருறும்

பெற்றார் அநுபூதி பேசாத மோனநிலை, கற்றார் உணப்பிரியார் கண்டாய் பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வினுக்கீளேயே பிரதிவிம்பம்போ லிருக்க, உன்னை முன் னிலையாய் வைத்து வினவுகிறேனன்றிக் கடந்த துரியநிலை யில் என்னை வைத்து வினவுகின்றேனெனக் கோடற்க.

(என் பச்சாத்தாப மன்விருத்தம்)

புரமுதிர் வடைந்துகரை திரையணுக நாதிணர்வு
புகுதவிளி செவிகள்குன்றப்
பொச்சாப்பு மற்சைப் பிராந்தியா எக்கொறி
புலிக்கஞ்சு மாபோலமுன்
வரவுகண் டெற்கஞ்சி நின்றவர்கள் நகையாட
மக்கள்மனை யருவருக்க
வருகிரு னெமனென்று விப்ரயோ கங்கொண்டு
வாய்புலம் பிப்புலம்பித்
தருணமிதி லெனதுநெஞ் சேங்கித் தவிக்குதிச்
சமயமா துதலெனக்குத்
தந்துகாப் பதுவந்தை யுன்கடமை வேறுதை
வதமுன்னை யன்றியார்கொல்!
மரணபயம் மரணவே தனையென்னை யாளாது
வாவென்மு னீசுப்பிர
மணியகுரு பரதன வெனதுகண் மணியனைய
மான்மருக வேன்முருகனே.

(என் அகவல்)

என்னை யெண்ணைநெஞ் சேங்கிச் செய்வது
என்னவென் றறியா தேகிறை யிழந்த
பறவைபோற் கச்சளம் பற்றித் தியங்குது
எத்தனை பதம்புரிந் தேன்சுக வாழ்க்கையில்
எத்தனை கால மீடுபட் டிருந்தேன்
இளமைபு மாண்மையு மின்பமும் புன்றரு
நிழலெனக் கழிவதை நினையா திருந்தேன்
முதுமையும் நரைதிரை முதிர்ச்சியும் பலப்பல
பிணியும்வந் தென்னைப் பீடித்து வாட்டத்
தொடங்கின செவிகண் தொக்காக் கிருணம்
சிங்குணர் வோமிகச் சிதைந்தது மனையும்
மக்களு மொக்கலும் மனமரு வருத்துப்
புறணிகூ றவுமிவன் போய்த்தொலை யாமல்
எனிவண் கிடந்து எமக்கரு வருப்புளத்
தாங்கலைத் தருகிரு னென்று சலிக்கவும்
வந்திதந் தையைவை தேன்யவ னத்தப்
பேற்றைநான் மக்களிற் பெற்றென் வினைப்பயன்
இதுதா னென்றுகண் கூடினே கண்டு
நொந்தேன் செந்தூர்க் கந்தா இனிகான்
கடைத்தே றுதற்குக் காணு தொருவழி
இன்னே யுன்னை யெண்ணினே னிதைவிட
வழிவே றிலைமான் மருகா மரண
பயம்வே தனையெனைப் பற்று திருக்கவும்
இறந்தபின் பிறவிவே றெடுத்துழ லாமலும்
அருள்புரிந் தென்னையாட் கொள்வா யேழை
அடைக்கல முன்பால் அடைந்தேன் பாவி
அடைக்கல மடைக்கல மடைக்கல முனக்கே.

கலித்துறை

நடையுந் தள்ளாடி வயதும் முதிர்ந்து நரையுங்கொளப்
படுமென்று நோயும் பழிவாங்கிக் நேரமென் பாடுசொல்லி
விடவுன் துணைபெற வெற்குன் றிருவுரு வத்தைவிளங்
கிடவைக்க வேண்டுங் கதிரைப் பதியுறை வீசுரனே.

விருத்தம்

என்னப்ப னன்னைசிகோ தரங்கள்மா துலனத்தை
யென்க ணென்று
சொன்னமனை யவண்மருகர் மைத்துனர்சிற் றன்னைசிற்றப்
பன்மரு ளாக
மன்னுகண்ப ரென்றிருந்த வெத்தனைபே ரென்கண்முன்
வந்தார் மாய
மென்னமாண் டார்மறைந்தா ரிதைக்கண்டு மிதுவரையென்
செய்தே னத்தோ.

நாடினேன் பஞ்சபா தகநெறியை வீரம்நாட்
டாண்மை மேலென்
றோடினேன் சிலகாலஞ் செகமயக்கை நம்பிநடங்
தோய்ந்தே னெல்லாம்
வேடம்வினைப் போகவிழை யாட்டேயென் றுணர்ந்துகண்
விட்டி னேபங் [ணீர்
காடிநாய்போ லுழன்றுனடைக் கலந்தேதடு கேன்வாமுன்
னமல மூர்த்தி.

வெண்பா

நீர்நீக்கிப் பாற்கொ ளனம்போல் மிகைநீக்கிச்
சீர்தூக்கி நன்னெறிச்சென் மின்களுய — வேறு
வழியிலையிப் போதமணு மட்டெனினும் பேறு
அழியாவிண் மண்ணைளவா மே.

☞ இவ்வாண்டுமடலுக்கு வெளியிடவேண்டுமென, மிகவஃக என்னுற் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் இரண்டனுள், இவ்விஷயம் முதிர்நிலையுடையார்க்கும் மற்றை யோர்க்கும் மனக்கிளர்ச்சியை யுண்டுபண்ணிப் பயனளிப் பதாயிருக்குமென்றும், இதுவே எவர்க்கும் ஈற்றுநிலை யைச் சிந்தித்தலின் பொச்சாப்பை யொழித்துப், பச்சாத் தாபத்தை யுண்டுபண்ணுமென்றும், இதையே வெளிவிட மனமேவப்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழகேசரி" ஆனந்தக் களிப்பு

(பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வர சர்மா அவர்கள், மண்டைதீவு)

1. நித்திலம் மதியிலை உருகி — — அருவி
நீர்ஆக உமிழ்கின்ற சீர்மலைகள் திகழும்
இத்தலம் ஈழமண் டலமாம் — — இதனுள்
இயல்இசைப் புலவர்மணி யாழ்ப்பாணம் தன்னில்

2. திருமருவு சுன்னாக நகரில — — அன்பு
செந்தண்மை பூண்டொழுகு பொன்னைய னுக்கு
ஒருமகவு ஆகப் பிறந்து — — இன்னே
ஓர்வழு ஆட்டைப் பராயம் நிறைந்து

3. ஆவலொடு நாடெலாம் சுற்றி — — எங்கும்
அறிவுசேர் கட்டுரைப் புதுமலர்கள் கொய்து
பாவலர் நாவலர் யார்க்கும் — — ஈய்ந்து
பரிசுகள் பெற்று அவர் புதுமொழிகள் கற்று

4. செந்தமிழ்க் கல்விகுறை வுற்றோர் — — கட்கும்
தேசிகன் ஆகியவர் நேசங்கள் பெற்று
அந்தணர் அரசர்முத லானோர் — — புரியும்
அனியாயக் கொடுமைகளை அடுத்தடுத்து இடித்து.

5. மந்திரி எனப்புத்தி கூறி — — இந்நாள்
மக்கள் சமூகம் சிறப்படை வதற்கு
சொந்தமாம் வைராக்ய முடனே — — தேசத்
தொண்டு புரிகின்றாய் சுதந்தரப் பாலா .

6. விழிகட்கு ஆனந்தம் தருவாய் — — பச்சை
மேற்போர்வை யுடன்திக்கு விஜயத்தில் திரிவாய்
மொழிகளால் ஆனந்தம் தந்தாய் — — தோற்றி
முதலிலே வாசகர்தம் மனதைக் கவர்ந்தாய்

7. ஈழத்தின் சிங்கேறு என்று — — இன்னும்
எல்லோரும் புகழநீ நடுநிலையில் நின்று
ஞாலத்தில் அரசியல் ஞானம் — — ஆத்ம
ஞானமுடன் விஞ்ஞானம் உலக ஞானங்கள்

8. நந்தமிழ் மக்கட்கு ஈந்து — — அதனால்
நாடுசுய ராச்சியப் பீடுபெறல் நேர்ந்து
அந்தமில் ஆனந்தம் அடைய — — நீயே
ஆதரவு செய்துலகின் ஆசிபெறல் வேண்டும்

9. வாரத்திற்கு ஓரமுறையை மாற்றி — — இனிமேல்
வரவேண்டும் தினந்தீதாறும் நீதிக்கு விஜயம்
தூரத்தில் நிகழ்புதுமை எல்லாம் — — கண்டு
சொல்லிமகிழ் வித்துநீ பல்லாண்டு வாழ்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலித்தொகை
(பாலைக்கலி)

வழக்கறிஞர்
தி.ந. வே. நாகலிங்கம் அவர்கள்.

அமிழ்தினுமினிய நந் தமிழ்மொழியின்கண் பல அரும் பெரும் நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் சங்க நூல்களென்று சொல்லப்படுவனவே பொருளானும் இனிய நடையானும் சாலச் சிறந்தனவென்று எம்மால் புகழ்ந்து போற்றப்படுகின்றன,

பண்டைநாளில் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கமென முச்சங்கங்கள் இருந்தன. இச்சங்கங்களைப் பற்றிய வரலாறுகளுள் இறையனர் அகப்பொருட்கு ஆசிரியர் நக்கீரனர் உரைத்த மெய்யுரையின்கட் காணப் படும் வரலாறே மிகப் பழமையானது. பிற்காலத்தில் சிலப்பதிகார உரையாசிரியருள் ஒருவரான அடியார்க்கு நல்லார் உரைத்த உரைப்பாயிரத்தானும் இம் முச்சங்க வரலாறு அறியக்கிடக்கின்றது. ஆனல், நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, இறையனர் அகப்பொருளின்கட் காணப் படும் வரலாறே பெரிதும் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது. அது வருமாறு :–

"தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினர் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரு, திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளுங், குன்றெறிந்த முருகவேளும், மூரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பந்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப்பட்ட னஎத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முது குருகும், களரியாவிரையுமென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றிபாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோனீறுக எண்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப் பட்ட மதுரையென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசி யும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோனும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண் டாளியும், வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவையென்ப. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவரைச் சங்கமிரீஇயினர் வெண் டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறுக ஐம்பத் தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினர் ஐவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டிய னுட்டைக் கடல்கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையாரனாரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரை யாசிரியர் நல்லந்துவனாரும், மருதநிளநாகனாரும், கணக் காயனார் மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற் பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழு பது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையுமென்று இத்தொகைக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம் பதிற்றிபாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறுக நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப."

இன்னும் எம் சமய ஆசிரியரான மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த திருச்சிற்றம்பலக்கோவையா ரின்கண் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும்என் சிந்தையுள் [ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோ அன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே"

என்னும் செய்யுளையும், திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த

"ஞானசம்பந்த னுரைசெய் சங்கமலி செந்தமிழ்"

என்னும் தேவாரத்தையும் அப்பர் பெருமான் அருளிச் செய்த

"கன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்"

என்னும் திருப்புத்தூர்த் தேவாரத்தையும் உணர்க. இங்ஙனம் மேற்போந்த எம் சமய ஆசிரியர்களின் பாட்டுக்களிலிருந்து அவர்கள் காலத்திற்குமுன் சங்க மிருந்ததென்பது மறுக்கமுடியாத ஓர் உண்மையாய் இலங்குவது காண்க.

இங்ஙனம் அரிய சான்றுகளான் முச்சங்க உண்மையும், அவற்றிலிருந்து தமிழாராய்ந்தார் இன்னரென்பதூஉம், அவர்களுள் கவிபாடுங்கேறிய புலவோர் யாவரென்பதூஉம், அவர்கள் அங்ஙனம் இயற்றிய நூல்கள் யாவையென்பதூஉம் வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடப்பவும், இவற்றை நடுநிலைநின்று ஆராய்ந்து பார்க்கும் மதுகை சிறிதும் இல்லாது ஒரு சிலர் சங்கமென்பது ஒருகாலத்தும் இருந்ததில்லையென்றும், அது பிற்காலத்தாராற் கட்டப்பட்ட ஒரு கட்டுக்கதையென்றும் தமக்குத் தோன்றியவாறெல்லாம் கூறுவர். இவர்தம் அறியாமை இருந்தவாறென்னே! தினைத்துணைதானும் சான்றில்லாத இவர்தம் பொருளற்ற கொள்கை ஆராய்ச்சியாளரால் எள்ளி நகையாடற் பாலதாமென விடுக்க.

இனி இங்ஙனம் சங்கமிருந்து தமிழாராய்ந்து இயற்றப்பட்ட நூல்களுள் எத்தனையோ கடல் கொள்ளப்பட்டன. அவ்வாறு கடல்கோள் நிகழ்ந்தமை பின்வரும் சிலப்பதிகாரச் செய்யுளால் அறிக.

"வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள",

இனி இங்ஙனம் கடல்கோள் நிகழ்ந்தபோது இறந்தொழிந்த நூல்களுள்போக இப்போ எஞ்சியிருப்பன தலைச்சங்க காலத்து இயற்றப்பட்ட அகத்தியம், என்ற நூலின்கட் சில சூத்திரங்களும், இடைச்சங்க காலத்து இயற்றப்பட்ட தொல்காப்பியமும் கடைச்சங்க காலத்து இயற்றப்பட்ட எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகைநூல்களுமேயாம். அவற்றுள் இப்போ ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது எட்டுத்தொகை நூல்களுள் தலைசிறந்து விளங்கும் கலித்தொகையென்னும் சிரிய நூலாகும். இஃது எட்டுத்தொகையுள் ஆறுவதென்பதைப் பின்வருஉம் வெண்பாவானறிக:

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் போற்றுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

இவ்வெண்பாவில் எனைய நூல்களையெல்லாம் ஆன்றோர் வாளா கூறினர். ஆனால், இக்கலித்தொகையென்னும் நூலையே "கற்றறிந்தார் போற்றுங் கலி" யென சிறந்தெடுத்துரைத்தனர். இவ்வரிய அடையொன்றே இந்நூலின் தனிப்பெருமாண்பை நனிவிளக்கும்.

இக்கலித்தொகையானது பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், என்று ஐந்து திணைகளையுடையதாக அகப்பொருள் இலக்கணத்துக்கிணங்க வகுக்கப்பட்டிருக்கின்றது. இந்நூல் கடவுள் வாழ்த்துச்செய்யுள் ஒன்றும், பாலை முப்பத்தைந்தும், குறிஞ்சி இருபத்தொன்பதும், மருதம் முப்பத்தைந்தும், முல்லை பதினேழும், நெய்தல் முப்பத்து மூன்றும் ஆக நூற்றைம்பது செய்யுட்களையுடையது.

இனி இந்நூலின்கண்ணுள்ள பாக்களை இயற்றிய புலவர் யாவரென்பதை ஒரு சிறிது ஆராய்வாம்: இதன் கண்ணுள்ள பாக்களெல்லாம் ஒரு தனிப்புலவரால் யாக்கப்பெற்றனவல்ல. இந்நூல் முழுவதும் நல்லந்துவனென்னும் நல்லிசைப்புலவரால் யாக்கப்பெற்றதென்னும் ஒரு கொள்கை இக்காலத்தில் நிலவுகின்றது. இந்நூலை நாம் கருத்தூன்றிப் படித்துப்பார்போமானால் இதனை ஒரு தனிப்பெரும் புலவர் இயற்றவில்லையென்பது நன்கு விளங்கும். இது முழுவதும் கலிப்பாவினால் பாடப்பெற்றிருப்பதைக்கொண்டு, ஒரு தனிப்புலவரே இதனை யாத்தாரென்பது ஒரு சிறிதும் பொருந்தாது. என்னை! 'தொகை'யென்பதற்கு தொகுக்கப்பட்டதென்பது பொருளாதலானும், கடவுள் வாழ்த்தின் உரையினிறுதியில் "ஆதலால் ஈண்டுப் பாலைத்திணையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனர் கோத்தாரென்று கூறுக" வென்று உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் கூறியிருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லானுமென்க. ஆகவே இந்நூலின்கண்ணுள்ள பாக்கள் பல புலவர்களால் பாடப்பெற்றனவென்பது காண்க. பாலைக்கலி கடுங்கோனாலும், குறிஞ்சி கபிலராலும், மருதம் மருதனிளநாகனாராலும், முல்லை சோழன் நல்லுத்திரனாலும், நெய்தல் நல்லந்துவனாராலும் பாடப்பெற்றன. இதனை,

"பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருத னிளநாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

என்னும் வெண்பா வலியுறுத்தும். இந்நூலின்கண்ணுள்ள பாக்கள் ஐம்பெரும் புலவர்களால் யாக்கப்பெற்றிருந்தாலும் இவற்றை நல்லந்துவனென்னும் நல்லிசைப் புலவரே தொகுத்தார். ஆகவே ஆசிரியர் நல்லந்துவனர் நெய்தற் கலியைப்பாடி இப்பாலைக்கலி முதலியவற்றைக் கோத்தாரென்பது பெறப்படுகின்றது. இங்ஙனம் இந்நூலின்கண்ணுள்ள ஐந்து பகுதிகளும் தனித்தனி ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்று பின் ஆசிரியர் நல்லந்துவனரால் தொகுக்கப்பெற்றமையாற்றான் இதனை "நல்லந்துவனர் கலித்தொகை" யென்றும் கூறுப.

இனி, இதன்கண்ணுள்ள செய்யுட்களெல்லாம் கலிப்பாவினால் கவின்பெற யாக்கப்பெற்றிருக்கின்றன. இது கலித்தொகையென்றும், கலியென்றும் வழங்கும். அகத்திணைக்குச் சிறப்புடையது இக்கலிப்பாவாகும். என்னை!

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரியதாகு மென்மனர் புலவர்"

என்று ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம் கூறுகின்றமையான் என்க.

இவ் விழுமிய நூலை ஆக்கி உலகுக்களித்த மாப் பெரும் புலவர்களே உண்மைப் புலவர்கள்; இவர்களே உண்மைப்பாட்டின் பெற்றி உணர்ந்த விழுமியோர். இவர்கள் தமிழ் இன்பக் கடலிலும் காதற்பெருவெள்ளத்திலும் திளைத்தாடினர். இவர்களுடைய உள்ளப் பாங்கின் உயர்வும், ஆர்வமும் இந் நாற்பாக்களிலும் மணியொளிபரப்பி மிளிர்கின்றன. காதற்றேனையும் கன்னித் தமிழாம் கற்கண்டையும் கட்டிகட்டியாகத் திரட்டி உலவா இன்பம் பயக்கும் கலிப்பாவில் அளித்த இத் தெய்வப் புலவர்களை என்சொல்லி வாழ்த்துவேம்! இல்வுலகத்திலே எமக்கு துறக்க இன்பம் காட்டிய இத் தூயோர்க்கு யாம் எழுமையும் எம்நன்றி செலுத்தி வழிபடும் கடப்பாடுடையேம். இவர்கள் வித்தகக் கல்வியும், முத்தமிழ்ப் புலமையும், முற்றிய நற்றமிழ்ப் புலவர். பொய்யும் புளுகும் புனைந்துரையாது உள்ளதை உள்ளவாறு உரைக்கும் தெள்ளியர். இவர்கள் இயற்கை வளங்களையும் மற்றும் நலன்களையும் கூறுகின்றழி, அவற்றை ஒரு சிறிதேனும் பொய்யும் புளுகும் விரவாது திறம்பட மொழிகுவர். இவர்கள் பல கேள்வித்துறை போகிய தொல்லாணை நல்லாசிரியர்.

இங்ஙனம் இயற்கை நலன்களை நனித்தறிந்து வியத்தகுமுறையில் கூறும் திறன் எம் பண்டைக்காலத் தண்டமிழ்ப் புலவோர்பால் காணலாமேயன்றி பிற்றை ஞான்றிருந்த புலவோர்பால் காண்டலரிது. பிற்காலத்துப் புலவோர் உள்ளதை உள்ளவாறும், தாம் எடுத்துக் கொண்ட பொருளை சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் தாறுமாறு உரையாது இல்லது புனைந்துரைக்கும் நீர்மையர். யாம் கூறுவதன் உண்மை சங்கநூல்களையும் பிற்காலத்தெழுந்த நூல்களையும் ஒரு சிறிது ஆராய்வார்க்கும் நன்கு விளங்கும்.

இனி இக் கலித்தொகையானது எம் பண்டைத் தமிழ்மக்களின் நாகரிகத்தையும் அவர் தம் விழுமிய நோக்கங்களையும், சீரிய கருத்துக்களையும் அணிபெற அலர்த்திநிற்கும் ஒரு செழுங்கொடியாய் இலங்குகின்றது. தமிழர் பழமை, நாகரிகம், பெண்ணுரிமை இவை இதழ்; காதல்மணம் தீந்தமிழ்த்தேன் இவையெலாம் நிறைந்த கவின்மலர்க் கலிப்பாக்கள் அலர்ந்து விளங்கும் இக் கொழுங்கொடியைக் கண்டு கண்டு எம் உள்ளம் ஓவாது பூக்கின்றது. தண்டமிழ்த் தனியிளங்காவில் அழகலர்ந்து இன்பத்தேன் பிலிற்றி நறுமணங் கமழ்ந்து நிற்கும் வண்பூங்கொடிகள் பலவுள. அவற்றுள் இது போற் சிறப்புடையன மற்றொரு சிலவே. அவைதாம் திருக்கோவையாரும், திருக்குறளும், தொல்காப்பியமும் என்க. எம் பழந்தமிழ்மக்களின் வாழ்வுதுட்பங்களையும் அவர்தம் உயரிய மனப்பான்மையையும் தெரிப்பன எம் அகப்பொருள் நூல்களே. அவை தம்முள் கழிபெருஞ் சிறப்புடையது இக் கலித்தொகைதானே யென்றறிக. காதல்விளக்கும் நூல்களின் அரசியாய் இந்நூல் இலங்குகின்றதெனக் கூறல் மிகையாகாது. இந்நூல் நுட்ப முணர்ந்தார்க்கெல்லாம் இவ்வுண்மை நன்கு புலப்படும். கடலமுதெடுத்துக் கரையில் வைத்தாற்போல் அகப் பொருட் பாப்பெல்லாம் திரட்டி தீம்பாகாய்த் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை சுவைத்த ஒருவனுக்கன்றோ இதன் சுவை நாட் பமும் மாண்பும் விளங்கும். கலித்தொகையைப் படிக்கும் ஒருவன் தனது புறத்தொழில்களை மறந்து இன்பத்திற் படிந்து அதனுல் விழுங்கப்பெறுவன் என்பது திண்ணம். மணற்கேணி தோண்டத் தோண்ட எங்ஙனம் அதன் கண் நீர்சுரந்து பாயுமோ, அங்ஙனம் கலித்தொகை படிக்கப்படிக்க இன்பம் ஊற்றெடுத்துப்பாயும். பாண்டிய காதல்மணம்; எங்கணும் இன்பச் சுவை. இத்துணை இன் பம் பயக்கவல்ல நூலன்றோ நூல்? இத்தகை இன்பம் பயக்கும் மாண்புடைய நூலாகையாலன்றோ எம் பண் டைத் தமிழறிஞர் இதனைப் பின்வருமாறு கூறிப் போற் றிப் பாராட்டினர்.

"திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம் நலியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்"

இனி இக்கலித்தொகையில் ஐந்திணை நிலத்துக் குரிய ஒழுக்கங்கள், அவ்வந்நிலத்தின் இயற்கை, அங்கு வயங்கும் மக்களின் வழக்க வொழுக்கங்கள் முதலியன ஒவ்வொரு கலியுள்ளும் அதனைப் பாடிய புலவரால் மிக வும் அழகாகவும் நட்பமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிலத்து இயல்பைப்பற்றிக் கூறும் வருணனை பெரிதும் போற்றற்பாலது. பாலைக்கலியுள் அப்பாலை நிலத்தின் இயல்பும், ஞாயிற்றின் வருணனையும் அதனை விளக்கும் உவமைகளும் பன்முறை படித்து இன்புறற் பாலன. ஞாயிற்றைப்பற்றிக் கூறியுள்ளவற்றுள் இன்றி யமையாத சிலவற்றை ஈண்டுக் காண்க-

1. தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கணுன் மூவெயிலு
முடன்றக்காண்முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
[கலி—1]

2. நடுவிகந் தொழி நடையில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்
[கலி—7]

3. வறியட னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய்திசைகெட்டா னிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
[கலி—9]

பாலைநிலத்தின் இயல்பைப்பற்றிக் கூறப்பட்டவற் றுள் சிலவற்றை ஈண்டு நோக்குக.

1. செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
வெரிமேய்ந்த கரிவறல் வாய்புலவு காணுவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
நிரிமருப் பேருெடு தேரறற் கோட
மரல்சாய மலைவெம்ப மந்தி யுயங்க
வுரல்போ லடிய வுடம்புயங் கியாணை
யூறுநீ ரடங்கலி னுண்கயம் காணுது
சேறு சுவைத்துத்தஞ் செல்லுயிர் தாங்கும்
புயலுளி மாறிய போக்கரு வெஞ்சுரம்
[கலி—12]

2. வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்ப்பிலை
லவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் கிளைகளோ டுயப்போகு வான்போல
வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ
மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
சூழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுரம்
[கலி—24]

இச்செய்யுளில் பாரதக்கதைக் குறிப்பு கவனிக்கத் தக்கது.

3. மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ் சுரம்
[கலி—5]

இன்னும் இப் பாலைக்கலியின்கட் காணப்படும் உவ மைகளும் நீதிகளும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்புபோல் நவில்தொறும் இன்பம் பயப்பன.

1. செம்மையி னிகந்தொழி இப் பொருள்செய்வார்க்கட்பொரு ளின்மையு மறுமையும் பகையாவ தறியாயோ.

2. உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங் கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே ருகுதல் பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும் புதுவ தன்றே புலனுடை மாந்திர்.

3. சிறப்புச்செய் தலையராப் புகழ்பேற்றி மற்றவர் புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்

4. செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல்

5. பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
நீதிலான் செல்வம் போல்.

7. பேதையோன் வினைவாங்கப் பிடிலா வரசனுட்
டேதிலான் படைபோல.

8. முன்னொன்று தமக்காற்றி முயன்றவ ரிறுதிக்கட்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பிடிடை யாளர்போல்

9. கரிபோய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
யெரிபொத்தி யென்னெஞ்சுடுமாயினெவன்செய்கோ

10. முறைதளர்ந்த மன்னவன்கிழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பணிவாருண்கண்ணீ னெவன்செய்கோ.

11. கிளையழிய வாழ்பவ னுக்கம்போற் புல்லென்று
வளையாணு நெகிழ்போடுந் தோளாயி னெவன்செய்கோ.

12. கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ.

13. ஆள்பவர் கலக்குற வலிபெற்ற நாடுபோற்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண் டமைவாளோ.

14. ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ளீர்ந்தீத்த மலர்போல நீபிரிந் வாழ்வாளோ.

இன்னும் இப்பாலைக் கலியுள் மறவரைப்பற்றியும் அவர்தம் செயலைப்பற்றியும் வரும் அடிகள் ஓவியம் வல்லானொருவன் வரைந்த ஓவியம்போன்று இலங்குவதைக் காண்க.

1. வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
றற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்

2. அரிமா னிடித்தன்ன வஞ்சிலை வல்விற்
புரிநாண் புடையிற் புறங்காண்ட லல்லா
லிணைப்படைத் தானை யரசோ டுறினும்
கணைத்தொடை நாணுங் கடுந்துடி யார்ப்பி
னெருத்து வலிய வெறுழ்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
யுருத்த கடுஞ்சினத் தோடா மறவர்.

பின்வரும் செய்யுளில் வாழ்க்கை இன்பத்துக்கு இளமை இன்றியமையாததென்பது காண்க.

இளமையுங் காமமு மோராங்குப் பெற்றூர்
வளமை விழைதக்க துண்டோ வுளகா
ளொருநோயை தம்மூட் டழீஇ யொருநோயை
யொன்றன்கூ ருடை யுடுப்பவரே யாயினு
மொன்றினூர் வாழ்க்கையே வாழ்க்கை.

பின்வரும் செய்புட்களின் பொருளும் அறிந்து மகிழற்பாலது.

1. தோலல முண்டு துறக்கப் பட்டோர்
வேலரு ணீண்ட குடையோ ரன்னர்
நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோ
ரல்குநர் போகிய வூரோ ரன்னர்
கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடின ரிட்ட பூவோ ரன்னர்:

2. அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளலினி;
அடிதாங்கு மளவின்றி யளலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்ரு ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடிபூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;
இன்பத்தி லிகந்தொரீஇ யிலேதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் நகையவே காடென்ரு ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கன்மிசை வேய்வாடாக் கணைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் நகையவே காடென்ரு ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்த
னனவாங்கு; [னரே;
இனநல முடைய கானஞ் சென்ரூர்
புனநலம் வாட்டுந ரல்லா மனவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

மேற்போந்த இரண்டாம் பாட்டுள் களிறு யானைக் கன்றுகள் கலக்கியநீரை மூதற்பிடியை யூட்டி பின்பு தான் உண்ணும் என்றலும், புறவுகள் தாம் அன்பு கொண்ட பெடைகள் வெம்மையால் இளைத்து வருந்தும் போது தம் சிறகை விரித்து அதன் நிழலாலே அவ் வெம்மையைத் தீர்க்கும் என்றலும், கலைமான் இனிய நிழலில்லாது வருந்திய மடப்பத்தையுடைய தன் பிணைக்கு தான் நின்று தன் நிழலைக்கொடுக்கும் என்றலும், கூர்ந்து, கூர்ந்து நோக்கற்பாலன. எத்துணைக் கற்பனை! எத்துணை நுட்பம்! இவ்வளவு அரும்பொருள் பொதுளிய செய்யுளை யாத்த நுண்மாண் நுழை புலமுடைப் புலவ ரன்ரோ உண்மைப்புலவர்?

சுயநலம் நாடாது நாம் செய்யும் தொழில்களும் தொண்டுகளும் நமக்கு ஆறுதலைக் கொடுக்கின்றன. எப் பொழுது ஒருவன் தன்னயத்தை நாடி உலகில் செல்லுகிறானோ அவனை இடைவிடாது துயர் துக்கங்கள் சூழ்ந்து சொல்லவொண்ணா இன்னல்களை விளைத்து நிற்கும்

படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் நின்தைத், துடிப்பற்ரூர்க் கன்ரோ சுகங்காண் பராபரமே.

183322 Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஸ்வகவி, தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி

—நவாலியூர், திரு. சோ. நடராசன் அவர்கள்.

[வங்கத்துதித்த வரகவி தாகூர் எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு]

இரண்டு வருடங்களுக்கு முன் தாகூரின் "மாலினி" என்னும் நாடகத்தின் முதற்பகுதி 'ஈழகேசரி' ஆண்டுமடலுக்காக மேற்படி ஆசிரியரால் மொழிபெயர்க்கப்பட்டது. இது இரண்டாம் பகுதி; இத்துடன் நாடகம் முடிகிறது. (ப. ர்.)

அங்கம் 2.

இடம்: அரசகோட்டத்து நந்தவனம்

மாலினியும், சுப்பிரியனும்.

மாலினி: நான் உனக்கு எதைக் கூறுவேன். தருக்கம் செய்ய நான் அறியேன். உனது சாத்திரங்களை நான் கற்றதில்லை.

சுப்பிரியன்: படித்த மடையர் மத்தியில்தான் நானும் வித்துவான். எனது சாஸ்திர அறிவையும் புத்தகப்படிப்பையும் பின்னுலே வைத்துவிட்டேன். ஆதலால் அரசி எனக்கு வழிகாட்டி. தீபத்தைத் தொடரும் சாயல்போல நான் உன்னைத் தொடருகிறேன்.

மாலினி: அந்தணனே! நீ கேள்விகேட்கத் துவங்கினதும், எனது வல்லமையெல்லாம் மறைந்துவிட, விடைகூற அறியாது மயங்குகிறேன். எல்லாமறிந்த நீகூட சந்தேகந்தீர்க்க என்னிடம் வந்தமை எனக்கு ஆச்சரியத்தை யுண்டாக்குகிறது.

சுப்பிரியன்: கேவலம் கல்வியறிவை விரும்பி நான் உன்னிடம் வரவில்லை. இவ்வளவு காலமும் நான் அறிந்தவையெல்லாம் மறதியிற் போக, எண்ணிறந்த மார்க்கங்களிருந்தும், ஒளியைக் காணேன்.

மாலினி: அந்தோ! ஐய நீ கேட்கின்றாய்; கேள்விகள் பெருகப்பெருக என் அறிவின் வறுமையை எண்ணி எண்ணி இரங்குகிறேன். அந்த நாள் வந்திலையே அந்தணனே! கண்ணுக்குத் தெரியாத மின்னற் கொடியொன்று என் இருதயத்தில் தழைந்தது போல, விண்ணின் றெனக்குக் கிடைத்த அந்த வாக்கு இப்பொழுது எங்கே மறைந்தது. அந்த நாள் வாராது, ஐயங்கொண்டு இதுகாறும் என் தாழ்த்தாய். இப்பொழுது நான் இவ்வுலகத்தை நேர்முகமாகச் சந்தித்துக் கலந்துகொண்டதால், எனது மனமானது அச்சமடைந்துவிட்டது. இவ் வுலகமென்னும் பெருந்தோணியைச் செலுத்த வழி யறியேன். நானே தனித்துவிட்டேன். இவ் வுலகமோ பெரிது. மார்க்கங்கள் பலவாய் விரிந்து விட்டன. வானத்திருந்து வரும் ஞானவெளிச்சமோ இப்போ வந்து பின்னே மறைந்துவிடுகிறது. நீயோ படித்தவன்; புத்திமான்; எனக்குத்துணைசெய்வாயா?

சுப்பிரியன்: நீயென் துணை கேட்பதனால் நான் தன்யனானேன்.

மாலினி: உயிர் நூற்றுக்களையெல்லா மடைத்துவிடக் கூடிய கஷ்டங்கள் ஏற்படுங் காலங்களு முண்டு. திடீரென்று சனக்கூட்டத்தின் மத்தியில், என்னையே நான் பரிசோதிக்கின்ற காலங்களில்; எனக்குப் பயமுண்டாகிறது. சூன்யமான இந்நேரங்களில், எனக்கு ஆதரவுகூறி ஒரு வார்த்தை கூறமாட்டாயா? போன உயிரைத் திரும்பவும் மீட்கமாட்டாயா?

சுப்பிரியன்: ஆம்; அதற்கு நான் தயாராயிருக்கிறேன். எனது மனதைப் பரிசுத்தமுடையதாகவும், எளிமையும் சாந்தியுமுடையதாகவும் வைத்துக்கொள்வேன்.

(சேவகன் வருதல்)

சேவகன்: தேவி! தங்களைக் காணுமாறு குடிமக்கள் வந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி : இன்றல்ல. என்னை மன்னிப்பார்களாக. இளைத்த மனதுக்கு ஆறுதல் கொடுக்கவேண்டும். எனது களைப்பு நீங்க ஓய்வு எடுத்துக்கொள்ளுகிறேன். (சேவகன் போதல்) உன் நண்பன் கேமன்கரைப்பற்றிக் கூறுவாய் சுப்பிரிய! உனது வாழ்வும் அதன் சோதனைகளையும்பற்றிக் கூறுதி.

சுப்பிரியன் : கேமன்கர் என் நண்பன்; அவன் என் சகோதரன். அவனே என் குருநாதன். எனது மனமானது சங்கீத விபரீதங்களில் கிடந்து சஞ்சலப்பட, அவன் அன்றுதொட்டே அசையாது திரமாய் நின்று வருகிறான். சந்திரனில் முயற் கறைபோல, நானும் அவனோடு பிரிவில்லாமல் வாழ்ந்து வந்திருக்கிறேன். கப்பல் எத்தனை வலியுடையதாயிருந்தபோதிலும் ஒரு சிறு துவாரம் அதனை அமிழ்த்திவிடும். கேமன்கா! நானே உனக்கு நாசகாரணன். நானே உன்னை அமிழ்த்தினேன்.

மாலினி : நீ அமிழ்த்தினையா?

சுப்பிரியன் : ஆம். நானே. உனது முகத்திலுள்ள காந்தியின் ஒளிக்கு முன்பு, நிற்கமுடியாது. அந்தப் புரட்சி புறங்காட்டியோட கேமன்கரொருவனே புறகிடாது நின்றான். புண்ணிய பூமியாகிய காசியில் ஒரு புது மதம் உண்டாக விடாமல் அதை முளையிலே கிள்ளிவிட எண்ணி, வேற்றுநாட்டிலிருந்து படைதிரட்டி வருவேனென கேமன்கர் என்னை இங்கு நிறுத்திவிட்டுச் சென்றான். அதன் பின் நடந்ததெல்லாம் நீ அறிவை. ஒரு புத்துலகத்தில் நீ என்னை வாழவைத்தனை. "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்ற வாக்கியம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தது. நீ வந்தாய். அவ்வறவுரை உன் நினைவில் உருக்கொண்டதுபோலாயிற்று. எனது நண்பனைக் காணுமென்று ஆவலுற்றேன். அத்தருணம் அவனுடைய திருமுகம் கிடைத்தது. நாட்டில் முளைத்த புதிய மதத்தை, போர்செய்த செங்குருதி கொண்டு துடைப்பதாகவும், உன்னைக் கொன்றுவிடுவதாகவும் அன்னியர் படையொன்று திரட்டிவருவதாகவும் அத்திருமுகத்தில் எழுதியிருந்தான். அச்செய்தியை வெளிவிடாது வைத்திருக்க என்னால் முடியவில்லை. உடனே நான் அரசனிடம் திருமுகத்தைக்காட்டினேன்.

மாலினி : சுப்பிரிய! ஏன் இவ்வாறு மயங்கினை? என் பயங் கொண்டாய்? என் மாளிகை பெரிதல்லவா? கேமன்கருக்கும் அவனுடைய படைக்கும் என் வீட்டில் போதிய இடமில்லையா?

[அரசன் வருதல்]

அரசன் : சுப்பிரிய! இதோ வருக என் கைகளில். நல்ல தருணத்தில் சென்று கேமன்கரை கைதி செய்துவிட்டேன். ஒருமணிநேரம் தாமதித்திருந்தால், நித்திரையிலேயே எனது மார்பிகையில் இடி விழுந்திருக்கும். நீயே என் பிரிய நண்பன். சுப்பிரிய வருக.—

சுப்பிரியன் : ஈஸ்வரன் என்னை மன்னிப்பாராக.

அரசன் : அரசனின் அன்பு பயனற்றதல்ல. நீ மனதில் நினைக்கும் எவ்வரத்தையும் கேட்பாயாக. உனக்கு என்ன வேண்டும் கூறுதி.

சுப்பிரியன் : ஒன்றும் வேண்டாம் அரசே! ஒன்றும் வேண்டாம். வீடுவீடாய்ச் சென்று பிச்சையெடுத்து வாழ்வேன்.

அரசன் : கேட்கவேண்டியதுதான். பெரிய அரசர் கூட விரும்பும் நாடுகளை உதவுகிறேன்.

சுப்பிரியன் : அரசே ராஜபோகத்தை நான் வேண்டேன்.

அரசன் : அறிந்துகொண்டேன் சுப்பிரிய! உனது கைகள் எந்தச் சந்திரனை நோக்கி விரிந்தன என்பதை நான் அறிந்துகொண்டேன். உன்மத்த! எய்துதற்கரியதென்று எண்ணியிருப்பதைக் கேட்பதற்குப் பின்னில்லாதே. என் மௌனஞ் சாதிக்கின்றாய்? எனது மாலினியைத் தேசப்பிரஷ்டம் செய்யுமாறு நீ பிரார்த்தனை செய்ததை மறந்தனையா? மறுபடியும் நீ அந்த வேண்டுகோளைக் கேட்பாயா? என் மகளே! உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தவன் இந்த உத்தம இளவல் என்பதை அறிந்தனையா? ஆதலால் இவனுடைய அன்பிற்குப் பிரதியாக நீ எவ்வாறு உனது.....?

சுப்பிரியன் : ஐய, கருணைகூர்ந்து இவ்வாறு கூறன்மின். வாழ்நாள் முழுவதும் பக்தி செய்து தமது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்தோர் பலரிருக்கின்றனர். என்னை அத்தகைய ஒருவனும் மதிப்பிராமல் அதுவே போதுமானது. எனது நண்பனுக்கு நான் செய்த துரோகத்துக்குப் பதிலுபகாரமாக இவ்வரத்தை நான் அரசன் கையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவேனு? மங்காய்! நீ பெரியவள். அப்பெரு மையினல் சாக்கியும் விபூதியும் பெற்றனே. நானே ஏழை. எனது ஆன்மா வறுமைப்பட்டுவிட்டது. நீ உலகத்துயிர்கள்மீது வைத்துள்ள அந்தக் கருணையை என்மீது பரிபாலிப்பது தவிர உன்னிடம் அதற்கு மிஞ்சி ஒருஅணுவளவும் கேட்கமாட்டேன்.

மாலினி: தந்தாய்! நீர் கொண்ட கைதிக்குத் தண்டனை யாது?

அரசன்: இறப்பே தண்டனை.

மாலினி: முழந்தாளில் விழுந்து பிரார்த்திக்கிறேன். அரசே மன்னிக்கவேண்டும். கைதியைச் சுமிக்க வேண்டும்.

அரசன்: குழந்தாய்! அவன் ஒரு புரட்சிக்காரன்.

சுப்பிரியன்: அரசே! நீர் அவனை இவ்வாறே மதித்தீர் கொல்! அவன் உமது நாட்டின்மீது படையெடுத்து வந்தபொழுது உமது ராச்சியத்தைக் கைப்பற்ற வந்தானில்லை. உம்மைத் தண்டிக்கவே வந்தான். அப்பொழுது அவனும் உம்மை மதிப்பிட்டான்.

மாலினி: அரசே! அவரின் உயிருக்கு ஆபத்துச் செய்யாதீர். பெரிய தீங்கினின்றும் உம்மைக் காப் பாற்றிய ஒருவரிடத்து நீர் அன்புடையீரானல், கேமன்கருக்கு உயிர்ப்பிச்சை கொடும்.

அரசன்: சுப்பிரிய! உனது எண்ணம் என்ன? உனது நண்பனை உன்கைகளில் சேர்ப்பிக்கவா?

சுப்பிரியன்: அதுவே ராஜலட்சணம்.

அரசன்: அதெல்லாம் ஏற்றகாலத்தில் தெரியவரும். நீயும் உனது நண்பனைப் பெறுவாய். அஃ தொருவாறுக. அரசனின் வள்ளன்மை இவ்வள வில் நில்லாது. நீ காத்திராத ஒரு பொருளை உனக்குத் தரப்போகின்றேன். அதுவும் பிரதியுப காரமல்ல. நீ எனது உள்ளத்தைக் கவர்ந்துகொண் டனை. ஆதலின் என் உள்ளத்துக் களஞ்சியமா யுள்ள ஒன்றை உனக்கு உதவப்போகின்றேன்.— கண்மணீ! என்றுமில்லாத ஒரு நாணத்தை இப் பொழுது காட்டுகின்றாய். உனது முக கமலத்தில் செந்நிறம் முன் பழகியறியாது. வெளீரென்று வெண்மையாயிருக்கும். இன்று கண்ணீர் கலந்து மங்கலாய் காணபொழிகின்றது. (சுப்பிரியனைப் பார்த்து) காலினிட்டெழுந்திரு சுப்பிரிய. இதோ என் நெஞ்சில் மகிழ்ச்சி கரைமீறுகின்றது. செல் வாயாக. சற்றே மாலினியோடு தனிமையாக இருக்க வேண்டுகின்றேன். (சுப்பிரியன் போகி றான்) எனது குழந்தையை மீட்டும் பெற்றுவிட் டேன். வானத்தில் மின்னும் வெள்ளியல்ல இவள். நிலத்தில் மலர்ந்த பூப்போன்றவள். என் குழந்தை; என்னுள்ளத்துக் கனிகலன்.

(சேவகன் வருதல்)

சேவகன்: கைதி கேமன்கர் வாசலில் நிற்கிறார்.

அரசன்: உள்ளே அழைத்துவா; படிந்த பார்வையும், நிமிர்ந்த தலையும், ஆழ்ந்த சிந்தனையுமுடைய நெற்றி யும் விளங்க, புயலில் அசைவற்றிருக்கும் இடி மேகம்போல வருகின்றான்.

மாலினி: அவனுடைய அங்கத்தில் அந்தச் சங்கிலிகள் கிடப்பதற்கு வெட்கப்படுகின்றன. பந்தத்தை எதிர்க்கும் ஒரு தெய்வம்போல அவன் தோன்று கிறான்.

(கேமன்கர், சங்கிலியில் கட்டுண்டு வருதல்)

அரசன்: நீ என்னிடமிருந்து என்ன தண்டனையைப் பெற விரும்புகிறாய்?

கேமன்கர்: இறப்பே.

அரசன்: நான் உன்னை மன்னித்தால்?

கேமன்கர்: மன்னித்தால் மீண்டும் நான் தொடங்கிய வேலையை ஆரம்பிப்பேன்.

அரசன்: உன் உயிரை விரும்புகிறாயில்லைப்போலும்; உனது கடைசி விருப்பம் என்னென்று கூறுதி.

கேமன்கர்: நான் இறக்குமுன் எனது நண்பன் சுப்பிரியனைக் காண விரும்புகிறேன்.

அரசன்: (சேவகனுக்கு) சுப்பிரியனை வரும்படி கூறுவாயாக.

மாலினி: அப்பா, அதோ அவருடைய முகத்தில் ஒரு சக்தி தோன்றுகிறது. அது என்னைப் பயமுறுத்து கிறது. சுப்பிரியனை இங்குவர விடவேண்டாம்.

அரசன்: குழந்தாய்; காரணமின்றிப் பயப்படுகின்றாய்

[சுப்பிரியன், கேமன்கரைநோக்கி, கையைவிரித்துக்கொண்டு செல்லுகிறான்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேமன்கர்: இல்லை; இல்லை; தழுவிக்கொள்வதற்கு இன்னும் நேரம் வரவில்லை. முதல் நாம் பேச வேண்டிய விடயங்களைப் பேசுவோம். பின்னர் எமது அன்பைத் தெரிவிக்கும் சின்னங்களைச் செய்துகொள்வோம். சுப்பிரிய கிட்டவா. பேச்சில் அதிகம் எனக்குப் பழக்கமில்லை என்பதை நீ அறிவாய். எனது முடிவுகாலமும் கிட்டிவிட்டது. என்னைப்பொறுத்த விசாரணை எல்லாம் முடிந்து விட்டது. உனது விசாரணை இன்னும் முடிவாக வில்லை. நண்ப, இவ்வாறு என் (எனக்கு ஏமாற்றம்) செய்தனை கூறு.

சுப்பிரியன்: நண்ப! நீ எனது காரணத்தை விளங்க மாட்டாய். கட்பிலும்பார்க்க எனது கொள்கையில் வைத்த நம்பிக்கை இவ்வாறு செப்வித்தது.

கேமன்கர்: அறிந்தேன் சுப்பிரிய! அதோ அப்பெண்ணின் முகமானது, உள்ளத்தொளியினால் பிரகாசிக்கிறது. அக்கண்களின் ஒளியில் மயங்கி, நீ, உன் மூதாதைகளின் சனாதனதர்மத்தை மறந்தாய். உன் நாட்டின் நன்மையைப் பங்கப்படுத்தினாய். அத்தோடமையாது, ராஜத்துரோகம் என்ற அத்திவாரத்தில் ஒரு புதுமதத்தைக் கட்டிவிட்டாய்.

சுப்பிரியன்: நன்றே கூறினை நண்ப! எனது கொள்கை பூரணமாகிவந்த பரிணமிப்பே அப்பெண்ணின் உருவம். உனது மௌனமான சாத்திரங்களெல்லாம் என்முன் மூங்கைகளாயிருந்தன. அந்தக் கண்களின் ஒளிகொண்டு, ஆதி ஆகமத்தை வாசித்து விட்டேன். அன்பும், மனிதத்தன்மையுமுள்ள இடத்தில்தான் உண்மையான மதம் உண்டென அறிந்துகொண்டேன். அன்னையின் பக்தியிலிருந்து அது உண்டாகின்றது. குழந்தையிடத்திருந்து அது அன்னையிடம் மறுபடியும் செல்கிறது. கொடுப்போன் கொடையிலும் ஏற்போனிதயத்திலும் அது தோன்றுகிறது. ஒளியும், அன்பும், மறைந்த ஞானமும், பொருந்திய அந்த முகத்தை நான் முதல் பார்த்தபொழுதே, மனிதனின் அனந்த சக்தியைக் காட்டும் இம்மதத்தை ஏற்றுக் கொண்டேன்.

கேமன்கர்: முன்னொரு காலத்தில் நானும் இம்மங்கையின் முகத்தைப் பார்த்து, "இதோ மதம்தான் பெண்ணுருவெடுத்து மனிதரைச் சுவர்க்கத்துக்கு உய்க்க வந்திருக்கிற" தென்று எண்ணினேன். கொஞ்சநேரம் என்நெஞ்சம் மகிழ்ச்சியில் திளைத்தது. எனது வாழ்வின் ஆசைகளெல்லாம் பரிபூரணமடைந்து மலர்ந்தன. ஆனால் இவையெல்லாம் மாயை என்று எனக்குத் தோன்றவே நான் வேற்று நாடு சென்றேன். எளியார் செய்த அவமானங்களெல்லாம் அமைதியோடு பொறுத்திருந்தேன். சிறுமைதாட்டு என் உழுவலன்பனுயிருந்த உன்னைக்கூடப் பிரியவேண்டி யேற்பட்டது. இதற் கிடையில் நீ என்ன செய்துகொண்டிருந்தாய்? அரசனுடைய உத்தியானத்திலிருந்துகொண்டு, அப் பெண்மீது கொண்ட மோகத்தை ஒரு புதுமத மென்று சொல்லி பொய்மையில் அமிழ்ந்தியிருந்தாய்.

சுப்பிரியன்: எனது நண்ப! மாறுபட்ட கொள்கையாளருக்கும் இம்மலர்தலை உலகில் இடமுண்டன்றே? வானத்தில் எண்ணிறந்த வெள்ளிகள் மின்னுகின்றன. அவைதம்முள் முதன்மைபெறக் கலாம் வீசுகின்றனவா? சமயங்கள் பலவும் தத்தம் ஒளியை சமாதானத்தோடு பிரகாசிக்கச் செய்வனவாக.

கேமன்கர்: பயனற்ற பிதற்றல் செய்கின்றாய். சத்தியமும் அசத்தியமும் உறவுகொண்டிருப்பதற்கு இப்பெரிய உலகத்தில் இடமில்லை. நெல்லு வினையுமிடத்தில் முள்ளுள்ள களை பெருகவிடுவதா? அன்பு என்பது இவ்வளவு தூரம் விரிந்ததல்ல. ஒருவன் நம்பிக்கை மோசஞ்செய்து உண்மையான நட்புரிமைக்குப் பங்கஞ் செய்தபின், அவனை மன்னிக்கவேண்டுமென்று கூறலாமா? சகிப்புத்தன்மை இவ்வளவு துரோக சம்பந்தமானதா? தனது சனாதன தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக வாதாடி னானைத் திருடன் என்று மரண தண்டனைக்குள்ளாக்கி, அத்தர்மத்தை மறுதலித்து ஓடினவனைப் பெரியோனென்று கொண்டாடிப் பொருளும் போகமும் வழங்கும் கொடுமையை இவ்வுலகம் சகிக்கமாட்டாது.

சுப்பிரியன்: (மாலினியைப் பார்த்து) பெண்ணே! உன்பேரால், இவ் அவமானங்களையும், பழிப்புரைகளையும் ஏற்றுக்கொள்கிறேன். கேமன்கர்! உன் மதத்துக்காக உயிரைக் கொடுக்கின்றாய். நானோ எனது உயிரினும் சிறந்த நண்பனின் அன்பை இழக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைச் சமதர்மம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

(திரு. அ. சிவபாதம் அவர்கள்)

காலசக்கரம் அதிவேகமாய்ச் சுழன்றுகொண்டிருக்கிறது. ஐம்பதாண்டுகளின்முன் உள்ள காலவியல்பை இப்போது காண்கின்றோமில்லை இன்னும் ஐம்பதாண்டுகள் செல்ல இன்னும் வேறுபாடான உலக நீர்மையைக் காண்போம். காலஞ் செல்லச்செல்ல அறிவுவளர்ச்சி மிக வேண்டும். அதனால் சகோதர நேயமும், பிற நல்லொழுக்க நீர்மைகளும் மிகுந்து காணப்படுதல் வேண்டும். அங்ஙனமின்றி, அகில உலகினும் பலவகைப் பூசல்கள் மூழுகின்றன. அவைகள் ஒன்றோடொன்று சண்டமாருதம் என மோதுகின்றன. பல பூசல்களுள் அரசியற் பூசலே தலையாயது. சமயப்பூசலும், சாதிப்பூசலும் அடுத்தபடியில் நிற்கின்றன. இங்ஙனைய பதகிரிகை உலகில் வசிப்போர் இவற்றை நன்கறிவர். இற்றுலி, ஜேர்மனி, ரஷியா, இங்கிலாந்து முதலிய தேசங்களின் பெயர்களை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். வலிமை மிக்கோர் அதிற் குறைந்தோரை அடக்கியாள விரும்புகிறார். இதனை யடிப்படையாகக்கொண்டு பல அரசியற் கட்சி நியாயங்கள் பேசப்படுகின்றன. இந்தியாவாட்டிலிருந்து சனாதனிகளதும், அம்பேட்கார், மகாத்மா, திருவாங்கூர் மகாராசா ஆதியோரதும் பெயர்களைப் பல முறை கேள்விப்படுகின்றோம். எல்லாம் வல்ல ஆண்டவன் வீற்றிருக்கும் தேவாலயங்களுள் மக்களுள் ஒரு பகுதியினர் செல்லுதல் கூடாதென்கின்றனர் ஒருபாலார். இன்னும் பல உரிமைகள் அவ்வொருபகுதியினர்க்குக் கடியப்படுகின்றன. அக்கூட்டத்தார் தாழ்த்தப்பட்டோரென அழைக்கப்படுகின்றனர். என்னே! ஆண்டவனின் படைப்பாகிய மக்களுள் இவ்வித ஏற்றத்தாழ்வு. இவற்றிற்குச் சமயம் என்று ஏதோ நியாயங்கள் கிளத்தப்

கேமன்கர்: வேண்டாம். இம்மாதிரியான பிதற்று மொழியை நிறுத்து. இறப்பு என்ற நீதிமன்றத்தில்தான் உண்மைகளெல்லாம் பரீட்சை செய்யப்படவேண்டும். நாம் பள்ளியில் மாணவராயிருக்கும் நாட்களில் இரவிரவாகத் தர்க்கஞ் செய்து, காலையில் எமது குருநாதனை அணுகி, யாருடைய வாதம் சரியென்று கேட்பது உன் ஞாபகத்திலிருக்கின்றதா? அம்மாதிரியான ஒரு காலநேரம் இது என்று எண்ணு. நமது சங்கேத விபரங்களை வரிக்கொண்டு இறப்பென்னும் குருநாதன் முன் நிற்போம். அதுவே கடைசி யாத்திரை ஸ்தலம். அங்கே ஒரு க்ஷணத்தில் இவ்வையங்களெல்லாம் மறைந்துவிடும். சனாதனதர்மத்தின் மகிமைகளாகிய நாமிருவரும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரிக்கலாம். உன்னிடத்துச் சிறந்து விளங்குவதும், அழிவில்லாததுமான பொருளை இறப்புக்கு முன்பாகக் கொண்டுவா.

சுப்பிரியன்: அப்படியே ஆகுக.

கேமன்கர்: வருக. உன்னை மார்புறத் தழுவுகிறேன். தோழ என்னிடமிருந்து பிரிந்து நீ வெகுதூரம் அகன்றுவிட்டாய். இப்பொழுது என்னைத் தெரிந்துகொள். இனி நீ பிரியமாட்டாய். உன் நண்பனிடத்திருந்து இதோ மரணம் என்னும் இவ்வரத்தைப் பெற்றுக்கொள். (சங்கிலியால் சுப்பிரியனை அடிக்கின்றான். சுப்பிரியன் விழுகின்றான். கேமன்கர் சுப்பிரியனின் பிரேதத்தைத் தழுவிக்கொண்டு) அரசனை இதோ உன் கொலைத் தண்டனைக்காரரை அழைப்பாயாக.

அரசன் (எழுந்து) எனது வாளெங்கே?

மாலினி: அப்பா, க்ஷமிக்கவேண்டும். கேமன்கரை மன்னிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. நம் இலங்கையில், சிங்களர், இந்தியர், இமிகிரேசன் குடியேற்றக் கட்டுப்பாடு, என்கிற வார்த்தைகளைக் கேட்கிறோம். இந்திய மக்கள் வருகையால் சிங்களவர், தொழிலின்றிக் கஷ்டப்படுகின்றனரெனக் கூறப்படுகிறது. சிங்கள மக்கள் சோம்பேறிகளாய்த் திரிந்துகொண்டு, தம் தொழிலை இந்தியர் பறித்துவிட்டனரெனக் கூறுவது எவ்வளவு நகைப்புக்கிடமாகிறது. இந்தியத் தமிழர் வருகையால் சிங்களச்சமுகமே காலகதியில் மறைந்துவிடுமென்னும் மறைவான அச்சமே சாதிப்பூசலாகிய கட்டுப்பாட்டுக் கிளர்ச்சிக்குத் துணை புரிகிறதென்ப.

இப்பூசல்களுக்குக் காரணமென்ன? அதனையறிந்து அவைகளைப் போக்க முயல்வது அறிஞர்தம் கடன். பரந்த அறிவின்மையே இப்பூசல்களுக்குக் கால். தன்னலம் மிக்குடையாரிடத்தேயே இது பொறிவடிவிற் புகைகின்றது. பொறுமை யெங்குண்டோ அங்கே யிது மூழுகின்றது. முதலாளி –தொழிலாளி, செல்வர்–வறியர், என்ற வேறுபாடுகள் எங்குண்டோ அங்கே கொழுந்துவிட்டெரிகின்றது அது பரந்த அறிவற்ற சனத்தலைவர்களின் துணையால் எங்கும் பரவிவிடுகிறது. தன்னுயிர்போல் ஏனைய உயிர்களையும் நேசிக்குமிடத்து இவைகள் காணப்படா. தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் வாழ்க்கையே உயரிய நெறியெனக் கடைப்பிடித்தல் வேண்டும். பிறர் நலம் பேணும் நல்லாரிடம் இப்பூசல்கள் கிளர்ந்தெழா. நாட்டின் அரசியல் இவ்வித அஸ்திபாரத்திலேயே கட்டியெழுப்பப்பெறல்வேண்டும். பிறர்நலம்பேணும் நீர்மையில் சுயநலங் கிளர்ந்தெழுமேல் ஆண்டுப் பூசல்கள் மிகும். பிறர்நலம் விரும்புவோர், சுயநலப் பேய்க்கு இரையாதல் கூடாது. அகில உலகிலும் சீர்திருத்தத் துறைகள் பல காணப்படுகின்றன. அவற்றைக்கொண்டு நடாத்தும் தலைவர்களும் பலர். அவர்கள் பிறர்நலன் பேணுதலின்றிச் சுயநலத்தில் நாட்டஞ் செலுத்துவதாலன்றே ஆண்டுப் பூசல்கள் மிகுந்து காணப்படுகின்றன. மத்திய ஐரோப்பா இதற்கு எடுத்துக்காட்டாகிறது. ஆங்குள்ள அரசியற்றலைவர்கள் சுயநலப் பேய்க்கு இரையாவதினாலேயே யுத்த மேகங்கள் குழுறிக்கொண்டிருக்கின்றன. றஷ்யா நாட்டில் பூசல்கள் காணப்படுவதரிது. ஆங்கு செல்வர்–வறியர், முதலாளி–தொழிலாளி, கற்றவர்–கல்லாதவர், என்ற வேறுபாடுகள் காணப்படுதலரிது. மக்களில் ஏற்றத்தாழ்வில்வழிப் பூசல்கள்–பகைமைகள் ஏது? அவ்வித அரசியல் நீர்மையே உலகிற்கு வேண்டப்படுவது. அரசியற் பகைமையில்வழி ஏனைய பகைமைகள், யாண்டிருந்தெழும்? இந்தியநாட்டின் முடிசூடா மன்னனெனத் திகழும் வீரன், பண்டித ஜவகர்லால்நேருஜி அவர்கள் பகைமை யொழிந்த அரசியற் பெருவாழ்வுகாண முனைந்திருக்கின்றார். இவ்வாறுய தலைவர்களையே உலகம் எதிர்நோக்குகிறது. ஆயின் தற்போதைய உலகம் நேருஜி போன்றார் அரசியற் கொள்கைகளை ஏற்கத் தயங்குகிறது. நீண்டநாட் பயிற்சியை இலகுவில் மாற்றுதல் மிக்க கஷ்டமானதே. கொள்கைபுடையாரையுப் உலகம் வெறுக்கிறது. "யதார்த்தவாதி வெகுசனவிரோதி" என்பது பழமொழியல்லவா? மக்கள் யாவரும் ஓரினத்தன்மையர். அவர்களுள் வேறுபாடில்லை என்பதையுணர்த்தும் அரசியற்கொள்கை, பொதுவுடமை–அபேதவாதம்–சோஷியலிசம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

இவ்வித தத்துவம் சமீபகாலத்திற் றோன்றிய தன்று. றஷ்யநாட்டிற் கால்கொண்டதென்று கருதவேண்டியதில்லை. சுமார் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தில் இக்கொள்கை நிலவியிருக்கிறது. தமிழ்ப் புலவர்கள் இவ்வறவுரையை ஆங்காங்கே பொறித்திருக்கிறார்கள். பல மொழியாளராலும் விதந்தோதப்பெறும் திருவள்ளுவர் குறள், பிறர்நலம்பேணும் நீர்மையையே உரைக்கின்றதெனத் தமிழ்ப் பேராசிரியரொருவர் கூறுகின்றார். இக்கூற்றுக்குத் "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி தின்னுயிர் நீக்கும் வினை" என்னுங் குறட்பா பேராதாரந்தருகின்றதல்லவா? இவ்வறவுரையைக் கடைப்பிடிப்பின் உலக மன்பதைகளைக் கொன்று குவிக்கும் மறப்போர் நிகழுமோ? நிகழாது, நிகழாது. இவ்வறவுரையைப் பளிங்குபோல் எடுத்துக்காட்டிய கணியன் பூங்குன்றனின் நீர்மையை என்னென்பது? பூங்குன்றனாரின் பொன்மொழி புறநானூறென்னும் விழுமிய நூலில் உள்ளது. அந்நூலைப்பற்றித் தமிழறிஞர்கள் நன்கறிந்திருப்பர். அஃது சங்கத்தொகைநூல்களில் ஒன்றாய் விளங்குவது. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழக நீர்மையை அறிதற் கேதுவாவது. பல அரசர்கள், வள்ளல்கள், புலவர்கள் ஆகியோர் வரலாறுகளை அறிதற் காதாரமாய் இருப்பது. தற்காலத் தமிழாராய்ச்சியாளர்க் குறுதுணையாவது. இத்தகைய சிறப்பியல்புகளையுடைய நூலின் ஒவ்வொரு செய்யுளும் அறிஞர்க்கு நல்விருந்தளிப்பன. அவற்றுள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற செப்புள் படிக்குந்தோறும் கேட்குந்தோறும் எவர்க்கும் மிக்க இன்பத்தை விளைக்கும். அரசியற் தத்துவங்களும், சமய தத்துவங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவும் அச்செய்யுளிற் பொதிந்து கிடக்கின்றன. அதனை இங்கே காண்டும்.

"யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்ன தென்றலு மிலமே மின்னெடு
வானந், தண்டுளி, தலைஇ யானது
கல்பொரு, திரங்கு, மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரி யோரை வியத்தலு மிலமே.
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே"

உலக நீரமையில் யாம் வாழும் இடத்தையே எம தூரென்கிறோம். பூங்குன்றனர், எல்லாம் எமதூரென் கிறார். அவரின் பரந்த கொள்கை எத்துணைச் சிறந்தது. எல்லாம் எமதூராயின் யாம் எந்த ஊரை எம் ஆணைக் குட்படுத்துவது? முசோலினி அபிசீனியநாட்டை அடக்கி யாள நினைவுகூருவாரா? இல்லை! இல்லை!! சர்வாதிகாரி கள் "யாதுமூரே" என்பதை மந்திரமாகக் கொள்வா ராக. ஒரு குடும்பத்தாரையே யாம் உறவினரென்கிறோம். பூங்குன்றனர் பெருந்தகை "யாவருங்கேளிர்" என்கி றார். உலகமக்கள் யாவரும் நமதுறவினரென்னும் பரந்த நோக்கம் உண்டாகுமிடத்துச் சாதிப்பூசல் நிகழுமா? நிகழாது, நிகழாது. ஹிட்லர் யூதர்களை வெறுப்பதும், சிங்களர் தமிழரை வெறுப்பதும் உண்டாகுமா? யாவ ருங் கேளிராயின் யாரை வெறுப்பது? உலகத்தைப் படைத்தளித் தழிக்கு மிறைவ னொருவனுளனேல், படைத்தளித் தழிக்கும் சித்தாந்தமுளதேல், அவ்வாண் டவன் படைப்பில் பல சாதிகளும், ஊர்களும் எங்ஙன முண்டாகும்? உண்டெனினும் அவற்றுள் ஏற்றத்தாழ்வு யாங்ஙனமுண்டாகும்? அங்ஙனமுண்டாயினும் ஒன்றை யொன்று பெரிதென்பதும், ஒருவரை யொருவர் அடக்கி யாள்வதும் எவ்வாறுண்டாகும்? இச்செயல்களை இறை வன் எக்காலும் விரும்பார். ஒரு தாய் தந்தையருக்கு பல பிள்ளைகளுள்வழி, அவர்களுள் ஏற்றத்தாழ்வு கற் பிப்பதும், ஒருவரை யொருவர் அடக்கியாள்வதுமில்லை யாம் சகோதரர் என்றமுறையில் அவர்கள் ஒற்றுமை யுடன் வாழ்வர். பிளவேற்படினும் அதனைப் பெற்றோர் பார்த்து வாழாவிருப்பரோ? இருக்கவும் மாட்டார். பிழவை விரும்பவுமாட்டார்.

தீமையும், நன்மையும் நாமே உண்டாக்கிக் கொள வதன்றிப், பிறர் தருவனவல்ல தீமை காரணமாக நோதலும், நன்மைகாரணமாக இன்புறுதலும், அத் தகைத்தே. இன்ப துன்பங்கள் யாவருக்குமுள. அவை இயற்கையிலுண்டாவன. இந்நாளிலுள்ளோர் கூற்றுப் படி முன் வினையின் பயனென்று கூறுவதற்குக் காட்சி யளவையிற் பிரமாணமின்மை. யுக்திபளவையிலு மவ் வாறே. அரசன் மனிஷியும், வறியான் மனிஷியும் கருவுயிர்க்கும் வழித் துன்புறுகின்றனர். உயிர்த்த பின் இன்புறுகின்றனர். இவ்விருபாலாரும் இன்பதுன் பங்களைத் தாமேயனுபவித்தனர். அவருள் உயர்வு தாழ்வு நோக்கின், இறைவன் தானும ஒருவர்பாற் சார்ந்து உதவினரல்லர். உயிர், கருவிற்றோன்றிய நாளிலேயே சாதலும் உளதென்பது யாவரும் அறிந்தது. அதிற் புதுமையேயில்லை. நாம் வாழ்வில் இன்புறுகிறோம். பூங்குன்றனர் அவ்வாறு கூறுகின்றாரில்லை. இன்புறு கின்றிலம், என்றும் இன்னதென்றிசைத்தலுமிலம் என் றும் கூறுகின்றார்கள். இந்நீரமையே உலகுக்கு வேண் டப்படுவது. இன்புற்றவழியே ஏனையரைத் துன்பு றுத்து மெண்ணம் உண்டாகிறது. யுத்தக்கருவிகளைப் பெலப்படுத்தி இன்புறும்போதே ஏனைய தேயங்களைத் துன்புறுத்து மெண்ணம் உண்டாகிறது. ஜர்மனி தேசம் மகாயுத்தத்தின் பின் வாழாகிடந்தது. சென்ற நான்கைந்தாண்டுகளாக யுத்தக்கருவிகளைப் பெருக்கியது. அதனால் இன்புறுகிறது. கர்வங்கொள்கிறது. அவ் வின்பக் கர்வத்தால் ஏனை நாடுகளைத் துன்புறுத்துகின் றது.

உலகில் பல செயல்கள் நிகழ்கின்றன. அந்நிகழ்ச்சி களுக்குக் காரணங்களை ஆராய்கிறான் மனிதன். கார ணம் தன் அறிவுக்கு எட்டாதவிடத்து, அந்நிகழ்ச்சிக் குக் காரணர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்று கருது கிறான். அக்காரணர்தான் கடவுள் எனப்படுகிறார். உலகம் எவ்வாறு தோற்றியதென்று எவரும் அறிந்தா ரில்லை. காரணந் தெரியாவிடத்து அது இயற்கை யென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மதவாதிகள் கடவுள் படைப்பென்கின்றனர். அவர்கள் கடவுளின் பெயரால் எத்தனை ஆபாசக் கதைகளைக் கட்டிவிட்ட னர். எல்லாம் வல்ல இறைவன் தம் சேயான மக்களை நல்வழிப்படுத்த ஒரே மதத்தை யுண்டுபண்ணுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாதா? கூடும், கூடும். அங்ஙனமின்றிப் பலமதங் கள் எப்படித்தோன்றிய எனின்? கால இடங்களுக் கேற்ப மக்கள் ஒழுக்கநீர்மைகள் வேறுபாடடையும். அவற்றைச் செம்மைப்படுத்தற்காய் ஆங்காங்கே ஒழுக்க முறைகளைக் கோலியிருப்பார்கள் தலைவர்கள் அவ் வொழுக்க முறைகள் அதனைவகுத்தோர் பெயரால் மதங்களாயின. இதனைச் சரித்திரதா லுணர்ச்சியுடை யோர் நன்கறிவர். பிற்காலத்தேதுள்ளவர்கள் எக்கார ணம் பற்றியோ சில இயற்கைக்கு மாறான கதைகளை இம்மத ஒழுக்கங்களுக்கிடையே புகுத்தியதோடமை யாது, அவற்றை இறைவன்பாற் படுத்திபும் விட்டனர். இவ்வாறுய கதைகள் எல்லா மதங்களிலும் காணப்படு கின்றன.

சைவமதமுடைய பூங்குன்றனர், "அலைகளையுடைய நீர்வழியே போம் மிதவையேபோல, நமதரிய உயிரும் ஊழின் வழியே படும்" என்கிறார். ஊழின் வழிப் படும் என்பதை நன்மைக் கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்ததாகக் கூறுகிறார். ஏனைய மதங்கட் கும், சைவமதத்துக்கும் உள்ள பெரிய வேறுபாடு ஊழேயென்பது. ஊழென்பது முன்வினையால் உண் டாவது. முன்வினையாவது முற்பிறப்பிற் செய்த நன்மைதீமைகள். ஒருவன் இம்மையிற் கஷ்டப்படும் போது முன்னைத் தீவினைப்பயன் என்கின்றனர். முற் பிறப்பில் தீமைசெய்தால் இப்பிறப்பில் அதனையுணரும் அறிவுண்டா? இல்லையே. முற்பிறப்பில் இந்தவிதமான தீவினைசெய்தேன், அதனால் இப்போது இவ்விதமாகக் கஷ்டப்படுகிறேன், இனிமேல் அவ்விதஞ் செய்யமாட் டேன், என உணரும் வழியே, அம்முடிபாற் பயனுள தாம். அங்ஙனமின்றி ஊழ், ஊழ் எனின் அதற்குக் கழுவாய் தேடுமாறு யாதோ? இத்துறை அறிஞர்கள் ஆராய்ச்சிக்குரியதென நிறுத்தி அப்பாற் செல்லுதும்.

வினையின் காரணமாக உயிர் பிறவியை எடுக்கிறது. பிறவியின் காரணமாகப் பெரியாரைப் புகழ்தலும், சிறி யாரை இகழ்தலுமிலம் என்கிறார் பூங்குன்றனர். ஆயின் உலகவழக்கில் நாமெதைக் காண்கிறோம். சிறியோரை இகழக் காண்கின்றோமல்லவா? இன்னுமெத்தனை இடுக் கண்கள் புரிகிறோம். ஆண்டவன் படைப்பில் நாமெல் லாம் சகோதரரே. அவர்முன் நாமெல்லாம் ஒரினமே. நம்முட் பெருமை சிறுமை யெற்றுக்கு? சமயவாதிகள் இப்பெரியார் சிறியாரைப் பலபடப் பிரித்துச் சாதிப் பூசல்களையும் அவர்களுள் ஒருசாராரை ஆண்டவன் முன் னிலையில் போதல் கூடாதெனச் சமயக் கோட்பாற் படுத்திச் சமயப் பூசல்களையும் உண்டாக்குகின்றனர். இப்பூசல்கள் உண்டாகாவண்ணம் அறிஞருலகம் ஆக்க வழிகளில் முயலுதல் வேண்டும் தமிழ்நாட்டைப் பொ றுத்தவரையில் பண்டித உலகம் வீறுகொண்டெழுதல் வேண்டும். கணியன் பூங்குன்றனர் தமிழ்ப் பாவல ரன்றோ! உயிர்க் கவிகளைத் தந்து தமிழர்களைத் தூயி லெழச்செய்த வரகவி சுப்பிரமணியபாரதி தமிழ்ப்புலவ ரல்லரோ! தற்காலப் பண்டிதவுலகம் வாழா பொய் புகட்டும் சிறுபொருட்கும் மனமிசைந்து பொய்ம்மை யாளரைப் போற்றுகின்றது. பொய்மலிந்த வரைகளைப் பரப்பிப் பொருமை வயப்பட்டுச் சொற்போர் தொடுக் கின்றது. உபயோகமற்ற ஆராய்ச்சியிற் காலத்தை விரயஞ்செய்கிறது. தம் பண்டிதப் பட்டப் பெருமையை வெளியிடும் தற்புகழ் விருப்பைப் பிழைகள் மலிந்த புத்தக அட்டைகள்மூலம் பரப்புகின்றது காலத்தையும் பொருளையும், வருத்தத்தையும் பாராது, கண்ணுங் கருத் துமாய்ச் சிந்தை செலுத்தி அரிதிற் பெற்ற பட்டப் பெருமையை அலட்சியம்செய்வ தெம் நோக்கன்று. அகப் பொருளிலக்கணம்பயின்றதன் வயத்தடங்கி யொழுகாது, புறப்பொரு ளிலக்கணமாராய்ந்து அறவுரை தெரிந்து வள்ளுவர்போல், பூங்குன்றனர்போல் அவ்வழியொழுகு மொழுக்கும் அவற்றை மக்களுலகுக்கு விரித்துரைக் கும் அறவுரை நீர்மையுமுடையராதல்வேண்டும் எனக.

பூசல்கள் விளைப்போரெல்லாம் "யாதுமூரே யாவ ருங்கேளிர்" எனும் பொன்னுரையை இன்னுரையாகக் கொள்க. பிறர்நலம் பேணும் நீர்மை எங்கணும் பரவுக. குன்றனரின் பண்டைச் சமதர்ம அறவுரைப் பயன் உலகெங்கும் அண்மையில் நிகழ எல்லாம் வல்ல இறையருள்க.

* * *

இந்த உலகம் ஆண்டவனால் ஒழுங்காய் அமைக்கப்பட்டதே யாயினும் சரி, அணுக்கள் தற்செயலாய்க் கலந்து உண்டானதேயாயினும் சரி, எவ்வித்திலும் ஒழுங்குபட்டு அமைந்து நிற்கிறது. ஒன்றிலிருந் தொன்று வெகு தூரத்தில் சிதறி வெவ்வேறுகக் கிடக்கும் அண்டங்களும் அணுக்களும் ஒன்றை யொன்று பற்றிக் கொண்டு ஒத்துணர்ச்சியுடன் இருக்கின்றன. இவ்வளவு ஒழுங்குடன் நிற்கும் இந்த ஜகத்தை ஆளும் சர்வேசு வரன் ஒழுங்கின்றி இருப்பானு?

—ஆத்மசிந்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ச தேவர்



ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர்

"தலைவர்க ளெல்லாந் தனித்தனி வணங்குந்
தலைவனே யின்றுமென் னுளமும்
மலைவிலென் அறிவும் நானுமிவ் வுலக
வழக்கிலே உயிரிரக் கத்தால்
இலதுகின் றனம்நான் என்செய்வேன் இரக்கம்
என்னுயிர் என்னவே நிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கிலென் னுயிரும்
நீங்குநின் திருவுள மறியும்."

"அச்சாதான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருந்த நிலைகளெல்லாம் அறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகியுயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுந் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி யந்தமிலாத் திருவடியில் யானும்
உடையாயுங் கலந்தோங்கு மொருநிலையும்வேண் டுவனே."

—இராமலிங்கசுவாமிகள்.



மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகாநந்த சுவாமிகள் இந்தியாவுக்குச் செய்த திருத்தொண்டுகள்

(சட்டநூலறிஞர், திரு. எம். பாலசுந்தரம், B. A., B. Sc., அவர்கள்.)

சில நாட்களுக்கு முன்னே எனது நண்பரொருவர், பத்திரிகை வாயிலாக, அமெரிக்காவிலே பல இந்துசமயிகள் இருக்கிறார்களென்று அறிந்தபொழுது, "இது **விவேகாநந்த சுவாமிகள்** அமெரிக்காவிற் செய்த வேலையின் பயன்" என்று கூறினர். அதைக்கேட்ட இன்னொருவர், "விவேகாநந்தசுவாமிகள் மிக்க அழகுவாய்ந்தவரா யிருந்த படியால், இவ்விந்துக்களிற் பெரும்பாலோர் பெண்களா யிருத்தல் வேண்டும்; அத்தோடு இவர்களில் அனேகர் இளமைநீங்கி மூப்படையும் நிலையில் இருக்கிறவர்களா யிருத்தல்வேண்டும்; இவர்கள் ராஜயோக முறையினாலே தங்கள் இளமையைத் திரும்பவும் பெற முயலுகிறவர்களா யிருத்தல்வேண்டும்" என்று கூறினர். இதை நான் கேட்டபொழுது கூறியதாவது;—"நீர் சொல்லுகிறபடி மூப்புநீங்கி இளமையை அடைய இந்துக்களாய் அல்லது விவேகாநந்தசுவாமிகளின் அடியார்களாய்ப் பெண்க ளிருந்தால், உமக்காவது மற்றவர்களுக்காவது வரப்போகிற தின்னென்ன? விவேகாநந்தர் உலகிலே தோற்றியது, இந்தியா மறுபடியும் முன்போல் இளமைப்பிராயம் எய்தித் தலங்கவென்று அறியீர்போலும்! அவர் அத்துவைத வேதாந்தமென்னும் தீபகமருந்தால் இந்தியாவுக்குப் பலம் அளிக்கப் பிறந்தார்."

விவேகாநந்த சுவாமிகளின் காலத்துக்கு முன்னே இந்தியா, பிறநாட்டுப் படையேற்றத்தாலும், பிறதேசத்தவர்கட்கு அடிமைப்பட்டபடியாலும், பலம்குன்றி வயோதிபநிலையை அடைந்து இறந்துவிடும்போலத் தோற்றியது. இந்தியாவை அரசாள வந்தவர்கள், தங்கள் அரசாட்சியும், செல்வமும் இறைவனருளால் வந்தவையென்று காட்டப் புகுந்தபொழுது, இந்தியரிற் பலர், இந்தியா இவ்வளவுகாலமும் உலகில் நிலைத்தது வியைன்றும், முற்கால இந்தியரின் முக்கிய முயற்சியாயிருந்த சமயமும் மூடபக்தியன்றி வேறல்லவென்றும் கொள்ளத் தொடங்கினர். பிறசமயங்களிற் சேர்ந்தவர்களிலிட, மற்றவர்கள் இந்து சமயத்தைத் திருத்தவேண்டுமெனச் சங்கங்களைத் தொடங்கினர்கள். ராஜாராம் மோஹனராயரும், கேசவசந்திர சேனரும், சிவன், விஷ்ணு, காளி என்று பல தெய்வங்களை வைத்தலும், விக்கிரகங்களை ஆலயங்களில் வைத்து வணங்கலும் பிழையென்று போதித்தார்கள். காளி என்று ஒரு தெய்வத்தைப் பெண்ணை நினைத்தல் அவர்களுக்குப் பெரும் தேவதூஷணமாகத் தோற்றியது. தெய்வமென்றால், ஆணாக அல்லது அலியாக இருக்கவேண்டுமென்று கொண்டார்கள். அவர்கள் கொண்ட கொள்கைகளுக்கேற்ப, புரொடஸ்தாந்து (Protestant) கிறிஸ்துசமயிகளைப்போலச் சிலுவங்கள் இல்லாத ஆலயங்களைச் செய்து அக் கிறீஸ்தவர்களைப்போல ஜெபங்களாலும், பிரார்த்தனைகளாலும், சங்கீதத்தினாலும் கடவுளை வணங்கினர்கள். இந்தியாவிலுள்ள ஏனைய ஆலயங்களிலும் விக்கிரகங்களை எடுத்து எறிந்துவிட்டுத் தங்களைப்போல இறைவனை வழிபடவேண்டுமென்று கூறினர்கள். இறைவன் அருவமாயும், உருவமாயும் நிற்பர் என்ற பெரிய உண்மையை மறந்தார்கள். இப்படியாக இந்துசமயம் சீர்கெட்ட நிலையில் இருக்கும்போது, வேதங்களினதும், உபநிடதங்களினதும் உண்மைகளைப் போதிக்கவும், அவைகளை அனுபவ வாயிலாகக் காட்டுவதுடன், இந்துசமய ஆலயவழிபாட்டின் அழகையும், மகிமையையும் இந்தியமக்களுக்கும், மற்றவர்களுக்கும் திரும்பக் காட்டவுமே விவேகாநந்த சுவாமிகளும், அவருடைய குருவாகிய இராமகிருஷ்ண பரமஹம்சதேவரும் திருவவதாரஞ் செய்தார்கள்.

விவேகாநந்தசுவாமிகள், அமெரிக்காவிலே சிக்காகோ நகரிற் கூடிய "சர்வசமய மகாசபை"யில், அத்துவைத வேதாந்தத்தைப் போதிப்பவராய் மாத்திரமல்ல, இந்து சமயத்தின் சகல கொள்கைகளினதும் பெருமையைக் காப்பாற்றும் வீரனுகவும் விளங்கினர். இந்துசமயமென்பது, வேதாந்த சித்தாந்தக் கொள்கைகளை மாத்திரமல்ல, புத்தர்களுடைய சூனியவாதத்தையும், சமணர்களுடைய நிரீச்சுரவாதத்தையும் அடக்கியுள்ளது என்று கூறினர்; "எத்தேயத்து எத்திறத்து எவ்வருணத்து எவ்வுருவின் என்னை ஆய்க்தார்; அத்தேயத்து அவ்வருணத்து அவ்வுருவின் அவர்க்கு நேரானவன்" என்று இறைவன்சொல்லுகிறனென்பது இந்துக்களின் கூற்று. ஆறுகள் பல இடங்களிலும் உற்பத்தியாகிச் சென்று கடலிற் சேருவதுபோல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கங்கள் பல வேறுவகைப்பட்டாலும் ஈற்றில் இறைவனிடத்தில் மக்களைக் கொண்டுசேர்க்கின்றன என்று விவேகாநந்தசுவாமிகள் கூறியபோது, "என் சமயமே மெய்ச் சமய" மென்று வாதாடித் திரிபவர்களுக்குப் பெரும் வியப்பு உண்டானது. சமயங்களெல்லாம் இறைவனது திருவிளையாட்டென்றார்.

வேதாந்தக் கொள்கைதானும் சங்கராச்சாரியரின் காலத்துக்குப்பின், பண்டிதர்கள் தங்கள் வீடுகளிலிருந்து தர்க்கஞ்செய்ய வைத்த ஒரு விஷயமாக இருந்ததேயன்றி, பொதுசனங்களுக்குப் பயன்படக்கூடியதா யிருக்கவில்லை. இதைப் பொதுசனங்களுக்குப் பயன்படச் செய்தவர் விவேகாநந்த சுவாமிகளே. "இந்திய பொதுமக்கள் வறுமையாலும், சாதிக் கட்டுப்பாட்டின் கொடுமைகளினாலும் தாங்கள் மக்களென்பதை மறந்து மிருகங்களைப் போலச் சீவிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், இவர்களில் மிகத் தாழ்ந்தவரிலும், ஆயுதத்தாலும், தீயாலும், பிறிதெவற்றாலும் அழிக்கப்படாததும், பரிசுத்தமானதும், சர்வவல்லமை, சர்வவியாபக முள்ளதுமான ஆன்மா உள்ளது" என்னும் உண்மையை அவர்களுக்குக் காட்டி, அவர்களைத் தாழ்ந்த நிலையினின்றும் உயர்த்துவதற்கு முயன்றார். வறுமையினாலும், மற்றும் கொடுமைகளினாலும் இடுக்கணடைந்த பல்லாயிரக்கணக்கான இந்திய மக்களிலிருந்த பெரிய அன்பே, அவர் இந்தியாவுக்குச் செய்த திருத்தொண்டுக்குக் காரணமாயிருந்தது. அமரிக்காவில் அவர் ஒரு ஞானசூரியனாக, தமது அறிவு, நா வல்லபம் என்னுங் கிலகிளைப் பரப்பி பெருங் கீர்த்தியோடிருந்த போது, தமது சகோதரராகிய ஏழை இந்தியரை ஒரு போதும் மறந்தார் அல்லர். இரவில் தாம் படுக்கிற அறையில் கட்டிலிற் படாது நிலத்தில் படுத்துக்கொண்டு உலகமாதாவாகிய அம்மையாரை நோக்கித் 'தாயே, எனக்குப் புகழ் என்? பெரியவர்களின் மதிப்பு என்? என் ஏழை இந்திய சகோதரர் வறுமையால் உண்ண உணவின்றி வருந்துகிறார்கள். இவர்கள் துன்பம் நீக்க ஒரு வழி செய்யாயோ' என்று பலவாறாகக் கூறி மன்ங் கசிந்து அழுவார் என்று எழுதியிருக்கிறது. விவேகாநந்த சுவாமிகளின் துறவின் பெருமையை அறிதற்கு, அவர் இந்திய ஏழைச் சனங்களில் வைத்த பேரன்பை அறியவேண்டும். சந்நியாசியாக இருத்தல் அவருக்குக் கஷ்டமான காரியமன்று. அவர் பிறவிச் சந்நியாசி. மற்றத் துறவிகளைப்போலத் தியானத்தில் இருக்க அவருக்கு அவாவிருந்தது. ஆனால் இந்தியமக்களின் தாழ்ந்த நிலையை நினைந்து அவர் தியானத்தில் நிற்பதை விட்டுவிட்டார். இந்தியரின் வறுமையை நினைத்து மனம் பொறுக்கமாட்டாது 'பட்டினியாயிருப்பவனுக்குக் கடவுளேயென் ஆலய வழிபாட்டைவேன்' என்று பலமுறை கூறியிருக்கிறார். மார்க்கம் மார்க்கமென்று சொல்லி, சமய ஆசாரத்தையே கைக்கொண்டு மற்றவர்கள் எக்கேடு கெட்டாலுமென்; என எண்ணும் தன்னலமுடையாரை அவர் எப்போதும் கடிந்து பேசுவார். ஒருமுறை ஒரு செல்வனுக்கு பஞ்சத்தால் இறக்கிறவர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தபோது, அச் செல்வன் அதனால் நமக்கென்ன; அவர்கள் கர்மத்துக்கு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றான். இதைக்கேட்ட சுவாமிகள் ஒரு சிங்கம்போல வெழுந்து மூடனே! உன்னைப் போன்றவர்கள் கடவுளுக்குப் பக்தி செய்கிறது எப்படி? நீ நோயால் பிடிக்கப்படுகிறபொழுது அது உன் கர்மத்தால் வந்ததென்று விட்டு வைத்தியனைத் தேடாது விடுவாயோ? மருந்து குடியாது விடுவாயோ? அல்லது வைத்தியன் உன்னைக் கண்டவுடன் உன் கர்மத்தால் உனக்கு நோய் வந்தது; ஆகையால், உனக்கு மருந்து தரமாட்டேன் என்று சொன்னால் உனக்கு எப்படியிருக்குமென்றார். ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் மேலான தொண்டென்று போதித்ததுமன்றி, அதை இந்தியருக்குக் காட்டும்பொருட்டு இராமகிருஷ்ண சங்கத்தையும் நிறுவினார்.

தீண்டாச் சாதியாரென்று இந்திய மக்களிற் சிலரை விலக்கிவைத்தல் அவருக்குப் பெருந் துக்கத்துக்கிடமாயிருந்தது. அவர், அமரிக்காவுக்குப் போகுமுன், பரிவிராஜக சந்நியாசியாக இந்தியாவிலுள்ள ஊர்களெல்லாம் நடந்து திரிந்தபொழுது, அவர் மகாராஜாக்களின் அல்லது செல்வர்களின் மாளிகைகளில் மாத்திரமன்று ஏழைப் பறையர் வீடுகளிலும் தங்கியிருப்பார். அப்படிப் பறையர் வீட்டிலிருக்கும்போது அவர்களில் அநேகர் நல்லகுணம் நல்லொழுக்கமுடையவர்களாயிருத்தலைக் கண்டு அதை வியந்து மற்ற உயர்ந்த சாதியிலுள்ளவர்களென்றவர்களுக்கு எடுத்துக்காட்டினார். சாதிபேதம், சமயபேதமின்றி இந்தியரெல்லோரும் பாரதமாதாவின் புத்திரர்களும் புத்திரிகளுமென்று நினைத்து, தமது தாய் நாடு மேன்மையடைய முயலவேண்டுமென்று போதித்தார். அப்படி முயலும் வழியையும் காட்டினார்.

இந்தியப் பெண்கள் கல்வியற்றிருத்தல் தேயத்துக்கு ஒரு இழுக்கென்று பெண்களுக்குப் பாடசாலைகளை நிறுவமுயன்றார். அவர் செய்த தேயத்தொண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூற விரியும். அவர் தனக்குப்பின் இந்தியாவில் வந்த தேசாபிமானிகளுக்கு ஒரு வழிகாட்டியாக விருந்தார். மகாத்மாகாந்தி இந்திய வறியவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சாதியாருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்பதற்கு விவேகானந்த சுவாமிகள் முன்மாதிரியாக நின்றார். காந்தி ஏழைகளுக்குச் செய்யுந் தொண்டினுள் தரித்திர நாராயணன் சேவை என்று விவேகானந்த சுவாமிகள் வைத்த பெயரையு மெடுத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் உருவத் திருமேனி

(ஏழாலை, திரு. மு. ஞானப்பிரகாசம், B. Sc., அவர்கள்.)

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் உருவங் கடந்தவர்; நாமங் கடந்தவர்; குணாதீதர்; அளவறுப்பதற் கரியவர்; ஆயினும் ஆன்மாக்கள் தம்மை அறிந்து உய்யும்வண்ணம் கருணையின்வடிவுதாங்குவர். அக்கருணை பின் வடிவையே சிவசக்திஎன்கிறோம்; அச்சிவசக்தி ஆன்மாக்களது மல வேறுபாட்டை நோக்கி, அவைதம் நிலைக்கேற்ப, வேறு வேறு தொழில்களைச் செய்யும். தொழில் வேறுபாட்டால் சிவனென்றும், சதாசிவனென்றும், மகேசுவரனென்றும் நாமம் பெற்று நிற்கும். அருவமென்றும், அருவுருவமென்றும், உருவமென்றும் உருவங்கூடி நிற்கும். இவைதம்மால் உருவமும் நாமமும் கூடிநின்ற பரமசிவத்தின் கருணையின் வடிவே மகேசுவரனென்றறிக.

இம் மகேசுவரமூர்த்தியும் அளவறுப்பதற் கரியவர். ஆயினும் ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு அளவறுத்து நிற்பர். அவ்வாறு நிற்பதும் சிவாலயத்திலும், மெய்யன்பரிடத்தும், அவரது சிவவேடத்திலுமே. இதனலன்றே சமயங்கள் யாவும் மூர்த்தி வழிபாடும் அடியார் வழிபாடும் செய்துவருகின்றன. இரண்டொரு சமயங்கள் மூர்த்திவழிபாட்டைச் சொல்லளவில் மறுத்து நிற்பனவாயினும், காரியத்தில் அவைகளும் செய்தே வருகின்றன. முழுமுதலிறைவனுக்கு எங்கே நாமம் வைத்து அழைக்கிறார்களோ, அங்கே உருவமுண்டு. அங்கே மூர்த்தியுண்டு. அங்கே மகேசுவரரின் அருட் பிரசாதமுமுண்டு. அதனால் ஒருவரேனும் மூர்த்தி வழிபாட்டை மீறமுடியாது. மறுக்கவும்முடியாது. மகேசுவரன் ஆன்மாக்கள் தம்மை வழிபடும் பொருட்டுக் கொண்ட சிவலிங்கத் திருமேனியை, வெறுங் கல்லாகக் காண்பர் சிலர். அவர்க்கு அப்பெருமானர் அருள்புரியார்; அத்திருமேனியை நந்தம் கால் கை போன்ற ஒன்றாக நினைப்பர் வேறுசிலர். அவர்க்கும் அப்பெருமானர் அருள்கிடைப்பது அரிது. இன்னும் சிலர் அந்தச் சிவலிங்கத் திருமேனி, எல்லாம் வல்ல சிவபெருமான், சிறிபேங்கள் பொருட்டு உருவந் தரித்து, நாமந்தரித்து நின்ற அருட்டிருமேனிபாகும் என்று உணர்ந்து வணங்குவர். அவரே அப்பெருமானரது அருள் பெறுவர். இவ்வாறே அடியாரைப் பூசிப்பவரும் பல வேறுவகை

இதோ திருநாவுக்கரசு சுவாமிகளே உங்கள் முன்னிலையில் தெய்வச் சேக்கிழார் அழைத்துவிடுகிறார். எவ்வாறு வணங்குகுங்கள்.

"சிந்தையிடை யருஅன்பும், திருமேனி தனிலசைவும்
கந்தைமிகை யாங்கருத்தும், கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும், வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத், தரசுமெதிர் வந்தணைய"

ஒரே ஒரு உணர்வு. அதுவும் காலங்கடந்த உணர்வு என்பார். "சிந்தை இடையறு" என்றும், காலங்கடந்த இடையறு உணர்வு இயல்பாகவே சிவபெருமானரது திருவடியைத் தடவிவரும் இயல்பினதாய், பேரன்புக் குறைவிடமா யுள்ளதென்பார் "சிந்தை இடையறு அன்பு" என்றும், அந்தச் சிந்தை இடையறு உணர்வையும் அதனுள்ளே தோன்றும் அன்பையும் பூதவுடம்பு தாங்கலாற்றுதென்று, பஞ்சபூதங்களினைத்தும் தத்தம் தன்மாத்திரைகளில் ஒடுங்கவேண்டுமென்று அசைந்தன என்பார் "திருமேனிதனிலசைவும்" என்றும், அவ்வாறு அசைந்துநின்ற திருமேனி குறித்துநின்றது. கந்தை தானும் கருத்திலில்லாத பரவெளியாகிய அவரது உள்ளத்தையே னன்பார், "கந்தை மிகையாங் கருத்து" என்றும், கந்தைதானும் கருத்திலில்லாத பரவெளியிற் சஞ்சரிக்கும் அச்சிவனடியார் உலகில் மற்றவர்காணநின்றது தொண்டினைப்போற்றி, அழுது உலகினைக் காக்கவே என்பார், "கையுழவாரப்படையும், வந்திழி கண்ணீர்மழையும்" என்றும், கண்ணீர் சொரிந்துநின்ற அவரது திருமேனியால், இயல்பாய்ப் பொலிந்த திருநீறே இன்னும் பொலிந்து விளங்கியதென்பார். "வடிவிற்பொலி திருநீறும்" என்றும், வடிவும் திருநீறும் ஒன்றுக்கொன்று ஒத்துநின்ற இடத்தே தோன்றும் சிவவேடமே எல்லையில்லாத் தில்லையை எமக்கு உதவுமென்பார். "அந்தமிலாத் திருவேடம்" என்றும், கூறினர். திருநாவுக்கரசு சுவாமிகளில் மகேசுவரமூர்த்தியே ஒரு தனி இடம் பெற்று விடுகிறாராம். மற்றும் அடியாரிடத்தில் தயிரில் நெய்போல் விளங்குமவர் இவரிடத்தில் நெய்யில் நெய்யாய் விளங்குகிறாராம். திருநாவுக்கரசுவின் திருமேனியோ, மகேசுவரமூர்த்தியின் கருணையின் அசைவோ என்று பிரித்தறிய முடியாதிருக்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தாம். திருநாவுக்கரசு சுவாமிகளே சிவவேடம்; சிவ வேடமே மகேசுவர மூர்த்தமென்பதை அப்படியே அழுத்தமாகக் காட்டிவிடுகிறார் தெய்வச் சேக்கிழார் பாருங்கள். ஆயினும் நாம் காண்கிறோமா? காணுவிடில் இக்கதையைக் கேளுங்கள்.

மாயாபுரி என்பது ஒரு நகரம். அங்கே ஒரு சந்தி எத்தனையோ வீதிகள்வந்து சேர்வன. அவை அதி விசித்திரமானவை; சில மேல்நோக்கிச் செல்லும். ஆனல் கீழே செலுத்திவிடும்; சில கிழ்நோக்கிச் செல்லும்; ஆயி னும் மேலே உயர்த்திவிடும். இந்த அபூர்வமான நகரில் ஓர் அரசகுமாரன் அரண்மனையை விட்டுநீங்கிப் பல நெடுங்காலம் அதனை மறந்தும்விட்டான். அவ்வூர்ச் சந்தி யில் நிற்பது, வருவார் போவாரைப் பார்ப்பது, அவ ருடன் ஒருவீதியால் போவது, இன்னெரு வீதியால் தனித்து வருவது, மீண்டும் சந்தியில் நிற்பது; இவையே அவன் தொழில். வழக்கம்போல் இவ்வாறு சுழன்று திரிந்தவன் ஒருநாள் சந்தியில் நின்றபடியே வாய்விட்டு அலறினன். பின்னர் ஓய்ந்தான். அந்த ஓய்விலே அவ னது அரண்மனை விளக்கு அதி தூரத்தில் மின்னியது. தான் அரசகுமாரனென்றுணர்ந்தான். நடந்து சென்றான். வீதியில் சனசந்தடி குறைவு. மாயாபுரியில் கள்வர் பயம் அதிகம் ஆயினும் விளக்குவெளிச்சம் துணைபுரியுமென்ற துணிவுமுண்டு. அந்த விளக்குவெளிச்சமே வழித்துணை யாய்நின்று அழைத்துச்செல்ல, அவன் பின்தொடர்ந்து சென்றான். தாமெடுத்த பயணம் இனிது நிறைவேறு மாறு அவ்வெளிச்சத்திற்கு வழிபாடு இயற்றிவருவான். இவ்வாறு இயற்றி இயற்றிப் பல நெடுந்தூரம் சென்றவ னுக்கு அரண்மனை கிட்டினற்போலிருந்தது. விளக்கு வெளிச்சம் மாறிச் சுடராய்த் தெரிந்தது. பெரிதாய் விளங்கியது. துணிவும் கூடியது. கள்வர் பயமும் குறைந் தது. தோன்றிய அச்சுடரே தமது வழித்துணையென் பதை உணர்ந்தான். அதனின் ஓர் சிறுபகுதியே தாம் முன்னர் கண்ட விளக்கு வெளிச்சமென்றும் அறிந்தான். அச்சுடரையே நோக்கி நோக்கி மீண்டும் நடந்து சென் றான். அதுவும் வளர்ந்து வளர்ந்து விளங்கியது. சுடரின் கருணைத் திறம் புலனுயது அநுபவிக்கிற தனது ஆற்ற லின் அளவை அளந்து அளந்து, அந்தச் சுடர் அளவ றுத்து அளவறுத்துநிற்கும் அருமையை உன்னி உன்னி மனமுருகினன். அன்பனனன். வழியோரங்களில் நின்று நின்று, அச்சுடர்க்கு அவன் செய்யும் வழிபாடு இப் பொழுது ஒரு தனிவகை. ஒரு நாமமில்லா அச்சுடர்க்கு ஒரு நாமம் ஏற்றுவதில் அவனுக்கு ஒரு தனிவிருப்பம். ஓருருவமுமில்லா அதற்கு ஒருஉருவம் வைத்துவிட்டால், அவனுக்கு அது ஒரு தனி இன்பம். அதிகமேன் அகத் திலே தான் தூரத்தில்கண்ட ஒண்சுடரை, புறத்திலே எடுத்துவைப்பது, வைத்து அழகினைப்பார்ப்பது அவன் வழிபாடு. இவ்வாறு அகத்திலும் புறத்திலுமாய் வழி பாடு நீண்டகாலமாக இயற்றிவந்தான். அந்தமின்றி மன முருகத்தொடங்கிவிட்டது. அந்த உருக்கத்தினுள்ளே புறமென்பது மறைய, அகமென்பதும் மறைந்து சுட ரும் மாறிச் சோதியாய் எழுந்தது நெடுந்தூரம் சென்று அருட்கரையைப்பற்றிவிட்டான். ஆயினும் உருவநாமங்க ளாகிய கள்வர் இன்னும் பற்றற நீங்கவில்லை. வாசனை மாத்திரையாய்ப் பின்தொடர்ந்து சென்றனர். பாருங்கள் அகத்தே அரண்மனையை நோக்கிச் சென்று, அருட் கரையை அடைந்த இப்பொழுதுகூட, உருவ நாமங்க ளாகிய கள்வர் தொடர்ந்துசெல்லப் பார்க்கிறார்கள். இந்தக் கள்வராகிய உருவ நாமங்கள், வழிதோறும் வெவ்வேறு இயல்புடன் அரசகுமாரனுகிய ஆன்மாவை வழிமறித்து நிற்கிறார்களே என்று, அரமனைச் சோதியாய்த் தோன றிய முழுமுதலிறைவனும் வேறு வேறு இயற்கையும், வேறு வேறுருவும் ஒன்றற்கொன்று வியாபகமாய்த் தாங்கித் தன்மகனுக்குத் தாமாந் தன்மையை உதவிப் பட்டத்தைச் சூட்டிவைத்தான்.


மேற்கூறிய கதையினுலும் பிறவற்றினுலும், சரி யைத்தொண்டராயினும்சரி, கிரியைப்பத்தராயினும்சரி, யோகச்சித்தராயினும்சரி, ஞானிகளாயினும்சரி. சிவபெ ருமானது அருள்உருவத் திருமேனியை ஒன்றற்கொன்று வியாபகமான நிலையில் வணங்கிவருகிறரென்பதும், அவ் வாறு வணங்கிவருவது உருவநாமங்களில் பயின்ற எமக்கு மிகவும் இன்றியமையாததென்பதும், உருவ நாமங்கள் கடைசிவரைக்கும் தொடர்ந்துவருமாயினும் வழிபாட் டின் சிறப்பினுல் பற்றறக் கழிந்துவிடுமென்பதும், அவை பற்றறக் கழியவே எஞ்சிநின்றது, சிவபெருமானர் எம் மைத் தாபாக்கும் முடிவாகிய முத்தியாமெனவும் கண்டு கொள்க

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம்காம் அல்லற்படை வாராமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு சதாம்வீதி



கொழும்புச் சுப்பிரீங்கோட்டு வளவிலுள்ள டச்சுக்கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(Photo & Block by Plate)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுக்கிரதசை

—"தநீசி."

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் களுக்கு மத்தியிலே ஸ்ரீ வேங்கடராமையா நியமிக்கப்பட் டார். அவருக்குத் தமிழ் கற்பிக்கும்படி அவருடைய தமையனர் எழுதிய கடிதம் முன்னமே அப்புலவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. 'அன்று ஓருநாள் திருமலை ராயனுடைய அவைப் புலவர்கள் காளமேகத்தை ஏற இறங்கப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்' என்று சொல்லு வது ஒரு பழங்கதை. நடந்தது நடவாததைக் கண்டது ஆர். இன்றைக்கு உண்மையாகவே அந்தப் புலவர்கள் ஸ்ரீ ராமையாவைக் கண்கொட்டாமல் ஏற இறங்கப் பார்த் துக்கொண்டே யிருந்தார்கள்.

பெரும்பாலாருடைய பார்வை வயிற்றுப் பிரதேசத் தில் தங்கிவிட்டது. சிலர் "இந்த வயிறு எங்கேதொடங்கி எங்கே முடிகிறது! இதன் சுற்றுப் பிரமாணம் என்ன! உயர மென்ன!" என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் "அந்த உதர பிரமாண்டத்தை வலம் வருகின்ற வேட்டியின் நீளம் எவ்வளவு" என்று கணக்கிடத்தொடங் கினர். மற்றொருவர் "வால் போல் வளர்ந்து கீழிறங்கிப் பின்பு மேல் எழுகின்ற தாறு வேட்டியின் வேறுனதோ ஒன்றோ" என்று ஆராய்ச்சி நடத்தினர். வேறொருவர் "வேட்டிக்குமேலே அரையைச் சூழ்ந்து வருகின்ற கச்சில் எத்தனை சால்வைகள் பொருத்தப் பட்டிருக்கின்றன" என்று அடிக்கடி எழுந்து பார்த்தார். "வயிற்றுக்குத் தலை யெம்மாத்திரம்! தலைக்குக் குடுமி எம்மாத்திரம்! ஒவ்வா அளவுகளை என்ன செய்வது" என்று ஒரு சிலர் திகைத் தார்கள். "கால்களைக் கண்டவர்கள் கால்களையே கண் டார்கள்; கைகளைக் காணுகிறவர்களும் அப்படித்தான்" என்று ஒருவர் இராமாயணம் பாடினர்.

உருண்டு திரண்ட கைகள்; உரல் போன்ற தூணைக் கால்கள்; ஒன்றோடொன்று மோதுகின்ற தொடைகள்; பிடரிமடிப்புக்கள் எல்லாம் ஒவ்வோர் புதுமையைப் புலப் படுத்திக் கொண்டேயிருந்தன. தாம்பூலந் தரித்துச் சிவந்த வாயும், அகன்று நீண்ட மூக்கும், தலையசையாமல் தாமே புதப்பட்டு அங்கும் இங்கும் அசைந்து நோக்குங் கண் களும் எவர்களுக்கும் அச்சத்தை விளைத்தன.

*'ஒரு சகோதரர்' என்ற கதையில் ஒருபகுதி.

ஒருபுலவர் "இவன் கும்பகர்ணன்" என்று தீர்மா னித்துக்கொண்டு, மற்றவர்களையும் ஒத்துக் கொள்ளும்படி நெருக்கினர். ராமையாவின் தோற்றம் எப்படியிருந்தாலும் பரவப்பூசிய விபூதிப் பிரசாதங்களும், மதுரைச் சந்தன மும், மீனாக்ஷிபம்மையின் குங்குமமும் மலையருவி போல எழுந்து வளைந்து தொங்குகின்ற உபவீதத்தோடு சேர்ந்து அப்புலவர்களின் மனசைக் கொள்ளைகொண்டு விட் டன. இங்ஙனமாகக் காட்சியநுபவத்தில் சிறிதுநேரங் கழிந்தது.

அதன் பிறகு "இராமையாவை எந்த வகுப்பில் வைப்பது" என்ற பிரச்சினை, எடுத்துக்கொள்ளப்பட்டது. சிலர் "எழுத்துப் பரீக்ஷை யொன்று நடத்தியாகவேண் டும்" என்றார்கள். வேறுசிலர் "வாய் மொழிப் பரீக்ஷை போதுமானது" என்றார்கள். இதற்கிடையில் ஒருபுலவர் எழுந்து "குற்றிய லுகரத்துக்கும் அன்மொழித் தொகைக் கும் பேதம் யாது"? என்று கடாவினர். "தஞ்சாவூர்ச் சத்திரத்துக்கும் திருவையாற்றுப் பெரிய சத்திரத்துக்கும் இடைத்தூரம் பதின்மூன்றுகல்; அரைமணி நேரத்தில் பஸ்வண்டியிற் போகலாம்" என்ற மறுமொழி வந்தது.

இலக்கிய தருக்க பாடங்களிலும் பரீக்ஷிக்கிறதற்குப் பலர் எழுந்தார்கள். இடையிடையே சிரிப்பும் சம்பாஷணை களும் நடைபெற்றன. தலைமைப் புலவரின் பார்வை எங் கும் அமைதியை நிலவச்செய்தது. எழுந்த புலவர்கள் இருந்து விட்டார்கள். தலைமைப் புலவர் சொல்லுகிறார்:—

"அப்பா! இராமையா! உனக்காவது உன் அண்ணனுக்காவது தமிழ்ப் பாஷையில் ஏன் துவேஷம் ஏற்பட வேண்டும். அந்தப்பாஷை தன்னளவில் கிடந்துபோகட் டும். உன் அண்ணனிலும் பார்க்க, நீ பெரிய வருமானம் பண்ணுகிறதற்கு வழியிருக்கிறது. இந்த மதுரைமாநகரில் எத்தனையோ நாடகசபைகள் இருக்கின்றன. அத்தனை சபையும் உன்னை விரும்பி வரவேற்கும். எந்த நாடகத்தி லும் நீ விதூஷகனுக்கு வரலாம். இப்போழுது நடக்கும் கிருஷ்ண லீலையில்தானும் உனக்கு இடம் இருக்கிறது. கம்சன் அனுப்பிய பூதனாதேவியின் தர்மபுருஷாளாகக்கூட நீ நடிக்கலாம். நீ அதற்குத்தான் லாயக்கு. போய் வா."

ஒருவனை முகத்தெதிரே யிகழினும் பின்னிகழாதிருத்தல் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமையாவின் தலை அங்கு இங்கு சரிய முடியாதாயினும், ஒருபக்கத்திற்குச் சரிவதுபோற் காட்டி மரியாதை செய்து, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டது. தெருவிலே செல்லும்போது முன்னும் பின்னும பக்கங்களிலுமாக அநேகபிள்ளைகள் ராமையாவைச் சூழ்ந்துகொண்டு சென்றார்கள். இதுவிஷயம் ராமையாவுக்குத் தெரியாது. எட்டுமுழ விட்டார்த்தமுள்ள ஒரு வட்டப் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களே ராமையா எவ்விதம் பார்க்க முடியும். எங்களுக்குப் பிடரியும் ராமையாவுக்கு இக்கப் பிரதேசமும் ஒன்றுதான். தொக்கிக்குக் கீழும் புறங்காலின் ஓரங்களிலும் நடக்கிற சம்பவங்கள் ராமையாவுக்குத் தெரியாமல் இருப்பது தூதனமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்துக் கொண்டு போவது போன்ற ஒரு காட்சியை அந்தத் தெருவிலே ஸ்ரீ ராமையா செய்து வைத்தார்.

எதிரிலே தூரத்தில் வருகின்ற வண்டிகள் மோட்டார்கள் வேறுவழிகளில் விலகியும், தெருவோரங்களில் ஒதுங்கியும் சென்றன. இராசப்பிரதிநிதி வரப்போவதாக அந்தத்தெரு சிறிது கர்வங்கொண்டது. அங்கும் இங்கும் செல்லுகின்ற பட்டணத்துச் சனங்கள் ஸ்ரீ ரங்கப் பெருமாளுக்கு யாரோ இடும்பவாகனஞ் செய்தனுப்புவதாகப் பேசிக்கொண்டு போனார்கள். ஒரு மனிதனுக்கு நெடுங்காலம் இருந்துவந்த ஒரு விக்குள் வருத்தம் ஸ்ரீ ராமையாவின் தரிசன விசேஷத்தினாலே திடீரென்று நின்று போய்விட்டது. அப்படியே ஒரு சிறுவனுக்கிருந்த முறைக் காய்ச்சலும் போய்விட்டது.

அங்கேயுள்ள நடனசபைகளுள் பாலர் கானசபை மிகப்பிரசித்தமானது. அந்தச் சிறுவர்கள் அந்தச்சபைக்கு ஸ்ரீ ராமையாவை மெல்லமெல்லக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். சபை முதலாளி அவரை வரவேற்று வேண்டிய சௌகரியங்கள் செய்துவைத்தார்.

அன்றிரவு சாரங்கதரா நாடகம். அது நடந்துகொண்டிருக்கும்பொழுது இடையிலே ஒருமுறை ராமையாவைக் காட்டுவதாக உத்தேசித்தார்கள். ராமையாவுக்கு விசேஷ அலங்காரமொன்றும் செய்துவைக்கவில்லை. விபூதி சந்தனம் குங்குமம் இந்த மூன்றோடும் அடுத்த இயற்கையான அலங்காரம் மாத்திரம் செய்யப்பட்டது. கையில் ஒரு தருப்பைக்கட்டும் கமக்கட்டுள் ஒருமான்றோற் சுருளும் மாத்திரம் விசேஷமாகச் செய்து வைக்கப்பட்டன.

திரையை மெல்ல மெல்ல நீக்கி, கொப்பூழ்க் குட்டையை முதலிற் காட்டி, அதன் பிறகு செப்பாற் செய்யப்பட்ட ஒரு பெரிய குடில்போன்ற வயிற்றுப்பிரதேசத்தின் எகதேசத்தையும், பின்பு இடைவெளியின்றி இணைந்த இரு தூண்கள் போல உருண்டு திரண்ட உதடுகளையும், அவற்றுக்குமேல் நீண்டு சழிந்த மூக்கின் பரப்பையும் படிப்படியே காண்பித்து, அதற்குமேல் குடில்களின் முகட்டில் குவிந்து முடிந்த ஓரேபொரு முடிச்சு—அதனையுந் தோற்றுவித்துக்கொண்டு, அந்தச் சரீரப் பிரமாண்டத்தோடு கொட்டாது விழித்துக்கொண்டிருக்குங் கண்கள் முழுவதிலும் ஏககாலத்தில் நுழைந்து எங்கும் பிரசன்னமாப் ஸ்ரீ ராமையா விளங்கினார். அவருடைய புறப்பட்ட கண்கள் முகக்கட்டையை விலகி உருண்டு திரண்டு அங்குமிங்கும் புரண்டு பிறழ்ந்தன.

எங்கும் ஓரே அமர்க்களம். கால்மணி—அரைமணி—முக்கால் மணி—ஒருமணியும் ஆய்விட்டது. இன்னும் அடங்கவில்லை.

தோள்கண்டார் தோளேகண்டார்
தொடு 'கடற் கருங்கல்' போன்ற
தாள்கண்டார் தாளேகண்டார்
தடக்கைகண் டாருமஃதே.

இ - ள். தொடுகடல் ஈண்டுப் பாற்கடல். கருங்கல் - மந்தரமலை. ஏனைய வெளி. ஏகாரங்கள் பிரிநிலை. விரிப்பிற் பெருகும். அவ்வளவில் அமைக.

எதற்கும் ஒரு அருமை வேண்டுமல்லவா? திடீரென்று திரை வீழ்ந்தது. ஒருசிலர் அந்த நாடகமேடையில் ஏறித் திரையைப் பிடித்துக் கிழித்து ஏனைய பாத்திரங்களை வாராமற்செய்வோம் என்றுகூட எண்ணினார்கள். என்ன செய்வது! அந்த இடம் பொறுத்த நகரம். பொலிஸ் பந்தோபஸ்து அதிகம். ஒருவாறு பொறுமை குடிகொண்டது. எல்லாரும் ராமையா! ராமையா!! என்று கூப்பிட்டார்கள். ராமையா ஒன்றும் பேசாமலே போய்விட்டார்.

மற்றநாள் காலையிலே முதலாளியின் மாளிகையை நூற்றுக்கணக்கான சனங்கள் முற்றிக்கையிட்டார்கள். முதலாளிக்கு விஷயம் விளங்கிவிட்டது.

உ
இன்று காலை 10 மணி தோடக்கம்
ஸ்ரீ ராமையா
தரிசனத்துக்கு வைக்கப்படுவார்.
டிக்கற்: சதம் 25
மாணவர்களுக்கு மாத்திரம் 10 சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதிய விளம்பரப் பலகை வாசலிலே தொங்க விடப்பட்டது. வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் சிக்கிரம் சிக்கிரமாக நடைபெற்றன. எட்டுமணி தொடக்கம் டிக்கற் விற்பனை நடந்துகொண்டிருந்தது.

பத்துமணி யடித்தது. சனங்கள் ஒருவர்மேலொருவர் ஏறிவிழுந்து உள்ளே நுழைந்தார்கள். உடனே கதவு பூட்டப்பட்டது. ஒருமுறை வந்தவர்கள் ஐந்து நிமிஷத்துக்குமேல் தரிசனஞ் செய்யக்கூடாது. அவர்கள் வெளியிலே போகிறதற்கு வேறொரு வாசல் வகுக்கப்பட்டிருந்தது. ஐந்து நிமிஷத்துக்கு ஒருமுறை ஒரு மணியடிக்கும். அப்பொழுது வாசற்கதவு திறக்கப்படும். உள்ளே நிற்கிறவர்கள் வெளியிலே போவார்கள். வெளியிலே நிற்கிறவர்கள் உள்ளே வருவார்கள். இந்த ஒழுங்குகளைப் பல பொலிஸ் கனவான்கள் நடத்திவைத்தார்கள்.

உள்ளே ஒரு நீளச்சுவரை இடித்து இருப்புச் சலாகைகளைநாட்டி ஒரு நீண்ட பன்னல் செய்யப்பட்டிருந்தது. அதற்குப் புறத்திலே நின்றுதான் தரிசனஞ் செய்ய வேண்டும்.

ஒரு பெரிய விஸ்தாரமான அறை. அதற்கு நடுவிலே ஒரு கருங்கல்லுப் பீடம். அதில் ஒரு குறுகிய இருப்புலக்கையை நாட்டி, அதன் நுனியில் பல பலகைகளினால் ஆக்கப்பட்ட ஒரு வட்டவடிவமான பலகை சுழன்றுவரக்கூடியவாறு பொருத்தப்பட்டிருக்கின்றது. வட்டப்பலகையின் விட்டம் இருபதுமுழம். பலகையின் ஓரங்களில் சுற்றிவரப் பல கால்கள். அக் கால்களின் அடியில் இரும்பினாலான பீலிச் சில்லுகள். அந்தச் சில்லுகள் வட்டவடிவாக நிலத்திற் பதித்த இருப்புத் தண்டவாளத்தில் இயைந்திருக்கின்றன. சுவரிலே ஒரு மின்சாரப் பொத்தான். அதை அழுத்துகிறதற்கேற்றவாறு அந்த ஆசனம் சுழன்றுவரும்.

அந்த ஆசனத்தில் பல மெத்தைகள், திண்டுத் தலைணைகள் ஏற்றவிதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அந்தத் திவ்விய ஆசனத்தின் மீது ஸ்ரீராமையா அமர்ந்தருளினர்.

படுக்கிறதற்கு — சிறிது சாய்கிறதற்கு — நிமிர்ந்து வீற்றிருக்கிறதற்கு எதற்கும் அந்த ஆசனத்தில் இடம் உண்டு. மல சல விமோசனம், திருமஞ்சனம், போசனம், சயனம் இத்தியாதி சத்கருமங்களுக்கெல்லாம் சுலபமாக இனிது முடிகிறதற்கு அந்த ஆசனம் இடங் கொடுத்துக்கொண்டிருக்கின்றது.

கை கால் பிடிக்க — அவயவ விசேஷங்களை உழக்க — பரிமளகந்த புஷ்பாதிகளால் அலங்கரிக்க ஒவ்வொரு கருமத்துக்கும் ஒவ்வோர் ஆள். வேண்டிய உணவுப் பண்டங்களை ஒருமுறை நினைக்கவேண்டியது. அவையெல்லாம் வந்து குவிந்துகொண்டேயிருக்கும்.

மேலே மின்சார விசிறிகள் வேண்டிய அளவுக்கு வீசிக்கொண்டிருக்கின்றன. பக்கங்களிலே பார்வைக்கினிய பொருள்கள். இந்திரவாழ்க்கை ராமையாவின் வாழ்க்கைக்கு எம்மாத்திரம்? இரவில் ஒருமுறை நாடகத்துக்குப் போய் வரவேண்டியது. வேறு எதற்கும் இடம் பெயரவேண்டாம்.

அநந்தநாராயணன் — திருவரங்கப்பெருமாள் ஆதிசேஷனில் எழுந்தருளியதாகச் சனங்கள் பேசிப்பேசித் தரிசனஞ் செய்தார்கள். அங்கே அந்த யன்னலுக்கருகில் ஒரு சல்லிப்பெட்டி. நாடகநாட்களில் முதன்முதல் விலையாகும் டிக்கற் பணத்தை அதிற் போட்டுவைப்பது வழக்கம். அறியாமை நிறைந்த பெண்கள் திருவரங்கப் பெருமாளுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கையை அதிலே தானே செலுத்திவிட்டார்கள்.

ராமையாவின் முதுகுப்புற விசேஷங்களை — பக்க சமாச்சாரங்களை யாராவது பார்க்க விரும்பினால், அங்கே நிற்கிற ஒருவர் அந்தப் பொத்தானை ஒருமுறை அழுத்துவார். உடனே அந்த ஆசனம் மெல்லமெல்லச் சுழன்று வரும். அப்பொழுது ராமையா சிரிப்பார்.

அந்த வாரம் முழுவதும் பத்திரிகைகளிலெல்லாம் ராமையாவின் படங்களும், பிரதாபங்களுமே வெளிவந்தன. பல நகரங்களிலுள்ள நாடக முதலாளிகள் ராமையாவை அனுப்பிவைக்கும்படி தபால், தந்திகள் ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கில் அனுப்பிவைத்தார்கள். அந்த முதலாளி சீதாராமையன் அவற்றையெல்லாம் புதைத்து வைத்துவிட்டான். ராமையாவுக்குப் பூலோக சமாச்சாரமே தெரியாது. இதுநிற்க;

ஒருநாட் காலையில் கல்யாணசுந்தரம் ஐயர் தம்மிடம் வந்த சிலரோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது தபாற்காரன் சில கடிதங்கள், பத்திரிகைகள் கொண்டு வந்து கொடுத்தான். சுந்தரம்ஐயர் ஒரு ஆங்கில தினசரியை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். முதற்பக்கத்தில் ராமையாவின் ஒவ்வோர் அவயவத்துக்கும் தனித்தனி படங்கள்; மற்றப் பக்கத்தில் முழுஉருவத்தின் பிரமாண்டமான படம்; அடுத்த பக்கத்தில் நாடகபிரதாபங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசன விசேஷங்கள். நாலாவது பக்கத்தில் ராமையா வின் சிவிய வரலாற்றுச் சுருக்கம்.

ஐயருக்குக் கண் இரண்டும் சிவந்தது. அந்தப் பத்திரிகை பிசைந்து, படாதபாடு பதினேழும் பட்டு, உருட்டித் திரட்டி அப்பால் எறியப்பட்டது. "அவன் எனக்குத் தம்பியுமல்லன்; நான் அவனுக்குத் தமையனு மல்லன்" என்ற நிர்ணயத்தை அங்கேயிருந்தவர்கள் முன்னிலையில் அரங்கேற்றிவிட்டுத் திடீரென்று எழுந்து ஒரு அறைக்குள்ளே பிரவேசஞ் செய்தார் சுந்தரம்ஐயர்.

அந்த நிர்ணயம் ராமையாவின் சுரோத்திரேந்திரியப் பிரதேசங்களிலும் எட்டியிருக்கலாம். ஆனல், அதைப் பொருட்படுத்த இது தருணமல்ல.

அஷ்ட ஐசுவரிய இஷ்ட வைபவங்களில் ஸ்ரீராமையா முழுகிக்கொண்டிருந்தார். மூன்றுமாசம் பறந்தது.

நாலாவது மாசம். நாடகமேடைகள் சினிமா மேடை களாய் மாறின. காப்பிக் கிளப்புக்கள், வீட்டுச்சுவர்கள், மூலைமுடுக்குக்கள் எங்கே பார்த்தாலும் ராமையாவின் திருவுருவப் படங்கள். இனி, யாருக்குத் தரிசனம் வேண் டும். அதுவுங் குறைந்து குறைந்து நின்றுபோனது. சுக்கிரன் அத்தமித்தான்.

* இனி, ...?

* இக் கதையின் முற்பிற் பகுதிகள் "ஈழகேசரி" வார வெளியீடுகளில் வெளிவரும்.

ஞான நிஷ்டை

(இராமப் பிரசாதஸென் பாடிய பாடலைத் தழுவி எழுதப்பட்டது)

மனமே! நீயும் வருந்துவதேன்?
மகிழ்ந்து தேவி திருநாமம்
தினமும் மறவா தன்போடு
தியானஞ் செய்து வாழ்வாயே!
கனமா மணிசே கண்டியெலாம்
கணக ணென்று முழக்காது
நினைவை ஒடுக்கி நிகழ்த்திடுமந்
நிஷ்டைக் கேதும் நிகருண்டோ?

வேறு

மண்ணினைக் கல்லதனைச்—செம்பினை
வடிவஞ் செய்துவைத்துப்
பண்ணிடும் பூசையாலே—யாதுமோர்
பலனடைவ துண்டோ?

எண்ணிய எண்ணிலெழும்—உருவை
இதய கமலத்தில்
திண்ணமாய் ஏற்றிவைத்து—நிதமும்
ஜெபங்கள் செய்வாயே.

பூவும் வேண்டாமே—பழமும்
பொரியும் வேண்டாமே
மேவும் உள்ளன்பே—தேவி
விருப்பு நல்லமுதாம்.

குருடர் கூடிநின்று—கற்பூரம்
கொளுத்திக் காட்டுவதால்
சிறிதும் நன்மையுண்டோ—இதனைச்
சிந்தை செய்வாயே.

ஒளியை நோக்கிடவே—விளக்கின்
உதவி வேண்டுவதேன்?
தெளிய உள்ளத்தில்—ஞான
தீப மேற்றுவையே.

மேலும் ஆட்டினைப்—பிடித்து
வெட்ட, வேண்டாமே
தீய குணமெல்லாம்—பலிதீ
செய்தாற் போதுமே.

—தேசிகவிநாயகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணையின் அமைப்பும் அதன் சிறப்பும்

(யாழ்ப்பாணம் சங்கீதசமாஜக் காரியதரிசியும்,
'வீணை ஆசான்', 'சங்கீத முதற்புத்தகம்' முதலிய ஆங்கில நூல்களின் ஆசிரியையுமாகிய
ஸ்ரீமதி ந. மகேஸ்வரி தேவியார் அவர்கள்.)

இந்தியநாட்டில் பல இசைக்கருவிகள் பல பாகங்களில் இன்னும் பாவிப்பிலிருந்து வருகின்றன. இவற்றுள் எல்லாம் தலைசிறந்து விளங்குவது வீணை. இந்தியர்கள்—முக்கியமாகத் திராவிடர்கள் இதற்கு ஒப்பான இசைக்கருவி உலகில் எங்கும் இல்லையெனக் கருதுகின்றனர். வீணையில் தேர்ச்சிபெறுவது மிகவும் கடினம். எவர் ஒருவர் கைதேர்ந்த வைணிகனாக இருக்கின்றாரோ, அவர் இசைவல்லார் பலராலும் மதிக்கப்படுகின்றனர். தென் இந்தியாவில் வீணையில் கைதேர்ந்தாரது தொகை கைவிரல்களுள் அடங்கும். இவர்கள் மைசூர், திருவனந்தபுரம், விஜயநகரம் முதலான அரச சமஸ்தானங்களில் காணப்படுகின்றனர். ஒருவர் வீணையில் நன்கு தேர்ச்சியடைய வேண்டுமாயின், அவர் இடைவிடாது உழைத்தல் வேண்டும். இடைவிடா அப்பியாசத்தால் ஒருவர் இக்கலையில் ஒரு வியாழவட்ட காலத்திற்குள்—பன்னிரண்டாண்டு தேர்ச்சி பெற்று விற்பன்னராதல் கூடுமென்பது சான்றோர் கொள்கை.



ந. மகேஸ்வரிதேவியார்

இந்து சமயத்தைச் சார்ந்த ஒவ்வொரு பொருளுக்கும் அதன் உற்பத்தி குறித்து ஒவ்வொரு புராணக் கதை உண்டு. அதுபோல் இக் கருவியின் உற்பத்தி குறித்தும் ஓர் புராணக் கதையுண்டு. சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவர் தமது நாயகியாகிய சகலகலாவல்லியின் உபயோகத்திற்காக இக் கருவியை அமைத்தனரெனவும், சரஸ்வதி தேவியிடமிருந்து நாரதர், தும்புரு முதலிய தேவரிஷிகள் இதனைக் கற்றனரெனவும், அவர்களுள் ஸ்ரீ நாரத மகரிஷியே மிகத் தேர்ச்சி பெற்றாரெனவும், அவரால் இக்கருவி பூலோகத்தில் பரப்பப்பட்டதெனவும் கூறப்படுகின்றது.

ருத்திரவீணை, சரஸ்வதிவீணை என வீணை இரு வகைப்படும். வட இந்தியாவில் உபயோகிக்கப்பட்டு வரும் வீணை "ருத்திர வீணை" (The Bim) என வழங்கப்படும். இவ் வீணையைக் குறித்து இசைநூல் ஆசிரியரான சோமநாதர் என்பார், 337 ஆண்டுகளுக்கு முன் தமது "ராகவிபோத" என்னும் நூலில் மிக விரிவாகக் கூறியுள்ளார். தமிழ்நாட்டில் இவ் வீணை

நமது நாட்டுப்பொருளை விருத்தியாக்குவதே வேண்டப்படுவது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகத்தி லில்லாதிருப்பதால் இதனை இங்கு விரித்துக் கூறுது விடுகின்றும். *

தென்இந்தியாவில் உபயோகிக்கப்பட்டுவரும் இசைக் கருவியானது செய்கையிலும், வடிவத்திலும் வடஇந்தியக் கருவியாகிய ருத்திரவீணையோடு மிகவும் மாறுபாடுடையது. இது **சரஸ்வதிவீணை** எனப்படும். சாதாரணமாக இதை முதிய பலாவின் வேரினாலேயே செய்வார்கள்.

சரஸ்வதிவீணை பதினொரு பகுதிகளையுடையது. அவையாவன :—1. குடம், 2. கவந்து, 3. தண்டி, 4. தண்டிப் பலகை, 5. மருவப்பலகை, 6. மெட்டு, 7. மேரு, 8. கிண்ணம், 9. குடுக்கை, 10. குதிரை, 11. மொகுலு, 12, லங்காறு, 13. பிரடை, 14. யாழிமுகம் என்பனவாம்.

1. **குடம்** அல்லது **நாதப்பெட்டி :** இது மரத்திலிருந்து மெல்லிதாகக் குடையப்படுவது. இதன் வடிவம் ஒரு பந்தின் மூன்றிலொரு பாகத்தை ஒத்திருக்கும். இதன் ஆழம் 9 அங்குலத்திற்கும் 10½ அங்குலத்திற்கு மிடையிலிருக்கலாம். ஆழத்திற்குத் தக்கபடி நாதமும் உண்டு. குடத்தின் மேற்புறத்திலிருக்கும் துவாரமானது மெல்லிய விட்டவடிவமான பலகைத் தண்டினால் மூடப்பட்டிருக்கும்.

2. **கவந்து :** அகேகமாகத் தந்தத்தினாற் செய்யப்படுவது. இதுவே தண்டையும், குடத்தையும் பிரிப்பது.

3. **தண்டி :** மூன்றடி நீளமும், ஆறு அல்லது ஏழு அங்குலச் சுற்றளவுமுள்ள குடையப்பட்ட அரைவட்ட வடிவமான ஒரு மரத்துண்டு. இதன் ஒரு நுனி, நாதப் பெட்டியில் இதனைப் பிணைப்பதற்காக இருக்கும் துவாரத்திற்குள் பொருத்தப்பட்டிருக்கும். மற்றைய நுனியில் யாழியின் முகம் இணைக்கப்பட்டிருக்கின்றது.

4. **தண்டிப்பலகை :** மெட்டுக்களின் கீழிருக்கும் தண்டியின் குடையப்பட்ட பாகத்தை மூடும் ஒரு மெல்லிய பலகைத்துண்டு.

5. **மருவப்பலகை :** மெட்டுகளை வைப்பதற்காகத் தண்டிப் பலகையின் இருபுறத்தும் ½ அங்குல உயரத்தில் வைக்கப்பட்டிருக்கும் பலகைத் துண்டுகள்.

6. **மெட்டு :** இவை $\frac{1}{6}$ அங்குல மொத்தமும், 2 அங்குல நீளமுமாக அரைவட்ட வடிவத்தில் வெங்கலம் அல்லது உருக்கினாற் செய்யப்பட்டவை. ஒவ்வொரு மெட்டின் இரு தூணிகளிலும் ஆணிகள் உண்டு. இவைகளைக் கொண்டே மெட்டுகளை மருவப்பலகையிற் செலுத்துவது. அன்றியும் பசைப்பிடிப்பான ஒரு சேர்வையினாலும் இம் மெட்டுகள் வைக்கப்படுகின்றன. இச் சேர்வையானது மெட்டுகளுக்கிடையே ஊற்றப்பட்டுக் காய்ந்தபின் நன்றாக அழுத்தமாக்கப்படுகின்றது.

7. **மேரு :** தந்தத்தினாற் செய்யப்பட்டு யாழி முகத்திற்கும், தண்டிக்கும் மத்தியில் உயர்ந்திருக்கும் பாகம். இது 25-வது மெட்டாக உதவுகின்றது.

8. **கிண்ணம் :** இது பித்தாளையினால் "கப்" வடிவத்திற் செய்து நன்றாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும். இதனுள்தான் **கலபாஷி** பொருத்தப்பட்டிருக்கின்றது.

9. **குடுக்கை—கலபாஷி :** இது கடையப்பட்ட சுரக்குடுவை. இது வீணையின் கழுத்தின்கீழ் கிண்ணத்தினுல் இணைக்கப்பட்டிருக்கும். இக் குடுக்கை வீணைக்கு ஒரு காலாகவும், நாதப் பெட்டியாகவும் உதவுகின்றது.

10. **குதிரை :** 1 அங்குல அகலமும், 2½ அங்குல நீளமுமான ஒரு மரத்துண்டைத் தாங்கும் ஒரு வளைவான மரத்துண்டு. இம் மரத்துண்டின் மேல் ⅓ அங்குல மொத்தமுள்ள ஒரு உருக்குத்துண்டு பசைப்பிடிப்பான ஒரு சேர்வையால் பொருத்தப்பட்டிருக்கின்றது. இதன்மேல் நான்கு பிரதான தந்திகளும் செல்லும். பக்கக் கம்பிகளின் குதிரை ஒரு பித்தாளை வளைவு. இதன் மத்தி உயரமாகவிருக்கும். இது மற்றக் குதிரையுடனும், குடத்துடனும் இணைக்கப்பட்டிருக்கின்றது.

11. **மொகுலு :** தண்டிப்பலகையின் பக்கத்திலிருக்கும் தந்தத்தினாற் செய்யப்பட்ட ஆணிகள். இதன் மேலால்தான் தந்திகள் பிரகடையில் தொடுக்கப்படுமுன் செல்லும்.

12. **லங்காறு :** கம்பிகளைத் தொடுக்கும் பித்தாளைப் பிணைச்சல்கள். இவைகளில், சுதி சேர்க்கும்பொழுது சிறிய மாற்றங்களுக்கெல்லாம் பிரகடையைத் திருப்பாது சேர்ப்பதற்காக அசைக்கக்கூடிய வளையங்களுண்டு.

13. **பிரடை :** சுதி சேர்க்கும் ஆணிகள். இவை ஏழு. நான்கு யாழிமுகத்திலும், மூன்று தண்டியின் பக்கத்திலும் இருப்பன. இவைகளிற்றான் தந்திகள் தொடுக்கப்பட்டுச் சுதி சேர்க்கப்படுவது.

14. **யாழிமுகம் :** "டிரகன்" என்னும் மிருகத்தினது முகம். அழகிற்காக வைக்கப்படுவது.

* உருத்திர வீணையைப்பற்றிய விபரம், எனது 'வீணை ஆசான்' என்னும் ஆங்கிலநூலிற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்தின் மற்ற நுனியில் துவாரங்களையுடைய தக டொன்று $\frac{1}{8}$ அங்குல உயரமாக இணைக்கப்பட்டிருக்கின் றது. இதிற்முன் லங்காறு கட்டப்பட்டிருக்கிறது. லங் காருவின் மற்ற நுனியில் கம்பிகள் கட்டப்பட்டிருக்கும். இக் கம்பிகளுள் 4 பிரதான தந்திகளும், குதிரை, மெட்டு, மேரு ஆகியவற்றின் மேலாகச் சென்று கழுத்தினுள்ள பிரடையில் கட்டப்பட்டிருக்கும். மற்றைய மூன்று தந்தி களும் லங்காருவில் தொடுக்கப்பட்டு, பக்கத்துக் குதி ரைக்கும், மொகுளிற்கும் மேலாகச் சென்று தண்டியின் பக்கத்திலிருக்கும் பிரடையில் தொடுக்கப்படும். பிரதான மான 4 தந்திகளுள் முதலாவதும், இரண்டாவதும் உருக் கினலும், மூன்றுவதும், நாலாவதும் பித்தளையினலும் செய்யப்பட்டவை. பிரதான தந்தி நான்கினுள்ளும் முத லாவதே மிகவும் மெல்லியதும், நான்காவது மொத்தமான தும், மற்ற இரண்டினுள்ளும் இரண்டாவது முதலா வதைவிட மொத்தமாகவும், மூன்றுவது இரண்டாவதை விட மொத்தமாகவும் இருக்கும். பக்கத் தந்திகள் சாதா ரணமாக முதல் தந்தியின் மொத்தம்போலிருக்கும். ஆனல், இவை வித்தியாசமாக — அதாவது முதலாவது மொத்தமாகவும், மூன்றுவது மெல்லிதாகவும் இருப்பது வழக்கம். வீணைக்குத் தெரிந்தெடுக்குந் தந்திகளின் விப ரம் பின் வருமாறு :—

தந்தி		இலக்கம்
1 வது பிரதான தந்தி	(உருக்கு)	30
2 வது பிரதான தந்தி	(உருக்கு)	28
3 வது பிரதான தந்தி	(பித்தளை)	24
4 வது பிரதான தந்தி	(பித்தளை)	22
1 வது பக்கத் தந்தி	(உருக்கு)	30
2 வது பக்கத் தந்தி	(உருக்கு)	32
3 வது பக்கத் தந்தி	(உருக்கு)	34

(எவ்வளவிற்கு இலக்கங் கூடுகின்றதோ அவ்வளவிற் குந் தந்தியும் மெல்லிதாக விருக்கும்.)

ஏழு தந்திகட்கும் ஏழு பெயர்கள் உண்டு :—

1 வது பிரதான தந்தி	சாரணி
2 வது பிரதான தந்தி	பஞ்சமம்
3 வது பிரதான தந்தி	மந்த்ரம்
4 வது பிரதான தந்தி	அனுமந்த்ரம்
1 வது பக்கத் தந்தி	பக்கசாரணி
2 வது பக்கத் தந்தி	பக்க பஞ்சமம்
3 வது பக்கத் தந்தி	தீப்புசாரணி

மேற் கூறப்பட்டுள்ள விதமாக அமைந்துள்ள சரஸ் வதி வீணையே தமிழ்நாட்டிற் சிறந்த இசைக்கருவியாகும். மனித சரீரத்தோடு ஒத்து இசைக்கும் ஆற்றல்வாய்ந்த இசைக்கருவி வீணையைவிட வேறில்லை. சரஸ்வதி வீணை யின் இன்னிசையைக் கேட்டு மகிழ்ந்த தமிழன் எவனும் பிற கருவிகளை நாடான். பிறநாட்டுக் கருவிகளுள் வட லின் ஒன்றே இந்திய சங்கீத வழிக்கு நன்கு அமையக் கூடிய கருவியாகும். ஆனல், சரஸ்வதி வீணையில் பெறக் கூடிய அசைவுகளும், நாதஇன்பமும், சாத்விகங்களும் எக்கருவியிலும் பெறுதல் முடியாத காரியம். அன்றியும், இராகம், லயம், சுருதி ஆகிய மூன்றினையும் இணைத்துச் செல்லுந் தன்மை இக்கருவிக்கு மாத்திரமே அமைந்துள் ளது. இவ்வரிய இசைக்கருவிக்கு உரித்தாளர்களாகப் பிறந்த தமிழ்மக்கள், பிறநாட்டுக் கருவிகளைப் போற்றுவ தும், அவற்றைக் கற்க உற்சாகங் கொள்வதும் வெட்க மான ஓர் செயலாகும். இசையுலகில் இன்று காணப்படும் ஓர் வெட்கமான செயல் இங்கே குறிப்பிடத்தக்கது. அது எதுவெனில், தமிழ்மக்கள், பிறநாட்டவர்களாலும் இக ழப்படும் "ஆர்மோனியம்" என்னும் ஆபாச வாத்தியத் தில் காட்டும் மோகமே. 'ஆர்மோனியம்' தமிழ் இசை முறைக்கு எவ்விதத்திலும் பொருந்தாத ஓர் கருவியாகு மென்பது, இசைவல்லாரும், அறிவுடையோரும் அங்கீ கரிக்கும் ஓர் உண்மையாகும். தமிழ் இசையின் வளர்ச்சி யையும், சிறப்பையும் விரும்பிய ஒவ்வொரு தமிழ்மக னும், மகளும் இக் கருவியை நாட்டைவிட்டு ஓட்ட முயலவேண்டும். அவ்விதம் செய்வது இசைத்தொண் டாகும்.

இசைத் தெய்வமாகிய சரஸ்வதியைப் போற்றுதல் தமிழ்மக்கள் கடனுகும். தேவியைப் போற்றும் சிறந்த மார்க்கம், தேவியின் கரத்தமைந்த சிறந்த கருவியாகிய வீணையை நாடெங்கும் பரவச்செய்வதே. "யாழினர், வீணையர் ஒருபால்" என மாணிக்கவாசகப் பெருந்தகை யார் கூறியவண்ணம், இறைவனே அடியார் யாழ்கொண் டும், வீணைகொண்டும் பாடித் துதித்தனரேயன்றி, ஆர் மோனியத்தினலும், வயலினினலும் போற்றினரன்று. எம் நாட்டவர்களால் ஆக்கப்படும் சிறந்த இசைக்கருவி யாகிய வீணையைக் கைவிட்டு, பிறநாட்டுக் கருவிகளைப் போற்றுவது கலைக்கும், நாட்டிற்கும் துரோகமாக முடியு மன்றே?

இறைவன் இசைவடிவினனு யிருக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்னாடக சங்கீதத்தின் மகத்துவம்

திரு. பி. நடராஜபிள்ளை

இவ்விஷயத்தையிட்டுத் தென்னாட்டிலுள்ள பற்பல சங்கீதவித்துவான்கள் பலப்பலமுறைகளில், பலபத்திரிகைகளிலும், பலவாறு கூறியிருக்கின்றனர். மேலும் இவ்விஷயங்களை இந்தியாவிலிருந்து, வெளிவரும் பத்திரிகைகளில், இவ்வித்துவான்கள் வெளியிடுகிறபடியினால், இலங்கையிலுள்ளார்க்கு, இவ்விஷயங்களை அறிதல் மிக அரிதாக இருக்கிறது. கர்னாடக சங்கீதம் தஞ்சாவூர் ஜில்லாவையே முக்கிய ஸ்தானமாகக் கொண்டதென்பது அறிஞர்களுக்குத தெரியும்.

கர்னாடக சங்கீதத்தில் மூன்றுவகைப் பாணி உண்டு. அவையாவன: சோழநாட்டுப்பாணி, பாண்டியநாட்டுப் பாணி, சேரநாட்டுப்பாணி என்பவைகளை. சோழநாட்டுப்பாணியாவது தஞ்சாவூரில் அப்பியாசிக்கும் சங்கீதம். இதையே ரஸிகர்கள் மகாசிரேஷ்டமென்பார்கள். உதாரணமாக, மகாவித்வான்களாயிருந்த, மகா வைத்யநாதையர், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதையர், காஞ்சீபுரம் நாயினப்பிள்ளை, பிடில் திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர், வேணுகானம் சரபசாஸ்திரிகள், நாதசுரம் கோர்னெ நடேசபிள்ளை, திருமருகல் நடேசபிள்ளை, இவர்கள் சோழநாட்டுப்பாணியையே அப்பியாசித்து வந்தார்கள். பாண்டிநாட்டுப்பாணியை அனேகமாக மதுரை பொன்னுசாமிப்பிள்ளையிடம் காணலாம். சேரநாட்டுப்பாணியை கோயமுத்தூர் ராகவையர் அப்பியாசித்து வந்தாரென்று அனேக பெரியார் கொல்லக் கேள்விப்பட்டுள்ளோம்.

இங்கே, கர்னாடகப் பாட்டுவிஷயத்தைச் சிறிது விபரிப்பாம். சங்கீதத்திலே அனேகமாய்த் தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலுமே க்ருதிகளை வித்துவான்கள் இயற்றி இருக்கிறார்கள் என்பது சங்கீத அறிஞர்களுக்கு நன்கு விளங்கும். தியாகராஜ சுவாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள், சுப்ராய சாஸ்திரிகள், கர்பபுரிவாசர், பட்டணம் சுப்ரமண்யர், பாடகர் கிருஷ்ணையர், கோஷ்தாக்குர் இன்னும் சற்று சமீபகாலத்துக்கு முன் இருந்த, ராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் (பூச்சி ஐயங்கார்) இவர்களெல்லோரும், தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலுமே க்ருதிகளை இயற்றியுள்ளார்கள். இக்க்ருதி கர்த்தாக்களுக்கு தெலுங்கு, சமஸ்கிருதம்தான் தெரிந்து, தமிழ் தெரியாதேகாவென்றால், அதேக வித்துவான்கள் எல்லோரும் தமிழர்களாகவே இருந்திருக்கின்றனர். பின்பு என் தெலுங்கில் க்ருதிகளைப் பார்த்திருக்கின்றார்களென்றால், தெலுங்கு மொழியில் சமஸ்கிருத சொற்கள் மிகுந்து வழங்கிவருவதனாலும் அரைக்கரைவாசி தமிழும் சமஸ்கிருதமுமாகிய, மணிப்பிரவாள நடையும் செவிக்கு இன்பம் பயக்குமாகையினாற்போலும் தெலுங்கு மொழியில் இயற்றியுள்ளாரென்று ஊகிக்கக் கிடக்கின்றது.

கர்னாடக சங்கீதத்தைப் பாடகர்கள், இருவகையாக அமைத்துள்ளார்கள். ஒன்று பத்ததி; மற்றது சம்பிரதாயமென்பனவாம். பத்ததியாக உள்ள பாட்டுப்பிரகாரம் முதலில் வர்ணமொன்றைக் காலந்தள்ளிப் பாட வேண்டியது. பின்பு கனராகங்களில் அதாவது நாட்டை கௌளை, ஆரபி, ஸ்ரீராகம் முதலிய ராகங்களில் ஒரு க்ருதி பாடிவிட்டு, முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனங்களில், இரண்டு சுவக்கமாகப்பாடி, இதர கீர்த்தனங்களில், அனேகமாய் தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள் இரண்டு மத்திமகால கீர்த்தனங்களையும் சேர்த்துவிட்டு, எழுபத்திரண்டு கர்த்தா ராகங்களுக்குள் ஒரு ராகத்தைத் தெரிந்து ஆலாபனம் செய்யவேண்டியது. ஆலாபனத்தில் ஒவ்வொரு ஸ்வரஸ்தானத்திலும் நின்று சஞ்சாரம்பண்ணி, ஒருதரம் வெளிவந்த சங்கதிகள், மறுதரம் வெளிவராமல், தாரஸ்தாயி மத்யமத்தியமத்திலிருந்து மந்தரஸ்தாயி சட்ஜமம்வரையில் க்ரமமாகப் பாட வேண்டியது. பின்பு அதே ராகத்திற்கு தானம் பாடிவிட்டு, பல்லவி ஒன்றை அமைத்து, மூன்று காலம் நிரவல் பண்ணி, மூன்று காலம் ஸ்வரம் பாடவேண்டியது. ஸ்வரம் பாடுவதென்றால் ராகஸ்வரத்தைப் பட்டவர்த்தனமாகப் பாடுவதல்ல. தசவித கமகங்களையும் ஒலித்து, திஸ்ர, சதுஸ்ர, கண்ட, மிஸ்ர சங்கீர்ண நடைகளில் 'தகிங்கிணதாம்' அமைத்துப் பாடுவதே அழகாக ஸ்வரம் பாடும் வழி. அதற்குப் பின்பு கீதார்த்த ஸ்லோகமொன்றை ராகமாலிகையில் பாடி, பதம், ஜாவளி தமிழ்ப் பாட்டுக்களுக்குப் பின் மங்களம் பாடவேண்டியது. இதுவே பத்ததியாகும்.

சம்பிரதாயப் பாட்டுப் பிரகாரம், சபையை நன்முகக் கவனித்து, சபையில் எதுஎது உபயோகப்படுமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளையே பிரயோகப்படுத்தல்வேண்டும். சபையில் சங்கீதம் தெரிந்தவர்கள் இருந்தால், பல்லவி பாடவேண்டும்; பாமரர் இருந்தால் தேசியக் கீதங்களையும், தேயிலைத் தோட்டப் பாட்டுகளையும் பாடவேண்டும். நமது நாட்டில் சம்பிரதாயப் பாட்டே மிகவும் உபயோகிக்கற் பாலது. உண்மைச் சங்கீதத்தை நம்மவர்கள் அனுபவித்துணரும் காலம் மிகவும் சேய்மைக்கண் நிற்கிறதென்றே கூறுதல் இழுக்காகாது.

நமது தென்நாட்டிலே, சங்கீதக்கலையில் மிகப் பிரக்யாதி பெற்று விளங்குபவர்களுள் அரிபக்குடி ராமாநுஜ ஐயங்கார், மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், முடிகொண்டான் வெங்கடராமையர், சித்தூர் சுப்பிரமண்யபிள்ளை, செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் ஆகிய இவர்கள் பத்ததிப் பிரகாரமாகப் பாடிச் சபையோரைத் திருப்தி செய்கிறார்கள். இவர்களின் சில குணாதிசயங்களைக் கீழே சிறிது கூறுகின்றோம்.

அரியகுடி ராமாநுஜ ஐயங்கார்: இராமநாதபுரம் பூச்சி ஐயங்காரின் பிரதமசிஷ்யன். இவர் சாரீரம் சுருதியுடன் இயைந்து பாவத்தையும் நயத்தையும் ஒரே சரமாரியாகப் பொழியும். இவர் கீர்த்தனங்கள் எல்லாம் மிகச் சுத்தமாகவும் வெகு அழகாகவும் கர்ணாடகம் ததும்பி இருக்கும். இராகம் வெகு உருக்கமாகவும், பல்லவி, ஸ்வரபத்தா மிக விமரிசையாகவும் இருக்கும். நீண்ட காலத்தின் அனுபவ பயனாக இவர் பாட்டு மிக மிகச் சுத்தமாக இருக்கிறது.

மகாராஜபுரம் விஸ்வநாதஐயர்: பாட்டு, ஓர் பெரும் பாட்டு, கஷ்டப்பட்டும் சாரீரத்தைச் சுருதியுடன் சேர்த்துக்கொள்ளுவார். சாரீரம் சுருதியுடன் சேர்த்து விட்டால் க்ருதிகளெல்லாம் அபரிமிதமான யோக்யதையுடன், இராகபாவம் ததும்பிக்கொண்டு, தனித்தனியே வெகு உருக்கமாகக் குழைந்து, தேன் சர்க்கரையைத் நாவிக் கொடுப்பதுபோல் இருக்கும். இவர் ஸ்வரம் பாடும் பந்தா ஓர் அலாதி. அது ஒரு தனி வழி என்றே சொல்லவேண்டும். தைவதம், பஞ்சமம், மத்தியமத்தில் (த. ப. ம) நின்று பிரஸ்தாரம் பண்ணி சபையோரை, தங்களைத் தாங்களே மறந்துவிடச் செய்துவிடுவார்.

முடிகொண்டான் வெங்கடராமையரை நமது நாட்டு ரஸிகர்களுக்கு அனேகமாகத் தெரியாமலிருக்கும். இவர் ஓர் கர்ணாடக சங்கீதக் களஞ்சியம். இவர் கச்சேரிகளில் பக்கவாத்தியகாரர் கலகங்கள் நிகழுதல் சகஜம். விஷமம் இவரிடத்திலிருந்தே மற்றைய வித்துவான்களுக்குப் பரவுகிறது. இவருடைய பாட்டு சங்கீத வித்துவான்களுக்கு ஓர் பெரிய விருந்து. பக்கவாத்தியகாரர்களுக்குத் தெரியாத க்ருதிகளைப்பாடி, ஜன்ய ராகங்களையும், வக்ர ஸ்வரப் பிரஸ்தாரம்பண்ணி, சபையோரை ஏங்கவைத்து, கடைசியில் ஆனந்தக் கடலில் ஆழ்த்திவிடுவார்.

சித்தூர் சுப்பிரமண்யபிள்ளை, காஞ்சீபுரம் நாயினாப் பிள்ளையின் சிஷ்யன். திருவள்ளுவர் கடுகைத்துளைத்து ஏழு கடலைப் புகுத்தினாற்போன்று, நாயினாப்பிள்ளையும் தாளத்தையும் அப்படியே பண்ணி வைத்தவர். பிள்ளை அவர்கள் சாரீரம் கனதியாக இருந்தபோதிலும், செவிக்கின்பமளிக்கத் தவறாது. க்ருதிகளை புதிது புதிதாக வெளியிடுவதில் பிள்ளை அவர்களுக்கு வெகு திருப்தி. இராகத்தில் சஞ்சாரக் கிரமம் வெகு அழகாகவிருக்கும். பல்லவி, ஸ்வரம் மிகுந்த லட்சணத்துடன், அனேக பாகுபாடுகளுடன், மோருக்களும் வைத்து, ரஸிகர்களுக்கு வெகு ஆனந்தத்தை உண்டுபண்ணுவார்.

செம்மங்குடி ஸ்ரீநிவாஸ ஐயர்: மற்றைய வித்துவான்களிலும் வயது குறைந்தவராயினும் அபார யோக்யதை உடையவர். இவர் சாரீரம் தம்பூரா சுருதியுடன் லயமாகிவிடும். ராகங்களை அப்படியே தேனில் தோய்த்து வெளியில் விடுவார். பாவமென்றால் இவரிடம் அபரிமிதமாகக் காணலாம். சில சமையங்களில் இவர் "ராமா" என்றால் அந்த ரகு உத்தமன் சபையில் வந்துதான் ஆகவேண்டியிருக்கும். பக்கவாத்யகாரரை அனுசரித்துப் போகும் யோக்யதை இவரிடம் அதிகம். இவர் பல்லவி ஸ்வரம் பாடுகிறதும் சபையோர்க்கு வெகு திருப்தியை அளிக்காதிருக்கமாட்டாது. இவர் தமிழ்நாட்டு மக்களை தேசிய கீதங்களாலே, பரவசப்படுத்திவிடுவார்.

இந்த வித்வான்களின் குணாதிசயங்களை எழுதின் இடம் போதாது. விரிவஞ்சி விடுத்தாம். இவர்களெல்லோரும் கர்ணாடக சங்கீத வித்வான்களென்பது கூறாமலே விளங்கும்.

சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மதியுடன் விளையாடிய குன்றக் குமரன்

(ஆனிப்பட்டி விவேகாநந்தர் கல்விக்கழகப் பழையமாணவன்
திரு. M. R. சேதுராமன்செட்டியார் அவர்கள்.)

"அழகினைக் காண்பதே ஆனந்தம்" என்று ஒரு அறிஞர் அருளிப்போந்தார். அழகுவாய்ந்த பொருள்கள் மக்களது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து விழுங்கும் வலிமை வாய்ந்தனவாம். எண்ணரிய நலம் வாய்ந்த இயற்கை அழகால் ஈற்புண்டு, அவ்வழகில் இறைவனைக் கண்டு மகிழ்வது அறிஞர் இயல்பாகும். மாரூது மழை பொழிந்து மலர்களும் மரங்களும் செறிந்து, மனத்தைக் கவரும் மா மலையில், மேகத்தைப் பிளந்து வீசும் மின்னொளியைக் காணும்பொழுதும், நீலத்திரை விரித்த வானம், நிலத்திற் படிவதுபோல் தோன்றும். நெடுந் தூரத்தே ஒளிப் பிழம்பாய் எழுந்து இலங்கும் கதிரவனைக் காணும் பொழுதும், பசுமையின்மீது தோன்றும் செம்மை நிறம், மக்களது மனத்தில் பதிவதாகும். இவ்வாறு பசுமையிற் செம்மையைக் கண்டு மகிழ்ந்த பழந் தமிழ் மக்கள், பச்சை மாமயிலின் மீது விளங்கும் அழகிய பாலனை, இறைவனை எண்ணி எழுதி இறைஞ் சினர்கள். நீலத்திரைக் கடலோரத் திலே தோன்றி, ஞாலத்தில் ஒளிவீசும் ஞாயிறைக் காணுந்தோறும், கோல மயில்மீது குலவும் குமரனது ஒளியே, அவர்கள் உள்ளத்தில் புகுந்து ஒளிர்வதாயிற்று. இளமை யும் அழகும் பொருந்திய இனிய வடிவத்தில், இறைவனைத் தம் உள்ளத்தில் எழுதி மகிழ்ந்த, மக்களது மனப்பான்மை,

"குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்னுள்ளத் துறை"

என்னும் திருவாக்கால் இனிது விளங்கும். இத்தகைய இளமை வாய்ந்த குழவியை — இன்னொளிவீசும் இறை வனை — அழகின் கொழுந்தாய முருகனை — வெம்பகை தீர்க்கும் வேலனை — கவிஞர் பாடிப்பாடிக் களைந்துருகி னார்கள். அமுதினைச் சுவை செப்வார்போல், முருக னது அழகுக் கழகுசெய்து மகிழ்ந்தார்கள். செம்பொற் சிலம்பும் கிண்கிணியும் காலிற் கலந்தாட, குண்டலமும் குழையும் காதில் அசைந்தாட, அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனிபோல், அருள் மொழியும் திருமுகத்திலமைந்த குமுதக் கனி வாயில் குறு நகை பொங்க, முத்துப் போன்ற வேர்வை முகத்திலரும்ப, அசைந்து ஆடும் அழகிய குமரனைக் கண்ட குமர குருபர அடிகள்,



எம். ஆர். சேதுராமன் செட்டியார்.

"குழையொடு குழையெதிர் மோதிக் காதணி குண்டலம் வெயில்வீசக், குமுத இதழ்க்கனி வாயமு தூறிய குறுநகை நிலவூற, முழுவயி ரப்புய வலயமும் முனனகை முதாரியும் ஒளிகால, முத்த மரும்பி யெனக்குறு வேர்வு முகத்தி லரும்பியிடப், புழுதி யளைந்த பசுந்திரு மேனிப் பொங்கொளி பொங்கியெழ, புண்ட ரிகங்கள் மலர்ந்த விழிக்கடை பொழியருள் கரைபுரள, அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனி ஆடுக செங்கீரை, ஆதி வயித்திய நாத புரிக்குகன் ஆடுக செங்கீரை"

என்று செந்தேன் சொரியும் செந் தமிழ்ச் சொற்களால் போற்றிப்புகழ்ந் தார்.

ஒரு சிறு கதை

மற்றும் குன்றக்குமரன் குழந்தையாயிருக்கும் காலை, மதியோடு விளையாட விரும்பின வரலாற்றை, ஓர் விழுமிய காட்சியாக முனிவர் மொழிந்து போந் தார். அவை பாடல்களைக் கொண்டு கீழே வரையப்பட் டிருக்கின்றது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி மாலையில் வானத்தே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா வீசிற்று. செம் பொன்னலாய செழுங்கனி போன்று அழுதம் பொழியும் அழகிய மதி, விண்ணிலே ஊர்ந்து சென்றது. நிலமெங்கும் பொன்னுடை போர்த்தாற் போலவும், பாலாவி பரந்தாற் போலவும் வெண்ணிலா வீசி விரிந்தது. துரைத்தியுழந்த திரைக்கடல், சேயைக்கண்ட தாயைப்போல், பொங்கிக் கரைபுரண்டு கொந்தளித்தது. மலையிடைப் பிறந்த மாருதம், மெல்லெனத் தவழ்ந்து நல்மணம் கமழ்ந்தது. இத்தகைய அழகுவாய்ந்த அந்திப்பொழுதில், குன்றில் தவழ்ந்து விளையாடிய குமரன், தண்டையணிந்த கால்களால் தளர்ந்து நடந்து, சேய்மையில் இலங்கிய வெண் மதியின் செம்மையைக் கண்டு, விபந்து கைகொட்டி, விரலாற் சுட்டி, முகமலர்ந்து அளவிலா மகிழ்வை அறிவித்தான்.

குறுநடை பயிலும் முருகனைக் கண்ட முழுமதி பெருமகிழ்வடைந்து, அவனையே அருளுடன் நோக்குவதுபோல் விளங்கிற்று. இவ்வாறு விண்ணிலே செஞ் சுடராய் இலங்கிய தண் மதியை முருகன் அருகே வந்து விளையாட அழைத்தான். தன் விருப்பிற் கிசைந்து விண்மதி உடனே வராமை கண்டு குமரன் கண் பிசைந்து அழுது கரைந்தான். மழலைதேரா இளங்குமரன் விம்மி அழுவதைக் கண்ட முனிவர், மனம் பொறாது, நால்வகை உபாயத்தால், விண்மதிக்கு நன்மதி புகட்டும் முறை சாலவும் இனியதாகும்.

"வெண்ணிலா விரிக்கும் விண்மதியே! நீயும் முருகனைப் போலவே அழுதமாய் விளங்குகின்றாய். உயிராய பயிர் தழைக்க உயிரிய அருள் சுரக்கின்றாய். கண்டோர் கண்ணையும் கருத்தையும் குளிர்விக்கின்றாய். குழுதவாய் விரித்துக் குளிர் நிலா வீசுகின்றாய். ஆகவே பிள்ளைப் பெருமானை முருகனெனு, பிறப்பிலும் சிறப்பிலும் ஒப்பு வாய்ந்த நீ அவனெனு விருப்பி விளையாட வாராய்" என்று முனிவர் நயந்தழைக்கின்றார்.

"உன்செய்கை எம்பிரான் தன்செய்கை போலுமால்
உனையுமிவன் ஒவ்வா திரான்
அற்பொதி களத்தவன் அளித்தகும ரேசனுடன்
அம்புலீ யாட வாவே"

என்று சூழைந்த மொழிகளால் வருந்தியழைத்தும் வராமை கண்டு, முருகனது நிறைவையும் மதியின் குறைவையும் எடுத்துரைத்து, அப்பேதத்தால் முனிவர் விண்மதியை வெல்லக் கருதினர். "மாலைமதியே! ஒருவாறு சில துறைகளில் நீ முருகனை ஒப்பாயாயினும், பல துறைகளில் அப்பெருமானுக்கு நீ நிகராகாய்! முக்கட் பெருமானை முதல்வனுக்கு நீ ஓரு கண்ணைப் அமைந்தாய்! முருகனை கண்மணியாய் அமைந்தான்! கலைகள் நிறைந்தும் குறைந்தும் நீ வேறுபடுகின்றாய்! முருகனை கலைமுழுதும் நிறைந்த கனியாய் இலங்குகின்றான். நீ புறவிருள் ஒன்றையே போக்குகின்றாய்! அப்பெருமான் அகவிருளை அகற்றுகின்றான்! உலகில் நீ ஒருபால் ஒளி நுங்கால் ஒருபால் மறைகின்றாய்! முருகனை புவனப் பரப்பெல்லாம் பொலிந்து விளங்குகின்றான்! குளத்திற் பூக்கும் குழுதப்பூவை நீ மலர்விக்கின்றாய்! முருகனை அன்பரது மனமாய திருமலர் திறக்கின்றான்! ஆகவே உன்னிலும் அப்பெருமான் உயர்ந்தவனன்றோ?" என்று முனிவர் கூறும் மொழிகள் அழகு வாய்ந்தனவாம்.

இவ்விருவகையாலும் விண்மதியை வெல்ல இயலாத முனிவர், தானத்தைக் கையாளும்முறை கருதத் தக்கதாகும். "மாலையில் தோன்றி மகிழும் முழுமதியே! இன்னும் நீ முருகனது இணையற்ற பெருமையை அறியவில்லையே! கருணையை வேறாக்கும் பெருமானருள் பெற்றால், உனது கருநோய் கதிரவனைக் கண்ட பனிபோல் கடுகி ஓடுமே! அந்தமில் இன்பத்து அழியா வீட்டையும் தரவல்ல முருகனுக்கு உனது சிறு நோயை ஓட்டுவது அரிதாமோ? அன்பர் கண்ணெதிரே நின்று, தண்ணளி சுரந்து, வரங்கொடுக்கும் மெய்க்கண்ட தெய்வம் இத்தெய்வமல்லால் உலகில் வேறுண்டோ?" என்று கரவாது தொழும் அன்பர் கண்ணெதிரே, தோன்றிக் கலியுகவரதனுய் அருள்புரியும் குமரனது பெருமையை அடிகள் கூறும் திறம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

* * *

இவ்வாறு தானமாய உபாயத்தாலும் தண்மதியை வெல்ல இயலாத முனிவர் இன்னும் சிறிது கூறலானர்— "குறையாகிப் பிறையாகி வளரும் குளிர் மதியே! குன்ற மெறிந்த குமரனது ஆற்றலை நீ அறியாய் போலும்! இப்பெருமானது பேராற்றலறியாது, பாலன் என்றெண்ணி இகழ்ந்த சூரன் பட்டபாட்டை அறியாயோ? இத்தகைய வலிமைசான்ற வேலன் வரவழைக்க நீ வராவிடில், அவன் விம்மிப் பொருமி அழுது கண்ணீருகுப்பான். அப்பெருமான் அருங்கருணையால் உன்னை அறையாதிருப்பினும், இளைய வீரனுய, வீர வாகு பொறுப்பவனல்லன். அவனது சீற்றத்தை மாற்ற எவராலு மியலாது. ஆதலால் முருகன் அருமை இளமையும் அழகும் உடையவனிடத்தில் இயற்கையன்னை வாசஞ் செய்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய் அழைக்குங்கால் அன்புடன் வந்து விளையாடுவதே உனக்கழகாகும்."

* * *

இவ்வாறு நயமொழிக்கும் இசையாது, பயமொழிக்கும் அஞ்சாது, விண்ணிலே விளங்கிய தண்மதியின் செருக்கையும், மதியையும் மறந்து, மற்றொரு விளையாட்டில் செல்ல மனமற்ற மைந்தன் விருப்பைக்கண்ட முனிவர். செயலற்றுச் சிந்தனையிலாழ்ந்தார். அப்பொழுது மைந்தனைக் காணுத தந்தை "முருகா; முருகா" என்றழைத்தார். அருகே இரு கரும்பாறை மீது முற்றத்துறந்த ஓர் முனிவரும், பச்சைப் பசும் பாலனும் அமர்ந்திருக்கக் கண்டு, அவ்விடம் நோக்கி விரைந்து சென்றார். மைந்தனை எடுத்து மடியில் வைத்து, கண்ணீர் துடைத்து, முருகனது முகத்தை இனிதுநோக்கி "கண்ணே! கண்மணியே! ஏன் அழுகின்றாய்? பாலும் தேனும் வேண்டுமா? கனியும் தினையும் வேண்டுமா?" என்று கனிவுடன் வினவி முருகனை முத்தமிட்டார். முத்தமிட வளைந்த தந்தையார் சடையில் அமைந்த சந்திரனை முருகன் கண்டுகொண்டான். தனது விருப்பத்திற்கிணங்கி, விண்ணினின்றும் இறங்கிய தண்மதியைக் கைகளாற் பற்றித் தழுவி விளையாட எண்ணினான். மழைநின்ற வானத்தில் வெயில் வீசுவதுபோல், முருகனது முகத்தில் கண்ணீர் மாறிக் குறுநகை தோன்றிற்று. மலர்ந்த முகத்தோடு, தந்தையின் மணித்தோளிலேறி, கார்மேகம்போல் விளங்கிய விண்மதியைத் தன் கமலக் கைகளால் வளைத்துழுத்தான். முழுமதியின்முன்னே, முருகனது இளநலம், முன்னிலும் அதிகமாய் இலங்கிற்று. மதியுடன் அதிக நேரம் விளையாடி முருகன் மகிழ்ச்சியடைந்தான்.

இத்தகைய அருமைவாய்ந்த பாலன் விரலைச் சுவைத்து வாய் புலராமல், விம்மி அழுது மென்குரல் கம்மாமல், கண்ணீர் சிந்திக் கன்னங்கள் கலங்காமல், மணித்தொட்டிலுதைத்து மலரடி நோவாமல், அருள் விரியும் திருமுகத்தை அசைத்தினிதாடுமாறு அடிகள் அருளிய செஞ்சொற் கவி இன்பம் சிந்தையைக் கவர்வதாகும்.

'விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே
கரைவுறும் அஞ்சன நுண்டுளி சிந்திக்
கண்மலர் சிவமாமே
கலுழ்கலு ழிப்புனல் அருவி படிந்துடல்
கருவடி வண்ணமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைத்துநின்
ஒண்பதம் நோவாமே
ஒருதா ளூன்றி யெழுந்திரு கையும்
ஒருங்கு பதித்துநிமிர்ந்
தருள்பொழி திருமுகம் அசைய அசைந்தினி
தாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை"

என்று குமர குருபர முனிவர் குழைந்த மொழிகளால் குழந்தையை வேண்டுகின்றார். தவமுயன்று அரிதிற் பெற்ற தனியிளங்குழவி, அழுவதைக் கண்டு அன்னை பொறுப்பாளோ? அன்னையினும் சால அன்புவாய்ந்த அடிகள், மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலப்பொருளாய முருகன் விம்மிப் பொருமிவிழுந்து அழுது அலறக்கண்டு ஆற்றுவரோ? கண்களிலெழுதிய அஞ்சனம் கரைந்து, கருணை பொழியும் விழிகள் கலங்கக்கண்டு கரையாதிருப்பரோ? இவ்வாறு ஆராத அன்புவாய்ந்த அடிகள், குழலினும் யாழினும் இனிய குதலை இயற்றும் குழவியால், ஓரு முத்தம் தருமாறு குழந்தையை வேண்டுகின்றார்.


* * *


இன்னும் இப்பாலனுக்கு வேலனது பெருமையறிந்த புலவர், அப்பெருமானை நோக்கி அன்பரது அகத்திருளகற்றும் அருமணியே! மறையொளியாய மரகதமே! அருட்கதிர் விரியும் அருஞ்சுடரே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் அறிஞரது மனத்தில் ஒளிரும் மணிவிளக்கே! தண்ணளி பொங்கும் தயாபரனே! என்று ஆராத அன்பினால் வாயாரவாழ்த்துகின்றார்.

"உண்ணெகிழ் தொண்டர் உளத்திருள் சிந்திட
ஒளிவிடு முழுமணியே!
உயர்மறை நாற்கலை முடிவின் முடிந்திடும்
ஒழுகொளி மரகதமே!
விண்ணெடு மண்ணை விழுங்கி அருட்கதிர்
விரியும் இளஞ்சுடரே!
மெய்ப்புலன் வேய்ந்து சமைந்ததோர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே!
புண்ணிய நாறுமோர் பெண்கலி கலியும்
புனித நறுங்கனியே!
புள்ளூர் னெவெம துள்ளத் தடநிறை
புத்தமு தக்கடலே!
தண்ணெளி பொங்கிய கருணை நிதியே
தாலோ தாலேலோ!
சங்கத் தமிழின் தலைமைப் புலவ
தாலோ தாலேலோ!"

சுபமஸ்து!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சுங்கான் கோபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமேஸ்வரம் கோயிற்கோபுரம்



கதிர்காமம்



திருக்கேதீஸ்வரம்

ஈழகேசரி ஈசுவர ஆண்டுமலர்

த

ட்ஸர்

ல்,

தம்

தம்

ப்



வின்ட்ஸர் கோமகன்
வயது 42

நடக்கும்?

நடைபெறுமா? .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலப்பெண்களுக்குச் சங்கீதம், நடனம் எற்றதா?

நான் 'சினிமா'வில் நடிக்க முற்பட்டமை

(கொழும்பு, ஸ்ரீமதி க. தவமணிதேவி அவர்கள்)



MISS. K. THAVAMANI DEVI

நம் நாட்டவரிற் சிலர், சங்கீதம், நடனம் என்பன குலப்பெண்களுக்கு ஏற்றதல்லவென்றும், அவை 'தேவ ரடியாள்'களுக்கே உரியதென்றும் கூறிவருவதை அறிய மிகமிகக் கவலைப்படவேண்டியதா யிருக்கிறது. தேவாடி யாள் என்பவள் யார்? தெய்வ சந்நிதானத்தில் தொண்டு செய்பவளே! இக்காலத்திலே தேவரடியாள்களை நாம் காணமுடியாது. அவர்களைக் காணவேண்டிய இடத்தில் கேவலம் விலைமாதரையே காண்கின்றோமல்லவா? ஆகவே, சங்கீதம் ஓர் உன்னதமான கலையென்பதும், சங்கீதக் கலை யினால் எத்தனையோ அடியவர்களும், மற்றையோரும் ஆனந்த பரவசராய், லயப்பட்டு இறைவனோடு ஒன்றித்து நிற்கும் பேற்றைப் பெற்றார்களென்பதும் நாம் அறியும் போது, அக் கலையின் சிறப்புத் தெள்ளிதிற் புலப்படுகின்ற தல்லவா? எவ்வளவு கஷ்டமான நிலையிலிருப்பவனும், நோயாளியும் சங்கீதத்தைச் செவியாற் கேட்டவுடன் தன்னினமறந்து சுதாகலமடைவதை அன்பர்கள் பலரும் அறிவார்கள். கிருஷ்ண பரமாத்மாவின் குழலிசையைக் கேட்ட மிருகஜாதிகளும் மெய்ம்மறந்து ஆனந்தமடைந்த வென்பது வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும்கூடக் காணத் தக்கதாயிருக்கின்றதெனக் கூறக் கேட்டிருக்கின்றோம்.

நடனம்: ஸ்ரீ நடராஜப்பெருமானின் நடனம். இந் நடனமே பஞ்சகிருத்தியங்களையும் காட்டும் ஒப்புயர்வற்ற கலையாயிருக்கிறது. ஸ்ரீ நடராஜப்பெருமானும் நாணும் படி சிவகாமசுந்தரியம்பாள் திருநடனஞ் செய்தாரென் றும், இதைக்கண்ட நடராஜமூர்த்தி இடதுகாலைத் தூக்கி வலப்பக்கமாக வைத்து நடனஞ்செய்ததாகவும், அம்பாள் அவ்வாறு செய்யமுடியாமையாலே தோற்றுவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய புனிதமான கலைகள், விலை மாதர் கையிலகப்பட்டு மிகவும் சீர்கேடான நிலையை அடைந்துவருவது யாவருமறிந்ததே.

இப்பொழுது, இந்தியாவிலே பெரிய குடும்பங்களில் மரியாதையுடன் வாழ்க்கை நடாத்தும் எத்தனையோ பெண் மணிகள், தம் கௌரவத்தை இழந்துவிடாது, சங்கீதம், பரதநாட்டியம் முதலிய கலைகளிலே தேர்ச்சிபெற்று இக் கலைக்கு உயிர்கொடுத்துவருகிறார்கள் என்பதை நாமறிந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிலா மகிழ்ச்சி எய்துகின்றேரும். சகோதர சகோதரிகள்! புனிதமான வாழ்க்கைக்கும், உடல்நலத்துக்கும் ஏற்ற இக்கலையை வளர்ப்பதில், ஒவ்வொருவரும் ஆர்வமுள்ளவர்களா யிருத்தல்வேண்டு மென்பதே எனது கோரிக்கை. அறிவின்மையாலும், பொறுமை முதலிய துர்க்குணங்களினாலும் உந்தப்பெற்றுத் தம் கௌரவத்தை இழந்துவிடாதிருப்பதே உத்தமம்.

நான் 'சினிமா' வில் நடிக்க முற்பட்டமைக்குக் காரணம்: நான் சிறுமியாயிருக்கும் காலத்திலே பெற்றோருடன் படக்காட்சிகளுக்குச் செல்வதுண்டு. அப்போழுது நல்ல படங்களைக் கண்டு மகிழ்வேன்; வீடு திரும்பியதும் நல்ல நடிகர்கள் எவ்விதம் நடித்தார்களோ, அதைப்போல் நடித்துப் பழகுவேன். அதைக்கண்டு என் பெற்றோர் மகிழ்வர். பின் 'சினிமா'ப் பத்திரிகைகளை வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது, நானும் ஏன் நடித்தலாகாது என்னும் எண்ணம் எனது உள்ளத்தில் எழுந்தது. அதை எனது தந்தையாரிடம் மாத்திரம் கூறினேன். 'சினிமா' வில் நடிப்போர் யாவரும் 'கேவலமானவர்கள்' என்னும் எண்ணம் எனது தாயாரிடமுண்டு. எனவே, அவரிடம் முதலிலே தெரிவித்தால், அவர் எனது எண்ணம் நிறைவேறுதபடி தடுத்துவிடுவார் என்னும் அச்சத்தினாலேயே தாயாரிடங் கூறாது தந்தையாரிடங் கூறினேன். ஆனால், தந்தையாரும் எனக்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டனர். இதற்கு முக்கிய காரணம், குலமகளிர் 'சினிமா'வில் நடித்தால், பெண்மைகலம் குன்றிவிடும் என்னும் அச்சமேயாகும். எனது பெற்றோர், பந்துக்கள், நண்பர்கள் முதலியவர்களைச் சந்திக்கும்போதெல்லாம், இதைப்பற்றி அவர்களிடம் கூறி, எனக்குப் புத்திமதி புகட்டும்படி சொல்வர். சில நாட்களின்பின், எனது தாயார் ராமராவ் போன்ற பல குலப்பெண்கள் தம் கௌரவத்தை இழக்காது 'சினிமா'வில் நடிக்கிறார்களென்றும், அவர்கள் கல்வியில் மிகவும் மேன்மையுள்ளவர்களென்றும் அறிந்ததும், அளவிலா மகிழ்ச்சிகொண்டு, அவ்விஷயத்தைப் பெற்றோரிடம் உதாரணமாகக் கூறி, எனது எண்ணத்துக்கு ஆதரவளிக்குமாறு வேண்டினேன். அப்போதும் அவர்கள் மறுத்துவிட்டனர். மறுப்பதில் அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு உறுதியாக இருந்தார்களோ, அவ்வளவுக்கவ்வளவு நானும் எனது எண்ணத்தில் உறுதியாகவிருந்தேன். எனது எண்ணம் நிறைவேறுமட்டும் போகவே, அழ ஆரம்பித்தேன்; அழுகையைக் கண்டதும் அவர்களது மனம் ஒருவாறு இளகியது. 'சினிமா' வினுள்ள நன்மை தீமைகளைப்பற்றி என்னுடன் விவாதித்தார்கள். அவர்களின் கேள்விகளுக்கெல்லாம் தகுந்த விடையளித்தேன். அதன்பின் அவர்கள் எனது எண்ணத்துக்கு இசைந்தார்கள். இதற்கிடையே எனக்குச் சங்கீதப் பழக்கமும் ஏற்பட்டது. 'ரேடியோ'வில் பாடும் சந்தர்ப்பங்கள் எனக்கு அடிக்கடி கிடைத்தன. நாட்டியக்கச்சேரிகளும், சங்கீதக்கச்சேரிகளும் நடாத்தினேன். இவை, எனது எண்ணத்தை நிறைவேற்றுவதற்குத் துணையாயிருந்தன. அப்போழுது சேலம் "மொடர்ன் தியேற்ற"ரில் "சதி - அஹல்யா" என்னும் புராணசரித்திரத்தில் கதாநாயகியாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் எனது பெற்றோருடன் அங்கு சென்று நடித்தேன்.

அரசினர் கவனிப்பார்களா?

இந்தியாவினுள்ள கைத்தொழில்களிலே மூன்றாவது ஸ்தானம் வகிப்பது 'சினிமா'த் தொழிலே. அங்கு இத்தொழிலுக்காக ஏறக்குறைய பதினைந்துகோடி ரூபாய் சென்றவருடம் செலவிடப்பட்டதெனக் கணக்கெடுத்திருக்கிறார்கள். ஆனால், இத்தொழிலுக்கு அரசினர் காட்டியுள்ள சலாக்கியம் மிகப் பூச்சியமென்றே சொல்லவேண்டியிருக்கிறது. காளுக்குநாள் புதிய விதிகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

செல்வம் மிகுந்துள்ள அமெரிக்கா முதலிய நாடுகளிலே, இத்தொழிலுக்கு அரசினர் காட்டியிருக்கும் சலாக்கியங்கள் மிக அதிகம். அமெரிக்காவில் இத் தொழிலுக்காக மூன்று பிரதான வங்கிகள் நடாத்தப்படுகின்றன. ஆனால், இந்தியாவிலோ படம் பிடிப்பதற்குப் போதுமான வசதிகள் கிடையாது. இதற்கு அரசினர் உதவிபுரிய முன்வரவேண்டும். வங்கிகளை ஏற்படுத்தவேண்டும். 'சினிமா' சம்பந்தமான யாவற்றிற்கும் புகைதச் செலவு முதலியன குறைக்கப்படல் வேண்டும். மினசாரப்பகுதியினரின் கடுமையானவிதிகள் இலகுவாக்கப்படுதல்வேண்டும். பிறநாடுகளிலே தயாரிக்கப்படும் 'பில்ம்ஸ்' மீது அரசினர் விதிக்கும் இறக்குமதி வரியைக் குறைக்கவேண்டும். 'சினிமா' நடிப்புக் கல்லூரிகளை ஆங்காங்கு ஏற்படுத்தவேண்டும். அவற்றில் தேறியவர்களுக்குப் பட்டங்களும், பரிசுகளும் வழங்கவேண்டும். இதன்மூலம் அழகு, உடல்நலம், சங்கீதம் முதலிய இனிய குணங்கள் நாட்டில் அதிகப்படுமல்லவா? எனவே, இத்துறைகளில் அரசினர் கவனத்தைச் செலுத்தவேண்டுமெனப் பெரிதும் விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணைச் சிலேடை வெண்பா

(சுன்னாகம், வீரசைவகுரு சி. மாணிக்கத்தியாகராசபண்டிதர் அவர்கள்.)



சி. மாணிக்கத்தியாகராச பண்டிதர்

தேசுமட வார்பதத்துஞ் செவ்வீரர் தங்கரத்து
மாசிலம்பு சேருமெழில் வண்ணையே—பாசிலங்கு
தங்கமலைக் கையார் தருமன்பி னர்தமனந்
தங்கமலைக் கையார் தலம்.

வண்டிர் மரைக்கபத்தும் வாள்வேந்தர் போர்க்களத்தும்
மண்டிகஞ் சேருமெழில் வண்ணையே—தொண்டுரு
மஞ்சக் கரத்தா னனுதினமுங் கோத்திரிக்கு
மஞ்சக் கரத்தா னகம்.

தாமின் புறுவ துலகின் புறந்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசனிமின் னுர்முகத்தும் கம்மாளர் தங்காத்தும்
மாசுந் சரந்தோன்று வண்ணையே—காசஞ்செ
யக்காவைப் பூண்டா ரறியாப் பெருமையினு
ரக்காவைப் பூண்டா ரகம்.

விண்டுவறை பாற்கடலும் வேதனுறை தாமரையும்
வண்டாங்கங் காட்டுமெழில் வண்ணையே-கொண்டவிடைப்
பாமாலை யானுர் பகர்பண் டிதர்பாடும்
பாமாலை யானுர் பதி.

ஆடுங் கொடித்தெருவு மையனருண் மாதவனும்
மாடங் குலவுமெழில் வண்ணையே—தேடுந்தம்
பாதங்கைக் கொண்டார் பழிநீக்கி யேயரியம்
பாதங்கைக் கொண்டார் பதி.

சூதோரா காயகருங் தூயமணி வாயில்களும்
மாதோ ரணங்கூடு வண்ணையே—தீதார
வஞ்சந் தனத்தா ரணிமதுரை வேட்டனிந்த
வஞ்சந் தனத்தா ரகம்.

நயக்கப் பெறுபாவும் நண்ணுபுட வாரும்
மயக்கவணி கூடுமெழில் வண்ணை—வியக்கமரு
ளாறுதலை வைத்தா ரடைந்தார்க் கமுதுதிக
ராறுதலை வைத்தா ரகம்.

ஓதரிய சிந்துரமு மொப்பியரு ளுத்தமரும்
மாதரணி சேருமெழில் வண்ணையே—யாதரத்துக்
கஞ்சுதலை யுற்ற ரரும்பாவ நீக்குதற்கா
பஞ்சுதலை யுற்ற ரகம்.

தேனுர் பொழிலிடத்துந் தெள்ளறிவி லாரிடத்தும்
மானங் குறையுமெழில் வண்ணையே—வானங்கொ
ளாலமருந் தண்ணை லரிபுரத்தை வாட்டிவரு
டாலமருந் தண்ணை லகம்.

தூய்யபெரி யோரகத்துந் தூயமத னுர்கரத்தும்
வையம் பணியுமெழில் வண்ணையே—செய்யபங்க
சங்குவளை கொண்டார் தகுமுகங்கண் ணுர்க்கணியச்
சங்குவளை கொண்டார் தலம்.

காப்பணிந்த செய்யுங் கணிகையரை நட்டுவனும்
மாப்பனிலக் காட்டுமெழில் வண்ணையே—காப்பொலியு
மம்மா வரியா னழகுபெற வாமத்தெ
மம்மா வரியா னகம்.

தோமிலணி யார்முத்துந் தூய மலர்க்கொத்தும்
மாமுலீ தோங்குமெழில் வண்ணையே—கோமனத்துச்
சங்கை யுடையார் தமக்கறிய வொண்ணுத
சங்கை யுடையார் தலம்.

மாதவஞ்செய் மேலோரும் மன்னுமுயர் மான்மார்பும்
மாதுறக்கம் பூணுமெழில் வண்ணையே—சீதரஞ்சூழ்
பாரிலங்கை யுற்ரூன் பகர்பா தலஞ்செனுத்திப்
பாரிலங்கை யுற்ரூன் பதி.

மெச்சுமனை யுள்ளிடத்தும் மேவுபங்க யத்தடத்தும்
மச்சங் குலவுமெழில் வண்ணையே—இச்சைநெறி
யக்கூற்ரூர்க் கொன்ரு ரடிமைமார்க் கண்டனைக்கா
யக்கூற்ரூர்க் கொன்ரு ரகம்.

கட்டுரைசெல் தட்டானுங் காரோங்கு காவகமும்
மட்டப் பணிசெய்யும் வண்ணையே—சிட்டர்பயம்
போகத் திருந்தார் புரமெரித்தா ரன்னையருட்
போகத் திருந்தார் புரம்.

ஓதுகங்கை மாநதியு மொள்ளொளிசேர் சாமரையும்
மாதரங்கங் காட்டுமெழில் வண்ணையே—ஆதரஞ்சேர்
போகமனம் வைத்தார் புலமையுரூர் போதர்நெஞ்சம்
போகமனம் வைத்தார் புரி.

பேணிக் கொளுஞ்செக்கும் பேசுமன்னர் தம்முடியும்
மாணிக்கங் காட்டுமெழில் வண்ணையே—வாணிக்குத்
துண்டங் கெடுத்தான் றுலங்குமொளி யோங்குபிறைத்
துண்டங் கெடுத்தான் றுறை.

மின்னனையார் காட்டியமும் மேதகைய மாமணியும்
மன்னரங்கஞ் சேருமெழில் வண்ணையே—பன்னரிய
மாதங்கங் கொண்டார் மலையரசன் பாலுதித்த
மாதங்கங் கொண்டார் மனை.

தண்டலையார் பூந்தாதுந் தக்கசெழிப் பார்நிலமும்
வண்டுவரை காட்டுமெழில் வண்ணையே—பண்டயனங்
கோலத் தலையார் குறிக்கறியார் செஞ்சடையின்
கோலத் தலையார் குடி.

ஓதரிய காவகத்து மொப்பில்புல வோரகத்தும்
வாதங் குலவுமெழில் வண்ணையே—வேதனரி
பொன்னகரித்தான் புரிதவத்துக் காரருள்செய்
பொன்னகரத்தான் புரி.

மன்னுமழ கேஸ்வரியும் வளர்**ஈழ கேசரி**யும்
பொன்னிலங்கை மேவிப் புகழோங்கும்—முன்னரிய
மாமதிமேற் கொண்டார் மலரடியைப் போற்றிசெய்யும்
மாமதிமேற் கொண்டார் வழி.

பன்னிறமே றும்மணியும் பாவீழ **கேசரி**யும்
மன்னரங்க மேறுமெழில் வண்ணையே—சுன்னப்
பகிவிளங்கு **பொன்னைய** பண்டிதனெங் காளும்
திதிவிளங்க வாழுந் துறை.

எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராசகுடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேஷசங்கிராந்தியும் - - விஷுபுண்ணியகாலமும்

ஸ்ரீமான் ராகவன் M.A, F.R.A.S., சென்னைச் சர்வகலாசாலையில் வானசாஸ்திரப் பேராசிரியராக விளங்குபவர். அவர் ஈசுவர வருடப்பிறப்பைக் கொண்டாடுவதற்காகத் தமதூராகிய புதுக்கோட்டைக்கு வந்திருந்தார்.

ராகவனின் வருகையைக் கேள்வியுற்ற அவர் புரோகிதராகிய சுப்பைய சாஸ்திரிகள், ராகவனின் விஷுபுண்ணியகால தானதர்ப்பணாதிகளை நிறைவேற்றி வைப்பதற்காகத் தருப்பைதாங்கிய கரத்துடன் பிரசன்னமானார். ராகவன் எதிர்கொண்டழைத்து உபசரித்தான்.

"என்ன ராகவா விஷுபுண்ணியகாலமாச்சே, ஸ்நானங்கீனம் ஒன்றும் பண்ணவில்லையா? உன் விஷுபுண்ணியகால தானதர்ப்பணாதிகளை முடிந்துவிட்டு, வக்கீல் துரைசாமிஐயர் வீட்டுக்குப் போகலாமென்று வந்தேன்; சீக்கிரம் ஸ்நானம் முடித்துவிட்டு வருகிறாயா; அல்லது போய்த் திரும்ப வரட்டுமா?" என அவசரத்துடன் கேட்டார் சுப்பைய சாஸ்திரிகள்.

'தூமகேது'

விஷுபுண்ணிய காலமாவது ஸ்நானமாவது; இன்று விஷுபுண்ணியகாலமென்று யார் சொன்னார்கள்? வேறே தாவது கருமமிருந்தால் தாராளமாய்ப் பார்த்துக்கொள்ளலாம்." என்ற ஒரே பதிலில் புன்னகையுடன் முற்றுத்தரிப்பிட்டார் புரோபெசர் ராகவன்.

சாஸ்திரிகளுக்கு அன்றுதான் பூமி சுழன்றது.

"சாஸ்திரிகளே, இப்படியுட்காருங்கள்; தாம்பூலமருந்துங்கள்; என்னுலென்ன ஆகவேண்டும்; நானே உங்களிடம் வரவிருந்தேன்; அதற்குள் தாங்களே கிருபை செய்து என் சிறுகுடிலுக்கு எழுந்தருளிவிட்டீர்கள்." என்று ராகவன் உபசரிக்கத்தொடங்கியதும் பூமிசுற்றுமவிருந்ததைச் சாஸ்திரிகள் உணர்ந்தார்.

மெதுவாக ஆசனத்தமர்ந்த சாஸ்திரிகள் தமக்கு முன் வைத்த வெற்றிலைத் தட்டை வெற்றுத் தட்டாக்கிவிட்டு, ராகவனை ஒரு பார்வை பார்த்தார். வானவில்லில் நிறங்கள் தோன்றி மறைவதுபோல் அவர் பார்வையில் நவரசங்களிற் சில சடுதியிற்றோன்றி மறைந்தன. பின் குரல்வளையிலுள்ள தொனித்தந்தியின் சுருதி கூட்டப்பட்டது: அதாவது செருமிக்கொண்டார் என்க.

"ராகவா, உன்மேல் குற்றமொன்றுமில்லை; காலத்தின் கோலமிது; உன் தகப்பனார் ஸ்ரீநிவாச சர்மா புதுக்கோட்டையிலே ஆசார அனுஷ்டானத்துக்குப் பிரசித்தமானவர்; அது மாத்திரமா, எனது அத்தியந்த நண்பர். மணிக்கூட்டுக்கம்பி மறுபக்கமாகச் சுற்றினாலும் (காலந்தலைகீழாகப் போனாலும்) அவர் சந்ததியார் ஆசார அனுஷ்டானத்திற் றவறார் என்ற நம்பிக்கையினாலும், எனது நண்பரின் புத்திரன் என்றதினாலும் உன்னிடம் வந்தேன். மேலும் நீ வானசாஸ்திர ஆராய்ச்சி செய்பவனுகையால் இந்திய வானசாஸ்திரக் களஞ்சியத்தின் தூண்களாகிய பஞ்சாங்கங்களிற் காணப்படும் அனுஷ்டானங்களில் அதிக சிரத்தை காட்டுவாய் என்றுமிருந்தேன்; என்செய்யலாம்; காலத்தின் கோலமிது; உன்னைக் கண்டதே பரம சந்தோஷம்; போய்வரட்டுமா?" என்றெழுந்தார் நமது சாஸ்திரிகள்.

ராகவன் உடனே யெழுந்து அவரை வழிமறித்து "என்னை மன்னியுங்கள்; நீங்கள் என்ன அபிப்பிராயங்கொண்டீர்களோ அதே அபிப்பிராயந்தான் நானுங் கொண்டிருக்கிறேன்; அதாவது காலந் தலைகீழாய்ப் போய்விட்டது என்பது. என் அதிகஞ் சொல்லுவான்; நீங்கள் 'இன்று விஷுபுண்ணிய காலமாச்சே' என்று தொடங்கியதிலிருந்தே காலம் மாறிப்போய்விட்டதென்பது தெரியவில்லையா?" என்று ஒரு போடுபோட்டார்.

சாஸ்திரிகளுக்கு அட்டதிக்குகளில் ஒன்றிலாவது வெளிச்சம் தெரியவில்லை — எங்கும் ஒரேயிருள். என்றாலும் சமாளித்துக்கொண்டு "என்ன ராகவா உனக்குப் பஞ்சாங்கமுமா பார்க்கத்தெரியாது; அடே கிட்டு! புது வருடப் பஞ்சாங்கமிருந்தால் எடுத்துவா; அதுவுமில்லையென்றால் கையில் சில்லறையிருந்தால் கடைக்குப்போய் ஒன்று வாங்கிவா; உன் மாமனுருக்குப் பஞ்சாங்கம் பார்க்கக் கற்றுக்கொடுக்கப் போகிறேன்." என்று கூறி முடிக்கும் அடைப்பை உடைத்துப் பெருக்கெடுத்த

கூவலாமை குரைகடல் ஆமையைக் கூவலோடொக்கு மோகடல் என்றல்போல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வெற்றிலைத் தம்பலத்தை வெளியேபோய் உமிழ்ந் தார். புரொபெசர் ராகவன் புன்னகைபரும்பிய முகத் துடன் மௌனஞ் சாதித்தார்.

பஞ்சாங்கம் வந்ததும் சாஸ்திரிகள் சித்திரைமாதப் பக்கத்தைப் புரட்டி, இதோபார் ராகவா, ஈசுவர வருஷம் சித்திரை மாசம் ஒண்ணுந்தேதி; நம்பமாட்டாயாக்கும்; இதோபார் பக்கத்தில் வெள்ளைக்காரன் தேதி பதி மூணு; இன்று நாடி 17 - 41க்கு மேட ரவி; வருஷப் பிறப்பு; விஷுபுண்ணியகாலம், என்றெல்லாம் எழுதப் பட்டிருக்கின்றன. என்னசொல்கிறூப் இப்பொழுது?" என்றுகூறி வெற்றிச்சிரிப்புச் சிரித்தார்.

"சாஸ்திரிகளே அதெல்லாம் இருக்கட்டும்; விஷு புண்ணியகாலமென்று சொன்னீர்களே, அதன் அர்த்தம் என்ன? சற்றே விளங்கச் சொல்லுங்கள்." என்று சிறிது குத்தலாக வினவி, அடக்கிச்சிரித்தார் ஸ்ரீமான் ராகவன்.

இக்கேள்வியுடன் சாஸ்திரிகளின் சர்வாடிகளும் ஒடுங்கின; தேகம் விபர்த்தது; கைகள் பதறின; முழங் கால் முழங்காலுடன் முட்டிக்கொண்டது; நாத்தடுமாறி யது. இதற்கெல்லாம் காரணம் சாஸ்திரிகள் தம்மைப் பற்றிக் கொண்டிருந்த பேரபிப்பிராயமே. அவரை இதுவரையில் ஒருவரும் இப்படிக் கேள்விகேட்டதே கிடையாது. கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதே என்றெண்ணியவராய், கெஞ்சும் பாவனையாக ராகவனை நோக்கி, "ராகவா எனக்கென்ன தெரியும்; நம் புரோகி தத்தைப் பார்க்கக் கற்றுக்கொண்டிருக்கிறேன்; பஞ்சாங் கம் பார்க்கவுங் கொஞ்சம் வரும்; அதில் இன்று வருஷப் பிறப்பு விஷுபுண்ணியகாலம் என்றிருக்கிறது; இப் புண்ணியகாலத்தில் தானதர்ப்பணம் செய்யும்படி சாஸ் திரங்களில் விதித்திருக்கிறது; அவ்வளவுதான், வேறொன்றுமறியேன்; நீ ஏதாவது சொல்லிக்கொடுத் தால் தேவலை; இந்தநாளைப் பையன்களுடன் ஊடாடுவ தென்றால் வெகு மோசம்; மட்டுமரியாதையில்லாமற் கேள்வி கேட்பான்கள்." என்று ஈனஸ்வரத்தில் வேண் டினர்.

புரொபெசரோ சூரைமுள்ளில் மாட்டிக்கொண்டவ னைப்போல் தத்தளித்தார். சாஸ்திரிகளுக்கு ஒருநாளில் வானசாஸ்திரம் படிப்பிப்பதென்றால் அப்படித்தானே யிருக்கும்! 'என்ன செய்யலாம்,' என்று போசித்துக் கொண்டே நிமிர்ந்தபொழுது, சட்டைவண்டி ஒன்று தெருவில் விடப்பட்டிருந்ததைக் கண்டார். உடனே ராகவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது.

சாஸ்திரிகளே முழைத்துக்கொண்டு ராகவன் தெரு வுக்குப் போனர். போய் அவ்வண்டியின் சில்லொன் றைப் பிடித்துக்கொண்டு சாஸ்திரிகளே, இந்த வண்டிச் சக்கரம்போல்தான் ராசிச்சக்கரம் இருக்கிறது. இந்தச் சக்கரம் பன்னிரு சிலேக்கம்புகளால் பிரிக்கப்பட்டிருப்பது போல ராசிச்சக்கரமும் பன்னிரு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டிருக்கிறது. இந்தப்பிரிவுகளில் மேலேயிருப்பதை மேடராசியென்று வைத்துக்கொள்வோம்; அடுத்து வலதுகைப்புறத்திலுள்ளது இடபராசி" என்று சொல் லுதலும், சாஸ்திரிகள் வருஷாதிநூலில் நெட்டுருப் பண்ணிய பன்னிருராசிப் பெயர்களையும் ஒப்படைத்தார்.

"சற்றே நில்லுங்கள்" என்று கூறிவிட்டு ராகவன் வீட்டுக்குள்ளே சென்றார். ராகவன் வருவதற்கிடையில் சாஸ்திரிகள் கரிக்கட்டியால் சில்லின் ஒவ்வோர் பிரிவி லும் மேடம், இடபம் என்று முறையே குறித்து வைத்துக்கொண்டார்.

உள்ளே சென்ற ராகவன் சிலேக்கொடிக்குக் கட்டி யிருந்த பிரம்பை அறுத்துவந்து வண்டிச்சில்லின் குறுக் களவுகொண்ட வளையமாக வளைத்துக்கட்டினர். பின் னர் அதனைக் கொண்டுவந்து, வண்டிச்சில்லு அப்பிரம்பு வளையத்துள்ளே யமையத்தக்கதாக — ஆனால் பிரம்பு வளையம் சில்லில் மேலும் கீழுமாக இரண்டு இடங்க ளில் மாத்திரம் பொருந்தும்படியும், மற்றைய இடங்க ளில் சில்லைவிட்டுச் சிறிது பிரிந்திருக்கும்படியுமாகச் சொருகினர். சொருகியதும் "சாஸ்திரிகளே, இந்தப் பிரம்பு வளையந்தான் விஷு ரேகை; இது இரண்டே யிரண்டு இடங்களிற்றான் இராசிச்சக்கரமாகிய சில்லுடன் பொருந்துகிறது; மற்றைய இடங்களில் விலகியிருக்கிறது. இந்தச்சில்லின் அச்சைச் சூரியன் என்றெண்ணிக் கொள்ளுங்கள். இதோ நான் கையில் வைத்திருக்கும் உருளைக்கிழங்குதான் பூமி. இந்தப் பூமியைச் சில்லின் குடத்துக்குச் சமீபமாகப் பிடித்துச்சுற்றிவந்தால் அச் சாகிய சூரியனைச் சுற்றிவருமல்லவா? இப்படிச் சுற்றி வரவே ஒருவருடம் — 365¼ நாள் செல்கிறது. 365¼ நாளில் பூமி 360 பாகை சுற்றிவருவதால் ஒரு நாளில் சற்றேறக்குறைய ஒரு பாகை செல்கிறது. பூமி ஒருநாளில் ஒரு பாகை சென்றால், பூமியிலுள்ளார்க்குச் சூரியனே எதிரே ராசிமண்டலத்தில் ஒருபாகை சென்றதாகத் தோற் றும். ஆகவே பூமியின் சுற்றோட்டதினால் சூரியனே ராசி மண்டலத்துக்கூடாகத் தினப்படி ஒருபாகை வீதம் வலப் புறமாகச் சுற்றிவருகிறதாகத் தோற்றுகிறது. பூமி துலாராசியின் தொடக்கத்தைக் காட்டும் சிலேக்கம்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும்பொழுது அதிலிருப்பவர்களுக்குச் சூரியன் எதிரே மேடாரம்பத்திலிருப்பதாகத் தோற்றும். அன்று தான் **மேஷசங்கராந்தி**—எங்கள் வருஷப்பிறப்பு. பூமி துலாராசிப் பக்கமாகச் சஞ்சரித்து வருகையில் சூரியன் எதிரே மேஷராசியில் சஞ்சரித்து வருவதாகத் தோற்றும். அப்பொழுது மேடமாசம் அல்லது சித்திரை மாசம் என்கிறோம். பின் விருச்சிகராசிக்குச் சமீபமாகப் பூமி நிற்கும்பொழுது சூரியன் இடபராசியில் நிற்பதாகத் தோற்றுமாகையால் அக்காலத்தை இடபமாதம் அல்லது வைகாசிமாதம் என்கிறோம். இப்படியே எந்தெந்த ராசிக்கூடாகச் சூரியன் செல்லுகிறதாகப் பூமியிலுள்ளவர்க்குத் தோற்றுகிறதோ அந்தந்த ராசிப்பெயரால் மாசங்கள் உண்டாகின்றன; விளங்குகிறதா?" என்று சாஸ்திரிகளை நோக்கினர் ராகவன்.

"ஆகா விளங்காமலென்ன, நன்றாய் விளங்குகிறது; மேலே போங்கள்" என்று சாஸ்திரிகள் அவசரப்பட்டார்கள். காரணம் அவர் மனம் அவரைவிட்டுத் துரை சாமிஐயர் வீட்டுக்குச் சென்றதே.

ராகவன் விஷுரேகையைப் பற்றிச் சொல்லத் தொடங்கி, "சாஸ்திரிகளே, தங்கள் யோசனையை இந்த விஷுரேகைப் பக்கமாகத் திருப்புங்கள். இந்த விஷுரேகை ராசிச்சக்கரத்தில் எவ்விடத்தில் சந்திக்கிறது?" என்று கேட்டார்.

சாஸ்திரிகள் கரிக்கட்டிக் குறிப்பைப் பார்த்து, "மேலே மேஷராசியின் தொடக்கத்திலும், கீழே துலாராசியின் தொடக்கத்திலும் சந்திக்கிறது" என்று கூறிவிட்டு, ஏன் ராகவா, நான் பள்ளிக்கூடத்தில் வாசித்திருந்தால் கெட்டிக்காரப் பையனாக இருந்திருக்க மாட்டேனோ?" என்று பெருமையுடன் கேட்டார்.

"ஆகா தடையென்ன..... இந்த விஷுரேகை இற்றைக்கு 1700 வருடங்களுக்குமுன் நீங்கள் கூறிய வாறே மேடாரம்பத்திலும் துலாரம்பத்திலுமே இருந்தது. அக்காலத்தில் சூரியன் மேடாரம்பத்தில் வந்தபொழுது மேஷசங்கராந்தியும் அதிலேயே விஷுரேகையிருந்தபடியால் விஷுபுண்ணியகாலமும் ஒரே நாளில் நிகழ்ந்தன. இதை வழக்கத்தைத்தான் இன்றும் நாம் குருட்டுத்தனமாகப் பின்பற்றிவருகிறோம். ஆனால் இந்த விஷுரேகை 72 வருடத்துக்கு 1 பாகைவீதம் ராகு கேதுக்களைப்போல் பிற்பக்கமாக நகர்ந்துகொண்டிருப்பதனால் இடையிற் கழிந்த 1700 வருடத்திலும் மேடாரம்பத்தினின்றும் 23 பாகைவரையில் நகர்ந்து மீனராசியில் உத்தராட்டாதி நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்திலிருக்கிறது. (இச்சமயத்தில் பிரம்பு வீலையத்தை 23 பாகை தூரம் பிற்பக்கமாக நகர்த்தி சில்லிற் குறித்துள்ள மீன ராசியில் விட்டுக்கொண்டார்.) சூரியன் ஒருநாளில் ஏறக்குறைய ஒருபாகைவீதம் செல்கிறதனையால் ராசிச் சக்கரத்தை வலப்புறமாகச் சுற்றி வருகையில் மேஷ சங்கிராந்தி நிகழ்வதற்கு ஏறக்குறைய 23 நாட்கள் முந்தியே மீனராசியில் இப்பொழுதிருக்கும் விஷுரேகையைச் சந்திக்கிறான். இதனால் என்ன வந்துவிடுகிறது? தற்காலத்தில் மேஷசங்கிராந்திக்கு 23 நாட்களுக்கு முந்தியே - அதாவது இன்றைக்கு 23 நாட்களுக்கு முன்னுள்ள பங்குனிமாதம் 8-ம் தேதியளவில் விஷுபுண்ணியகாலம் நிகழ்ந்துவிட்டதென்பது அல்லவா?

சாஸ்திரிகள் உடனே சென்ற தாத்ருவருஷ பஞ்சாங்கத்தை எடுப்பித்துப் பார்த்தார். "பங்குனிமீ 7-ங உ சாயன விஷுபுண்ணியகாலம், மேஷாயனம், சாயன வர்ஷாரம்பம்" என்றிருந்ததைக் கண்டார். அவர் முகத்தில் அதிசயக்குறி ஜொலித்தது. "அதெல்லாம் சரிதான் ராகவா, அன்றுதான் விஷுபுண்ணியகால மென்பதற்கு என்ன சான்று?"

"என்று விஷுபுண்ணியகாலம் நிகழுமோ அன்று சூரியன் பூமியில் நிரட்சரேகைக்கு மேலிருப்பான்; அன்று பூமியில் எங்கும் பகல் 30 நாழிகையாயிருக்கும்; பங்குனிமீ 7-ங உயில்தான் இப்படியிருக்குமேயொழிய சித்திரைமீ 1-ங உயாகிய இன்று அப்படியிராது. இதேமாதிரி ஐப்பசிமீ 1-ங உ கொள்ளும் துலா விஷுவ புண்ணிய காலமும், புரட்டாதிமீ 8-ங உயே நிகழ்ந்துவிடும். அன்றும் பகல் 30 நாழிகையாகவே இருக்கும். தைமீ 1-ங உ பொங்கலுடன் தொடங்குவதாக நாம் கொள்ளும் உத்தராயணமும், ஆடிமீ 1-ங உ கூழுடன் தொடங்குவதாக நாம் எண்ணியிருக்கும் தக்ஷிணாயனமும் முறையே, மார்கழிமீ 7-ங உயிலும், ஆனிமீ 8-ங உயிலும் ஆரம்பித்து விடுகின்றன. மார்கழிமீ 7-ங உயில் தென்கோளார்த்த வாசிகளுக்குக் கூடிய பகலும், ஆனிமீ 8-ங உயில் வடகோளார்த்த வாசிகளுக்குக் கூடியபகலும் காணப்படும். பகல்மானத்தைக் கொண்டே இந்த நான்கு தினங்களையும் அறிந்துவிடலாமாகையால், எமது கூற்றுக்குப் பகல்மானமே சாட்சி; பருவகாலங்களாகிய இருதுக்களையும் இந்த முறையேதான் கொள்ளவேண்டும்."

"ஆகா! நீ சொல்வது எவ்வளவு நியாயமாகத் தோற்றுகிறது; இதைப் பார்த்தால் நம் இந்துக்கள் எவ்வளவு வானசாஸ்திர ஞானத்துடன் காலங்களை வகுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியகாலங்களைக் குறித்தார்களென்று புலப்படுகிறதல்லவா? இந்த வெள்ளைக்காரன் வருஷ மாதங்களுக்கோ ஒரு நியாயமாவது மண்ணாங்கட்டியாவது கிடையாதே! ..... ஆனால், பஞ்சாங்கம் போடுகிறவர்களுக்கு இது தெரியாதா? அவர்கள் எதற்காக உத்தராயண தக்ஷிணாயன விஷுபுண்ணியகாலங்களை 23நாள் பிந்திக் குறிக்கிறார்கள்?

"அவர்களுக்குத் தெரியாமலில்லை. தெரிந்தபடியாற்றான் சாயன விஷுபுண்ணியகாலம், சாயன உத்தராயணம் என்று உரியகாலங்களிற் குறிக்கிறார்கள். ஆனாலும், 1700 வருடங்களாக வழங்கிவந்த வழக்கத்திற்கும், அவ் வழக்கத்தைபோட்டி பெழுந்த சாஸ்திர விதிகளுக்கு மஞ்சி, மேஷ சங்கிராந்தியுடன் சைத்ர விஷுவத்தையும், துலா சங்கிராந்தியுடன் துலா விஷுவத்தையும், மகரசங்கிராந்தியுடன் உத்தராயணத்தையும், கடகசங்கிராந்தியுடன் தக்ஷிணாயனத்தையும் குறித்துவிடுகிறார்கள். மேலும், பஞ்சாங்க கணிதர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. ஆகவே, ஒன்றைத் துணிந்துசெய்ய அவர்களால் முடியாது.

இந்த விஷுரேகை, ராகு கேதுக்களைப்போல் இடப்பக்கமாகச் சுற்றுகிறதென்றாயே; இதற்கு நியாயம் என்ன? நம்பத்தகுந்த ஆதாரம் உண்டா?"

"நியாயம் அறியவேண்டுமானால் தாங்கள் யூனிவர்சிட்டியில் வாசிக்கவேண்டும். ஆதாரம் வேண்டுமானால் சொல்லுகிறேன். மேடாரம்பமாகிய அசுவினியில் விஷுரேகையிருந்தபடியாற்றான் அசுவினியை முதலாகவைத் தெண்ணிவருகிறோம். 3800 வருடங்களுக்குமுன் கார்த்திகை நக்ஷத்திரத்தில் விஷுரேகையிருந்தபடியால் கார்த்திகையை முதலாகவைத் தெண்ணியிருக்கிறார்கள். திருவாதிரையை முதலாவதாகவைத் தெண்ணியகாலமுமுண்டாம். இப்பொழுது உத்தரட்டாதி நக்ஷத்திரத்தை முதலாவதாகவைத்தெண்ணுவதே முறையாகும். இப்படியே காலத்துக்குக் காலம் முதல் நக்ஷத்திரம் மாறியதே தகுந்த ஆதாரமல்லவா?

"அப்படியானால், விஷுபுண்ணிய காலத்தை வர்ஷப்பிறப்பாகக் கொள்ளவேண்டுமா? அல்லது மேஷ சங்கிராந்தியை வருஷப்பிறப்பாகக் கொள்ளவேண்டுமா?"

"வேதாங்க ஜோதிஷகாலத்தில் விஷுபுண்ணிய காலத்தையே (Vernal Equinox) வருடாரம்பமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடைசி 1700 வருடங்களாக மேஷசங்கிராந்தியைத்தான் வருடாரம்பமாகக் கொண்டிருக்கிறார்கள். இதை யிருந்தாப்போல் விடுவதானால் 23 நாட்களையும் சேர்த்து விடவேண்டிவரும். அப்படி விடுவதென்றால் உலகம் ஏற்றுக்கொள்ளுமா? 'கிரகோரி' என்னும் பாப்பாண்டவர், கலண்டரில் 10 நாளை விட கேர்ந்தபோழுது, எத்தனையோ இளம்பெண்கள் தமது வயது திடீரென 10 நாள் ஏறிவிட்டதேயென்று 'போப்பின்' செபலிக் கண்டித்தார்களாம். இக்காலத்தில் எத்தனை எதிர்ப்புக்கள் வருங் தெரியுமா?

"இது அசாத்தியமான காரியந்தான்; அப்படியானால் என்ன செய்யலாம்?"

"வருஷப்பிறப்பை வழக்கம்போல் மேஷ சங்கிராந்தியன்று கொள்வது; விஷுபுண்ணிய காலங்களையும், உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்களையும் வழக்கத்திலும் 23 நாள் முந்தி—சாயன விஷு, உத்தர, தக்ஷிணாயன புண்ணியகாலங்களில் கொள்வது. இப்படி வைத்துக் கொண்டால் ஒரு கஷ்டமும் வராதல்லவா?"

"நீ சொல்லியபடி செய்யாவிட்டால் என்ன கஷ்டம் வரப்போகிறது? அல்லது இப்பொழுதுதான் என்ன கஷ்டமேற்பட்டது?"

"ஏறக்குறைய 12000 வருடத்தால் உத்தராயண புண்ணியகாலத்தில் 'தக்ஷிணாயன புண்ணியகாலே' என்றும், சைத்ர விஷுபுண்ணிய காலத்தில் 'துலா விஷுவ புண்ணிய காலே' யென்றும் உங்கள் சந்ததியார் சங்கற்பஞ் சொல்லநேரிடும்; பஞ்சாங்கத்தில் மாரியென்றிருந்தால் நாட்டில் கோடைதான் நிகழும்; அவ்வளவுதான் வேறொரு கஷ்டமுமில்லை."

"அதெல்லாம் சரிதான் ராகவா, நீ இன்று விஷுபுண்ணிய கால தானதர்ப்பணம் செய்யப்போகிறாயா இல்லையா?"

"நான் எனது விஷுபுண்ணியகால தானதர்ப்பணத்தைச் சென்ற பங்குனிமீ 8-ந் உ காலையிற் செய்துவிட்டேனே!"

"அப்படியா, சரிதான்; இதெல்லாவற்றையும் இந்த ஊரிற் சொல்லிவிடாதே; சொன்னயானால் என்வீட்டில் பட்டினிதான்." என்று கூறிவிட்டு, வெகு வேகமாகத் துரைசாமிஐயர் வீட்டுக்குச் சென்றார். எதற்கென்று நினைக்கிறீர்கள்? விஷுபுண்ணியகால தானதர்ப்பணஞ் செய்துவைக்கத்தான்!

புரோபெசர் ராகவன் பெருமூச்சொன்றைச் சாஸ்திரிகளுக்குப் பின்னால் செல்லவிட்டு, பிரம்பு வீலையத்துடன் வீட்டுக்குட் புகுந்தார்.

"சீலைக்கொடியை யவிழ்த்து வண்டிச்சில்லுக்கு வீலை பம்போட்டால், புடைவையை நினைத்துத் தாலிக்கொடியிற் கட்டிக்கொள்வதா?" என்ற மங்களப் பாட்டுடன் புரோபெசர் அம்மாள் வரவேற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைச்செய்யுள் பாடிய அருந்தமிழ்ப் புலவர்கள்

(மூளாய், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்
பண்டிதர், ஸ்ரீமத் கா. பொ. இரத்தினம் அவர்கள்.)

முன்னுரை.

அமிழ்தினுமினிய நந்தம் செந்தமிழன்னையின் தவப்பயனுய் அவதரித்த புலவர்கள் பலராவர் அவர்கள் செயற்கருஞ் செயல்களைத் தமிழர்கள் எடுத்தோதாதிப் பெருமிதம் அடைகின்றார்கள். அவர்களுடைய நூல்களைப் பொன்னேபோற் போற்றுகிறார்கள். அந்நூல்களின் சொற்பொருணயங்களைக்கண்டு வியக்கின்றார்கள். அவர்களை 'நாலுஞ் சான்றவர்கள்,' 'தெய்வப்புலமையாளர்கள்,' 'புலனழுக்கற்றவர்கள்,' 'நுண்மாணுழைபுலமுடையவர்கள்' எனப் பலவகையாகப் புகழ்கின்றார்கள். இவற்றையெல்லாம் கேட்டுத் தமிழன்னை, அவர்களை என்ற ஞான்றினும் பெரிதுவக்கின்றாள். அப்புலவர்களின் புகழ் வர வர உயர்ந்துகொண்டே வருகின்றது. அஃது ஒரு காலும் குறையாது! அழியாது! அவர்களின் புகழ் ஓங்குவதற்குரிய காரணம்தான் என்னை?



பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

கற்றவர்களே உலகத்திற்குக் கண்ணுவர். உலகத்தை அறிந்தவர்கள் அவர்களே. அவர்களுடைய கல்விக் கண்ணுக்குத் தோற்றுத பொருள்—உருமாறித் தோற்றும் பொருள்—உலகிலில்லை. ஒவ்வொரு பொருளின் தன்மையையும் உற்றுணர்ந்தவர்கள் அவர்களே. நல்லதன் நலனையும், தீயதன தீதையும், இன்பத்தில் துன்பத்தையும், துன்பத்தில் இன்பத்தையும் உணர்ந்தவர்களும் அவர்களே.

*தலையிலிருந்து விழும் மயிரிலுங்கூட ஓர் உண்மையை அவர்கள் காண்பர். இறந்தகாலத்தைக்கொண்டு நிகழ்காலத்தையும், அறியும் ஆற்றல் மிக்கவர்கள். ஒவ்வொருவருடைய மனத்தையும் அளக்கும் வல்லுனர். தம் அறிவின் மாட்சியாலும் சொல்லாட்சியாலும் எத்தகையருடைய ஒழுக்கத்தையும் திருத்தும் பெரும் ஆற்றல் படைத்தவர்கள். கயவரை வள்ளல்களாகவும், கொடுங்கோலரசரைச் செங்கோலரசராகவும், தீயோரை நல்லோராகவும் மாற்றுபவர்கள். மக்கள் ஒழுகலாற்றைக் கேட்டார்ப் பிணிக்கும் இனிய சொற்களால் எல்லோருளத்திலும் பதியத்தக்கதாக எடுத்துச் சொல்லி உலகத்தை நல்வழியில் நடத்துபவர்கள் அவர்களே. அவர்களுக்கு உலகம் எஞ்ஞான்றும் கடமைப்பட்டுளது நிற்க.

அவர்கள் செய்த செயற்கருஞ் செயல்களுள் எஞ்ஞான்றும் உலகப்போக்கிற் கியைந்தனவாய் மிளிரும் அரிய நூல்களே இயற்றினமையே சிறந்ததென்க. அந்நூல்களே அவர்களின் ஞாபகச் சின்னங்கள்; அவர்களின் இசையை அறையும் பறைகள்! அவர்களின் நல்லிசைப் புலமையைத் தெள்ளிதிற் காட்டும் பளிங்குக்கற்கள்; தமிழன்னை அணிந்துமகிழும் அணிகள்; தமிழ்

* "தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையினிழிந்தக் கடை" (திருவள்ளுவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு நல்லழிர்தமளிக்கும் பாற்கடல்கள். அவர்கள் பாடிய பல தனிச்செய்யுள்களும் யாவரும் போற்றும் ஏற்றமுடையன. இத்தனிச் செய்யுள்களுள் ஒருவர் பாதியும் இன்னொருவர் பாதியுமாகப் பாடிய சில செய்யுள்களும் காணப்படுகின்றன. இச்செய்யுள்கள் சொன்னயம் பொருணயங்கள் செறிந்தன. பாடிய புலவர்களின் ஆச கவித்திறனை நன்கு வெளிப்படுத்துவன; யாவர்க்கும் எளிதில் விளங்கும் தன்மையன; சென்று செவியளக்கும் செம்மையன; சிந்தையுள் நின்று அளவிலின்பம் நிறைப்பன; இவற்றுள் சில செய்யுள்களை அவை பாடப்பெற்ற சந்தர்ப்பத்துடன் எண்டெடுத்துக் காட்டுதும்.

ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும்.

பொன்னிநாடாண்ட புரவலனும் குலோத்துங்க சோழனுக்குப் பெண்கேட்கும்படி அவன்றன் ஆசிரியரும் ஆஸ்தான வித்துவானுமான ஒட்டக்கூத்தர் அக்காலத்துப் பாண்டிநாட்டை யாண்ட பாண்டியனிடம் சென்றார். சென்றவர் தம் அரசனுடைய சிறப்புக்களைக் கூறும்பொழுது சோழர் பாண்டியரிலும் சிறந்தவர்கள் என எடுத்துரைத்தார். பாண்டியனுடைய ஆஸ்தான வித்துவானுகிய புகழேந்தியாருக்குக் கூத்தர் சோழனைப் புகழ்ந்ததும், பாண்டியனைக் குறைத்ததும் பிடிக்கவில்லை. அதனல் அவர்களுக்கிடையில் செய்யுட் போர் ஏற்பட்டது. கூத்தர் தம்மையனைப் புகழ்வான்

"வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகிற் கிடான்கவசம்—துன்றும்"

என்று கூறி ஆலோசித்தார்.

அவர் ஆலோசித்தலைக் கண்ட புகழேந்தியார்

"வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று"

என்று எஞ்சிய அடிகளைப் பாடி முடித்தார். சோழனைப் புகழவும் பாண்டியனை யிகழவும் எணணிக் கூத்தர் தொடங்கிய செய்யுளைப் பாண்டியனைப் புகழவும் சோழனை யிகழவும் தக்கதாக்கி முடித்த புகழேந்தியார் தம் புலமை புகழ் ஏந்துந் தன்மையதன்றே!

கூத்தரும் குலோத்துங்க சோழனும்

ஒருநாள் சோழனும் அவன் ஆசிரியராகிய ஒட்டக் கூத்தரும் பவனி வந்தார்கள். வந்தகாலை கூத்தர் சோழனைப் புகழ்ந்து பாடக்கருதி

"ஆடுங் கடைமணிநா வசையாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையிற் நரித்தபிரா னென்பர்,"

எனும் இரண்டடிகளையும் பாடினர். தம் ஆசிரியர், மாணவனகிய தன்னைப் புகழ்ந்து பாடுதலை அவன் பொறுப்பானு? இரண்டடிகளும் பாடியதுதான் தாமதம், உடனே அவன்,

—"நித்தம்நவம்
பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழன்என் றேஎன்னைச் சொல்
[லுவரே"

என எற்றடி இரண்டையும் சரேலெனச சாற்றித் தன்னாசிரியராகிய கூத்தரைப் புகழ்ந்தான். அரையன் புலமையும் ஆசிரியரிடத்துக் கொண்ட மதிப்பும் என்னே!

கம்பரும் ஔவையாரும்.

அம்பர் என்னும் ஊரில் சிலப்பி எனும் ஒருதாசி இருந்தாள். அவள் கவியரசராகிய கம்பராற் பாடப் பெற்றால் அளவில் செல்வம் கிடைக்குமென்றெண்ணி அவரைச் சந்திக்க நெடுநாள் ஆவலுடனிருந்தாள். இருக்கு நாளில் ஓர் நாள் கம்பர் அவள் வீட்டுக்குப் பக்கமாகச் சென்றார். அவரைக்கண்ட சிலப்பி ஓடிச் சென்று அவரை வணங்கினாள்; தன நெடுநாளைய எண்ணம் நிறைவேறிற்றென்று மகிழ்ந்தாள்; தன் நிலையை எடுத்துரைத்தாள்; தன்னைப் பாடும்படி வேண்டினாள்; கம்பர் "ஆயிரம் பொன் கொடுப்பின் ஒரு பாட்டுப் பாடலாம்" என்றார். அவளிடம் ஐஞ்ஞூறு பொன் மாத்திரமே யிருந்தது. அக்கம் பக்கத்தில ஐம்பது பொன் தானும் வாங்கமுடியாது; அவள்தான் எனசெய்வாள்? பாவம். தன்னிடமிருந்த ஐஞ்ஞூறு பொன்னையும் அவரிடம் கொடுத்து ஒரு செய்யுள் பாடும்படி வேண்டினாள். அவற்றைப் பெற்ற கம்பர் 'ஐஞ்ஞூறு பொன்னுக்கு அரைச்செய்யுளே' என துரைத்து

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணு வதுஞ்சோழ மண்டலமே."

எனும் ஈரடிகளையும் பாடி அவற்றை அவள் வீட்டுச் சுவரின் புறப்பக்கத்தில் எழுதிவிட்டுச் சென்றார். சிலம்பியோ பெரும்பொருள்பெற எண்ணிக் கைப்பொருளையுமிழந்து, தன்கருத்தும் நிறைவேறாமல், மிக மனம வருந்தித் துக்கக்கடலில் திளைத்துக்கொண்டிருந்தாள். ஓர் நாள் ஔவையார் வெயிலால் உலர்ந்து டசியால் வாடி அவளகம் புக்கார். அருந்தமிழன்னையின் பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கண்ட தாசி அவருக்குக் கூழ்கொடுத்துண்ணும் படி வேண்டினள். அக்கூழை அன்புடன் அருந்தி அகம் மிக மகிழ்ந்த அன்னையார் அவளைப் புகழ்ந்தார். அவரை ஔவையாரென அறிந்த சிலம்பி தன் வறுமைக் காரணத்தையும் துக்கநிலையையும் அவருக்கு எடுத்துரைத்தாள். அவர் அவள்மேலிரங்கி

—பெண்ணவாள்

அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு."

எனப்பாடிக் கம்பர் செய்யுளை முடித்தார்.

ஔவையாரும் கம்பரும்.

ஓர் நாள் குலோத்துங்க சோழனும் ஔவையாரும் கம்பரும் காட்டகத்துச் சந்திக்க நேர்ந்தது. அக் காட்டில் நெல்லிமரங்கள் பல நிறைந்திருந்தன. அவையெல்லாம் இலையை உதிர்த்திக் கண்டார் மனதைக் கவரும் விகாரக் காட்சியுடன் நின்றன. இயற்கை அன்னையை நுணுகிதிலாராய்ந்தறியும் செந்தமிழன்னையார் அம்மரங்களைக் கண்டார்.

"கல்லி யுடைபீர்! கருங்கா னகத்திடையே
நெல்லி யிலைபுதிர்ந்து நிற்பதென்?"

என ஒரு வினவைக் கிளப்பினர். அவர் வினவைக் கேட்ட கம்பர்

—"வல்லாய்கேள்

வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு."

என்றபாடி யவருக்கு விடையிறுத்த முகத்தான் அவ் வெண்பாவையும் முடித்தார். நீதிவழி வெல்லமுடியாத வழக்கை விலைக்கு வாங்கி வெல்விக்கும் ஒருவனுடைய சுற்றம் முழுவதும் மாண்டுபோகும் என்றல் அவன் கதிதான் அறையத்தக்கதென்றோ?

இரட்டைப் புலவர்கள்

இணையற்ற புகழும் புலமையும் மிக்க இரட்டைப் புலவர்களை யாவருமறிவர். இவர்களுள் ஒருவர் குருடர்; மற்றவர் முடவர்; முடவரைக் குருடர் தம் தோளில் தூக்கிச்செல்வர். முடவர் குருடர் தோளிலிருந்து வழி காட்டுவர் இருவரும் சேர்ந்தே செய்யுள்களையும் நூல்களையும் செய்வார்களாம். ஒருவர் அரைவாசியாகவும் மற்றவர் அரைவாசியாகவும் இருவரும் பாடிய ஒவ்வொரு செய்யுளும் சொற்பொருளியைபில் ஒருவர் பாடிய செய்யுள்போலவே இருக்கும். இவர்கள் அரை அரையாகப் பாடிய பல செய்யுள்களில் ஒன்று ஈண்டிடமெடுக்கின்றது ஓர்கால் இவர்கள் ஒரு செல்வனைப் புகழ்ந்துபாட அவன் அப்பாடலைக் கவனியாது மரம்போல் நின்றான். அவன் நிலையைக்கண்ட முடவர்

"மூடர்முன் னேபாடல் மொழிந்தால் அறிவாரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா"

எனறு தொடுக்க, குருடர்

—ஆடகப்பொற்

செந்திருவைப் போல்அணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு ஞல்"

என அதனை முடித்தார். குருட்டு மணமகன் மணமகளின் கட்டழகை எவ்வாறு காண்பான்?

அம்பிகாபதியும் கம்பரும்

சேரவரசன் ஓர்நாளிரவில் நகர் சோதனை செய்து வருமபொழுது ஓர் காளிகோவிலை அடைந்தான் ஆங்கு சந்தன மரைத்துக்கொண்டிருந்த ஒருவன் அச் சந்தனத்தைத் தொட்ட ஒரு பேயின் கையை வெட்டக்கண்ட சேரன் அச்செய்தியைக் கம்பரைக்கொண்டு சிந்தாசமுத்தியாகப் பாடுவிக்க எண்ணிக் கபபர் வீடுசென்று கதவைத்தட்ட, வெளித்திண்ணையில் படுத்திருந்த கம்பர் மகன் அம்பிகாபதி அச்சத்தம் கேட்டெழுந்து

"கரைக்கு வடக்கிருக்குங் காளிகா ளம்மைக்கு
அரைத்து வழிசாந்தைத் தொட்டப்பேய்"—

என இரண்டடிகளைப் பாட அதைக்கேட்டு விழித்தெழுந்த கம்பர்

—"உரைத்தும்

மறைக்க வறியாத வன்பேயின் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு"

என மறு இரண்டடிகளையும் பாடி முடித்தார்.

ஒட்டக்கூத்தரும் குயவனும்.

கூத்தர் குலோத்துங்க சோழனுக்கு ஆசிரியராதலானும், அவன் அவைக்களத்துப் புலவராதலானும், அவனவைக்களத்தும், சோழநாட்டிலும் அவருக்கு அளவில்லாத மதிப்பு இருந்தது அவர் சொல்லைச் சோழனும் தட்டிப்பேசான். அவர் செய்கையை மறுப்பதற்கு ஒருவரும் முற்படார்கள். முற்காலத்தில் அரசரிடம் தம் புலமையைக்காட்டிப் பரிசில்பெறப் புலவர்கள் செல்வது வழக்கம் அவ்வழக்கப்படி, சோழன்பாற் செல்லும் புலவர்களிடம் ஒட்டக்கூத்தர் பல வினுக்களைக் கூறுவதுண்டு. விடையிறுக்கத் தவறினோரைச் சிறைச்சாலையில் அடைப்பித்து வருத்தி, ஒவ்வோர் யாண்டும் நவராத்திரி காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் அவர்களை வருவித்து, அவர்களிடம் சில வினாக்களைத் தொடுத்து, விடை கொடுக்காதவர்களை இவ்விரு வராகக் குடுமியோடு குடுமி முடிந்து, அவர்கள் குடுமி களை மயிர்வினைஞனால் களைவிப்பர்; சிரச் சேதஞ் செய்விப்பர் எனவுங் கூறுவாருமுளர். ஓர் அரசனால் மதிக்கப் பட்டு அவனவைக்களத்துத் தலைமைப் புலவராய் விளங்கிய ஒரு செந்தமிழ்ப் புலவர் கொஞ்சமும் இரக்கமின்றி, பரிசில் வேண்டி வந்தவர்களைக் கொலை செய்விப்பர் எனக் கூறுதல் அறிஞர்களால் அருவருத்து ஒதுக்கத் தக்க தொன்றன்றே? "இரண்டொன்று முடிந்து தலை இறங்கப்போட்டு வெட்டுதற்கோகவி யொட்டக்கூத்தனில்லை" எனுமடியைத் தமிழறிஞர்கள் ஊன்றி உணர்ந்து உண்மையைக் கடைப்பிடிப்பார்களாக. நிற்க,

கூத்தரால் புகழ்ந்திப் புலவரும் சிறையிடப்பட்ட மையைத் தமிழன்பர்கள் யாவருமறிவர். புகழேந்திப் புலவர் சிறைக்குச் சென்ற காலத்தில் அச்சிறைச்சாலையில் பல புலவர்கள் இருந்தார்கள்.

அப்புலவர்களின் சிறைக் காரணத்தை யுசாவியறிந்த புகழேந்தியார் அவர்களை உய்விக்கவும்; கூத்தனின்கூத்தை அடக்கவும் உன்னி, அவர்களுள் சிறந்த நுழைபுலமுடையராய குயவன், அம்பட்டன் கொல்லன், வேளாளன், தச்சன், தட்டான் முதலிய சிலரைத் தெரிந்தெடுத்துக் கற்பித்து அவர்களைப் பெரும் புலமை கைவரப் பெற்றவர்களாகச் செய்தார்.

•

நவராத்திரி காலம் வரக் கூத்தர் வழக்கம்போல் சிறையிலிருந்த புலவர்களை யழைப்பித்தார். முதலாவதாகக் குயவன் கூத்தர்முன்சென்று கும்பீடின்றிநின்றான். அவன் நிலையைக் கண்ட கூத்தர்

'மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா?'

என வினவ உடனே அக்குயப் புலவன்

'கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையுஞ் செய்யும் அங்குசப் பையல்யான்.'

என்றுபாடிக் கூத்தர் தொடுத்த செய்யுளை முடித்து விடை கொடுத்தான் அங்குசத்தைக் கொண்ட ஒருவனன்றோ யானைமுன் எதிர்க்க வேண்டும்? கூத்தன் குயப்புலவனின் விடையின் நுட்பத்தைக்கண்டு வெட்கி அவனை விடுத்து அடுத்தவனை அழைத்தார்.

கூத்தநம் அம்பட்டனும்.

அடுக்க, ஒரு கண் பொட்டையான அம்பட்டன் அதி செருக்குடன் வந்து நின்றான். அவனை,

'விண்பட்ட கொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின்றாய் பொட்டையாய் புக
[லாய்'

எனலும், சிறிதும் அஞ்சாத அவ்வம்பட்டப் புலவன்

'கண்பொட்டையாயினும்அம்பட்டன்நான்கவிவாணர்முன்னே
பண்பட்டசெந்தமிழ்நீயுந்திடுக்கிடப்பாடுவனே'

என்றுபாடினான் புறக்கண்ணொன்று பொட்டையாயினும் அகக்கண் பொட்டையில்லா நாவிதன் கூத்தருக் கஞ்சுவானே?

முடிவுரை.

கரவைவேலன்கோவை, கல்வளை அந்தாதி முதலிய பல அரிய நூல்களை இயற்றிய யாழ்ப்பாணப் பெரும்புலவராகிய சின்னத்தம்பிப்புலவர் தம்மிளமைப்பருவத்தில், அவர் தம் தந்தையார் இயற்றிய ஓர் செய்யுளின் ஈற்றடிகளைப் பாடி முடித்தவராம். அச்செய்யுளை அறிந்த அன்பர்கள் யாரேனுமிருப்பின் அதனை "ஈழகேசரி" யில் வெளியிடுவார்களாக. இஃதோர் ஆராய்ச்சியுரை யன்று. கர்ணபரம்பரைக் கதைகளையும், தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடற்றிரட்டு முதலிய நூல்களையும் ஆதாரமாகக் கொண்டே உரைக்கப்பட்டது.

ஆத்ம சிந்தனை

மனமொவ்வாத செயலைச் செய்யாதே. சமூக நன்மைக்கு மாறுபாடாகவாவது, விவேகக் குறைவாகவாவது, மனப்புகைச்சலுடனாவது நடந்துகொள்ள வேண்டாம். பேச்சுத் திறமையினால் உண்மையை மறைக்கவேண்டாம். வீண்பேச்சுப் பேசவேண்டாம். பிறர் காரியத்தில் பயனின்றித் தலையிட வேண்டாம். உனக்குள் தெய்வீகமான ஆத்மசக்தியுண்டு. அதைக்கண்டு வீரியம், தைரியம், மரியாதை, பரோபகாரம் உடையவனாக வாழ்வாய். எந்த நிமிஷத்தில் வேண்டினும் குறி கண்டவுடன் உயிரைக் கொடுக்கத் தயாராகவிருக்கும் போர்வீரனைப்போல் மரணத்திற்கு ஆயத்தமாக இரு. சட்சியாவது, ஆணைச்சொல்லாவது வேண்டாத சத்தியவானாய் இரு. பிறருடைய ஆதரவை எதிர்பாராமல் சுதந்திரமாய் வாழ்வாய் பிறருடைய ஆறுதலை வேண்டாமல் உள்ளத்தில் சாந்தத்தை அமைத்துக் கொள்வாய். பிறர்மேல் சாராது நிற்பதே உண்மைச் சுதந்திரம்.

மக்களின் உள்ளத்தின் மறைநிலையிலுள்ள நிறைவினை வெளிப்படுத்துவதே கல்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிதுறந்த மன்னர்; வின்ட்ஸர்

நான் ஸ்ரீமதி ஸிம்ஸனை விவாகஞ் செய்யப்போவதால்,
எனது அரச பதவியைப்
பரித்தியாகஞ் செய்கின்றேன்.



வின்ட்ஸர் கோமகன்
வயது 42



ஸ்ரீமதி ஸிம்ஸன்
வயது 40

1936-ம் ஆண்டு டிசம்பர்மாதம்
11-ந் தேதி முடிதுறந்தார்.

1937-ம் ஆண்டு ஏப்பிரல்மாதம்
28-ந் தேதி
ஸ்ரீமதி ஸிம்ஸனின் விவாகப்
பதிவு நீங்கிவிடும்.

ஆனல், திருமணம் எப்போது நடக்கும்?
மகுடாபிஷேகமும், திருமணமும் ஏககாலத்தில் நடைபெறுமா? .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னுகம் சந்தை




கீரிமலை நீரூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைநகர்க் கோவள வெளிச்சவீடு



தூபாராமா விகாரை (மேல்)
ரூவான்வலி விகாரை (மத்தி)
லங்காராமா விகாரை (கீழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்டிக் கடைசியரசரின் அரசசின்னங்கள்




பாம்பாட்டிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயிரக்கால் மண்டபம்




பொலனறுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மணித் திருநாடு

மட்டக்களப்பு,
பண்டிதர், ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்



இலங்கை மணித்திருநா டெங்கள்நாடே – இந்த
இனிய உணர்ச்சிபெற்றுல் இன்பவீடே (இலங்கை)

1. மாவலி கங்கையெங்கள் வளநதியே – அருள்
மன்னுசிவ னெளிபாதம் எங்கள்மலையே
பூவளஞ் செய்கதிரை எங்கள்தலமே – இதைப்
போற்றிப் புகழ்ந்தால்வரும் பெருநலமே (இலங்கை)

2. முத்துக் குளிக்கநல்ல துறைகளுண்டு – ஒளி
முதிர்ந்த மணிகள்தரச் சுரங்கமுண்டு
தித்திக்கும் நறுங்கனிச் சோலைகளுண்டு – எங்கள்
தேசத்திற் பொன்விளையும் பூமியுமுண்டு (இலங்கை)

3. அமுதமனைய நன்னீர்ப் பெருக்குமுண்டு – நிலத்
தாடவினிய வெங்நீர்ச் சுரப்புமுண்டு
தமிழின் இனியசுவை யூற்றுமுண்டு – மெள்ளத்
தண்ணென் றுலவுதென்றற் காற்றுமுண்டு (இலங்கை)

4. தேமல் முதிரைகருங் காலிகளுண்டு – வளர்
தேக்குண்டு வனத்தினில் தேனுமுண்டு
பால்மலி பசுவுண்டு மேதிகளுண்டு – தமிழ்ப்
பாட்டுக்கு நல்லயானைப் பரிசுமுண்டு (இலங்கை)

5. கோமான் பராக்கிரம வாகுமன்னன் – குளக்
கோடன் முதலோர்கட்டு குளங்களுண்டு
நாமாண் புறச்செழித்த வயல்களுண்டு – முன்னோர்
காட்டிய சித்திரக்கண் காட்சிகளுண்டு (இலங்கை)

6. சிங்க மெனும்விஜயன் கண்டநாடு – கீர்த்தி
சிங்க னிருந்துரிமை கொண்டநாடு
பொங்கு மிசைபொருந்து ராவணேசன் – தமிழ்ப்
பூபதிஎல் லாளனிரும் தண்டநாடு (இலங்கை)

7. சிங்களர் செந்தமிழர் மகமதியர் – எனும்
செல்வப் புதல்வர்க்கொரு தாய்நாடு
மங்கள மாகஅன்று வாழ்ந்தநாடு – இன்று
மங்கி அடிமைத்தொழில் பூண்டநாடு (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னிய மார்க்கமா?

திரு. ச. பேரின்பநாயகன் அவர்கள் B. A.,

ஈழகேசரியின் சென்ற ஆண்டுமலரில் எனது நண்பன் திரு. ச. குலேந்திரன், இத்தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதைப் படித்தபோது என் மனதிற் சில எண்ணங்கள் தோன்றின. ஈழகேசரியின் ஈசுவர ஆண்டுமலருக்கு ஓர் கட்டுரை எழுதி யுதவுமாறு எனது நண்பன் திரு. நா. பொன்னையா அவர்கள் பணித்த போது, அப்போது தோன்றிய அவ்வெண்ணங்களையே சொல்லிவிடலாமென்று நினைத்தேன்.

இந்த வினா என் எழவேண்டும்? கிறீஸ்துசமயம் அன்னிய மார்க்கமென்று இங்காட்டவராற் கொள்ளப் பட்டு வந்ததா? வருகிறதா? அப்படியாயின் யாது காரணம்பற்றி அது அப்படிச் சொல்லப்பட்டது. அல்லது சொல்லப்படுகிறது? இவைபோன்ற கேள்விகள் என் உள்ளத்திற்பட்டன. அவைக்கு மறுமொழிகாண விரும்பினேன். அம் மறுமொழிகள் ஒருவேளை இவ் வாண்டுமடலைப் படிப்போர்க்கும் பயன்படக்கூடுமென் றெண்ணி அவற்றையே இக்கட்டுரையிற் சொல்ல முன் வந்தேன்.

கிறீஸ்துசமயம் அன்னியமார்க்கமென்று எம்மவர் பலர் கொள்வது உண்மையே. அதை வழிபடுகிறவர்கள் ஓரளவிற் தம்நாட்டில் அபிமானங்குறைந்தவர்களென்றும், எம்நாட்டிலுள்ள மற்றைய மதானுசாரிகளால் இடையிடையே ஏளனம்பண்ணப்பட்டாரென்பதும் மறுக்கொணு ஓர் உண்மை பல சைவரால் "வேதக்காரர்" என்னும் சொல் ஒரு வசைச்சொல்லாய்க் கையாளப்பட்டு வந்திருப்பதும் உண்மையே. இப்படிக் கிறீஸ்தவர்கள் எண்ணப்பட்டுவந்தது உண்மையேயாயினும், உண்மையில் அவர்கள் தம்நாட்டு வாழ்க்கையிலும், நாகரிகத்திலும் மொழிமுதலியவற்றிலும் மற்றவர்களிலும் பார்க்க அபிமானங் குறைந்தவர்களா? எனதுண்மையான எண்ணமென்னவென்றால், ஓரளவிற் கிறீஸ்தவர்கள் தங்கள் செயல்களாலும் தங்கள் பேச்சாலும் தங்கள் உடை நடை முதலியவற்றாலும் தாம் அன்னிய அபிமானமுடையவர்கள் என்னும் எண்ணத்தை மற்றவர்கள் உள்ளத்தில் உண்டாக்கிவிட்டனர்.

எம்நாட்டிற்கு வந்த கிறீஸ்துசமயம், மேலைநாட்டினின்றே வந்தது. மேலைநாட்டினின்றும் இங்கு கிறீஸ்து சமயத்தைப் பிரசங்கம்பண்ணவந்த தொண்டர் கூட்டங்கள் யாவும், தம்மூர்க் கலைகளுக்கும் தமது நாகரிகத திற்கும் தமது உடை நடை முதலியவற்றிற்கும் ஆதிக்கம் உண்டாக்குவதையே கண்ணுங் கருத்துமாகக் கொண்டன. அவர்கள் தம் இலக்காகிய சுவிசேஷ பிரபல்லியத்தை நிறைவேற்றும்படி பல தொழில் நிலையங்களையும் நிறுவினர். இத்தொழில் நிலையங்களிற் கடமை பார்ப்போர் தமது ஊதியத்தைக் கருதித் தம் முதலாளி மாருடைய மனதைக் கவரக்கூடிய முறைகளையே கையாண்டுவந்தனர். மேலைநாட்டுப் பாதிரிமார் தம் நாகரிகத்தைப் பரப்பும் முயற்சியை எம்மூர்க் கிறீஸ்தவரின் உதவியைக்கொண்டே பெரிதும் ஆற்றினர். அவர்கள் தம் கலை ஆதியவற்றைப் பரப்ப விரும்புவதும், நம்மவர் தமக்குப் பிழைப்புக் காட்டும் அதிகாரிகளின் எண்ணங்களை மனம் வாக்குக் காயத்துடன் நிறைவேற்றுவதும் மக்கள் இயற்கையே. அவர்களில் அனேகர் தம்நாட்டு நாகரிகமே சிறந்தது, தமது உடை உணவுமுறை முதலியனவே சிறந்தன, தம் கலையே இணையற்றது; ஆகையால் இங்நாட்டிலும் அவற்றை நிலைநாட்டுவது இன்றியமையாததவோர் தொண்டென்று நம்பினர். எம்மவரிற் சிலரும் அப்படியே எண்ணினர் அப்படியெண்ணுதவர்களும் ஐயர் சொல்வதை எதிர்க்க ஆற்றலற்றவர்களாய் ஐயர் கூற்றை ஆமோதித்தனர். முதல் முதல் அன்னிய நாகரிகத்தில் ஈடுபட்டதும் அன்னிய கலைகளைக் கற்றதும் அவற்றைக் கற்கும்போது ஒருவாறு தமது நாகரிகத்தை அலட்சியம்பண்ணியதும் எம்மூர்க்கிறீஸ்தவர்களே. நான் இப்போதுகூறிய கண்டனத்திற்கிடையிடையே புறநடை இருக்குமென்றெனக்குத்தெரியும் ஆனால் பொதுப்படப் பார்த்தால் நான் சொன்னது உண்மையென்றே கொள்ள வேண்டும். எம்நாட்டுப் பேர்களைக்கூட ஒதுக்கி அன்னிய பேர்களைப்பூண்டு அதினும் ஓர் பெருமை பாராட்டியவர்களை மற்றவர்கள் புறக்கணித்ததும் ஏளனம்பண்ணியதும் இயற்கையே.

இனி, இவர்களில் அனேகர் கைவிட்ட வழக்கங்கள் சில, எம்நாட்டுச் சைவமக்களாற் றலைமேல் வைத்துப் பேணப்படுவன. சாவீடுகளுக்குப் போனபின் தலைகளைத் தோய்த்தத் தாமும் தலைதோய்தல் எம் முன்னோரால் கையாளப்பட்டுப் பேணப்பெற்ற சிறந்த ஓர் வழக்கம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாதவிலக்கு வருங்காலத்திற் பெண்கள் தனிப்படுத்தப் பட்டு வேறாயிருத்தலும் எம்முன்னோரால் செய்யப்பட்ட நல்லொழுக்கங்களிலொன்று. இந்த ஆசாரங்களினின்றும் வழுவினது எம்நாட்டுக் கிறீஸ்தவர்கள் புறக்கணிக்கப் பட்டதற்கு இன்னோர் நியாயம்.

மேலும், அனேகர் சைவராயிருந்து கிறீஸ்துமதத் தைத் தழுவியது. இரு சமயங்களுக்குமுள்ள தாரதம்மி யத்தைச் சீர்தூக்கி ஆராய்ந்து, ஒன்று மற்றதினும் சிறந்ததென்று தீர்க்கமாயுணர்ந்தபின்னல்ல. சிலர் தொழில்நாடித் தம்மதத்தை விட்டனர். சிலர் பொருளுதவிநாடிச் சமய மாற்றஞ் செய்தனர். வேறு சிலர் வேறேதேனும் இலாபத்தைக் கருதிக் கிறீஸ்துமதத்தைத் தழுவினர். இதுபோன்ற செயல்களைச் செய்த கிறீஸ்த வர்களை மற்றவர்கள் மதியாதுவிடல் நூதனமன்று. நம் மையும் நம்மார்க்கத்தையும் மற்றவர்கள் மதிக்கவேண்டு மென்ற விருப்பம் எமக்கிருப்பின், நாமே எம் சுயமரி யாதைக்குப் பங்கம் விளையாது பார்க்கவேண்டும்.

கிறீஸ்துமார்க்கம் எங்கேயிருக்கிறதோ அங்கெல்லாம் அதிக மகத்தான பண்டிகைகளாகக் கொள்ளப்படும் பண்டிகைகள் இரண்டுள. அவை டிசெம்பர் மாதம் 25-ந் தேதி வரும் நத்தார்ப்பண்டிகையும், பங்குனி— சித்திரையில் வரும் உயிர்த்தெழுந்த திருநாளுமாம். இவையிரண்டும் இப்போது கிறீஸ்த பெருநாட்களாகக் கொள்ளப்பட்டபோதினும், அவை கிறீஸ்து சமயம் மேற்கே போகுமுன்னரே ரோம ராச்சியத்திலே வழங் கிய சமயத்திற்குரிய பண்டிகைகளாகக் கொண்டாடப் பெற்று வந்தன. கிறீஸ்துசமயம் மேற்கே போனபோது பழைய பண்டிகைகளுக்குப் புதுப்பெயரும் புதுக்கருத் தும் கொடுக்கப்பட்டன. இதுபோலவே இப்போது கிறீஸ்துமார்க்கத்துக்குரியன என்று வழங்கும் அனேக கொள்கைகள், ஆசாரங்கள், யேசுபெருமான் உயிரோ டிருக்கும்போது கேள்விப்படாதன. இது பிழையென்று சொல்வதல்ல என்நோக்கம். யேசுபெருமான் பிறந்தது பலஸ்தீன நாட்டில். அவரது வீரவாழ்க்கை நிறைவுபெற் றதும் அவ்வூரிலேயே. அவர்செய்த ஞானோபதேசமும் அவ்வூர் மொழியிலும் அவ்வூர்ச் சனங்களுக்குமே. ஆனால் அவர் பேரைப் பூண்டு வழங்கும் மார்க்கம் மேற்குநாடிச் சென்றபோது, மேற்குநாட்டினரது உடையை யணிந்து கிழக்கு நோக்கி வந்தது நான் முன் எடுத்துக்காட்டிய இரு பெருநாட்களைக் கொண்டாடும்போது, இப்போதும் மேலைநாட்டார் பலவும் முறைகள் சில, கிறீஸ்துமார்க்கம் மேற்கே செல்லுமுன் ஐரோப்பியராற் கையாளப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் கூறுப. இன்னும் பல பல துறையிற் கிறீஸ்துமார்க்கம் தான்சென்ற இடங்களி லுள்ள காலதேச வேற்றுமைக்கியைய மாற்றம்பெற்றி ருக்கிறதென்று அறிஞர் கூறுவர். தற்போது கிறீஸ்து சமயக் கலைக்ஞானமென்று வழங்குவதின் சிறந்த உறுப் புக்கள் பல, கிரேக்க கலைக்ஞானத்தினின்றும் எடுக்கப் பெற்றன. இதுபோலவே எம்நாட்டிற்கு வந்திருக்கும் கிறீஸ்துமார்க்கமும் செய்யலாமென்று நினைக்கிறேன். அடிப்படையான உறுப்புக்களுக்குப் பங்கமேற்பட்டால் காலதேச வேற்றுமைக்கியையச் சில மாற்றங்கள் ஏற் பட்டபோதும், யேசுபெருமானுடைய தர்மத்தைக் கடைப்பிடித்தொழுகியும் ஒரு மார்க்கம் தன்னுற்றல் குன்றுமலிருக்கக்கூடுமென்பது எனது துணிபு. இந்தியா இலங்கை முதலிய கீழைநாடுகளில் கிறீஸ்துமார்க்கம் வேர்பெற்று நிலைக்கவேண்டுமாயின், கிறீஸ்தவர்களுடைய மனப்பான்மை ஒரு சிறிது மாறவேண்டும். அவர்கள் தாம் மேலைநாட்டவரென்றும், மேலைநாட்டாரின் ஆதிக் கத்தை விருத்திபண்ணுவதே தம் கடனென்றும் வாழக் கூடாது. தம் நாகரிகத்தையும் தம் பழக்க வழக்கங்களை யும் புறக்கணிப்பதே தம் நோக்கமென்று சாதியாது விடவேண்டும். இனியாயினும் தம்நாட்டுக் கலையாக்கம், நாகரிகம் முதலியவற்றி லபிமானம் காட்டி ஒழுகவேண் டும். இததுறைகளில் இப்போது பத்துப் பதினைந்து ஆண்டுக்குமுன் இருந்ததிலும பார்க்கக் கிறீஸ்தவர்கள் வாழ்க்கை இன்று சிறப்பெற்றிருப்பது உண்மையே.

கிறீஸ்துமதத்தை மற்றச் சமயத்தினர் அன்னிய மார்க்கமென்று ஏளனம்பண்ணப்படாதென்று நாம் விரும் பின், நாமே செய்யவேண்டிய கடன்கள் பல உள. எல் லாவற்றினும் முக்கியமானதென்று நான் கொள்வது யாதெனில், கிறீஸ்துமதத்தைத் தழுவுகிறவர்கள் பொரு ளிலாபத்தைநாடித் தழுவுகிறார்களென்னும் எண்ணம மற்றவர்கள் மனதிற் றோன்ற இடங்கொடாது வாழ நாம் முயலவேண்டும். அதுபோலவே ஒருவருடைய மதமாற்றத்துக்குக் காரணராயிருப்போரும், ஒரு நாளி டையேனும் நீதியினின்று வழுவாதிருத்தல் அவசியம். பொருளிலாபமெனும் தூண்டுதலே மதமாற்றத்திற்கு ஒரு அணுவளவேனும் உபயோகிக்கப்படாது. ஓர் சமயத்தி லிருந்து பிறிதோர் சமயத்திற் சேர விருப்புகிறவனும் அப்படிச் சேர்க்க விரும்புகிறவனும் இருசமயங்களுக்கு முள்ள ஒற்றுமை வேற்றுமையை நன்காராய்ந்து, ஆன்ம ஈடேற்றம் ஒன்றையே மதமாற்றத்தின் நியாயமாகக் கொண்டு தமது நோக்கத்தை நிறைவேற்றினால் யாரும் குறைகூறப் பின்னிற்பர்.

மாய மயக்கொழிந்தார் மற்றொன்றை நாடுவரோ, நேய அருள்நீலியில் நிற்பார் பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்துமார்க்கம் அன்னியபொருளாயிராமல் நாட்டுப் பயிராயிருக்கவேண்டுமாயின், நான்முனகூறியதைவிடமுக் கியமான சிலமுறைகள் கட்டாயம் செய்யப்படவேண்டும்.

மேலை நாட்டார் தம் பரம்பரைப் போக்குக்கும் தம் காலதேச இயல்புக்கும் தம் காலச் செல்வத்துக் கும் ஏற்ப உண்டாக்கிய வேதசாஸ்திரம், சடங்குமுறை, கோயிலமைப்பு, தெய்வவழிபாடு முதலியனவே எமது வர்க்கும் இறைவனுல் விதிக்கப்பெற்றன என்னும் கொள்கை அறவே அற்றுப்போகவேண்டும். எங்கள் நாட்டுப் பரம்பரைப் போக்கு எங்கள் முன்னோர் ஒழுக் கம் அவர்கள் தினைத்திருந்த அருட்செல்வம் அவர்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்தி அவர்களை அகமும் புற மும் தெய்வமயமாக்கிய பாடல்கள், வழிபாடு முறை கள் ஆகியவற்றின் தெய்வீக ஆற்றலை இப்போதும் பயன்படுத்தக்கூடிய முறையில் கிறீஸ்துமார்க்கம் புத் துயிர் பெற்று நிலவவேண்டும்.

இனி, எங்கள் தமிழ்மொழியிற்பரவிக்கிடக்கும்இலக்கியம் கலைக்ஞானம் பத்திச்சுவை எல்லாவற்றையும் நாமின்புறச் சுவைத்தஎம்சமயவாழ்க்கைக்குப்பயன்படுத்தல்எங்கடன்.

எம் நாட்டுச் சமய நூல்களையோ காவியங்களையோ கற்கும்போது. அவற்றின்கண் என்ன குற்றங்கள் காணலாமென்னும் நோக்கத்துடன் கற்காமல் அவற்றி னின்றும் யாது நலன் பெறலாமெனும் அவாவுடன் கற்று ஆண்டுப் பெறும் பயனைச் சமய வாழ்க்கையி னும் அனுபவிப்பதே சிறப்புடைத்து.

எம் சமயமே எல்லா நிறைவுமுடையது. யாம் மறுசமயங்களினின்றும் எதுவும் கற்கவேண்டியதில்லை. என்று இறுமாப்புக் காட்டுவோமென்றுல் இது மெய்ச் சமய அனுபவம் பெற்றவர்கள்பாற் காணப்படும் தன் மையல்ல என்றே சொல்லவேண்டும். மேலும் யாம் இங்ஙனம் இறுமாப்புக் காட்டுவோமென்றுல் மற்றவர்க ளுடைய அனுதாபத்தையும் பெற நினைக்கக்கூடாது. மேலும் இதுபோன்ற மனப்பான்மை உண்மையறிவை நாடி நிற்போர்பாலிராது. எங்கே யுண்மையுண்டு, எங்கே நன்மையுண்டு, எங்கே வன்மையுண்டு அவையெல்லாம் நான் சுவைக்கவேண்டியன என்னும் மனநிலையே பெரியோர்மாட்டுக் காணப்படும். தமக்குத் தெரிந்ததே யுண்மை. தாம் அறியாதனவெல்லாம் பொய்யென்னும் மனப்பான்மை புல்லறிவாளர் புன்மையின் அறிகுறியே. விரிந்த நோக்கும் பரந்த அனுதாபமுமில்லாதவன் எச் சமயத்தவனுயினும், அவனுக்கு எல்லாச் சமயங்களுக் கும் உரிய கருப்பொருளை அறியும் ஆற்றல் வராது.

தம் சமயநூல்களிற் சொல்லப்பட்டவையெல்லாம் உண்மை, பிறசமய நூல்களில் உண்மை சிறிதுமில்லை எனும் மனநிலை வரவர மாறிவருவது கலியே. ஆயின் இந்த எண்ணம் வேரோடு அற்றுப் போகும்வரையும் வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுகிறவர்களுக்கிடையில் ஒற்றுமை யேற்படாது.

பூமியை ஆதிசேடன் தாங்கி நிற்கிறுனென்றும் கிரகணகாலத்தில் இராகு கேதுவாகிய பாம்புகள் சூரிய சந்திரரை விழுங்கிக் கக்குகின்றன என்றும் கொள்வது சாஸ்திர ரீதிக்கு முரணுக இருக்கலாம். ஆனுல் சூரியன் ஒருமுறை பதினைந்து பாகை பின்போனதென்றும் பின் னெருமுறை ஒருமணிநேரம் அசையாது நின்றதென்று நம்பலும் முக்கியனபோலவே சாஸ்திர ரீதிக்கு ஒவ்வா தன என்று கொள்ளவேண்டுமல்லவா?

சமயத்துறையின் சிறந்த அம்சங்களிருக்க இவற் றைப்பற்றியேன் அடியேன் இத்துணை பெரிதாகக் கவனித்து எழுதினேனென்ற கடா எழக்கூடும் நான் கூறக்கூடிய விடை யிதுவே. யேசுபெருமானுடைய வீர வாழ்க்கையைப்பற்றியாவது, அல்லது அவருடைய தியாக நிறைவைப்பற்றியாவது, அல்லது அவருடைய அருளும் ஞானமும் பொதிந்த வாக்குக்களைப்பற்றியா வது கிறீஸ்தவர்களுக்குஞ் சைவருக்கும் கருத்து வேற் றுமை ஏற்படுவதில்லை. தனக்குத் தீங்கிழைத்தவனுக்கு ஏழுமுறையல்ல எழெழுபதுமுறை மன்னிக்கவேண்டு மென்று சொன்னுர் யேசு. அவரையே சிலுவைமீது இம்சைப்படுத்தியவர்கள் தம்செயலின் கருத்தறியாமற் செய்தார்களென்றும், தம் பிதா அவர்கள் செயலைப் பொறுத்தருளவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். விபசாரத்திற் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட ஒருத் தியைத் தன்னிடங் கொண்டுவந்தவர்கட்குக் குற்றமற்ற ஒருவன் அங்கிருந்தால் அவனே அவள் தலையில் முதற் கல்லைப் போடலாமென்று சொன்னுர் இவைபோன்ற சொற்களையுஞ் செயல்களையும் எவராவது அன்னியனு டையன என்று ஒதுக்கிவைப்பதில்லை. யேசுபெரு மானைப் பெரிதும் பாராட்டி அவரைத் தம் உச்சிமேற் கொள்ளும் சைவர் பலர் உளர் ஆயினும் அவர்களும் கிறீஸ்துசமயத்தைப் பெரிதாக எண்ணுது புறக்கணிப்ப துண்டு. அன்னிய மார்க்கமென்று புறக்கணிக்கப்படுவது யேசுபெருமானின் நற்போதனையல்ல. வீரமும் தியாகமும் அருளும நிறைந்து மிளிரும் அவர் வாழ்க்கையுமல்ல. அல் லது அவர்தாமேசெய்ததும் தம்தோண்டருக்குப் பணித் துச் சென்றதுமான சிறியாரைப்பேணல், எளியாரைப் போற்றல், புறக்கணிக்கப்பட்டவரைப்பராராட்டலாதியாம் உயிர்த்தொண்டுமல்ல. அப்படியாயின் "அன்னியமார்க்க மென்று புறக்கணிக்கப்படுவது யாது?" எனும் கேள்வி கேட்பின் அதற்குவிடை முன்னரே யளித்துவிட்டேன்.

கிறீஸ்துமார்க்கம் அன்னியமார்க்கமென்று வசை பெறுது எம்மவர்பால் நன்மதிப்புப்பெற்று எம்மூர் வாழ்க்கையில் ஆதிக்கம் பெறவேண்டுமென விரும்பு வோர் செய்யவேண்டியது ஒன்றுண்டு. எனக்கும் எனக் குரியன எல்லாவற்றிற்கும் ஒரு நீதியும், மற்றவனுக்கும் அவனைச்சேர்ந்த யாவற்றிற்கும் வேறோர் நீதியும் கையா ளாதுவிட்டாற் சமயத்துறை உட்பட எல்லாத்துறையி னும் ஒற்றுமையும் ஒருவரை யொருவர் அறிந்து வாழும் வாழ்க்கையும் ஏற்படும். ஒருவர்க்கொருவர் அன்னியரா யிராது உடன்பிறந்தார்போல் வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரவாசா : : :

திரு. எஸ். நல்லையா அவர்கள்

I

மலேயா தீபகல்பத்தின் தலைநகரமாகிய சிங்கப்பூர்த் துறைமுகத்தினின்றும் புறப்பட்ட 'தகமாட்ஸு' என்ற யப்பானிய கப்பல், கடலைக் கிழித்துக்கொண்டு அலைமேல் அலையாகத் தலைவைத்து இலங்கைத்தீவை நோக்கி வந்துகொண்டிருந்தது.

"சிலோன் இன்னும் சொம்பத்தூரமா அப்பா?" என்று கொஞ்சும்குரலிற் தன் தந்தையை நோக்கிக் கேட்டாள் பதினேட்டுவயதுள்ள மதிக்கத்தக்க ஓர் அழகிய சிறுமி.

"இல்லைமகளே; இன்னும் ஒருநாட் பிரயாணம் தான்; நாளைக்காலை எட்டுமணிபோல் கொழும்புத் துறைமுகத்தைக் கப்பல் பிடித்துவிடும்" என்றார் அவள் தந்தை.

"அப்படி எண்டாப்பா....?"

"ஐஞ்ஞூறு மைல்வரையில் இருக்கும்"

II

மலேயாவில் பிரபல தனவந்தராய், ஏராளமான தோட்டங்களுக்குச் சொந்தக்காரராய் இருந்து தங்கள் சுயநாடுநோக்கிச் செல்பவர்கள்தான் மேற்கூறிய பிரபுவும் மகளும். பிரபுவின்பெயர் ராமானந்தர், அவர் மகள் விஜயலட்சுமி. விஜயலட்சுமி சிறுமியாய் இருக்கும்போதே தன் தாயை இழந்துவிட்டாள் பிரபு அவளைத் தன்கண்ணின் மணியைப்போலப் பாதுகாத்து வந்தார். காற்றுவாங்குவதற்காகப் பிரபுவும் மகளும் மேற்தட்டில் வந்துநின்றபோதுதான் மேற்கூறிய சம்பாஷணை தகப்பனுக்கும் மகளுக்குமிடையில் நடந்தது.

மேற்தட்டில் இருவரும், மலேயாவில் தாங்கள் நடத்திய சீவியத்தைப்பற்றியும், இந்திய கூலிச்சனங்கள் வேலைமுடிந்தபின் மாலைநேரங்களில் நன்றாகக் குடித்துவிட்டு ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளும் மாதிரியைப்பற்றியும் நொண்டிக் கங்காணி, மாரியப்பக் கவுண்டன் தன் சுயதேசத்தவரென்றும் பாராது கூலிச் சனங்களை மிலாறுகொண்டு தாக்கும் கொடுமையைப் பற்றியும், கூலிப்பெண்கள் அன்றுபிறந்த பச்சைக் குழந்தைகளைக்கூட முதுகிற் போட்டுக்கொண்டு பால் எடுக்கப்போகும் ஏழ்மைநிலையைப்பற்றியும், வேலைக்கார முனியன் தான் வளர்த்த கோழிக்குஞ்சுகளைப் பிடித்துக்கொண்டுபோகும் பூனையைப் பிடிக்கும்படி வைத்த சுருக்கில், அவனின் ஆடு அகப்பட்ட கேலிக்கதையைப் பற்றியும், சினரின் மீது, யப்பானியரின் விளையாட்டுப் பொம்மைகள், வங்காளிகளின் தாடி, இந்தியரின் கூத்து என்று இன்னபலவற்றைப்பற்றியும் சம்பாஷித்துக் கொண்டு நிற்கும்போது, ஒரு பிரமாண்டமான அலை வந்து கப்பலை ஒரே குலுக்குக் குலுக்கிற்று. அதே விநாடி குளுக்கென்று கடலில் ஒரு வஸ்து விழும் சப்தம், அதைத்தொடர்ந்து "ஐயோ" என்று ஒருவர் ஓலமிடும் ஓசை. இவைகளுக்கிடையே இன்னொரு வஸ்துவும் தொப்பென்று கடலுள் விழுந்தது. உடனே மேற்தட்டில் எல்லோரும் கூடிவிட்டார்கள். எங்கும் அமளி; எல்லோரும் கடலையே ஆவலோடு நோக்குகின்றார்கள்; "அதோ கடல்மச்சம்; பயமில்லை.... பயமில்லை.... எறியுங்கள் கயிற்றை ... எறியுங்கள் கயிற்றை..." என்று கப்பல் அதிகாரிகளின் ஆரவாரம்.... இப்படியிருக்க, ஒரு வாலிபன் கடலில் விழுந்த பிரபுவின் மகளை முதுகில் ஏற்றிக்கொண்டு, கயிற்றின்மூலம் மேற்தட்டுக்கு வரவும் "ஐயோ மகளே" என்றுகொண்டு பிரபு மகளை ஏந்திக்கொண்டார். வாலிபன் தன் செய்கையை ஒரு பொருளாய் எண்ணுதவன்போற் தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டான் டாக்டர்கள் சிகிச்சையின்பின், பெண் மூர்ச்சை தெளிந்துவிட்டாள். பின் பழையபடி அமைதி. இவைகள் யாவையும் மறந்ததுபோலக் கப்பலும் ஓடிக்கொண்டிருந்தது.

III

பிரபு ராமானந்தர் தன் முன்னின்ற கப்பற் சிப்பந்திகளைப் பார்த்து, "அவ்வாலிபன் யார்? அவனை நான் காணவிரும்புகின்றேன்; அவனுக்கேற்ற சன்மானம் செய்யவேண்டும்" என்றார்.

"பிரபோ! அவன் ஒரு தமிழ்வாலிபன். ஐந்து வருஷங்களுக்குமுன் எங்கள் கப்பலில வந்து சேர்ந்தான் எந்தப் புயல்காற்றையும் லட்சியம் செய்யாது

ஒருவருடன் நட்புக்கொண்டால், இன்பதுன்பங்களில் சமமாயிருத்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலிற் குதித்து நீந்துவதிற் சமர்த்தன். அதனால் அவனைக் கடல்மச்சம் என்று அழைத்து வருகின்றோம், இப்படியே கடலிற் தவறிப்போபவர்களைக் காப்பாற்றுவதுதான் அவன்வேலை. இதற்காக அவன் யாரிடத்திலும் எவ்வித உபகாரங்களையும் விரும்பியதுகிடையாது. எங்கள் கம்பனியார் அவனின் திறமைக்காக ஏராளமான பணம் கொடுத்துவருகின்றார்கள். இத்தக்கப்பலில் கற்பித்தானுக்கு அடுத்தபடியான மரியாதை அவனுக்குத்தானுண்டு. அவன் கப்பலின் முகட்டிலேயே இருந்துகொண்டு, யாரேனும் கடலிற் தவறிவிடுகின்றார்களா என்று கவனித்துக்கொண்டே இருப்பான். இப்போதும் அங்கேதான் இருப்பான். தங்கள் விருப்பத்தை அவனுக்கு அறிவிக்கின்றோம்" என்று கூறிக்கொண்டு சிப்பந்திகள் ஓடினார்கள்.

சிறிது நேரத்தின்பின் வாலிபன் ஆடம்பரமில்லாமல் மிகு பணிவோடு பிரபுவின்முன்வந்து ஐம்பதினாயிரம் ரூபாவை அவர்முன் வைத்து "ஐயா இது என் தந்தையால் தங்களுக்குச் செலுத்தப்படவேண்டிய கடன்தொகை; இதை ஏற்றுக்கொண்டு என் தந்தையை விடுவிக்கவேண்டும்; இலங்கைக்குப்போய் மலேயா திரும்பியபின், உங்களை, வந்துகண்டு என்தந்தையை விடுவிக்கலாம் என்றிருந்தேன்; அதற்கிடையிற் தாங்கள் புறப்பட்டுவிட்டீர்கள்; மன்னிக்கவும்." என்று வணங்கி நின்றான் வாலிபன்.

•

"யார் இது? சந்திரனா...? என்று பிரபு வியப்போடு வாலிபனைநோக்கினார் விஜயலட்சுமியோ நன்றி கலந்த முகத்தோடு சந்திரனை விழுங்கிவிடுபவள்போல இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள்.

IV

விஷயம் என்னவென்றால்:- மலேயாவில் ராமானந்தரும் சந்திரனின் தந்தையும் கூட்டாளிகள். இரத்தினவேல் (சந்திரனின் தந்தை) ஒரு பிரபல வியாபாரி. வியாபாரத்தில் ஒரு கப்பல் கடலில் ஆழவே, பெருநஷ்டம் அடைந்து பின், ராமானந்தரிடம் ஐம்பதினாயிரம் ரூபா கடன்பட்டு வியாபாரம் செய்துவந்தார். கெட்டகாலம் அதையும் நஷ்டமடையவிட்டுத் திக்கற்றவராக இருக்கும்போது, ராமானந்தர் நண்பன் என்றதையும் பாராது இரத்தினவேலைக் கடனுக்காகப் பதினைந்து வருஷச் சிறைவாசமும் அடையும்படி செய்துவிட்டார். அப்போது சந்திரனுக்கு வயது பதினேழு. "என் தந்தையின் கடனைநீக்கி அவரைச் சிறையினின்றும் மீட்பேன்" என்று சபதம் செய்துகொண்டு சந்திரன் ஒரு யப்பானிய கப்பற் கம்பனியிற் போய்ச் சேர்ந்தான். ரத்தினவேல் தன் சிறைவாசத்துக்காகக் கவலைப்படாமல் தன் தாயில்லா ஒரே ஒரு குழந்தை எவ்வண்ணம் சீவிக்கப்போகின்றதோ என்ற கவலையுடனேயே சிறைபோய்ச் சேர்ந்தார். அதன்பின் நடந்தவைகள்தான் மேற்கூறியவைகள்.

"என்னப்பா யோசனை; பணத்தை எடுக்கப்போகின்றீர்களா....?"

"இல்லை மகளே; அதைச் சந்திரனிடமே கொடுத்துவிடப்போகின்றேன்; இவன் உன் பள்ளிக்கூடத் தோழனல்லவா?"

"அதுதான்சரி அப்பா; அவர் என் உயிரைக் காப்பாற்றினாரே...."

"அதற்காக இதைக்கொடுக்கச்சொல்லுகிறீயா?"

"ஆம் அப்பா....; அதுகாணாது; இன்னும் ஒரு ஐம்பதினாயிரம் கூடக்கொடுங்கள்..." என்று புன்னகை புரிந்தாள் சிறுமி.

"ஐயா! அது கூடாது; நான் தந்தைக்கு மகன். அவரின் மரியாதையைக் காக்கவேண்டியவனும் நானே; ஆகையால், அவரின் கடன்பழுவைத் தீர்த்து அவரை விடுவிக்கவேண்டியவனும் நானேதான்; இதில் ஒரு சதமும் தொடேன்" என்றான் வாலிபன்.

"நாங்கள் ஏற்காவிட்டாலோ" என்று படபடப்புடன் கேட்டாள் சிறுமி.

"கோர்ட்டில் கட்டி என் தந்தையை விடுவிப்பேன்; தன் நண்பன் என்றதையும பாராது உன் தந்தை என் பிதாவைச். சிறையில் வைக்கவில்லையா? பணக்காரருக்கு, அதுவும் பணத்தாசை பிடித்தவர்களுக்கு நண்பர்களும் சரி; சத்துராதிகளும் சரிதான்."

"சந்திரா! நான் செய்தது தப்புத்தான், அதை நான் அப்பொழுது உணரவில்லை. என்னை மன்னி; நீ சற்குணன்; உத்தம புத்திரன்; உன்னைப் பெற்ற உன் தந்தையைப்போன்ற பாக்கியசாலிகள் உலகத்தில் வேறு யாருமில்லை; உன் விருப்பப்படி பணத்தை ஏற்றுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது என் நண்பனை விடுவிக்கும்படி அறிவித்துவிடுகின்றேன். ஆனால் நீ என்னிடமிருந்து ஒரு பிரதியுபகாரத்தையும் விரும்பாயோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியின் கனவு

(திரு. எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள்)

"அம்மா! நானும் வருகிறேன்" என்று எவ்வளவோ கெஞ்சி யழுதுபார்த்தும் வள்ளியின் தாயார் உடன்படவில்லை 'சென்ற வருஷம் நானே உன்னை யழைத்துக்கொண்டு போனேன். இம்முறை தம்பியைக் கூட்டிக்கொண்டு போகவேண்டும். அடுத்த வீட்டுக் கமலத்தோடு விளையாடிக்கொண்டிரு உனக்கு நான் விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கி வந்து தருகிறேன். என்னுடைய கண்மணியல்லவா!" என்று சொல்லித் தேற்றிவிட்டுக் கதிர்காம யாத்திரைக்குப் புறப்பட்டாள் வள்ளியின் தாயார்.

கடந்த வருடந்தான் வள்ளி கதிர்காமம் போய் விட்டு வந்தவள். அது நேற்று நடந்த சம்பவம்போல் அவள் மனதிற்குத் தெரிந்தது. கதிர்காமக்கடவுளின் தரிசனம் பெறமுடியவில்லையே யென்று குழந்தை வள்ளி வருந்தினாளல்லள் தன் வயதுக் குழந்தைகள் பலர் கதிர்காமம் போகத் தான்மாத்திரம் வீட்டிலிருப்ப தென்றால் எங்ஙனம் பொறுப்பாள் தன்னையெப்பொழு தும் பரிகாசம் செய்து வருத்தும் முருகனும் கதிர்கா மம் போவதாகச் சொல்லியிருக்கிறான். போய்விட்டு வந்து 'நான் அதைக் கண்டேன் இதைக் கண்டேன்' என்றுசொல்லிப் பெருமை பாராட்டிக் கொள்வதைத் தான் எங்ஙனம் பொறுத்திருப்பாள்.

மறுநாள் மத்தியானம். பாட்டிகொடுத்த சோற்றை யும் கறியையும் பூனைக்கும் காக்கைக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டு, முதல்நாளைய நினைவு மனதைவருத்த அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள் வள்ளி. இம்முறை முன்னரிலும் பார்க்கச் சனம் ஏராளமாகக் கதிர்காமத் துக்குத் திரண்டுவிட்டது. மூன்றுவது வகுப்பு றயிலில் வள்ளியும் தாயாரும் பிரயாணஞ் செய்துகொண்டிருக் கின்றனர். வழிநீளம் தென்படும் காடுகளும் சோலைக ளும் வள்ளியின் றயில்வண்டிக்கு எதிர்முகமாய் ஓடு கின்றன. அவளது மகிழ்ச்சிக்கு அளவில்லை. சிறிது நேரத்தில் கொழும்புப்பட்டினம் வந்து சேர்ந்தாள். முன்னிருந்த கட்டிடங்களெல்லாம் ஓங்கி வளர்ந்துவிட் டன. இராத்திரிகளிலெல்லாம் நட்சத்திரங்கள் ஆகா யத்திலிருந்து கீழே பூமியிலும் நிறைந்திருக்கின்றன.

"இல்லை ஐயா; அவ்வகையான ஒன்றையும் நான் விரும்பேன்; இது என் தொழிலல்ல"

"அப்படியாயின், நீ கடலில் இருந்து எடுத்த வஸ்துவையும் நான் ஏற்கந்தயாராயில்லை; அதை நீயே தான் வைத்துக்கொள்ளவேண்டும்" என்று குறுஞ் சிரிப்புடன் சந்திரனையும் மகளையும் மாறிமாறிப் பார்த் தார் பிரபு ராமானந்தர். வாலிபன் முகம் மலர்ந்தது. அப்பாற் பேச அவன் நா எழுவில்லை. சிறுமியோ நாணத் தாற் தலைகுனிந்துகொண்டு தன் தகப்பனின் தோள் மேற் சாய்ந்துகொண்டாள். ஆனால் இருவரின் கடைக் கண்களும் சும்மா இருக்கக்கூடியவைகளா? நல்ல யவ் வன தசைதானே.

V

அடுத்தவாரம் 'விக்டோரியா' என்றஆங்கில யக்கப்பல் மலேயாவிலிருந்து புறப்பட்டுக் கொழும்புத் துறைமுகத்தில் வந்து நங்கூரம்பாச்சியது. ரத்தின வேலை வரவேற்க அவர் மகன் சந்திரன் ஓடிவந்தான். அவன் பின்னே ராமானந்தரும் விஜயலட்சுமியும் ஓடி வந்தனர். ரத்தினவேலும், ராமானந்தரும் முன்போ லக் கூட்டாளிகளாகிவிட்டனர். ஆனாற் சாமானிய கூட்டாளிகளல்ல.

இப்போழுது விஜயலட்சுமி என்ற ஒரு கப்பல் மலேயாவுக்கும், இலங்கைக்குமிடையில் ஓடிக்கொண் டிருக்கின்றது. இதன் சொந்தக்காரன் சந்திரன்தான். பரோபகார்த்தமாக இக்கப்பல் ஓடிக்கொண்டிருந்தாலும் ஏராளமான வருவாயும் அதற்கு வந்துகொண்டிருக்கிறது. பிரபு ராமானந்தர் தன் மருமகன் பெயரால் 'சந்திர வாசா" என்ற ஒரு மாளிகையைக் கொழும்புப் பட்டி னத்தில் கட்டப்போவதாகச் சொல்லிக்கொள்ளுகின் றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிட்டாய்க் கடைகள் எங்குபார்த்தாலும் அழகாக இருக்கின்றன. வள்ளியின் ஆனந்தத்துக்கு அளவேயில்லை

நள்ளிருள். திசமறாமையில் வள்ளியும் அவளுடைய தாயாரும் தங்கியிருக்கின்றனர். யாத்திரீகர் கூட்டம்கூட்டமாய்க் கதிர்காமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட்டனர். வள்ளி திரும்பிப் பார்த்தாள். தாயாரைக் காணவில்லை ஆனால் அவளுக்குப் பதிலாக அங்கு வள்ளியின் விளையாட்டுத் தோழனை முருகன் நின்றுகொண்டிருந்தான் அவளின் சந்தோஷத்துக் களவில்லை. முருகனின் புன்முறுவல் அவளுக்கு ஒருவித உற்சாகத்தைக் கொடுத்தது. உடனே அவள் 'முருகா, வா நாம் கதிர்காமத்துக்கு நடந்து போவோம். அம்மாவைக் காணவில்லை ஆனால் நாம் அவளுக்காகக் காத்திருக்கவேண்டாம்' என்று சொல்லி அழைத்தாள். அந்தக் குறும்பன் 'வழியெல்லாம் புலியும் யானையும் மிருக்கே. உன்னைப் பிடித்துத் தின்றுவிடும்' என்று அச்சங்காட்டினான் வள்ளிக்குப் பயமுண்டாகிவிட்டது. நடநடுங்கினாள் பிறகு அந்தப்பயல் 'ஆனால் ஆண் பிள்ளைகளைக் காட்டு மிருகம் ஒரு தீங்குஞ் செய்யாது. நானிருக்கும்பொழுது நீ பயப்படவேண்டாம்' என்று சொல்லிப் புரளிச் சிரிப்போடு வள்ளியை அழைத்துச் சென்றான்

முருகனும் வள்ளியும் போகும் நெறியில் சன நடமாட்டமே கிடையாது அழகிய பறவையினங்கள் அங்கும் இங்கும் பறந்து கூவித்திரிந்தன தாயுடன் சென்றுகொண்டிருந்த மான்குட்டியொன்று வள்ளியும் தன்னினந்தானெனக் கருதி, அருகே வந்து மருண்டு நின்றது. மறுகணம் முருகனின் கரங்களில் அகப்படுவதற்குப் பயந்து ஓடியது. பக்கத்தே படர்ந்து கிடந்த முல்லைக் கொடிகளைப் பிடுங்கி முருகன் வள்ளியை அலங்கரிப்பான் காட்டுக்கனிகளைப் பறித்து வள்ளிக்கும் கொடுத்துத் தானும் புசிப்பான். முருகனின் வீரச்செயல்கள் வள்ளியை ஆனந்திப்பிக்கும் அவனை ஒருபோதும் விட்டுப்பிரிவதில்லை யென்று பிரதிக்கினை செய்வாள். ஆனால் இடையிடையே அவன் செய்யும் குறும்புகள்தான் வள்ளிக்குப் பிடிக்கிறதில்லை.

கதிர்காமக் கோயிற் சன்னிதானத்தில் நண்பரிருவரும் நின்றுகொண்டிருந்தனர். வள்ளிக்குப் பசி அதிகமாகிவிட்டது முருகனைப்பார்த்து ஏதாவது வாங்கி வரும்படி சொன்னாள். அந்தக்கள்ளன் அவளை யோரிடத்தில் இருக்கச் சொல்லிவிட்டுப் போனவன்தான். திரும்பிவரவில்லை நெடுநேரம் பொறுத்துப்பார்த்தாள் வள்ளி முருகன் வந்தபாடில்லை பசியோ வயிற்றைப் பிடுங்குகின்றது. மெதுவாக எழுந்து சுற்றிலும் நோக்கினாள். ஒரு மடத்தின் வாயிலில் சுவாமியாரொருவர் குழந்தைகளுக்கு வாழைப்பழங் கொடுத்துக்கொண்டு நின்றார் அங்கே சென்று பார்த்தபோது வாய்நிறைய வாழைப்பழத்தை யதக்கிக்கொண்டு பல்லைக்காட்டி நின்றான் முருகன் வள்ளிக்குக் கடுங்கோபம் வந்தது. அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை முருகன் இவ்விதச் சந்தர்ப்பங்களில் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டுமென்று நன்றாயறிவான். மடியில் கட்டியிருந்த வாழைப்பழங்களையும் அவளையும் வள்ளிக்குக்கொடுத்து 'வள்ளி, உனக்காகத்தானே நான் இவ்வளவு கஷ்டப்பட்டு இதையெல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன். சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு மலைக்குப் போவோம் வா! என்று சொன்னான். வள்ளியும் மகிழ்ச்சியோடு புசித்துமுடித்து கதிரைமலைக்குப் புறப்பட்டாள்.

வள்ளிக்குத் தாகம் வந்தபோதெல்லாம் முருகன் தண்ணீர்ப் பந்தர்களில் தண்ணீர் வாங்கிக்கொடுப்பான். மரங்களில் கனி பறித்துக் கொடுத்து மகிழ்வான். செங்குத்தான இடங்களில் அவளைத் தூக்கித் தன் தோளில் வைத்துக்கொண்டு மேலேறித் தன வீரச் செயலைக் காட்டிப் புகழ்வான். முருகனின் செயல்கள் யாவும் வள்ளியை மகிழ்வித்தன. அவனுடைய குறும்புத் தனங்கள் அவளுக்குப் பிடிக்காது. ஆனால் அவனை விட்டுப் பிரியவும் பயமாயிருக்கிறது. காட்டு மிருகங்களுக்குத் தப்பமுடியாது. இருந்தாற்போலிருந்து விட்டு எங்கேயாவது நழுவிவிடுவானோ என்று சந்தேகித்து அவன் கையை இறுகப் பிடித்துக்கொண்டு சென்றாள்.

இருவரும் மலைச்சிகரத்தையடைந்தனர். கதிரை மலையைச் சுற்றியுள்ள இயற்கை வனப்பு வள்ளியின் கண்களைக் கவர்ந்தது. அவள் இதிலீடுபட்டிருக்கும் சமயம்பார்த்து முருகன் மாயமாய் மறைந்துவிட்டான். பார்த்தாள் வள்ளி. பாவம் தனித்துப்போனாள். பயம் ஒருபுறம்; சீகாபம் மற்றொருபுறம் இனிமேல் அந்தத் துஷ்டனைத் திரும்பியும் பார்ப்பதில்லை என்று தீர்மானித்தாள். ஆனால் திரும்பிப்போகும் பாதையில் காட்டு மிருகங்கள் எதிர்ப்பட்டால் என்னசெய்வதென்ற பயம் வருத்தியது. மலைச்சிகரத்தில் பூசை முடிந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடியர்

—வெள்ளவத்தை, திரு. குல. சபாநாதன்

இலங்கைவளநாட்டின் கண்ணே ரோடியர் எனப் பெயர்வழங்கப்படும் ஒருசார் மரபினரும் இலங்கைப் பழங்குடி மக்களாவரென இப்பொழுது, இலங்கைப் பழங்குடியாராய்ச்சியாளருள் ஒருசாரார் கருதுகின்றனர். இவரை இயக்கருள் ஒரு குழுவினரென்றும், சால்டிய நாட்டு முடிமன்னனின் ஆளுகைக்குட்பட்டு இந்தியக் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த 'லுடிம்' எனும் ஒரு மரபுவழியினரென்றும், சிங்களருள் ஒரு சிறு கூற்றினர் தம் அரசனுருவனுக்கு மானிறைச்சிக்கு ஈடாக மானிடவிறைச்சியினை யுண்ணக் கொடுத்த காரணத்தால் ஒதுக்கப்பட்டவர்களின் வழியினரென்றும், மாற்ற முடியாத குட்டம் முதலியரோகங்களாற் பற்றப்பட்டோர் காட்டினுட்புக்கு மூலிகை வகைகளுண்டு தம் நோய் தீர்ந்து வாழ்ந்து ஓரினமாயொன்றி மற்றையரின் வேறுபினரென்றும், இன்னும் இன்னபலவாறுகவும் கூறிப்போதுகின்றனர். தோட்டியர், தொட்டியர், தொடியர், ஒடியர், சொடியர், இவைகளெல்லாம் ஒரு சொற்திரிபாகக் காணப்படுமாறு கொண்டும் இவர்கள் இழிந்த புலையர் எனக் கருதப்பட்டுவந்தனர் என்பதும் தெரிந்து கொள்க. "இறடியுங் கங்குங் கருந்தினை யென்ப" என்பது பிங்கலந்தையர்தலின், கருந்தினை விளைத்துண்டு வாழும் குறிஞ்சி நிலமாக்களாதலின் அக் கருந்தினை வாயிலாகத் தம்மைத் தாம் இறடியர் எனச் சொல்லிக்கொண்டனர் போலும் எனத் தமிழ்ப்பண்டித ரொருவர் எமக்கெடுத்தோதினர். இவற்றுக்கெல்லாம் போதிய சான்றுகள் கிடைக்கும் வரையும் இக்கொள்கைகள் ஒப்புக்கொள்ள முடியாதனவாக விருக்கின்றன.

சனங்கள் கூட்டம் கூட்டமாய் இறங்குத்தொடங்கினர். வள்ளியும் அக்கூட்டத்தோடு சேர்ந்து திரும்பினாள். முருகனை இனிப்பார்ப்பதில்லையென்று தீர்மானித்தாளே யெனினும் அவனது பிரிவு சகிக்கவொண்ணாததாயிருந்தது. தனிமை ஆவலை வாட்டியது. வழி நெடுகச் செடிகொடிகளில் தடக்கி விழும்போதெல்லாம் முருகனின் துணையில்லாமையை நினைத்து மனம் நோவாள். கோங்கமரமொன்றின் கீழையில் கிள்ளையொன்று இருந்து கொண்டு வள்ளியை நோக்கியது. அவ்வழகிய பக்ஷியை முருகன் கூடவிருந்தால் பிடித்துத் தந்திருப்பானே யென்று இரங்கினாள். மந்திகளின் கூட்டத்தைக்கண்டு பயந்து 'முருகா! முருகா! என்று கூவியழைப்பாள். ஆனால் அக்கள்வன் வரவில்லை.


தெள்ளிதாயோடிக் கொண்டிருக்கும் மாணிக்க கங்கையின் வெண்மணல் நிறைந்த கரைகளில் யாத்ரீகர் இளைப்பாறுகின்றனர். இருமருங்கிலும் உயர வளர்ந்து நின்ற மங்குஸ்தான் மரக்கிளைகளில் தாவித் திரியும் மந்திகள், கீழுள்ள மனிதவர்க்கத்தைப் பொருட்படுத்துவதாயில்லை. சிறுவர்கள் கொண்டெறியும் புன்னைக் கொட்டைகளுக்குப்பதில் மந்திகள் மங்குஸ்தான் பழங்கொண்டெறிந்தன. மாமரங்களின் கொம்பர்களில் கிள்ளைகள் பழங்கோதி விளையாடின. வேங்கை மரங்களினின்றுதிர்ந்த மலர்கள் ஆற்றில் மிதந்து செல்லுங் காட்சி பார்ப்பவர்மனதைப் பரவசப்படுத்தியது. பசிக்களையாலும் வழிநடக்க இளைப்பாலும் வாட்டமுற்ற வள்ளி "முருகா! முருகா! என்றழைத்தவண்ணமே ஒரு குருந்த மரத்தடியில் வந்து சாய்ந்தாள். சற்று நேரம் அப்படியே சோர்வுற்றிருந்தவள், யாரோ ஓடிவரும் காலடிச் சப்தங்கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். வந்து விட்டான் முருகன்! வள்ளியின் மகிழ்ச்சி சொல்ல முடியாது. இதுவரையும் அவன்மேற்கொண்ட கோபமெல்லாம் பஞ்சாய்ப் பறந்தது. பசுவைக்கண்ட கன்று போலெழுந்து ஓடோடியும் போய் முருகன் நீட்டிய இரு கரங்களிலும் புகுந்துகொண்டாள். களையும் பசியும் பறந்தன. அவ்வள முருகனின் அன்பொழுகும் முறுவல்முன் யாதுதான் நிற்கும்! குருந்தமர நீழலில் வெண்மணன்மேல் முருகனது மடியில் சாய்ந்து கொண்டு அவனது கருணைபொழியும் வதனத்தை நோக்கினாள் வள்ளி. மெய்மறந்தாள். யாரோ பின்னிலிருந்து அழைத்த சத்தங் கேட்டது. கண்களைத் திறந்தாள். பக்கத்துவீட்டுக் கமலம் 'வள்ளி, என்னடி இந்நேரவரையில் தூக்கம்? எழுந்து வா விளையாடலாம்' என்று சொல்லி யழைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரொடு' எனும் சிங்களச் சொல் குப்பையெனப் பொருள்படும். படவே குப்பைபோல்பவர் என்னும் பொருளான் ஒதுக்கப்பட்டார் அல்லது தாழ்த்தப்பட்டார்க்கு ரொடியர் என்பது பெயராயிற்று. இந்த ரொடியர்வாழும் சேரிக்குப் பெயர் குப்பாயம் எனப்படும். இச்சேரியின் தமிழ்ப்பெயர்ப் பொருளும் ரொடியர் எனும் சிங்களப் பெயர்ப்பொருளும் ஒன்றுகக் காணப்படுதலால், இவர்க்கு 'குப்பாயர்'* என முன்னே வழங்கிய பெயரினைக்கண்டு அதன் பொருளுக்கேற்பச் சிங்களர்தஞ் சிங்களமொழியால் ரொடியர் எனப் பெயரிட்டு வழங்கினர் என்பது மிகப் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் பண்டைத் தமிழ்க் கீழ்க்குடி மக்கள் என்பதூஉம், சிங்களரால் பகைமை கருதிப் பற்பலவாறுகப் புனைந்து கதை கூறி வலிந்து தாழ்த்திக் கெடுக்கப்பட்டார்க ளென்பதூஉம் உய்த்துணர்ந்து கொள்க இங்ஙனமன்றி இச் சொற்கு வேறுபொருள் தம்மாராய்ச்சி முடிபுக் கியையுமாறு கூறுவாருமுளர். இழிவுதோன்ற அழைக்கும் பெயராகக் காணப்படலின், இது அவர்கள்மீதுள்ள வெறுப்புக் காரணமாக வழங்கும் பெயரெனக் கருதற்கிடமுண்டு காதியர், வயிதர் எனும் பெயர்களே இவர்களின் பண்டைச் சிங்களப் பெயராயிருத்தல் கூடும் எனச் சில வரலாற்றாராய்ச்சி வல்லுகர் கருதுகின்றனர்.

மறுத்துவிடுவர். நாகல்ல ரொடியர் கண்டியைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்றமையால் கண்டிரொடியர் எனவும் அழைக்கப்பட்டனர்.

நவரத்தினவல்லி ரொடியரின் பிறப்பினைக் குறித்து, ஒரு கதையுண்டு. அதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றும். 'பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைக்கூற்றில் அரசாண்ட பராக்கிரமாகுவிற்கு நவரத்தினவல்லியென ஒரு மகளுண்டு. வேட்டுவனொருவன் இவ்வரசனுக்கு நாடோறும் உணவுக்காக மானிறைச்சி கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். ஒருநாள் மானிறைச்சி கிடையாதிருப்ப, அவ்வழிச் சென்ற சிறு பட்டியொருவனைக்



ரொடியர்

கொன்று, அவனுடைய இறைச்சியை மானிறைச்சிக்கீடாக அளித்துச் சென்றான். இச்சூழ்ச்சியினை அறிந்திருந்தும் அவ்விராசகுமாரி அவ்விறைச்சியினையே இனிக் கொணர்தல்வேண்டுமென வேட்டுவனுக்குக் கட்டளையிட்டாள். வேட்டுவனும் அரசனுடைய மகளின் கட்டளைக்குப் பயந்து, அதனை நிறைவேற்றுதற்குப் பல பிள்ளைகளைக் கொலைசெய்து வந்தான். ஒருமுறை மயிர்வினைஞனொருவன் (காவிதன்) தனது ஒரேயொரு அருமைமகன காணுமற் போனதையிட்டு முறையிட வெண்ணி அரண்மனையை யடைந்தான். அடைந்தும் அரசனைக்காண மிகுபொழுது தாழ்த்திருப்பவேண்டிய

ரொடியர், நவரத்தினவல்லி ரொடியர் நாகல்ல ரொடியர் என இருகிறப்படுவர். முற்கூறப்பட்ட நவரத்தினவல்லி ரொடியர், வன்னிப் பகுதியிற் பெரும்பாலும் வாழ்ந்துவந்தமையால், வன்னிரொடியர் எனவும் அழைக்கப்பட்டனர். தாம் உயர்ந்தகுலமெனப் பெருமைபாராட்டி மற்றக்குலத்தில் மணமுடிக்கவும்

* குப்பாயர் வாழ்ந்த விடம் கோப்பாய் ஆக விருக்கும் போலும் எனத் தமிழ்ப் புலவர் ஒருவர் குறிப்பிட்டார். இலங்கையில் வழங்கும், சொற்களை யாய்ந்துகண்ட முடிபுகளை வண. சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்கள் வெளியிடின் பல உண்மைகளை யாம் கண்டின்புறக் கூடியதாகவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற்று. நண்பகலுணவும் அரசமாளிகையிற்றானே ஓர் இலையில் அளிக்கப்பட்டது. அதனை யுண்ண அவன் எடுத்தபொழுது, அதன்கண் மானிடவிறைச்சி யிருப்பதையும் தனதருமைமகனின் நொண்டிவிரல் அக் கறியிலிருப்பதையும் கண்ணுற்று, உயிர்ப்போழிந்து மயங்கினன். பின்னரொருவாறு தெளிந்து வேறு பொய்க்காரணத்தைச் சொல்லி மாளிகையினின்றும் வெளிப்போந்து ஊராரைக்கண்ணுற்று "ஐயன்மீர்; அந்தோ! அந்தோ!! கொடிது! கொடிது!! நம் மன்னனை நம்பிள்ளைகளைக்கொன்று கறியாக்கி யுண்டுவருகின்றன்" என ஆற்றுதழுது அலர்தூற்றினன். கேள்வியுற்ற ஊரவர்களும்மனங்கலங்கிக் கலகஞ் செய்யும் நோக்கத்தோடு அரண்மனைநோகிச் சென்றனர். இவற்றையறிந்த அரசன் நிகழ்ந்தவாற்றினை ஆராய்ந்தறிந்து தன் மகளையுடனை அழைத்து, நகைகளைக்கழற்றி வெளியிற் குப்பை கூட்டிக்கொண்டு நின்ற கீழ்மகனொருவனிடம் ஒப்பித்தது இருவரையும் 'நாட்டைவிட்டோடிப் போமின்!' எனப் பணித்தான்" என்பது.

இவ்வரலாற்றினைப் பெரிதும் ஒத்தபிறிதொன்றும் வருமாறு:—அரசன்றானே மானிடவிறைச்சியென அறியாதுண்டுவந்தானென்றும், மயிர்வினைஞன் அதனை அறிவித்தலும் அரசன் இறைச்சிகொடுத்துவந்த வேட்டுவர்பாற் சிற்றங்கொண்டு, அவரைத் தீண்டாவினத்தினராக ஒதுக்கிவிட்டதோடமையாது, உயர்குலத்தவர் தவறு செய்யின கொலையாவெறுத்தலினும் மிக்கதாகக்கருதி இத்தீண்டாவினத்திற் சேர்த்தும் வந்தானென்பது. இதனால் அரசகுலத்தினர் சிலரும் இவ்வினத்திற் கலக்க நேரிட்டிருத்தல் வேண்டும் போலும். வண்ணிரொடிய ருள் பண்ணிருபகுப்பிருந்தனவாகத் தெரிகின்றது. அவையிற்றை மகப்பொல, திரிங்க, மிதங்கல், தலின்ன, நாப்பொல், உவேவாப்பொல, நுவரகம், மங்கம, கலவெல, தம்மனகட, அல்பகா, எனச் சிங்களர் வழங்குவர். கண்டியிலுள்ளவர்கட்குள் இத்தகைய வேறுபாடில்லை.

இனி, இவர் நிலம்:—ரொடியர் இபபொது சப்பிரகாம, வடமேல், ஊவா, மத்திய, தென்மாகாணங்களில் வாழ்கின்றார்கள். சிங்களர் வாழுமிடத்திலிருந்து நெடுஞ் சேய்மையில் குடிசைகட்டியிருப்பார்கள். இத்தகைய குடிசை பல கூடிய சிற்றூரினைக் குப்பாயம் என வழங்குவர். இவர்கள் பன்றி கோழி முதலியவற்றையும் வளர்ப்பதுண்டு. ஆடுமாடும் சிலர் வைத்திருப்பர். தங்களுடைய விலங்குகளை உயர்குலத்தவரின் விலங்குகளினின்றும் வேறு படுத்தற்காகத் தம் விலங்கின் கழுத்தில் சிரட்டையைத் தூளித்துக் கட்டிவிடுவர்.

இனி. இவர் உருவம்:—ரொடியர் மத்திம வளர்ச்சியும் அழகிய உறுப்புக்களுமுடையர். மனவலியும் மெய்வலியும் மிக்குடையர். சுரிவையர் மிகுந்த அழகுவாய்ந்தவர். தாமரையொத்த முகமும், நீலோற்பலமொத்த கண்களும், குமிழம்பூவொத்த மூக்கும், கோங்கரும்பொத்த முலையும், காந்தட்பூவொத்த கையுமுடைய மங்கையர் தம் மைதீட்டிய வில்லொத்த புருவத்தினின்றும் பாயும் கட்பார்வையெனும் அம்புகளாற் றாக்கப்பட்டாத ஆடவர் மிகச் சிலரே. உயர்குலத்து இளங்காளையர் சிலர் தம் சுற்றத்தாரையும் துறந்து இவர்களுடன் குப்பாயத்தில் வாழ்கின்றனர். பெண்கள் இவ்வளவு அழகுவாய்ந்திருப்பதற்குக் காரணம் கலிங்கமாகவென்னும் அரசன் ஆண்டகாலத்தில் பல உயர்குடி ஆடவரையும் மகளிரையும் இவ்வினத்திற் தண்டனைக்காகச் சேர்த்துவிட்டமையே யென்பது சில சரித்திராசிரியர்களுத்து. ஆனல் இயற்கையோடியைந்த வாழ்வே அதற்குக் காரணமென்றல் அறிஞர்க்செல்லாம் ஒப்பமுடிந்ததாகும்.

இனி, இவர் உடை: ஆடவர் தலைக்கு ஒன்றும் அணிதல் ஆகாது. பெண்களும் இடைக்குமேல் மெய்யை மூடி ஆடையுடுத்தலும் ஆகாது. இப்பொழுது சில பெண்கள் பல நிறந்தீற்றிய கைக்குட்டை போன்ற தொன்றைக் கழுத்திற் கட்டித் தொங்கவிட்டுத் தமது மார்பை மறைத்துக் கொள்வார்கள். காதில் சாய வோலையைச் சுருட்டித் தோடாக அணிவார்கள்.

இனி, இவர் உணு: இவர்கள் பலவகையிறைச்சியுமுண்பார்கள். வண்ணி ரொடியர் மாட்டிறைச்சியுண்ணமாட்டார்களென்பது சிலர் கருத்து. விலங்கினத்துள், எருமை, யானை, புலி, பூனை, நாய்களரியும் பறவையினத்துள் காகமும் தவிர, ஏனைய யாவற்றையும் உண்பார்கள். எலிகளைச் சிறுர் பிடித்துண்பது வழக்கம். கண்டி ரொடியர் ஓரொருகால் மாடாடுகளைக் களவாடிக்கொன்றும் உண்டொழுகுவார்; செத்த விலங்கிறைச்சியைப் பெரும்பாலும் விரும்பார்கள்.

இனி, இவர் வினை: ரொடியர் பலமுடையவர்களாயிருந்தும் சிங்களரால் ஒதுக்கப்பட்டமையின் இரந்துண்ணும் வாழ்க்கையில் ஈடுபட்டு மிகுந்த சோம்பேறிகளாகிவிட்டனர். கண்டியரசின் கீழ்க் கூறமுடியாத துன்பத்துக்காளாயினர். வயல்களை வாங்கவிடாமலும் வியாபாரம் செய்யவிடாமலும் தடுக்கப்பட்டார்கள். சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்களில் வாழவிடாமலும் கிணற்றில் நீர் முகக்க விடாமலும் தன்புறத்தப்பட்டனர். இவர்கள் இரந்துண்பதே வழக்கமெனினும், இரந்து பெறும்வரை ஒரு வீட்டினின்று எளிதில் அகலமாட்டார்கள். தீண்டாச் சாதியிலுள்ளவன் நெடுநேரம் இல்முன் காத்திருப்பது தங்கட்கு மரியாதைக் குறைவென நினைத்தேனும் ஏதாவது கொடுக்க நேரிடும். கொடாதிருந்தால் தங்கள் காணியிலுள்ள நெல்லைக் களவாடக் கூடுமெனப்பயந்தும் கொடுக்க நேரிடும். ரொடியர் களவாடுவதிலும் சிறந்த ஆற்றலுடையர். தங்கட்கு வேண்டும் சட்டிபானை முதலியவற்றைக் குயவனிடம் இரந்து கேட்டு விலையின்றிப் பெற்றுக்கொள்வார்கள். பாய் இழைத்தற்குரிய ஓலையையும் உயர்ந்த குலத்தினரிடமே இரந்து பெற்றுக்கொள்வார்கள். ரொடியன் ஒருவனை நோக்கிப் பிறர் "ஏடா! இவற்றை நீயே போய் ஈட்டிக்கொள்ளக் கூடாதாடா" என்று உரப்பிக்கேட்டால், பெருமான்! இதென்னவாக்கும், தங்களுக்குத் தெரியாததா, ஆண்டே! தாங்கள் செல்லும் பாதையில் நாக்கள் அடியெடுத்து வைக்கத் துணிவோமா? தங்கள் வயலிலுள்ள நீரைத் தொட்டுப் பழுதாக்கலாமா? என மிக நகைச்சுவை பொருந்தவும் பணிவுதோன்றவும் பொருளமையவும் விடையிறுப்பான். "ரொடியன் நான் எசமான் வரவிலகியன்றே போக வேண்டும்" எனச் சில சமயங்களில் விளையாட்டாகவும் கவர்படு பொருள்படவும் கூறுவன். பெண்கள் தாளமிட ரொடியன் பாட்டுப்பாடியாடி ஊராரை மகிழ்வித்து இரந்துண்பதுமுண்டு. இங்ஙனம் பலவகையாகவும் ஊராரை மகிழ்விப்பதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள். வேளாண்மைக் காலத்தில் கூட்டங்கூடமாக நெல் இரந்து ஈட்டுதற்கு வெளிக்கிளம்புவர். சிலர் இப்பொழுது கமத்தொழிலும் செய்துவருகின்றனர். காணியை இவர்சுட்கு உழக்கொடுக்கும் வேளாளர் இவர்கள் தொட்ட நெல்லைத் தாம் தொட்டுண்ணுதல் கூடாதெனக் கருதி, அதற்கு ஈடாக வேறு பொருள்களை இவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வர். இவர்கள் தோலினாற் கயிறுபோன்றதொன்றைப் பின்னியாடைகளைப் பிடிப்பதற்குப் பயன்படுமாறு அரசர்கட்கு அக்காலத்தில் உதவி வந்தார்கள். பிரப்பங்கூடை, குறடு (சவுக்கு) முதலியன செய்துகொடுத்து நெல் வாங்குவதுமுண்டு.

இனி இவர் வழக்கம்: மணம் மிக்க சிறப்புடன் நிகழ்வதொன்றன்று. குறித்த நாளில் மணமகன் தன் நட்டாருடன் மாலைப்பொழுதில் உடுப்பும் இரண்டொரு தட்டில் வாழைப்பழம் பணிகாரம் முதலியனவும் கொண்டு மணமகள் வீட்டுக்குச் சென்று அவற்றை அவளிடம் அளிப்பான். பெண்வீட்டார் அன்றிரவு யாவருக்கும் விருந்தளிப்பர். அன்றிரவு அங்கு தங்கி அடுத்தநாள் மணமகளைத் தன்வீட்டுக்கழைத்துச் செல்வான். இங்ஙனமன்றி மைந்தரும் மங்கையரும் களவியற் காதல் மணம் நிகழ்த்தி இல்லறவாழ்க்கை நடாத்தத் தம்முள் ஒருப்பட்டு வாழ்தலுமுண்டு; ரொடியருள் ஒருவன் ஒருத்தியை மணமுடித்தல் பெருவழக்கு. ஒருவன் இருபெண்களை முறையே மணமுடித்தலும் ஒருத்தி தமமுளுடன்பிறந்தார் பலரையும் ஒருங்கு முறையே மணத்தலும் அரிதாக நிகழ்வதுண்டு. பெண்கள் முன்னர்க் கூறியவாறு கட்டழகுடையவர்களாதலாலும் வறுமைப்பிணி தீண்டியதாலும் இக்காலத்திற் சிலர் கூடாவொழுக்கமுடையராயினர் என்பது கேள்வி ஆடவரும் பொருள்பண்ணுது புறக்கணித்தலுமுண்டு. ரொடியர் பிணத்தைப் புதைப்பது வழக்கம். ஒருவர் இறந்தால் பிணத்தைப் பாயினுற் சுற்றிப் பாடையிலேற்றிக் கொண்டுபோய் காட்டுக்குள் ஓரிடத்தில் புதைத்துவிடுவார்கள். ஏழாம் நாளன்று சுற்றத்தார் யாவரும் இறந்தவரின் வீட்டிற் குழுமி அவ்வீட்டாரால் ஆக்கப்பட்ட உணவிற் பங்குபற்றுவர்.

பெரிய விழாக்கள் நிகழும்பொழுது இவர்கள் சுமரிக் சுற்றுமுழைபோன்றதொருமரத்தின் இலைகளிலிருந்து எடுத்த துவர்பாற் செய்த நெடிய சவுக்குகளைச் சுழற்றி வெடிப்பிப்பது போன்றதோர் குறிப்பொலியை யெழுப்புவர். கண்டியரசின்கீழ் இவர்கள் தூரியத் தலைமைக் காரனிடமே முறையீடு செய்யமுடியும். வெள்ளாளர் முன்பாயின் தூரத்தில் நின்று கையுயர்த்தி அல்லது எட்டுறுப்புந்தோய விழுந்து வணங்கியவாறே உரத்த குரலொலியால் தங்கள் முறையீட்டினை வெளியிடல் வேண்டும். ஆங்கில அரசின்கீழ் இத்தகைய கொடுமை கிடையாது. நெறிமுறை யாவர்க்கும்ஒப்ப வழங்கப்படும்.

இனி, இவர் கடவுட்கோள்கை:— இவர்களுட் பலர் இப்பொழுது பௌத்த மதத்தைத் தழுவியுள்ளார் எனினும் சிறுதேவதை வழிபாடு செய்யும் வழக்கத்தையும் கைவிட்டிலர். கராயக்கர், வெட்டியக்கர், பததிரகாளிபோன்ற சிறுதெய்வங்கள் தங்கட்குக் கொடிய தொடர் நோயுண்டாக்குந் தெய்வங்களெனக் கருதி, கோழியைப்பலியிட்டு மீன்வற்றல் படைத்து வணங்குவதுண்டு இன்னும் தென்புலத்தார் வழிபாடு இவர்கட்குளதுண்டு. இவற்றினை நோக்குழி இவர்கள் இலங்கைத்தீவின் பழங்குடிமக்களெனக் கருதற்கிடமுண்டு இவர்களுடைய தன்மைகள் யாவற்றையும் கலப்பற்ற நிலைமையில் வைத்தாராய்தற்குப் போதிய சான்றுகள் இதுவரைகிடையா எனினும், இவர்கள் பழங்குடியினர் என்பது ஆராய்ச்சியாளர் பலர்க்கும் ஒப்ப முடிந்ததொன்றும். இம்முடிபினையே இக்கட்டுரையும் இயன்றவரை வலியுறுத்தி நிற்றல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குச் சிரிப்பு ஏன் உண்டாகிறது?

பல அனுபவங்கள்

("ஸ்ரீ ராஜதேவி")

சிரிப்பு! சிரிப்பென்னு முன்னமே உங்களுக்குச் சிரிப்புண்டாகிவிடும்போலிருக்கிறது சிரிப்பு ஏன் உண்டாகின்றது? இதற்குப் பல்வகைக் காரணங்களுள. சிரிப்பு எந்நேரமும் எங்குமுளது ஆனால், அது மறை பொருளாகவேயிருக்கும். எந்நேரம் எங்கு வருமென ஒருவராலும் கூறவியலாது. சாதாரண வழக்கமுறை தவிர, வேறுவித்தியாசங்கள் எப்போ ஏற்படுகின்றனவோ அவ்வப்போது சிரிப்புமுண்டாகும். ஒரு காரணப் பொருட்டு, சிரிப்புண்டாவதற்கு ஐம்புலன்களே உதவியாயிருக்கின்றன. உதாரணமாக ஓர் பைத்தியகாரனை அல்லது ஓர் கோமாளியைப் பார்க்கும் போதும், ஓர் விகடத்தைக் கேட்கும் பொழுதும் பனிக்கட்டியைத் தீண்டும் பொழுதும் நுசிக்கும்பொழுதும் (Nitrus Oxide) முதலிய வாயுக்களைச் சுவாசிக்கும் பொழுதும் சிரிப்புண்டாகிறது. பல்வகைக் காரணங்களால் உண்டாகும் இச்சிரிப்பை பல்கோடி உதாரணங்களால் விளக்கலாம்.

வசன முரண்பாட்டாலும் இலக்கணப்பிழையாலும் சிரிப்புண்டாவதுண்டு "தொறை ஊட்டுக்கு போரு ணுங்க" எனில் உடனே சிரிப்புண்டாகின்றது. "அந்த மனுஷன் விழுந்திட்டது" என்பதும் ஓர் உதாரணமாகும். இருபாஷைகளைக் கலந்து பேசுதல் சிலசமையங்களில் அதிகசிரிப்பைபுண்டாக்கும் "லெற்றர் எனக்கு பிறதர் எழுதி அந்த மாற்றரைப்பற்றி கொன்சிடர் பண்ணியவர்" இது யாருக்குத்தான் சிரிப்பை யுண்டாக்காது? இதில் ஏதோ கட்டாயமாக ஒருசொல் ஆங்கிலமென்றுல் மற்றதுதமிழாகவேயிருக்கிறது. Letter எனசகு, brother எழுதி, matter ஐப்பற்றி, Consider பண்ணியவர். தனிப்பாஷையை எழுதும் விதத்திலும் சிரிப்புண்டாகும். மரணமானது சாதிபேதம் பார்ப்பதில்லை. ஏழையாயினும் அரசனுயினும் அதற்கு அஞ்சவேண்டுமே! அது அழைத்த நேரம் கூடிச் செல்லவும் வேண்டுமே! இதுபோன்றவோர் அச்சத்தை விளக்கக் கூடிய கூற்றை வாசிக்கவும் சிரிப்புண்டாகின்றது. ஆதலால், சிரிப்புக்கு அச்சமில்லையெனினும் பொருந்தும். பொருந்தாமை காரணமாகவும் சிரிப்புண்டாக்கும். சாதாரணபாஷையில் அல்லது எழுத்தில் சொற்கள் பொருந்தாது சிரிப்புண்டாவதுபோல், உடை, நடை வேடம் பொருந்தாவிடினும் சிரிப்புண்டாக்கும். உதாரணமாக ஒருவர், ஆங்கிலேயர் அணியும் காற்சட்டையை அணிந்து கொண்டு, மேற்சட்டைக்குப் பதிலாக ஓர் சால்வையாற் போர்வையிட்டுக் கொண்டால், உடனே அவரைக் கண்டவர்கள் பார்த்து நகைத்துச் சிரிப்பார்களல்லவா? புருஷர்களுக்கு மேற்சொண்டின் வலப்புறமுமிடப்புறமுமிருப்பது மீசை. ஆனால் அது ஒருபுறம் மாத்திர மிருப்பின் சிரிப்பு. இது வழக்கத்துக்கு மாறுக விருப்பது மாத்திரமல்லாது பொருத்தமின்மையுமுளது. இவ்விதச் சிரிப்புக்கள் பெரும்பாலும் நாடக சாலைகளில் கோமாளிகள் தோன்றும் போதுண்டாகும். ஓர் அழகிய மங்கை. இவளுக்கு மணவாளனுக ஓர் நரைத்த தாடித்தாத்தா மணக்கூடத்தில் நிற்பாரானுல் யாருக்குத்தான் சிரிப்புண்டாகாது? இதற்குக் காரணம் பொருந்தாமையே

அறியாமை காரணமாக ஒருவர் ஓர் பிழையைச் செய்தாலும் சிரிப்புண்டாகும். உதாரணமாகச் சேர். வால்டர் றலி முதல் முதல அமரிக்காவிலிருந்து புகையிலையைக் கொண்டுவந்து இங்கிலாந்திலுள்ள தமது தோட்டத்திலிருந்து புகைத்தார். இதைக்கண்டதும் அவரது பணிமகன் தனது எசமான்மீது தீப்பற்றி விட்டதென நினைந்து, இரு வாளிகள் நிரம்ப நீர் கொண்டுவந்து அவர்மீது பெய்தான். இருவரும் நங்கள் பிழைகளை உணர்ந்து கொண்டார்கள். ஆனால் அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகச் சிரிப்புண்டாகாமலிருக்க முடியுமா? அறுகரி சியைப் பிரேதத்தின் வாயிற்போட்டான் என்றுசொல்லு முன்னமே சிரிப்புண்டாகின்றது. ஆனல் வாய்க்கரிசியை மணமக்கள் மீது சொரிந்தான் என்றல், எப்படியிருக் கும்? உடனே ஓர் கடுஞ்சிரிப்புண்டாகுமல்லவா?

அசாத்திய மென்றெண்ணப்படுகின்ற சம்பவங் களைக் கேட்கும் பொழுதும், பார்க்கும் பொழுதும் சிரிப்புண்டாகும். ஒருவன் ஆனைமீது போகின்றான் என்றல் சிரிப்புண்டாகாது. ஆனல் ஒருவன் யானை யைத் தூக்கிச் செல்கின்றனெனில், உடனே சிரிப்புண் டாகும். இது பூமிமீது கப்பல் ஓடுகின்றதென்பது போலாகும். ஒருவன் இரவுநேரத்தில் துவிச்சக்கர த் தில் வெளிச்சமின்றிச் சென்றனென்றல் நம்பலாம். ஆனல், அக்குற்றத்தை அவன் உடனே பொலிஸ் தானத்தில் முறைப்பாடு செய்து சென்றான் என்றல் உடனே சிரிப்புண்டாகின்றதல்லவா? ஒருவன் தான் விற்பனைக்கு கஞ்சா வைத்திருப்பதை விளம்பரப் படுத்துவதும் இதை ஒக்கும். இவ்விதக்கதைகள் நம் பிக்கையைக் கொடாது. ஆனல் போதிய சிரிப்பைக் கொடுக்கும்.

விகடத்தைக் கேட்கும் பொழுதும் சிரிப்புண்டா கின்றது. பேர்நாட்ஷோ என்னும் ஆங்கில நாடகாசிரியர், ஒருமுறை பிரசங்கஞ் செய்வதற்காக மேடையிலேறினர். பிரசங்கம் கேட்பதற்காக வந்து முன் வரிசையிலிருந்த ஒருவர் "கோ" வென்ற சப் தத்துடன் எவறை செய்தார். ஷோ உடனே "சரி, நானும் அதற்குச் சம்மதந்தான்—போய்விடுகிறேன்" என்றார். சபையில் பலத்த சிரிப்புண்டானது. ஷோ அவர்கள் இலங்கையைத் தரிசித்த காலத்தில், பத் திரிகை நிருபர் ஒருவர் அவரை நோக்கி, "தாங்கள் எக்காரணம் பற்றியோ உலகயாத்திரை செய்கிறீர் கள்?" என வினவினர். அதற்கு உடனே வந்தபதில் "உலகம் என்னைச் சுற்ற மறுத்துவிட்டது. அது காரணமாகத்தான் நான் உலகைச் சுற்றுகின்றேன்." இதுபோன்ற சம்பாஷணைகளும் சிரிப்பை யுண்டாக்கும் சக்தியுடையன.

அளவெட்டிக் கனகசபைப் புலவர், ஒருமுறை கோப்பாய்க்குச் சென்றார். சென்றவிடத்து, ஓர் சிறு பூசினிச் செடியைக் கண்டார். கண்டதும் "பூசினி யிலே பிஞ்சிருக்கிறது" என்றார். நின்றவர்கள் வியப் புற்றார்கள். செடிமுளைத்து 15 நாட்களாகவில்லையே; பிஞ்சு எப்படியிருக்குமென அதிசயித்துக் செடியைப் பிடித்துப் பரிசோதித்தார்கள். புலவனர், ஒரு இலை பிஞ்சிருப்பதைப் பிடித்துக் காட்டினர். அங்கு நின்ற வர்களுக்குச் சிரிப்பு எப்படியாக விருந்திருக்குமென பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம். இன்னேர் புலவர், ஓர் பெண் துணியொன்று வைத்திருப்பதைப் பார்த்து "பூத்தைக்க (கு) நல்ல துணி" யென்றார். பெண்ணுக்கு உடனே கோபம் மூண்டது. "ஆமா நான் பூத்தைதான் நீங்கள் ....." என்று ஆரம்பித் தாள். புலவர் "பெண்ணே! பேதையே! ஆறுவது சினம்! பூத்தைப்பதற்கு நல்ல துணி யென்றேன் இதற்கு இவ்வளவு கோபமா?" என்றார். எரிந்த முகத்தில் பனிக்கட்டி வீழ்ந்ததுபோல் பெண்ணுக்குக் கோபம் மாறிச் சிரிப்புண்டானது.

சிலருக்குச் சிரிப்பு பிறவியிலேயே உள்ளது. எந்த நேரமும் சிரித்தபடியேயிருப்பார்கள். அவர் களுக்கு விசேஷ சம்பவங்கள் தேவையில்லை வேறு சிலருக்குச் சிரிப்பு நோயாகவுள்ளது. ஹிஸ்ரீரியா (Hysteria) போன்ற நோயாற் பீடிக்கப்பட்டவர்கள் ஒருகாரணமுமின்றிச் சிரிப்பார்கள். சிரிப்புக்கு வேறு பல்வகைக்காரணங்களும் உதாரணங்களுமுண்டு. ஆனல் அவைகள் எழுத எழுத விரியும். பத்திரிகை ஆண்டு மடல் ஆதலால் இடங்கொடா. உங்களில் யாவரும் பலகோடிமுறை சிரித்திருப்பீர்கள். ஆனல் எவ்வகைக் காரணங்கள் பற்றியென்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

* * * * * * *

மேலுத்தியோகத்தன்:—உனக்களிக்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களிலிருந்து நீ சென்ற மூன்று மாதங்கட் கிடையில் ஐந்து முறை உத்தியோகம் மாறியதாகக் காணப்படுகின்றதே.

உத்தியோகம் கேட்போன்:—ஆம்! ஆம்!! என்னைப் பலரும் விரும்புகின்றனரென இதிலிருந்து தெரிய வில்லையா?

* * * * *

காமவிகாரி:—என் காதல்கிழத்தி சென்ற இரண்டு வருடமாக நாளொன்றுக்கு இருமுறை கடிதம் எனக்கு எழுதி வந்தனள்.

நண்பன்:— சரி பின் என்ன நடந்தது?

காமவிகாரி:—அவள் ஒரு தபாற் சேவகனுடன் வசிக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வந்துறைத் திருமால் கோயில்

(28–ம் பக்கத் தொடர்ச்சி)

(Dondra) பொன்மயமான சிகரங்களோடுகூடி உயர்ந்து வானளாவிய கோபுரங்களையும் மூடுபாவடைய தோரண மண்டபங்களையுமுடையதாய்க் கடல் மேற் செல்வோர் கண்களைக் கவர்ந்து இலங்கையைச் சிறப்பித்து நின்ற விஷ்ணுவாலயத்தைபுங் கைகூசாது இடித்தழித்துவிட்டார்கள். அவர்கள் இலங்கையிலுள்ள செல்வத்தைக் கவர்ந்ததுமன்றி, இலங்கையின் செயற்கைபழகெல்லாவற்றையும் அழகைக்கண்டதிசயித்துக் கண்ணினுலானந்தங் கொள்ள அறியாத பிசாசுகள்போல் அழித்து மகிழ்ந்தார்கள்" எனக்கூறுகின்றூர். "இவ்விதமான கொடுந் தொழில்களைச் செய்வதற்கு அவர்களது சமயாபிமானமும், வைராக்கியமும் மறுசமயத்தவரது வழிபாட்டிற் குரிய கோயில்கள் தம் மதவிரோதமென்ற நம்பிக்கையுமே காரணங்களாய் அவர்களைத் தூண்டிவிட்டனவெனினும், பொருள் அபகரிக்கும் பேராசையே முக்கிய காரணமென்பது மறுக்கொணு உண்மை" என திரு. செ. இராசநாயகமுதலியாரவர்கள் கூறுகின்றனர்.

விசுவகர்மாவினுல் செஞ்சந்தனக் கட்டையில் செதுக்கப்பட்ட விக்கிரகமொன்று கடலில் மிதந்துவந்து இங்ஙகரத்தில் மேற்கரையை அடைந்த தென்றும், அதை எடுக்கச்செய்த முயற்சிகளெல்லாம் பயனில்லாதுபோகவே அக்காலத்திலிருந்த அரசன் இவ்விக்கிரகத்தைப்பற்றிக் கனவுகண்டு, அவ்விடம் போந்து பயபக்தியுடனும் பல வரிசைகளுடனும் அவ்விக்கிரகத்தையெடுத்து குறிக்கப்பட்ட விஷ்ணுவாலயத்தில் நாட்டினனென்றும், போர்த்துக்கீசரால் இவ்விக்கிரகம் சூறையாடப்பட்டுக் கப்பலில் கொண்டுபோகப்பட்டதென்றும், செல்லும்வழியில் கப்பல் உடைந்துவிட, இவ்விக்கிரகம் கடலில் மிதந்து சென்று திரிகோணமலையை யடைந்ததென்றும், இவ்விஷயம் தம்புலா (Dambulla) ஆலயத்தின் விசேஷ குருவிற்குக் கனவில் தோன்றவே, அவர் அரசனுக்கறிவித்தனரென்றும், அரசன் அவ்விக்கிரகத்தைத் தம்புலா ஆலயத்தில் மறுபடியும் நாட்டினன் என்பதும் ஐதிகம். இவ்விக்கிரகத்தை இன்றும் தம்புலா ஆலயத்தில் காணலாம்.

இங்ஙகரத்தின் கடற்கரையில் ஓர் ஆலயமிருந்ததற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. கருங்கற்தெப்பமூர்ந்துவந்த கதிர்காமக்கடவுள் முதலாகஇவ்விடத்திலேயே அடியார்கள் வணங்க வீற்றிருந்தனரென்றும், குறிக்கப்பட்ட கருங்கல் தெப்பமே இவ்விடத்திற் காணப்படும் பயங்கரமான பாறைத் தொடர்கள் என்றும் கூறுகின்றனர்.

1850-ம் ஆண்டில் இலங்கைச் சரித்திரமெழுதிய H C. சேர். (Sirr) அவர்கள் இவ்விஷ்ணுகோயிலைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றூர். "முன்னொருகாலத்தில் தெய்வந்துறை யென்னுமிடத்தில் மிகவும் மகத்துவம் பொருந்திய ஓர் விஷ்ணுவாலயம் அமைக்கப் பெற்றிருந்தது. அதன் ஞாபகசின்னமாக அவ்வாலயம் இருந்தவிடத்தில் மிக விளக்கமாகவும் ஆழமாகவும் கொத்துவேலை செய்யப்பட்ட மூன்று கற்களாலமைக்கப்பட்ட சதுரவடிவமான வாயிற்பாதையும், அவ்வித சிற்ப வேலைகள் செய்யப்பெற்ற கருங்கற்சாளரச் சட்டங்கள் நான்குமே எஞ்சியுள்ளன. இப்பொழுது இவ்விடத்தில் மண்ணினுற் கட்டப்பட்ட ஆலயமே உள்ளது. ஸ்ரீராம பிரான் விஷ்ணுவின் அவதாரமே என நம்பும் அநேக விஷ்ணுபக்தர்கள் இவ்விடத்தை ஒரு விசேஷ புண்ணிய ஸ்தலமெனக் கருதி, விஷ்ணு வழிபாட்டிற்காக ஆண்டு தோறும் ஆடிமாசத்தில் ஆயிரக்கணக்காக வந்தடைவார்கள். இவ்வாலயத்திற்கு அருகாமையில் உயர்ந்து வளர்ந்து வளம்செறிந்த பல சோலைகள் ஈன்று நிற்கும் தென்னை, கமுகு, வாழை முதலிய மரங்களால் சூழப்பட்ட பல சிற்றில்கட்கிடையே பழுதின்றிக்கிடக்கும் நூற்றுக்கணக்கான கற்றூண்கள், நிமிர்ந்து நிற்கும் அழகிய காட்சி காண்போர் கண்களைக் கவர்வதாகும். இக்கற்றூண்களில் பற்பல சரித்திரங்களை விளக்கும் உருவங்கள் பல செதுக்கப்பட்டிருப்பினும், ஸ்ரீராமபிரானின் அம்புவில்லோடுகூடிய உருவமே மீட்டும் மீட்டும் காணக்கூடியதாக இருக்கின்றது. இக்கற்றூண்கள் யாவும் முற்காலத்திருந்த விஷ்ணுவாலயத்தின் தூண்கள் என்பதே கோவிற் பூசகரின் கூற்று. தற்காலம் வழிபாடு நடக்கும் விஷ்ணுகோயிலிலிருந்து இருமருங்கும் உயர்ந்த மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும் விசாலமான பாதை வழியே கடலோரத்தையடையின், அவ்விடத்தே சிற்ப வேலைகளின்றிக்கிடக்கும் கற்றூண்கள் பலவற்றைக் காணலாம். விஷ்ணுவாலயத்திற்கு அண்மையில் ஒரு புத்தர் கோயிலும் கோபுரமும் (Dagoba) உண்டு.

தெய்வந்துறை நகரின் மனோகரமான இயற்கை வனப்பில் ஈடுபட்டு மாலைக்கதிரவனின் மஞ்சட்கிரணங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நீலக்கடலிற் படிந்து மிளிரும் காட்சியைக் காணும் அவாவுடையோராய் கடலோரத்தை யடைந்தோம். கடலுக்குள் சிறிது தூரத்தில் வெண்திரை அதன்மேல் மோதுதலால் நீர் நானுபக்கங்களிலும் தெறிக்கும் ஓர் கற்பாறை கண்ணுக்குப் புலப்பட்டதும் அப்பாறை எப்பெயரால் அழைக்கப்படுவது என்று எம்மோடு கூட வந்த தலைமைப் புத்தகுருவை வினவினோம். அதற்கு அவர் "இந்தூற்றாண்டுத் தொடக்கத்தில் ஓர் ஆங்கிலேயரின் கப்பல் அப்பாறையில் மோதுண்டு சேதமடைந்ததால், அதனை ஆங்கிலேயனின் கற்பாறை (The English-man's Rock) என அழைப்பார்கள்" என்று அறிவித்தார். அக்கப்பல் எக்காரணத்தினல் இக்கதிக்குள்ளாயிற்று என்று அறிய ஆவலுற்று அவ்விருத்தாந்தத்தை விபரமாக விளம்பும்படி வேண்டிக்கொண்டதும், அவர் மிகவும் உற்சாகத்தோடு சொன்னதாவது. "18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஒரு நாள் சூரியன் அஸ்தமிக்குமளவில் ஓர் உன்னதமான கப்பல் அதன் பிரயாணத்திற்குக் காற்றுப் பிரதிகூலமாயிருந்ததனல் இத்துறையில் வந்து நங்கூரமிட்டது. மறுநாள் உதயத்தில் இவ்வூர் மீன்பிடிகாரர் சிலர் தங்கள் வள்ளங்களில் கப்பலிலிருப்போருக்கு ஆகாரத்திற்கு வேண்டிய மீன் காய் கறி முதலியனவற்றை ஏற்றிச்சென்றனர். ஆயினும் ஒருவர் பாஷை மற்றவர் அறியாததலால் எவ்விதவிற் பனையுஞ் செய்யமுடியாது திரும்பினர். அன்று உச்சிப் பொழுதில் கப்பலிலிருந்த சிலர், ஒரு சிறு படகில் வந்து துறைமுகத்தைச் சேர்ந்தார்கள். அவர்களில் அறுவர் கரைக்குவந்து உரத்த சத்தமிட்டதைக் கேட்டு நானும் எனது சிஷரிற் சிலரும் அவ்விடத்தை அடைந்தோம். அவர்கள் புத்தபகவானின் சின்னங்களாகிய எமது நீண்ட உடைகளையும் வழுக்கைத்தலைகளையும் பார்த்துச் சிரித்து ஏளனஞ் செய்தார்கள். ஆயினும் நான் அவர்களது தாகத்தைத் தணிக்கக்கூடிய பழவர்க்கங்களை வாழையிலைகளில் வைத்துத் தாழ்மையாகவும் அன்பாகவும் வழங்கினேன். அவர்கள் அவைகளை அதிக ஆவலோடு எடுப்பதுபோன்று எடுத்து எங்கள் தலைமேல் வீசிவிட்டு நகைத்தார்கள். நாங்கள் இவர்கள் செய்கைக்கு மிகவும் இரக்கப்பட்டுத் துக்கத்தோடு எமது கோயிலையடைந்தோம்.

அவர்களும் எம்மைப் பின்தொடர்ந்து கோயிலுக்குள் நுழைந்து ஆராதனைசெய்யும் பரிசுத்தமான இடங்களை அசுசிப்படுத்தினர்கள். பின் கோயிற்சுவர்களையும் சிலைகளையும் கதவுகளையும் அவைகளில் செதுக்கப்பட்டிருந்த புத்தபகவானின் உருவங்களையும் அவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தபின், எமது இல்லங்கட்குள்ளும் நுழைந்து அவ்விடமுள்ள பொருட்கள் யாவற்றையும் புரட்டிப்புரட்டிப் பார்த்தார்கள். புத்தபெருமானின் சீடராகிய நாம் மகிழ்ந்து கைக்கொண்ட தரித்திரவாழ்க்கையைப்பார்த்து நகைத்தார்கள். பின்பு யாவரும் தங்கள் கப்பலுக்குத் திரும்பிச் சென்றார்கள். அதைக்கண்டு நாங்கள் மகிழ்வற்றுக் குறும்புத்தனம் வினைத்த அவர்களினின்று எம்மைக்காப்பாற்றியதை நினைத்துப் புத்தபகவானைப் பூக்களால் அருச்சித்தோம்.

ஆனல், அன்றைக்கே மாலைப் பொழுதில் கோயிலில் வழிபாடு நடக்கும் நேரத்தில் அவர்களில் அநேகர்வந்து ஆலயத்தில் நுழைந்தார்கள். அவர்களின் தலைவன் கோவிற்கதவுகளை இருபுறமும் கூர்ந்து நோக்கியதும் தங்கள் பாஷையில் ஏதோ கட்டளையிட்டான். அவர்களுடைய நோக்கம் யாதோவென்று நான் நினைப்பதற்குள் அவர்கள் கொண்டுவந்த ஒரு பெட்டியிலிருந்த பல தூதனமான ஆயுதங்களின் உதவியால், கோவிற் கதவு நிலையிலிருந்து கழற்றப்பட்டு பதின்மர் தோள்களில் ஏற்றப்பட்டது. அவர்களின் அக்கிரமச்செய்கை எனது அறிவை மயக்கிவிட்டது. என்னே! தலைமைப் புத்தகுருவாகிய எனது முன்னிலையிலேயே எமது பகவானின் கோவிற் கதவு கொள்ளையிடப்பட்டது. அக்கதவை அவர்கள் கொண்டு செல்லாவண்ணம் தடைசெய்யும்படி எனது சிடருக்குக் கட்டளையிட்டேன். ஆனல் அவர்கள் பெலமுடைபோர்களா யிருந்ததால் எனது சீடர்களால் அவர்களோடு சமர்செய்து கதவைக் கைப்பற்றமுடியாது போயிற்று. இனி என்செய்வதென நான் யோசிக்கு முன்னரே கதவு துறைமுகத்திருந்த அவர்களது வள்ளத்தில் ஏற்றப்பட்டது. தாங்கமுடியாத கோபத்தினலும், துக்கத்தினலும் அவர்களைச் சபித்துப் புத்தபகவானே அவர்களைத் தக்கமுறையில் தண்டியுமென்று பிரார்த்தித்தேன். இதற்கிடையில் வள்ளம் கப்பலைநோக்கி விரைவாகச் செலுத்தப்பட்டது.

எமது கோயிலின் அழகான கதவு கப்பலில்ஏற்றப்பட்டதைச் சஞ்சலத்தோடு கரையில் நின்று பார்த்துவிட்டு, இராக்காலமானதால் மறுநாட்காலை அதிகாரிகளிடம் முறையிடவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டு எனது இல்லம் சேர்ந்தேன். ஆங்கில அரசாட்சியார் இவ்விதஅக்கிரமச் செயலுக்கு அனுமதி அளிக்கமாட்டாரென்பது திண்ணமாயினும், அன்று இரவே அக்கப்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல்காடுகளுக்குப் பிரயாணமாய் விடுமோவென்று ஐயுற்றேன்.

இவ்வித புண்ணியதலத்தின் பொலிவைக் கெடுத்த புல்லறிவாளர்களைப் புத்தபகவானே தண்டனை செய்யு மென்று பின்பும் பிரார்த்தித்தேன். அன்று நடுநிசி மேகம் இருண்டு கறுத்தது. இனி நடக்கப்போகுஞ் சம்பவத்தைப் பார்க்க மனம் பொருந்தாதவன்போன்று சந்திரன் மேகக் கூட்டத்திற்குள் மறைந்தான். பிர சண்டமாருதம் எழுந்தது. கடல் கர்ச்சித்தது. காற்று மரங்களையெல்லாம் முறித்து வீழ்த்தியது. வாயுபகவா னுக்கு அன்றைக்குச் சுவாதீனமளிக்கப் பட்டதுபோலத் தோன்றியது. அந்நேரத்தில் கப்பலைப்பற்றி நினைந் தேன். புத்தபகவானின் ஆலயத்தை அவமதித்த அன் னியர்களின் கதியை நினைந்து கலக்கமடைந்தேன். பொழுது விடிந்தது. புயல் அடங்கியது துறைமுகத் திற்குச் சென்று கண்ணுக்கெட்டிய வரையிற் பார்த் தேன். கப்பலின் அறிகுறிகளைக் காணப்படவில்லை. கடல் அலைகள் வேகமாக அடித்துக்கொண்டிருந்தன. அந்நேரத்தில் ஒரு பிரமாண்டமான அலை ஒரு மரத் துண்டை உருட்டிக் கரையில் தள்ளியது. அன்று நடுப்பகலில் கடற்கரையோரமுழுவதும் கப்பலின் ஒடிந்த கட்டைகள், அலைகளாலே தள்ளப்பட்டுக் காணப்பட்டன.

அந்தோ, புத்தபகவான் அவர்களுக்குத் தகுந்த தண்டனையை அளித்துவிட்டாராகினும் அவருடைய ஊழியனுகிய நான் அவர்களுடைய உற்றூர் உறவினர் அவர்களுடைய நல்வரவைத் தூரதேசத்திலிருந்து ஆவ லோடு எதிர்நோக்கிக்கொண்டிப்பார்கள் என்று நினைத்த தும் துக்கமடைந்தேன். அன்றியும் எமது பகவானின் கோயிலைக் கொள்ளையடித்து அவருடைய அடிமைகளா கிய எம்மையும் நிந்தித்தார்கள் என்னும் கோபத்தினல் அவர்களைச் சபித்தேனே என்று மிக மனவேதனை யடைந்தேன். இதற்குமேல் சொல்வதற்கில்லை."

இவ்விதம் அப்புத்தகுரு சொல்லித் தாழ்ந்து வணக்கமிட்டுச் சென்றார். நாங்கள் இச்சரித்திரத்தைக் கேட்டுச் சிறிது மனவருத்தமுற்றோமாயினும் தெய்வந் துறையின் இயற்கை வளப்பத்தின் இன்பக்காட்சியும் கிறிஸ்து மதத்தர்களால் வருத்தப்பட்ட புத்தகுருவின் அன்பு ததும்பும் சொற்களும் எமக்கு உல்லாசத்தை யூட்ட மாத்துறை என்னுமிடத்தை வந்து அடைந் தோம்."

இன்றும் அக்கடற்கரையில் கறளடைந்து கிடக் கும் ஓர் இரும்பு நங்கூரம் அக்கப்பலின் நங்கூரமென அவ்வூரவர்கள் சொல்லுகிறார்கள்.

பொறுமை இருவகைப்படும். ஒன்றின் உதவியைக்கொண்டு வறுமை வந்தெய்தியபொழுது அதை தாங்கிக் கொள்கிறோம். இது சிறந்ததும் வனப்பு வாய்ந்ததுமாகும் மற்றதன் உதவியைக் கொண்டு நமக்கு வருந்தீமைகள் எதனல் வருகின்றனவென அறிந்து மனச்சாந்த மடைகிறோம்.

* * *

செய்ய விரும்பிய நன்மைகளை என் செய்து முடிக்காது நாளைக்குச் செய்வோம்! நாளைக்குச் செய்வோம்! எனப்பின்போடுகின்றாய்? அதை நினைத்தவுடனேயே செய்ய ஆரம்பிக்கவேண்டும். "இதுதான் செய்யவேண்டிய நேரம். இதுதான் தெரிந்துக்கவேண்டிய காலம். நான் என்னைத் திருத்தவேண்டியகாலம் இது." என்றுசொல்வாயாக.

* * * *

பெருங்குற்றஞ் செய்த அபராதிகட்கு விதிக்கப்படும் தண்டனையால் உண்மையான நன்மை ஏற்படவேண்டும்! ஆனல் செய்த குற்றங் காரணமாக ஒருவன் கழுத்தில் முடிச்சிட்டுத் தூக்கிக் கொல்லப்படின்அவன் அடையும் நன்மையாது? அவன் திருத்தமடையவும், செய்ததீமையைக்குறித்து மனவருத்தமடையும் காலமேற்படவில்லையே.

* * * *

ஒருவர் இருதயத்தை நாம் ஊடுருவிச் செல்ல வேண்டில் அது "அன்பு" ஒன்றினலேயாகும். வறுமை யாம் துயரைக் களைவதும் அன்பே. ஒருவர் நமக்குத் தீமைசெய்யினும் நாம் அவர்மாட்டு அன்பு கூட்டின் ஈற்றில் நாம் அடையும் பெருநன்மைகட்கு அளவின்று பகைவரை விரோகித்து நின்று அடக்குவது மிருக சுபாவமாகும்.

* * * *

முதலாவது ஆள் :—எனது மோட்டார் இரதம்களவாடியவரை நான் நன்கு அறிவேன்.
இரண்டாவது ஆள் :— அப்படியாயின் ஏன்பேசாதிருக்கின்றாய், பொலிசார்க்கு அறிவிக்கலாமே.
முதலாவது ஆள் :—அதில் சில பழுதுகள் உள்ளன. களவாடியவர் அதைத் திருத்தும் வரையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சிந்தையும்மன்போலச் செயலற் றடங்கிவிட்டால்,வந்ததெலாம் நின்செயலாம் வாழ்வென்பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர்

ஒருபா வொருபது

("வித்தக"ப் பத்திராசிரியர், தென்கோவை, ச. கந்தையபிள்ளை யவர்கள் இயற்றியது.)

உலகெலா மாக்கி யளித்துகின் றுடுக்கும்
ஆகியா மன்னை வடிவெனு மமல
நாதவொலி காட்டும் பாதபங் கயமும்,
வாசிவச மான மாசினிலை காட்டும்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
சர்ப்போப வீத முப்புரி நூலும்,
அகில சராசர மடங்குபெரு வடிவாய்
அண்டமா ருலகு கொண்டபல் பொருளெலாம்
முன்னிலை யாக முறைநிறை தழீஇ
அருந்திடு நீர்மைசா லமலநெறி காட்டும்
மோதக மாதி திணித்தபெரு மோடும்,
டந்தமறு நிலையாங் கந்தழி காட்டும்
பொன்மணிக் கலனும் பூந்தார்க் கொன்றையும்,
உடலுயி ரியக்க வொருப்பா டென்னும்
இருவினை யொப்பும் மலபரி பாகமும்
சத்தி நிபாதமுஞ் சாரரு ணிலையாம்
பூவு நீருங் காலும் வானும்
ஒரோவொரு புறமா விராவி நிலைக்கும்
சதுரப் பாழெனுஞ் சதுரப் பாடு
நாற்கரங் காட்ட ஞான்றுபொன் னுசல்
ஆட்டயர் துதிக்கை யமலவக் கிரியாம்
சிவமெனுஞ் செழுஞ்சுடர் நவமுற வெழுந்து
கதிக்கும் வியாப்பிய வியாபக சக்தியாய்
உபய சூலயு முணரு நிலைகாட்டும்
அஞ்சக் கரமெனும் பஞ்சக் கரமும்,
பிணியெனுங் காலைப் பிணிக்கும் பிணியும்
வாலிய தென்ன வயக்குகழு வாயும்
காட்டும் பாசமுந் தோட்டியும், அஞ்சலென்
றடியேற் கருளு மபய வரதமும்,
வித்தக முறலான் மேவுமத் துவித
ஏகநிலை காட்டு மேக தந்தமும்,
அமல வெறுக்கை யளியொடு பெருக்கி
அசையா தசையு மிருசெவிக் கவரியும்,
அகில மீன்ற வொருதனி முதல்வி
மவுன மந்திர மகர விடிவினள்
பிடியெனப் பகவன் களிறெனப் புணர
விந்து நாத வடிவென மிளிர்ந்தே
ஓவென வொலித்திட் டும்மென வூன்றும்
அருளொளி திகழும் பிரணவ வடிவொடு
சிவன்முத்திச் செவ்விநனி தெரிக்கும்
குருபர னிவனெனக் குலவுகிரு முகமும்,
முத்தீ விளக்கங் காட்டுமுக் கண்ணும்,
சிவநீர் பெருக்குஞ் செக்கரஞ் சடையாம்,
பகுவாய்ப் பாந்தட் பணைமுடி யாகித்
தட்பமொடு வெப்பச் சமரசந் திகழச்
சென்னியிற் பொலியும் பொன்னியன் மகுடமும்
மாலை மதியென வயங்குபொன் வண்ணமும்
திகழுந் தெய்வத் திருவுருக் கொண்டு,
அன்னையைப் பேணி அன்னவ ளருளால்
ஆக்கையுறு பொருளா மப்பனடி தொழுது
கல்வியுங் கேள்வியுங் கைவரப் பெறீஇ
மணங்கமழ் தெய்வத் திளநல மென்னும்
சிவமணங் திகழத் தவநெறி காட்டும்
கந்தழி நிலையிய விந்து மதஞ்சால்
பெறலரும் பரிசு பெற்றமெய் யடியர்தம்
விமல யாக்கையாம் வேளரு ராங்கண்
மணக்குள மகிழ்ந்து வதிதரன் மானத்
தத்துவப் பெரியாஞ் சித்தரருள் தவாத
இந்து தேயமாந் தென்றமிழ்த் தேத்து
நம்பந்த நீக்குஞ் சம்பந்த முனிவன்
என்புபூம் பாவையா யெழுந்திடப் பணித்த
விம்மிதந் திகழும் வீறுசால் தொண்டை
வளநாட் டங்கண் மன்னிய வேத
புரியெனப் புகலும் புதுவையம் பதியில்
நம்பலமாக வம்பலத் தாடும்
ஐயனமர் வீதியி னெருசா ரவனென
மணக்குள வாழ்வு மகிழ்ந்தருள் வரதன்
கவிகட் கெல்லாங் கவியெனுங் கடவுள்

கலக்கமுற நெஞ்சைச் கலக்கித் திரும்பத், தலைக்குவனென் னீயலையோ சொல்லாய் பராபரமே.

Digitized by Siva Siva Foundation
noolaham.org | aavanaham.org

அம்பிகை தனய னடியடைந் தோருக்
கெய்ப்பினில் வைப்பா மிறையவன் முன்னோன்
விக்கின விநாயகன் விஜயபுரு வாகிய
புன்புலால் யாக்கை பொருந்துகிணைக் குளமாம்
என்னுளம் புகுவதோ ரிறும்பூ தடைத்தே (1)

உடைமணி யோசை யுலகெலாங் கேட்பநின்
அநுசனு யமரு மள்ளிலை நெடுவேல்
வள்ளிமண வாளன் புள்ளிமயி லேறி
ஓருமூ வுலகும் வலம்வரு முன்னர்
அகில வுலகமு மடங்கிய நினது
பெருவயிறு தூக்கிக் குறுக நடந்து
சராசர வடிவாந் தந்தையை வளாவி
மாங்கனி பெற்று விழுங்கித் தீஞ்சுவை
கண்டருள் கற்பனை கொண்டிடு தத்துவம்
ஈங்கெனக் கியம்புதல் வேண்டு மோங்கிய
விண்ணத் துயரிய தண்ணிலாத் தவழும்
பூம்பொழி னடுவட் பூழைவழி நுழைஇக்
குறிவழிச் சென்ற சிறுகண் மந்தி
மாங்கனி யுண்டு வதிதர லம்ம
குரவன் குறிப்பின் வழுவா தொழுகிப்
புகலிடம் புக்கநின் பொன்னடித் தொண்டர்
மாவெனப் பூத்த காயப் பெண்ணும்
தேமாங் கனியுண்டு சிவானந்த வீளைவெனும்
பேரின்பந் துய்க்கும் பெற்றி காட்டும்
வளந்திகழ் புதுவை மாநகர்
மணக்குளம் வதியும் வானவ ரேறே. (2)

ஏற்றுயர் கொடியுடை யிறைவனும் வீற்றுப்
பாற்கடற் றுயிலும் பரமனு மொன்றெனும்
உண்மை காண்ட லொண்ணுமோ! அதுதான்
படிப்பு வல்லபத்திற் படுவதோ! அன்றே!
தத்துவப் பெரியார் தாமருண் மறைப்பொருள்
குரவனரு ளின்றிக் கூடுவ தாமோ!
புராணக் கற்பனைப் பொருளு முணரா (து)
ஏற்றத் தாழ்வுரைத் தேதளனஞ் செய்து
குறைபல பேசிக் குதுகுதுப் புறீஇக்
கசட்டு மனத்தாற் கலாம்பல வீளைத்துக்
கும்பிக்கா ளாயினர் குறையா மாக்கள்
நந்திவடி வாகி வந்தநீ யாளச்
சித்தர்வாழ் புதுவையாந் திருப்பெருந் துறையில்
மணக்குளம் வதியும் வரத விநாயக!
உற்ற வாக்கையி னுறுபொரு ளாகிச்

சிவண்ண ஞகிச் சதுர்ப்புஜந் தாங்கிச்
சுக்கிலாம் பரத்திற் றுலக்கிடு நீ யே!
விண்டு வென்ன விளம்பிடும் வேதம்
இடமும் பொருளு முடனு முயிரும்
சத்தியுஞ் சிவமுமாக் தத்துவ மீ இய
விண்டுவுஞ் சிவமும் வேறெனப் படுமோ!
நாரா யணனுன் முகநீப் படைத்தனன்
பிரமன் படைத்தனன் சிவநீ யென்னும்
அருமறை யறியா விநகாற் பசுக்கள்
போலிக் கல்வியாற் பொய்ப்பொருள் கண்டு
மாழ்கலுற் றுலகை மயக்கவைத் தனரே!
கரியமா லுந்திக் கமல மென்னும்
பரமா காச பங்கஜ தளத்தில்
புறப்பட்டுப் புக்கு வியாபி யாகி
உலகெலா மாக்கு முபய பூதமாய்
உடனுயி ராகி நடலையொ டாடிய
பிரமதத் துவமே யுரியசா தகத்தால்
வியாபகங் குறுகி வியாப்பியத் தொன்றி
அமலசிவ வடிவா யமைதரு மிதுவே
முத்தி நெறியான தத்துவ மெனநீ
உணர்த்த வுணர்ந்தன னுண்மை யானே. (3)

யானே யெனக்கிக வுறவெனத் தெளிந்து
சிதையா வுக்கமொடு செந்நெறிச் செலீஇ
உலகிய னடி யொப்புர வொழுகி
முன்னிலை யாவையுந் தன்னிலை யாக்காது,
நில்லாப் பொருளே நிலையென நினீஇ
அழுக்கு நெறிச் செல்லு மசட்டுப்போலி
முன்னிலைக் கோரணி முன்னினின் றுடற்ற
அலமந் தள்ள மயர்த்தனன் மன்னே
மடிமடிக் கொண்டு மாழாந்து நின்று
பணிசெய்து கிடவாது பராக்குறீ இ காலும்
நீளச்சென்று நினைவிழந் தனனே
உணவே யுணர்வெனு முண்மையை யுணர்ந்தும்
கனமேபு மதனைக் கடைப்பிடித் திலனே
அவாவினை யருளுறு நாட்டந் தவாது
துவரத் துறந்து நிறைமுறை தழீஇத்
துப்புர வமையா துப்பொடு காடியாம்
விந்து நாத வினைவா னியலும்
தூலச் சிவைக்குக் கேடு சூழ்ந்தனனே
ஐம்பூ வென்னு மைந்தாந் தினையாம்
என்பினுண் மறையா மன்பெனு மப்பினைத்
துப்பெனுங் களிம்பு நீக்கி யொப்புற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுத மாக்கி யருவா யுள்ளாய்
ஆக்கையுறு பொருளா மருளினை யாக்காது
திடனிலா யாக்கை யுடனுநீ இ நாளும்
துன்புறூஉ நிலைமையிற் றுவக் குண்டனனே
குருநெறி நாடாது தெருமரு லுழந்து
பத்திமை யின்றிப் பாவமே தடித்துக்
குரோத மதமாதி குணங்களுக் கிடமாம்
தன்னிலை யாகிய வென்னிலை யிதுவெனின்,
அருளுறு வடிவா யமைந்துமுன் னிலையில்
நந்திவடி வாகிநீ வந்திட லெவனே !
தவறுபெரி தூடைத்தென் சால்பிலா வொழுக்கம்
அன்பிலன் கொடிய னளியில னெனினும்
செய்ந்நன்றி யறியாத் தீனமீ னெனினும்
மக்களொடு மனையே யொக்கலென் றினைய
அசட்டுமுன் னிலைகளா னலந்தலை யுநீ இ
அறிவறை போகிய நிறையிலா வளத்தால்
உடல்பொரு ளாவியை யுன்னடி யினைக்கே
அர்ப்பணஞ் செய்யா வாதனே யெனினும்
சாதகத் தெளிவு மேதகக் காணுமுன்
சோதனை பிழைத்த துரிசுளே னெனினும்
புறமெனைப் போக்கா தருண்மதி ! யெந்தாய் !
பணிசெய்து கிடக்கும் பண்பெனக் கருளித்
தொண்டரிற் கூட்டித் துயர்களைந் தருண்மதி !
பொறிவாழ் பூவொடு சிறுவெள் ளாம்பலும்
மருங்கே யொருங்கி மலர்ந்து மணக்கும்
வாவிதிகழ் புதுவை மணக்குளப் பதியிற்
குருபர னெனிக் குலவு முன்னவனே. (4)

முன்னிலை யுலகியன் மொழிந்திடப் படுமோ !
உண்மையொடு போலிக் கொப்புமை யெவனே
அருளொடு மருணிலை யனையநீர் மையதாம்
இடையீட்டின் பெற்றி யியம்பிடத் தகுமோ !
பொய்யதே மெய்யா மெய்யதே பொய்யாக்
கற்பனைப் போலியே தத்துவ மாயது
செத்துப் போதலே முத்தி யென்னும்
அசத்திய நெறியே சத்திய நெறியாம்
வேதாந்த சித்தாந்த வியனெறி யாயது
பொய்கண் டுரைத்த பூரியோரே
மெய்கண் டருளிய வித்தக ராயினர்
அதனால், உண்மையுரைப் போரைக் கண்மையின்றி
ஏளனஞ் செய்பு மியலதே யுலகம்
விடமே யருவா மிடமன்றே வுலகு
அழுக்கினை யழுக்கா லகற்றுதல் போல
அருந்தல் பொருந்த லனந்த லமைதத்
தாலத்தை யமுத மாக்கு மவரே
காலனைக் காலா லுதைக்குங் கடவுளர்
விதியினை வெல்லும் வித்தக ரம்மா !
விதியினை வெல்லாது மெய்பொய் யாக
இறந்தோர் முத்தி யெய்துவ தெவனே !
விதியினை வெல்லுதன் மெய்வின் வடிவென
ஊனமி லருவ வொளிமய முறூஉம்
தத்துவர்க் கன்றிச் சாலா தெனவும்
"சத்தமோ டொன்றி மனமு மிறந்தபின்
முற்று மழியா துடம்பு" தா னெனவும்
ஐய ! நின் னருள்பெறு மவ்வையா ரருளிய
மறைமொழி தன்னையு மாக்கள் தேர்ந்திலரே !
தத்துவப் பெரியார் தாமருண் மறைப்பொருள்
கல்லா மாக்கட் கொல்லுவ தாமோ !
போலிவித் துவத்தாற் புலப்பட லாமோ !
கல்வி யெனினே காவிய சாத்திர
இலக்கணப் பெயரா னியன்றபன் னூல்களைப்
படித்தலே யென்பர் பாருளோர் டாவரும்
கண்ணுன் ஞானங் கருதுநெறி காணர்
கண்ணுடை யவரே கற்றவ ரென்னும்
செந்நாப் புலவன் றிருமறை யோரார்
வேடம் பூசை யாதிய நடைநோடி
சாடையும் போலி நிட்டையும் பிறவுமே
முத்தி நெறியென மொழிகுவர்; உவையும்,
பிராணனை டபானனுப் பேசிட நின்ற
கொடிநிலை வள்ளி வடுநீங்கிச் சமமுறக்
கந்தழி காட்டுங் கந்தருவ மென்னும்
இயற்கை நன்னெறியா மில்லறந் தழுவாது
பெற்ற சிற்றின்பமே பேரின்பமாகும்
பிரம சரியப் பெற்றியு மறியாது
இந்திரிய நிரோத வியல்பு பறியாது
இந்துமத வுண்மை யிலேசமு மறியாது
செயற்கை நெறியான் மயக்கநனி யுநீ இத்
துற்றவை துறந்து வற்றி நாளும்
உடலுயிரை வாட்டி யுணர்ச்சி மழுக்குற்று
வாயொடு கண்மூடி வதிபு நிலையாம்
அசத்திய நெறியுமே யுடலசத் தாகிச்
செத்துப் போனபின் முத்திதரு மென்பர் !
அள்ளு றுக்கையி னருமை யறியாது
விமல யாக்கை மேவுமண் ணுவில்
அமுத மூறு முண்மையு மறியாது
புவியுட் புதைந்து நாறும் பிணங்களும்
அள்ளு றமுத வாக்கையென் றாற்றுவர் !
சத்துவந் திகழ்சிவ தத்துவ மாகிக்

மண்ணுனை மாயையெல்லாம் மாண்டுவெளி யாகஇரு, கண்ணுரு வங்கனவு கண்டேன் பராபரமே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடையா யுள்ளாய்க் கடவுளென நிலைஇப
ஆக்கை யுறுபொரு ளாகிய விந்தெனும்
சத்துப் போகச் சவநெறி கண்டபின்
அமுத வடிவா மமல னகன்றபின்
புரிசடை யீசன் புறப்பட்டுப் போனபின்
அள்ளூ றுக்கைபெற் றமுத முண்டு
சிவத்துவந் திகழ்ந்து சிவாங்க மாதலாம்
முத்திநிலை யென்பது முயற்கொம்பே யன்றே !
சச்சிதா னந்த தத்துவ நிலையும்
சத்துஞ் சித்துமாய்ச் சமைந்த வுடலுயிர்
இயக்கவொப் புமையா னியலுந் தீயாய்
விமல யாக்கையில் விளைவுற் றெழுஉம்
அமல வருளொளி யாகுமுத் தீயாம்
அகண்டா கார வருட்பெருஞ் சோதியின்
அருமை பெருமையு மகில மாக்கள்
அறியவல் லுநரோ ! அறியவல் லுநரோ !
இருவினை யொப்பும் மலபரி பாகமும்
சத்தி நிபாதப் பெற்றியு மறியாது
மருளுடம் பினரே மன்னிய சிவன்
முத்த ரென்னு மூடக் கொள்கையால்
முத்திநெறி யறியாது செத்துப் போன
குருட்டு மாக்களையே குரவ ரெனத் துணிந்து
சிவாப ராதமாந் தீமையு முணராது
தத்துவப் பெரியரோ டொப்ப மதித்துப்
பூசையும் விழாவும் புரிகுநர் பலரே !
தத்துவப் பெரியார் தம்புகழ் நிலைஇய
தமிழக மாந்தர்க்குச் சாலுமோ விவையே !
அடியவ ரியலு மன்னவர் மெருமையும்
செடிசே ருடலைச் செலநீக்கி யமல
வடிவப் பேற்றிலவ் வடியவ ரடைந்த
அளப்பிலாத் துன்பமு மப்பேற் றருமையும்
ஊனங்க ளெட்டு மறவே யொழிந்த
ஈனமில் காயமாம் ஓவடி வதுவே
சிவன் முத்தர் திருவுரு வெனவும்
தெரிசனத் தன்றிப் பரிசனத் தமையா
அதுவே யருவுருத் திருமேனி யெனவும்
அன்ன வமல வடிவே யருளாய்ப்
பல்லோருங் கண்டு போற்றப் பரமாம்
ஞான காசத்து நண்ணி யொடுங்கும்
சத்திய நிலையே முத்திநிலை யெனவும்
வேதாக மாதிகள் விளம்புவது மறியா(து)
அநாதி யாகவிவ் வவனியிற் றோன்றிய
எண்ணிலா முனிவரு மிருடி கணங்களும்
அகத்தியர் போக ராதியாம் பலப்பல
சித்தர் குழாங்களுஞ் சிவவாக் கியரும்
அல்லமாப் பிரபுவு மிசேணுக ராதி
பஞ்சவா கிரியரு மற்றையோர் பலரும்
அண்ணல்திரு மூலனு மவ்வைப் பிராட்டியும்
மூவடி முப்பதாம் முதுமறை யருளிய
இடைக் காட்டுச் சித்தரு மெண்ணில்பல் லடியரும்
அண்ணல் வசவண்ண ராதியோர் பிறரும்
மாணிக்க மணியா(ம்) நங்கண் மணியும்
சம்பந்த ரப்பர் சுந்தரர் மூவரும்
கண்ணப்பர் நந்தனர் சேரமா னுதி
வித்தகந் திகழுமெய் யடியவர் பலரும்
ஆண்டா ளம்மைநம் மாழ்வா ராதிய
ஆழ்வார் திருநாமக் கரும்பே ரிலக்கிய
மாகி மிளிரு மருந்தவப் பெரியரும்
பட்டினத் தடிகள் பத்திர கிரியார்
சேந்தனர் முத்துத் தாண்டவ னரும்
உலகர் போல்வாழ்ந் தொப்புர வொழுகி
இன்ப வாழ்வி னன்புனெறி தழீஇ
உடலு முயிரு மொழிவற வொன்றிப்
பிணிமூப்புச் சாக்காடும் பிறவியு மகன்றே
அகிலங் காண வருளாய் வெளியாய்
முத்திநிலை பெற்ற தத்துவ முணரா(து)
அருண்மலி சொல்லினு மரும்பெருஞ் செயலினும்
அன்னவீர் நாட்டிய வுண்மையு முணராது
செத்துப் போதலே முத்தியெனப் பிதற்றித்
தடுமாற்ற மடைந்து சைவ மறியா(து)
இந்து தேசமாஞ் செந்தமிழ்த் திருநாடு
தவிக்கு மிந் நாளிற் றண்ணருள் கொண்டே
அதிகுஹ்ய மான வருமறைப் பொருளெலாம்
தமியேற் குணர்த்தியித் தரணியோ ருய்வான்
" வித்தகம் " என்னுமிவ் வுத்தம போத
பத்திர வாயிலாய் வெளியிடப் பணித்தே
அன்னதை நடாத்தி யநம்பெரு முத்தி
வித்தினைத் தமிழக மேவிட வூன்றிப்
புண்ணியம் புகழொடு நண்ணி மேலுறும்
பணிகட்கு மடியனே யருகனைப் பயிற்றித்
திருவுளம் பற்றிய கருணைக் கம்ம !
கடையேன் தாத்தகதோ கைம்மாறதுவே !
வேதவொளி நாளு மோவா தொலிப்ப
ஞான சத்தியா(ம்) நந்தியெம் பெருமான்
வரமலி கயிலை வதிதரன் மானச்
செந்தமிழ் வளஞ்சால் திருப்பெருந் துறையாம்

ஏதேது சொன்னலும் எள்ளளவும் நீயிரங்காச், சூதே எனக்குளவு சொல்லாய் பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத புரியெனும் போதமார் புதுவை
அம்பலத் தாடு மையன் வீதியில்
நந்தி மன்றத் தருகே நண்ணிய
தெய்வ மணக்குளத் திருத்தளி தன்னில்
அவனே யாகி யமரும்
சிவசுத னுகிய தேசிக மணியே. (5)

மணிமன்று ளாடும் வரதனருள் வடிவாம்
தேசிக நினது தெரிசனம் பெறுதல்
மாசுறு முலக மாக்களுக் கெளிதோ!
புண்ணிய கன்மம் புரிந்திடல் வேண்டும்
அன்னது மெளிதி னமைகுவ தெனினே
எண்ணில்பல் கோடி சென்மத் தீட்டிய
நற்றவப் பயனு முற்றிடல் வேண்டும்
பிறப்பிறப் பென்னும் பீழைக் கஞ்சி
அருட்டா கங்கொண் டலந்தலை யுறீஇ
முத்திவேட்கை முற்றிடல் வேண்டும்
சாதன சதுட்டய சம்பன்ன ராகித்
தீவினை நிறையுஞ் சிறுகுதல் வேண்டும்
எவரைக் காணினு மிவர்கொலோ வெம்மை
ஆள வந்த நாத ரென்னும்
ஆராக் காத லமைதரல் வேண்டும்
கர்ம பேதஞ் சடபேதங் கண்டு
சீவர் தோறும் வேறு வேறுக
ஆட்பா லவர்க்குரீ யருளுஞ் சாதக
வேதகட் டங்களை மெய்மை யிற்ருங்கி
ஒழுகுவ தென்ரு லரிதினு மரிதே
இன்னன பண்பெலா மன்னும் பக்குவம்
என்னினை யாருக் கிபைகுவ தாமோ!
அரிதே யெனினு முன் புரியு நற்றவத்தால்
புகலிட மாகிய புதுவைநகர் புக்கு
மூடமார் கழிமுடை முண்டத் தலைகொடுன்
சினகரந் தொழுது திருவடி யிணையைப்
போற்றும் பேறு வாய்த்திடு மெனக்கு
நந்திவடி வாயென் சிந்தையு ணின்று
வேத வுண்மையாம் வியனெடுஞ் சாகரத்
திவலை யாவது தெரித்தனை யாதலின்
பாசத்தா ழருவிப் பற்றிலா மறுத்தெனைத்
திருத்தியுன் கோயிற் கடைபுகச் செய்தல்
அத்தகின் கடனென வமைந்தனன் மன்னே!
வேதசூத் திரங்களும் போதமார் குறளும்
அருளு மூதாட்டியா மவ்வையை யருளார்
துதிக்கையா லெடுத்துத் தூநெறிச் செலுத்தி
மீண்டு வாரா மெய்ங்கலை யருளி
ஆதி சத்தியி னவதார மென்னப்
போற்றிட வைத்த புராண காரண
புணரி முழக்கருப் புதுவையாம் பெருந்துறை
மணக்குளப் பதிவா ழறப்பெருங் கடலே. (6)

அறப்பொரு ளின்பம் வீடென் றிவற்றின்
திறன் றெரிந் துணராச் செகத்தோ செல்லாம்
மறம்பொரு டுன்ப மரண மென்பனவே
அறப்பொரு ளின்பம் வீடென வமைந்து
மறத்தாற் பொருளீட்டி வருந்திமாள் குவரே
அறமே யிடமு முதலு மாகும்
அதுவே வீடென் றறைந்திடும் வேதம்
"இடம்பட வீடெடேல்" என்றன எவ்வை
அமல வுடலே யருள்வடி வாகும்
அருளே யன்றிவீ டாகுவ தெதுவோ!
உடலழிந் தால்வீ டடைகுவ தெவனே!
பொருளே பொருளா மதுவே பொன்னும்
பொன்மயன் சிவனெனப் புகன்றிடும் வேதம்
உடலேபொன் னெனவு முரைத்திடப் படுமே
செம்பொன்செய் சுண்ண மிடித்தல் வேண்டும்
வம்புபழுத் துடல மாளுதல் தகாதென
மணிவாய் மலர்ந்தவன் மாணிக்க மன்ரே!
அறமும் பொருளு மொன்றுற வமைந்து
வீடுபேற் றின்பம் விளையு மென்ப
சிற்றின்பத் திரிவே பேரின்ப மாகும்
இனத்தை யினத்தா லீர்த்திட வேண்டும்
"பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி" யென்
றருளின னன்ரே ஆண்ணல் திருமூலன்
இடமழி வுற்ரூற் பொருளு மழிவுறும்
இன்பமும் வீடு மிலவா மன்ரே!
உலகிய லதனை டுண்மைசால் நிலைக்கும்
நெறிதா னுன்றே நிறைபேத மன்ரே!
வேறுபா டென்ன விளம்பிடும் வேதம்
ஆவது மழிவது மொன்றினு லென்பது
தேவராஞ் சித்தர் திருவாக் கன்ரே!
சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்தே
ஆசைப் பேற்றை யடிப்படை யாக்கிக்
கஞ்சியில் வதிந்து காலாட்டி யுண்ணும்
சித்தா மடியரே நித்திய மான
பேரின்பங் கண்டு பிணிமூப் பிகந்து
சாதலுரு வாய்மைச் சாத லடைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திநிலை பெறூஉந் தத்துவப் பெரியராம்
இங்நிலை கைவர லெளிதோ வன்றே!
அரிது அரிது மாஅரி தம்ம!
ஆசா னருளா லருந்தல் பொருந்தலாம்
கற்ற லென்னும் பயில்வுகைக் கொண்டு
முன்னிலை யாவுந் தன்னிலை யாகி
விக்கின மனைத்தும் மக்கின மாகித்
துன்பம் யாவு மின்பமாய்த் திகழும்
குற்ற மனைத்துங் குணமெனத் திரியும்
விக்கின விநாயக விழுப்பேறு வேண்டும்
அன்ன விழுப்பே றருளுங் குருபரன்
நந்திவடி வாகி வந்தெனை யாளப்
புதுவை மணக்குளப் பூங்கோயில் வாழும்
கற்பக விநாயக! சொற்பொருள் வடிவாய்
அம்பலத் தாடு மையனருண் மகவாம்
வரதநீ யன்றி மற்றையோர் எவரே. (7)

எவரே யெனினுமுன் னிணையடி தொழாதார்
முன்னிய கருமம் முடிக்கவல் லுநரோ
அரியயன் முதலோர்க்கு மாகா தன்றே
அரியயற் கரிய வமலநா யகனும்
மும்மல காரிய முப்புர மூதூர்
அமலவக் கினிக்கிரை யாக்கிடு ஞான்று
விமலநின் றிணையே வெண்டுவ னென்றுல்
விக்கின விநாயக விழுப்பே றதுவாம்
நின்பதம் பெறுது நீணிலத் தெவரே
சித்தியு முத்தியுஞ் சேர்குந ரம்மா!
அமல முதற் படியாய் நிலவு மிதுவே
முத்தி வாயிலென முழங்கிடும் வேதம்
மலபரி பாகம் மன்னு கந்தழியும்
ஆறெனு மறிவு பூரணம் பெறீஇய
மானிட ரென்னு மக்களாம் பேறும்
வாசி வசமான வாசிட்டப் பேறும்
விசுவமித் திரமாம் விழுமிய பேறும்
வேண்டியன யாவும் வேண்டியாங் கெய்தும்
கற்பகந் திகழுங் கற்பகப் பேறும்
ஐந்துந் திரப்படு மைந்திரப் பேறும்
குரு ரசம் பத்தெனுங் குறைவிலாப் பேறும்
மாபோகி யாகி மன்னிடும் பேறும்
துன்பெலா மொருவுபே ரின்பப் பேறும்
இதுவே யென்னி னிதன்றிற மியாரே
கிளக்குந ரம்ம நினைத்தபல் போகம்
புணராத் துறவு போலிய வன்றே!

ஆக்கையு ளசுத்த நிறையென வமைந்த
மாயையைத் துரத்தலே வாய்மைத் துறவாம்
காய மாயங் கழிதலு மிதுவே
கதவந் திறந்து மறைக்காடு கண்டே
அமலமா றறநிலை யமைதரல் வேண்டும்
இங்நிலை யெளிதின் மன்னிட வெனக்குன்
திருவருள் வழங்க வேண்டும்! கரவாது
வேண்டிய நல்கு மாண்டகு சிந்தா
மணியெனத் தேவர் வழுத்திடும் விமல
வல்லி யென்னும் வல்லபை மணாள!
புத்தி சித்தியாம் பூவையர் கணவ!
செத்துப் போதலே முத்தியெனத் துணிந்த
உலக மாக்களுக் குண்மைச் சைவ
முத்திநிலை காட்டு மூலபண்டாரப்
புத்தமுது வழங்கும் புதுவை மணக்குள
வித்தக விநாயக விமலவைங் கரனே. (8)

கரமுறத் தீயைக் காதலோர்க் களிக்கும்
திரமுறு தீக்கையாற் றிரிமல மறுத்துப்
புன்புலா லுடலைப் பூங்குட லாக்கி
அருளுறு வடிவோ டருவாய்ப் பரத்தில்
கற்பூர தீபம் போலக் கலக்கும்
வேதாந்த சித்தாந்த வியனெறி யாகிய
முத்திநெறி காட்டும் வித்தக நந்தியெங்
குருபர னருண்மலி புதுவையி லவனென
மணக்குளம் வதிந்தருள் வான நாயக!
மூலா தாரத்து முளைத்தெழு சோதியாய்
ஐம்புல வேட ரரும்பெறல் வெறுக்கையாம்
வள்ளியை வெருட்டி வடியிலை நெடுவேல்
முருகற்கு வழங்கிய முன்னவ! அன்பிலா
என்னி னெனக்கினிய வின்னருண் மூர்த்தீ!
விஞையேன்விண் ணப்பமொன் றுரிமையோடு கேண்மதி!
முன்னூழ் வலியா னின்னல் பலவுழந்
தேதுமறியா வேழைமை வாய்ந்து
கணமுந் தணிவின்றிக் கலங்குறு மனத்தால்
பிணிபல நலியப் பிறிதொன்று நாடாது
திருவருட் டுணையே வேண்டிப் பொருவறு
சிவத்தலம் பல்ல வணங்கி யருத்தியொடு
திருக்கழுக் குன்றமாந் திருத்தலிக் கணிமையிற்
பாலிமா நதியின் பாங்கர் மேய
கல்குளக் குணதிசைக் கவினும் புராதன
சிவத்தல மாகித் தேவரும் போற்றும்
மூர்த்திதலந் தீர்த்த மும்மையும் வாய்ந்த

உள்ள துணரா வுணர்வில்லிமா பாவியென்றே, மெள்ள மெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடவளா கப்பெயர் மன்னிய பதியில்
வதியுங் காலநற் கதியுற வினைந்தே
அம்மைதொ ழுற்றுஞ் செம்மைவினை கூட்ட
அத்திருப் பதிவா ழம்மை யப்பராம்
கோகிலாம் பிகையெனுங் குயின்மொழியம்மை
வாமத் தமருங் காமேச வள்ளல்
திருவருட் பணியாற் றெய்விகப் புதுவை
போக்திடு மடியேற் காந்துணை யாகித்
தீரா வினைபல தீர்த்திட்டநாதியாம்
உண்மைச் சைவச் செந்நெறி யாகிய
சத்திய நெறியு முத்தி நிலையும்
தெளிவுற வுளர்த்தி யருள்புரிந் தின்ன
உண்மைக ளெல்லாம் பன்னெடுங் காலம்
மறைபொரு ளாகி மறைவழக் கழிந்து
சரீரம் பிணமாகச சாத லடைதலே
முத்திநிலை யென்னு மூடக் கொள்கையாம்
அசத்திய நெறியே சத்திய நெறியெனத்
தாண்டவம் புரிதலான் மாண்டகு சித்தராம்
தத்துவப் பெரியர்வாழ் தமிழக மாந்தர்
மறம்பொரு டுன்பம் மரண மென்பனவே
அறம்பொரு ளின்பம் வீடெனத் துணிந்து
புருஷார்த்த மிழந்து புண்ணிய புராதன
சைவ மறியாது தவிக்குநிலைக் கிரங்கி
"வித்தக"ப் பெயரிய பத்திர மதனுல்
பழமைதிகழ் தமிழகக் கழனிபண் படுத்துச்
சத்திய நெறியாளுஞ் சைவநன் னெறியும்
முத்தி நிலையும் வித்திடப் பணித்துத்
தோன்றுத் துணையாய்த் தொடர்ந்து பின்னும்
உண்மைபல தெரித்திச் செம்மைவினைப் பணியை
மூவாண்டு முற்றுற வருளினை யாதலின்
குருபர நினையே திசைநோக்கித் தொழுதுன்
பூங்கழல் சென்னியிற் கொண்டு போற்றுவன்
மேலும்பல் லாண்டிவ் "வித்தக" விழுப்பணி
நன்ன ரார்ந்திட வின்னருள் வழங்கித்
தமிழக மொன்றே தாரணி முழுவதும்
பொய்திக ழசத்தியப் புலைநெறி நீக்கி
மெய்திகழ் சத்திய வியனெறி கண்டே
உய்ந்திடத் தெய்வ நந்திவடி வாகிப்
புண்ணியர் போற்றிட நண்ணித் தெய்விக
சதுர்வித வுபாயத்தாற் சைவ நிலைநாட்டிப்
பொல்லாக் கும்பி புகுதரா தடியேன்
மருணீலை யகற்றி யருணீலை யதனில்
என்னையு மிருப்பவ னுக்கியுன்
அருளா ரமுத மருத்திடு கெனவே. (9)

எனதுயிர்த் துணையா மிறைவா போற்றி
மனமொழி மெய்களில் வாராய் போற்றி
துதிசெயு மடியரைத் துதிக்கையா லெடுத்து
விதியினை வெலச்செயும் விகிர்தா போற்றி
குருவடி வான குழகா போற்றி
மருள்வடி வகற்று மணியே போற்றி
விமலமெய் யடியார் வினைவே போற்றி
அமல ஐகார வடிவோய் போற்றி
தேவர்க்கு மரிய சிவமே போற்றி
மூவரும் போற்று முதல்வா போற்றி
வல்லபை மகிழு மணாள போற்றி
சொல்வடி வான சுடரே போற்றி
சித்தி புத்தி தலைவா போற்றி
முதுதிருநெறி காட்டும் வித்தக போற்றி
விக்கின மொழிக்கும் விமலா போற்றி
நக்கன் மதலையாய நம்பா போற்றி
தமிழ னுகிய சைவா போற்றி
ஆரிய னுகிய வந்தண போற்றி
மூலா தார முதற்பொரு ளாகிக்
காலனை யுதைக்குங் கால போற்றி
மெய்யடி யார்கள் வேண்டிய வினைக்கும்
கற்பக மான வற்புத போற்றி
இந்திரற் கருளு மிறைவா போற்றி
சந்திர சடாதர சங்கர போற்றி
மாசு நீங்கிய மனநிலை காட்டும்
மூஷிக வாகன முதல்வா போற்றி
கயமுகற் செற்ற கயமுக போற்றி
நயமிலா நாயேற் கருளினை போற்றி
சீயேது மின்றியென் செய்பணி கொண்ட
தாயினு மினிய தயாபர போற்றி
அன்னுப் போற்றி அத்தா போற்றி
பொன்னுர் மேனிப் புனிதா போற்றி
அவ்வையா மன்னைக் கருளினை போற்றி
அனைவ ளருளு மருமறை யோடென்
புன்சொலும் கொண்ட புண்ணிய போற்றி
நக்கியருண் மலிந்த ஞான பூமியாம்
புதுவைநகர் புரக்கு மரசே போற்றி
மணக்குளப் பதிவாழ் வரதா போற்றி
கணபதி போற்றி கணேச போற்றி
தற்பர போற்றி சாந்த போற்றி
போற்றி போற்றி சயசய போற்றியென
வார்த்தை மாத்திரமா வழுத்துறி னலதுனை
ஏத்திட வல்லுந ரியாவரிவ் வுலகே. (10)

இது, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலையத்தி"லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னகம் "கலியாட்டி" என்னுங் சுணியிலுள்ள "திருமகள் அச்சியந்திரசாலை"யில் 1937-ம் ஆவு ஏப்பிரல் மீ 13ஆ செவ்வாய்க்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
193322



ஈழகேசரி அதிபரும், அலுவலாளரும். (Eelakesari Staff.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OF JAFFNA
LIBRARY
SRI LANKA

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





University of Jaffna
183322
Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org